EVANGELICAL BIBLE COLLEGE OF WESTERN AUSTRALIA
சுவிஷேச வேதாகமக் கல்லூரி மேற்கு ஆஸ்திரேலியா

MINISTER'S HANDBOOK
தேவ ஊழியரின் கையேடு

FOR

CHRISTIAN ORDINANCES
கிறிஸ்தவ சபை நியமங்கள்

by

DR JOHN CAMERON McEWAN
டாக்டர் ஜான் கேமரான் Mc இவான்

Book 114
புத்தக எண் 114

OCTOBER 2012
அக்டோபர் 2012

<u>இயேசுக்கிறிஸ்து யார்?</u>

பேராசிரியர் சைமன் கிரீன்லீஃப் எல்லா காலங்களுக்கும் தலைசிறந்த வழக்கறிஞராய் விளங்கிவருகிறார். அவரது "ஆதாரங்களின் பிரமாணங்கள்" "Laws of Evidence" அநேக ஆண்டு காலங்களாய் அமெரிக்க ஐக்கிய தேசத்தில் எல்லாராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட, நிலையான ஒழுங்குமுறை பரிசீலனைக்குரிய விஷயமாய் இருந்து வருகிறது. அமெரிக்க ஐக்கிய தேசத்தில் உள்ள ஒரு பல்கலைக் கலகத்தில் அவர் சட்டம் குறித்த பாடங்களைப் போதித்துக் கொண்டு இருந்த சமயத்தில், அங்குள்ள

மாணவர்களில் ஒருவன் சரித்திரப் பூர்வமான ஒருவரை "ஆதாரங்களின் பிரமாணங்கள்" “Laws of Evidence” மூலம் விவரிக்க முடியுமா என வினவினான். கிரீன்லீஃப் அம்மாணவனை நோக்கி விவரிக்க முடியும் என ஒத்துக்கொண்டவராய், அச்சரித்திரப் பூர்வமான நபர் யார் என அவனை நோக்கி வினவினார். அதற்கு அம்மாணவன் மறுமொழியாக, பரிசீலனைக்குரிய அந்நபர் இயேசுக்கிறிஸ்து என்றான். பேராசிரியர் கிரீன்லீஃப் ஒத்துக்கொண்டவராய் பரிசீலனைக்காக இயேசுக்கிறிஸ்துவை எடுத்துக்கொள்ள முன்வந்தார், அவர் தனது பரிசீலனையை முடித்துக்கொண்ட போது, அவர் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை தனது சொந்த இரட்சகராய் ஏற்றுக்கொண்டார்.

அதன் பின்னர் பேராசிரியர் கிரீன்லீஃப் அமெரிக்க ஐக்கிய தேசத்தில் உள்ள எல்லா நீதி சார்ந்த அலுவலர் அனைவருக்கும் வெளிப்படையான ஒரு கடிதத்தை எழுதி அதில் தான் தனிப்பட்ட விதத்தில் இயேசுக்கிறிஸ்துவை கண்டுகொண்ட விதத்தை விவரித்து இருந்தார். இயேசுக்கிறிஸ்துவைக் குறித்த விஷயங்கள் சரித்திரப்பூர்வமாய் மிகத் துள்ளியமானவை என முழு நிச்சயத்துடன் ஆதாரங்களுடன் எழுதி அனுப்பினார். மட்டுமல்லாது இயேசுக்கிறிஸ்து மனிதரைவிட மேம்பட்டவர் என்றும், அவர் கடவுளோ அல்லது இல்லையோ என்பதை பரிசீலித்த போது, அவர் கடவுளைத் தவிர வேறு எவருமல்லர், என்பதை மிக உறுதியாய் ஆராய்ந்து கண்டுகொண்டேன். அவரைக் கடவுளாய் கண்டுகொண்ட மாத்திரத்தில் அவரை எனது சொந்த இரட்சகராய் ஏற்றுக்கொண்டேன் என எழுதினார். ஆகவே நீதித்துறையில் பணியாற்றும் ஒவ்வொரு நபரும் "ஆதாரங்களின் பிரமாணங்கள்" “Laws of Evidence” ஐ பயன்படுத்தும் பொழுது, அவரைக்குறித்து தவறாய் புரிந்துகொள்வதைத் தவிர்த்து, ஒருவேளை அவரை உங்களது சொந்த இரட்சகராய், ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும் மேற்கூறிய பிரமாணத்தின் மூலம், அவர் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து என்றும், சரித்திரப் பூர்வமாய் அவரைக் குறித்த விஷயங்கள் அனைத்தும் முற்றிலும் உண்மை என்பதையும், கண்டுகொள்ளுங்கள் என எழுதி முடித்தார்.

<u>**நான் எவ்வாறு இரட்சிப்படைய முடியும்?**</u>

மனுக்குலத்தில் உள்ள ஒவ்வொருக்கும் இரட்சிப்பு என்பது கிடைக்கக்கூடியதாய் இருக்கிறது.

இரட்சிப்பு என்பது, மிகவும் முக்கியம் வாய்ந்ததாகவும், தேவனது அண்டசராசரத்தில், அனைவராலும் எடுத்துக்கொள்ளப் படக்கூடியதாயும் இருக்கிறது. பாவிகளின் இரட்சிப்பு என்பது, தேவன் பாவத்தை கண்டும் காணாமல், கடந்து செல்லும் காரியமாகாது. தேவன் பாவிகளை முற்றிலும், தமது நீதியின் அடிப்படையில், தனது தெய்வீக பரிசுத்த குணாதிசயத்தின் அடிப்படையில், இரட்சிக்கிறவராய் இருக்கிறார். இது ’கிருபை’ என அழைக்கப்படுகிறது. இது தேவனை மட்டும் சார்ந்ததாய் இருக்கிறது, இதற்கென மனிதன் எவ்வித கிரியையும் [புண்ணியக்கிரியைகள், தவக்கிரியைகள் போன்ற எதையும்] நடப்பிக்க அவசியமில்லை. அளவிட முடியாத, பிரமாண்டமான, இவ்வண்ட சராசரத்தின் சிருஷ்டிப்பின் கிரியைவிட, தேவன் பாவிகளை இரட்சிக்கும் திட்டமானது, மிகவும் குறைவாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. என்பதை நாம் உணரவேண்டிய வர்களாய் இருக்கிறோம். .

எப்படியிருப்பினும், தேவனுடைய இரட்சிப்பை ஒரு பாவி ஏற்றுக்கொள்வது என்பது வாழ்வில் மிக எளிதான ஒன்றாய் இருக்கிறது. ஒருவர் ஐசுவரியவானாய் இருத்தல் அவசியமற்றது, ஞானமுள்ளவராகவோ, மற்றும் படிப்பறிவுள்ளவராகவோ இருத்தல் அவசியமற்றது. வயதோ அல்லது தோலின் நிறமோ இதற்கு எவ்விதமான

தடையையும் கொண்டுவருவது இல்லை. தேவனுடைய மீட்பில் இருக்கும், எண்ணிமுடியாத நன்மைகளானது, மிக எளிதாய் ஏற்றுக்கொள்ளும் அடிப்படையில் அமைந்து இருக்கிறது, இப்பரந்த அண்டசராசரத்தில், ஒவ்வொருவரும் இதை அடைந்து கொள்வதற்கு விதிவிலக்கின்றி காணப்படுகின்றனர்.

நான் ஒரு கிறிஸ்துவை உடையவனாவது எவ்வாறு?

ஒரு எளிய படி எடுத்து வைப்பதை மூன்று பிரிவுகளாய் பிரிக்கலாம். முதலாவது, நான் ஒரு பாவியாய் இருக்கிறேன் என்பதை உணர்ந்து கொள்ளுதல் அவசியம். (ரோமர் 3:23; 6:23; எசேக்கியேல் 18:4; யோவான் 5:24).

இரண்டாவதாக, பூரணமாய் இருக்கும் சர்வ வல்லமையுள்ள தேவனுடன் உறவுகொள்ளும் விருப்பத்தை உணருதல் வேண்டும், மற்றும் அவ்வாறு உறவுகொள்ள நான் பூரணமற்றவனாய் இருக்கிறேன் என்பதை உணருதல் வேண்டும், நான் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து ஒருவரே இரட்சகர் என்று கண்டுகொள்ள அவசியமாய் இருக்கிறது. (1 கொரி. 15:3; 1 பேதுரு 2:24; ஏசாயா 53:6; யோவான். 3:16).

மூன்றாவதாக, எனது சொந்த சுயசித்தத்தை பயன்படுத்தி, கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை எனது இரட்சகராய் ஏற்றுக்கொண்டு, அவரை தனிப்பட்ட விதத்தில் அவர் எனக்காய் மரித்தார் என்று நான் விசுவாசித்து, எனது தனிப்பட்ட வாழ்வின் மூலமாய், அவரை, என் வாழ்விற்கு அவசியமான, தனிப்பட்ட ஒரு நபராக ஏற்றுக்கொள்ளுதல், அவசியமான ஒன்றாய் இருக்கிறது. (யோவான் 1:12; 3:36; அப். 16:31; 4:12).

இரட்சிப்பின் விளைவுகள்:

இதன் விளைவுகள் என்பது நம்புவதற்கறிய அற்புதமானதாய் இருக்கிறது:

எனது பாவங்கள் மன்னிக்கப்பட்டு, அகற்றப்பட்டன. (யோவான் 1:29),
நான் தற்போது, நித்திய ஜீவனைப் பெற்று இருக்கிறேன் (1 யோவான் 5:11,12),
நான் கிறிஸ்துவுக்குள் புதிய சிருஷ்டியாய் மாறி இருக்கிறேன் (2 கொரி. 5:17),
பரிசுத்த ஆவியானவர், எனது சரீரத்தை தமது வாசஸ்தலமாய் அமைத்துக் கொண்டுள்ளார் (1 கொரி. 6:19),
நான் ஒருபோதும் அழிந்து போவதில்லை (யோவான் 10:28-30).

இவ்வுண்மைகள் வாழ்வின் மிகப்பெரிய பரிமாற்றங்களாய் இருக்கின்றன. இதுவே எல்லா மக்களுக்குரிய இலக்காய் இருக்கிறது; இதுவே நமது வாழ்வின் மேலான நோக்கமாய் இருக்கிறது. கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாதவர்களை கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவைப் பின்பற்றச் செய்யும் இவ்வெளிய போதனைகளால் உற்சாகப்படுத்தி, தேவனுடைய பரிசுத்த குடும்பத்தில் மறுபடி பிறந்து, நித்திய வாழ்வையடைய உற்சாகப்படுத்துங்கள். (மத். 11:28; யோவான் 1:12; அப். 4:12; 16:31).

© Evangelical Bible College of Western Australia - PO Box I63 Armadale Western Australia 6992

Many other Christian resources are available freely from our internet web site: www.ebcwa.com.auand www.newstartbibleministries.org.au for weekly messages.

For further information contact Dr Peter Moses at PO Box 163 Armadale WA 6992 Tel 61 8 9399 1978 or email pjmoses@bigpond.com.au

We encourage you to freely copy and distribute these materials to your Pastor and friends. You only, need written permission from EBCWA if you intend using the materials in publications for resale. We encourage wide distribution freely!

பொருளடக்கம்

பாடம் பக்க எண்

Introduction முகவுரை
3

Foundational Concepts 4
அஸ்திபாரக் கருத்துக்கள்

Where does the Power come from?
வல்லமை எங்கிருந்து வருகிறதாய் இருக்கிறது?
7

False Teachers
கள்ளப் போதகர்கள் 9

Tests for those who handle the Biblical Ordinances 12
வேதாகம சபை நியமங்களை பயன்படுத்துவோருக்கான
பரீட்சைகள்.

1. Dedication of Parents and Children
1. பெற்றோர் மற்றும் பிள்ளைகளை பிரதிஷ்டை செய்தல்
19

2. Water Baptism of Believers 21
2. விசுவாசிகளுக்கான முழுக்கு ஞானஸ்நானம்

3. Resurrection Day (Sunday) Worship Services 24
3. உயிர்த்தெழுந்த நாள் ஞாயிறு ஆராதனை

4. Communion (Eucharist) Services 29
4. திருவிருந்து ஆராதனை (Eucharist)

5. Christian Marriage 33

5. கிறிஸ்தவ திருமணம்
The Jewish Wedding as a teaching illustration 33
யூதத்திருமணம் போதனை விளக்கங்களுக்காக
Marriage and Divorce 36
திருமணமும் விவாகரத்தும்
Church Board Policies on Marriage in Today's Pagan World 37

இன்றைய புறஜாதிய உலகில், திருமணத்தில் சபை போர்டின் கொள்கைகள்.
Format for Wedding Service
திருமண ஆராதனைக்கான ஒழுங்குமுறைப் பட்டியல்.
38

6. Ordination, Dedication and Anointing of Leadership 39
6. தலைமைத்துவ ஆர்டினேஷன், பிரதிஷ்டை செய்தல், மற்றும் அபிஷேகித்தல்.

7. Funerals 43
7. அடக்க ஆராதனை

Pastoral Leadership - Summary Concepts 45

போதக தலைமைத்துவம் - கருத்துக்களின் சுருக்கம்

Auckland, New Zealand 31 October 2012

தேவ ஊழியரின் கரப்புத்தகம்

முகவுரை

EBCWA ல் பல ஆண்டுகாலம் பணியாற்றி போதக இறையியல் பட்டப்படிப்பிற்காய் போதித்து போதகர்களை உருவாக்கும் சேவையில் ஈடுபட்டு வந்த ஒரு தேவ ஊழியரின் கருத்துக்கோர்வையாக இப்புத்தகம் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆரம்ப காலங்களில் "போதகரின் கரப்புத்தகம்" பல ஸ்தாபனங்களில் இலவசமாய் வழங்கப்பட்டு வந்தன, ஆனால் இக்காலங்களில் இது போன்ற கரப்புத்தகங்கள் மிகுந்த விலை கொடுத்து வாங்கக்கூடியதாயும், மற்றும் பல இடங்களில் கிடைப்பதற்கரிய புத்தகமாயும் இருந்து வருகிறது. மட்டுமல்லாது இப்படிப்பட்ட புத்தகங்களின் கண்ணோட்டங்கள் "பேப்டிஸ்ட்" "பிரஸ்பிட்டேரியன்" அல்லது "எப்பிஸ்கோப்பலியன்" போன்ற ஸ்தாபன அமைப்புகளின் வலியுறுத்தல்கள் அதிகமாய்க் காணப்படுகின்றன. இப்படிப்பட்ட கரப்புத்தகங்கள், வேதாகம மற்றும் ஆவிக்குரிய ரீதியில் அமைத்து தேவனது மக்களுடன், சபையின் ஒழுக்க அறநெறிகளை ஆசரிப்பது இப்புத்தகத்தில் அதிகம் வலியுறுத்தப்படுகிறதாய் இருக்கிறது.

சபைக்குரிய இரு சாக்கிரமந்துகளான ஞானஸ்நானம் மற்றும் திருவிருந்து போன்றவை இருந்த போதும், "வேதாகம அறநெறி ஒழுங்குகள்" குறித்து ஆதிசபையில் கையாளப்பட்டு வந்த முறைமையினை, தகுந்த விளக்கங்களுடனும், கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்து, மற்றும் ஆதி அப்போஸ்தலர்கள் கடைபிடித்து வந்த முறைமைகளைக் கையாளும்படி கீழ்க்காணும் கருத்துக்களை விவாதிக்க இருக்கிறோம்.

1. தெய்வீக குடும்பத்தை ஸ்தாபிக்க, பெற்றோர் / பிள்ளைகளை பிரதிஷ்டை செய்தல்.

2. இயேசுவே கர்த்தரும் இரட்சகருமாய் இருக்கிறார் என்பதனை அறிக்கை செய்யும் விசுவாசிகளுக்கு தண்ணீரில் முழுக்கி ஞானஸ்நானம் அளித்தல்.

3. வார ஆரதனை கூட்ட ஒழுங்குகள், கர்த்தர் உயிர்த்தெழுந்து ஜெயம்பெற்றதை ஆசரித்தல்.

4. திருவிருந்து / Eucharist -- ஸ்தல சபையின் பரிசுத்தவான்களுடன் ஐக்கியப்பட்டு கொண்டாடுதல் / ஆசரித்தல்.

5. திருமணம் -- மனித சமுதாயத்தில், எல்லா நிலையான காரியங்களுக்கான அஸ்திபாரம் அமைத்தல்.

6. அபிஷேகித்தல் / பிரதிஷ்டை செய்தல், வரம்பெற்றவர்களை, மற்றும் வேறுபிரிக்கப்பட்ட விசுவாசிகளை ஸ்தல சபையில் ஊழியத்திற்கென ஏற்படுத்துதல்.

7. அடக்கம் செய்தல் -- கர்த்தர் பாவத்தையும், மரணத்தையும் ஜெயித்ததைக் குறித்து, பொதுமக்களுக்கு அறிவிக்கும் தருணம்.

இது "தேவ ஊழியரின் கரப்புத்தகம்" எனத் தலைப்பளிக்கப்பட்டுள்ளது. இது ஸ்தல சபையின் தேவ ஊழியருக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. மற்றும் சபையின் மூப்பர்களாய் இருப்போருக்காகவும், இது பயன்படும் வண்ணம் உருவாக்கப்பட்டுள்ளது.

அவர்கள் வேதாகம ரீதியில் சிந்தித்து, சபையின் அறநெறி நியமங்களை ஸ்தல சபையில் செயல்படுத்துமாறு இப்புத்தகம் உருவாக்கப்பட்டுள்ளது.

இச்சிறு வழிகாட்டியின் நோக்கம், கர்த்தரது மக்களுக்குச் செய்யும் சேவையில், கிறிஸ்தவத் தலைவர்கள், கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் கிருபையில் வளரவும், மிகச் சிறப்பான நிலையில் கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்கு பிரயோஜனமுள்ளவர்களாய் விளங்கவும் செய்கிறதாய் இருக்கிறது. இதை ஆராதனை நேரங்களில் வாசித்து அதன் படி பின்பற்றக்கூடிய ஒரு கையேடு அல்ல, பரிசுத்த ஆவியானவரால் அனுதினமும் நிரப்பப்பட வேண்டியவர்களாய் இருக்கிறோம். நாம் செய்யும் அனைத்துக் காரியங்களிலும், கர்த்தருக்கு நெருக்கமாய் நடந்து கொண்டு, அவரது நடத்துதலின் பேரில், எல்லாவற்றையும் நாம் செய்கிறவர்களாய் இருத்தல் வேண்டும்.

ஸ்தல சபையில் செய்யப்படும் ஒவ்வொரு காரியமும், கிறிஸ்துவைக் குறித்ததாய் இருக்கிறது, ஆதி சபையில் ஆசரித்த தெய்வீக நியமங்கள், கர்த்தராலும், பரிசுத்த அப்போஸ்தலராலும் சபைக்குள் கொண்டு வரப்பட்டதாய் இருந்தது, அவைகள் அனைத்தும் இயேசுவைக் குறித்து அதிகமாய் நமக்குக் கற்பிப்பவைகளாய் இருந்தது. இயேசுவைக் குறித்துப் பேசப்படுகிற ஒவ்வொரு காரியத்தையும், வேதவசனங்களில் வெளிப்படுத்தப்பட்ட பிரகாரம், நாம் அவற்றை மிகவும் பயபக்தியுடன் ஆசரிக்க வேண்டியது அத்தியாவசியமாய் இருக்கிறது. இப்படிப்பட்ட காரியங்களை கவனக்குறைவாகவோ, அஜாக்கிரதையாகவோ செய்தல் கூடாது.

சபையின் நியமங்களை, நமது விருப்பத்திற்கிசைய செய்ய நமக்கு சுதந்திரம் உண்டு என அநேகர் இன்றைய அளவில் நம்புகிறவர்களாய் இருக்கின்றனர், அவ்வாறு செய்வது அப்போஸ்தலரின் தெளிவான போதனைகளை அறியாது செய்வதாய் இருக்கிறது. இப்பாடத்தை கற்றுக்கொள்ளும் நாமனைவரும், "ஒரு முறை அப்போஸ்தலருக்கு ஒப்புவிக்கப்பட்டவைகளை" ஆசரிக்கும் போது அவற்றை வெட்கப்படாது ஜாக்கிரதையாய் அனுசரிக்க தலைப்படுவோமாக. (யூதா 3) மனிதரால் உருவாக்கப்பட்ட எந்த ஒரு சபை நியமங்களில் நாம் நம்பிக்கை வைக்காது, அப்போஸ்தலருக்கு அளிக்கப்பட்ட அறிவுரைகளைத் தாண்டி எந்த ஒரு காரியத்தையும் கருத்து வேறுபாடின்றி, செய்யாதிருக்கக் கவனமுள்ளவர்களாய் இருத்தல் அத்தியாவசியமான காரியமாய் இருக்கிறது.

வேதவசனங்கள் அனைத்தும், இயேசுக்கிறிஸ்துவை உயர்த்திக்காட்டுவதை வெளிப்படுத்துகிறது, இதையே நாடுகிறவர்களாய் இருத்தல் வேண்டும். சபை நியமங்கள் குறித்த வேறு பட்டியல்கள் உங்களுக்கு இருக்குமேயானால், அவைகளை தள்ளிவிட்டு, இந்த டிப்ளமா பாடத்தொடரில் கூறப்பட்டுள்ள காரியங்களை கைக்கொள்வதற்கு திரும்புங்கள், அப்போஸ்தலர் கடைபிடித்தவற்றை ஒரு மில்லிமீட்டர் கூட பிசகின்றி செய்ய உங்களை வற்புறுத்துகிறவர்களாய் இருக்கிறோம். இப்படிப்பட்ட காரியங்களை செயல்படுத்த ஒரு முறமையினை தெரிவு செய்துள்ளோம், அதை நாம் எவ்வளவேனும் மாற்றம் செய்தல் கூடாது, மீறுவோமெனில் தேவனது பரிசுத்த அப்போஸ்தலருக்கு, அவர் அளித்த நியமங்களை மீறுகிறவர்களாய் நியாயந்தீர்க்கப்படுவோம். அப்போஸ்தலர்கள் ஆசரித்த நியமங்களைத் தவிர வேறு நியமங்களையும், நியமங்களை ஆசரிக்கும் வேறு மார்க்கத்தையும் தேடாது இருப்போமாக. ,

இப்பாடங்களைக் கற்றுக்கொள்ளுமுன்னர், கற்றுக்கொள்ளும் மாணவர் EBCWA Diploma வின் எல்லா மூன்று சான்றிதழ் பாடத்தொடரினை கற்றுஇருத்தல் மிகவும் அவசியம். திறவுகோள் உபதேசமாகிய சிஸ்டமேடிக் இறையியல், வேதாகம இறையியல் மற்றும் போதக இறையியல் போன்ற பாடங்களை கற்று அவைகளில் தேறியிருத்தல் அவசியம். இப்பாடத்தில் கற்றுக்கொள்ளவிருப்பவைகள் மேற்கூறிய மூன்று பாடங்களில் இருந்து தொகுக்கப்பட்டவைகளாய் இருக்கின்றன. ஒரு சபையின் மூப்பராய் இருந்து கொண்டு, சபையுகத்தில் ஆசரிக்கவேண்டிய சபை நியமங்களை கைக்கொண்டு அவைகளின் பின் உள்ள சரியான உபதேசங்களை அறியாது அவைகளை ஆசரிப்பது புத்தியற்ற காரியமாய் விளங்குகிறது.

பரிசுத்த அவியானவர் எப்பொழுதும், பரிசுத்தக் காரியங்களை நாம் கையாளும்போது, நம்மை பாதுகாத்து வழிநடத்துகிறவராய் இருக்கிறார், இவற்றை பரிசுத்தத்தோடும் மற்றும் ஞானத்துடனும் ஆசரிப்பது மிகவும் முக்கியம் வாய்ந்ததாய் இருக்கிறது, தேவ ஜனங்களுக்கு, நமது வார்த்தையினாலாவது, செய்கையினாலாவது தவறான கருத்தினை புகுத்தி, நியாயத்தீர்ப்புக்குள் விழாதபடிக்கு ஜாக்கிரதையாய் இருப்போமாக!

2 கொரிந்தியர் 4:1-7.

"இப்படிப்பட்ட ஊழியத்தை உடையவர்களாகிய நாங்கள் இரக்கம் பெற்றிருப்பதால், சோர்ந்து போகிறதில்லை. வெட்கமான அந்தரங்க காரியங்களை நாங்கள் வெறுத்து, தந்திரமாய் நடவாமலும், தேவ வசனத்தைப் புரட்டாமலும், சத்தியத்தை வெளிப்படுத்துகிறதினாலே தேவனுக்கு முன்பாக எல்லா மனுஷருடைய மனசாட்சிக்கும் எங்களை உத்தமரென்று விளங்கப்பண்ணுகிறோம். எங்கள் சுவிஷேசம் மறைபொருளாய் இருந்தால், கெட்டுப்போகிறவர்களுக்கே அது மறைபொருளாயிருக்கும். தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிஷேசத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான். நாங்கள் எங்களையே பிரசிங்கிக்காமல், கிறிஸ்து இயேசுவைக் கர்த்தரென்றும், எங்களையோ இயேசுவினிமித்தம் உங்கள் ஊழியக்காரனென்றும் பிரசங்கிக்கிறோம். இருளில் இருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் சொன்ன தேவன், இயேசுக் கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணும் பொருட்டாக, எங்கள் இருதயங்களில் பிரகாசித்தார். இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி, இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்று இருக்கிறோம்."

தேவனது மக்கள் இன்னும் "இயேசுவைக் காணவேண்டும்." (யோவான் 12:21), தேவ ஊழியர் செய்வது மற்றும் சொல்வதனால், தேவனது சபையில் உள்ள அங்கத்தினர் திசைதிருப்பப்படுதல் கூடாது, அவர்கள் கூறுவதும், செய்வதும் கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவை மையமாய்க் கொண்டுள்ளதாக இருத்தல் வேண்டும். சபையுகத்தில் சபைக்கான நியமங்கள், அப்போஸ்தலருக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன (யூதா 3) இவற்றை சரிவர புரிந்துகொண்டு, சபையின் மூப்பர்கள் சபைக்குரிய நியமங்களை சரியாய் ஆசரிக்க எதிர்பார்க்கப்படுகின்றனர். பவுல் மற்றும் சாலமோன் இவர்களது வார்த்தைகளுக்கு, நமது ஸ்தல சபைகளில் செவி கொடுத்தல் அவசியம். தேவனுக்கடுத்த காரியங்களை நாம் சரிவர கையாளும் போது, நாம் ஆசீர்வதிக்கப்படுவதோடு, நாம் ஒரு ஆசீர்வாதமாகவும் இருப்போம், நாம் தேவனுக்கடுத்த காரியங்களை சரிவர கையாளாதபடிக்கு, கவலையீனமும்,

அறியாமையுடனும் இருப்போமானால், நாம் ஏமாற்றப்படுகிறவர்களாயும், மற்றும் ஏமாற்றுக்காரர்களாயும் இருப்போம். மூப்பர்கள், தெய்வீக சபை நியமங்களை மிகச் சாதாரணமாய் ஆசரிப்பார்களெனில், அது நியாயத்தீர்ப்புக்கு வழிநடத்தும், மட்டுமின்றி "மரணத்துக்கேதுவான பாவத்திற்கே" வழிநடத்தவும் கூடும்.

நீதிமொழிகள் 16:21-28.

"இருதயத்தில் ஞானமுள்ளவன் விவேகியென்னப்படுவான், உதடுகளின் மதுரம் கல்வியைப் பெருகப்பண்ணும். புத்தி தன்னை உடையவர்களுக்கு ஜீவ ஊற்று, மதியீனரின் போதனை மதியீனமே. ஞானிகளின் இருதயம் அவன் வாய்க்கு அறிவை யூட்டும். அவன் உதடுகளுக்கு அது மென்மேலும் கல்வியைக் கொடுக்கும். இனிய சொற்கள் தேன் கூடு போல் ஆத்துமாவுக்கு மதுரமும், எலும்புகளுக்கு ஒளஷதமுமாகும். மனுஷருக்கு செம்மையாய்த் தோன்றுகிற வழியுண்டு அதின் முடிவோ மரண வழிகள். பிரயாசப்படுகிறவன் தனக்காகவே பிரயாசப்படுகிறான்: அவன் வாய் அதை அவனிடத்தில் வருந்திக் கேட்கும். பேலியாளின் மகன் கிண்டிவிடுகிறான், எரிகிற அக்கினி போன்றது அவன் உதடுகளில் இருக்கிறது. மாறுபாடுள்ளவன் சண்டையைக் கிளப்பிவிடுகிறான், கோள் சொல்லுகிறவன் பிராண சிநேகிதத்தையும் பிரித்துவிடுகிறான்."

ஒழுங்குபடுத்தப்பட்ட இறையியல் [Systematic Theology course] பாடத்தொடரை, இப்பாடத்தைக் கற்றுக்கொள்ளும் முன்னர் கற்றுக்கொண்டிருத்தல், மிகவும் அவசியம். காரணம் இது போதகப்பணியை செய்வோருக்குரிய தலையாயக் கடமையாய் இருக்கிறது. இன்றைய அளவில் அநேக உள்ளூர் சபைகளானது "நீங்கள் காலப்போக்கில் கற்றுக்கொள்ளுங்கள்" என்றக் கொள்கையினை கைக்கொண்டு செயல்படுகிறதாய் இருக்கிறது, இக்கொள்கையானது தன்னில்தானே சத்தியம் உள்ளதாய் இருந்த போதிலும், பரிசுத்த காரியங்களை மதியீனமாய் செயல்படச் செய்வது அபாயகரமானதாய் இருக்கிறது. ஸ்தல சபையில் நாம் செய்யும் ஒவ்வொரு காரியமும், மற்றவர்களுக்கு ஏதோ ஒரு வகையில் சத்தியத்தினை அறிவிக்கிறதாய் இருக்கிறது. சபை ஒழுங்குகளில் நாம் செய்ய வேண்டியதெல்லாம், அப்போஸ்தல போதனைகள் மற்றும் அவர்கள் கடைபிடித்தொழுகிய பரிசுத்த அஸ்திபாரத்தின் மீது விசுவாசத்தைக் கட்டியெழுப்புகிறதாய் இருக்கிறது. அவைகளை நாம் தரக்குறைவாக எண்ணுதலோ, அல்லது மீறிச்செல்லுதலோ தவிர்க்கப்படல் வேண்டும்.

ஸ்தல சபையில் செய்யப்படும் அனைத்தும், அப்போஸ்தல போதனைகள் மற்றும் அவர்கள் கடைபிடித்தவைகள் மீதான விசுவாசத்தைக் கட்டியெழுப்புமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. இளம் விசுவாசிகளுக்கு சபையில் பயிற்சியின்றி மற்றும் அறிவுரைகளின்றி எந்த ஒரு அலுவலும் கொடுக்கப்படுவதில்லை, காரணம் அவர்கள் வஞ்சிக்கப்பட்டு, தவறான காரியங்களில் வழுவிப்போக நேரிடுகிறதாய் இருக்கிறது. நாம் விசுவாசிகள் "எவ்வித தவறுகளையும்" அவர்களது பணியின் போது செய்ய அனுமதியளியாது இருப்போமாக. ஒருவேளை அவர்கள் தவற நேர்ந்தால் அது அவர்களுக்கு அவமானத்தை தேடித்தருவதோடு, தேவ மக்களின் ஐக்கியத்திலிருந்து வெட்கத்துடன் வெளியேறச் செய்கிறதாய் இருக்கிறது. நாம் இது போன்ற காரியங்களைக் கருத்தாய் போதித்து, ஊக்கமளித்து, சத்தியத்தை சத்தியமாக அறிந்து கொள்ளச்செய்து, நம்பிக்கையுடனும், மகிழ்ச்சியுடனும் அவைகளை கொண்டாட வேண்டியவர்களாய் இருக்கிறோம்

ஜனங்கள் பணி செய்வதற்கு வெறுப்பு தெரிவிப்பார்களெனில், பரிசுத்த ஆவியானவரது வற்புறுத்தலுக்குச் செவிகொடுப்பார்களாக, அதிகமாய் கற்றுக்கொண்டு, அதிகமாய் ஜெபித்து, அவர்களுக்குள் வாசம் செய்யும் பரிசுத்த ஆவியானவரது வல்லமையின்படி, கர்த்தரது பணியை நிறைவேற்றுவார்களாக. அவர்கள் பரிசுத்த வேதவாக்கியங்களின் சத்தியத்தின் மீது உறுதியான நம்பிக்கை வைக்கிறவர்களாய் இருத்தல் அவசியம். சபை ஆராதனைகளில் எதையும் கடைபிடிக்கலாம் என்பதற்கு இடமளியாது, எல்லாக்காரியங்களும் முன்னதாகவே கடைபிடித்தொழுகினவையாய் இருத்தல் வேண்டும். பாடுகிறவர் சரிவர பாடவில்லையானால், அவர்கள் தனிப்பட்ட நிலையில் பயிற்சி பெறுதல் அவசியமாய் இருக்கிறது, அவர்கள் நண்பர்களுடன், குடும்பத்தினருடன் பயிற்சி பெற்று, கர்த்தருக்காய் பாட தகுதி பெற்ற நிச்சயத்தை அடைந்த பின்னர், தங்கு தடையின்றி ஆராதிக்கும் ஆவியுடன் பாடிக் கர்த்தருக்கு மகிமை கொண்டு வருதல் வேண்டும். இதைப்போன்ற கோட்பாடு எல்லா ஆராதனைகளுக்கும் பொறுந்தத்தக்கதாய் இருக்கிறது.

சபையின் மூப்பர் ஒருவர், இதற்கு முன் சபை ஆராதனையை நடத்தாதவராய் இருப்பாரேயானால், அப்படிப்பட்டவர், போதகரின் "போதனை வகுப்பில்" பயிற்சி பெறுதல் அவசியம், சக மூப்பர்கள் / மாணவர்கள் அவர் ஆராதனை நடத்த போதிய பயிற்சி பெற்று, சிறப்பாய் ஆராதனை அவரால் நடத்த இயலும் என்பதைக் குறித்த உணர்வு உண்டாதல் வேண்டும். தேவ மக்கள், பரிசுத்த காரியங்களைக் கையாளுவதற்கு ஜனங்களால் பரீட்சித்துப் பார்க்கப்படக்கூடியவர்கள் அல்லர். பொது சேவை செய்வதற்கான ஆயத்தம் அடைவதற்கும், நம்மை நாமே பரிசுத்தமாய் விளங்கச் செய்வதற்கும் நாம் கற்றுக்கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறோம் -- சபையின் ஆராதனைகளை, ஜனங்கள் குற்ற மனசாட்சியடைவும் மற்றும் வெட்கத்திற்குள்ளாகும்படி நடத்துதல் தவிர்க்கப்படல் வேண்டும். எல்லா பொதுவான வெளிக்கூட்டங்களும், நிறைவான ஜெபம், வேதபாடம் மற்றும் முறையான ஆயத்தத்துடன் ஒழுங்கு செய்தல் மிகவும் அவசியம்.

வெளிக்கூட்டங்களில் சபை ஒழுங்குகளை செயல்படுத்த முதலாவது அவர்கள் "பரீட்சை செய்யப்பட்டு, அங்கீகாரம் பெற்றிருத்தல் வேண்டும்" மூத்த போதகர்களால் நடத்தப்படும் தனிப்பட்ட பாடங்கள் மற்றும் வகுப்புகள் மூலம் அவர்கள் முறையான பயிற்சி பெற்றிருத்தல் மிகவும் அவசியம். இவ்வாறு பயிற்சி பெறாது, சபை ஒழுங்குகளை வெளிக்கூட்டங்களில் செயல்படுத்துவது, அவர்களுக்கும் அவர்களது சபைக்கும் அவமானத்தைக் கொண்டுவருகிறதாய் இருக்கும். அவமானத்தையும் குற்ற உணர்வையும் கொண்டுவரத்தக்க, பரிசீலனைக்குட்படாத ஆராதனைகள் நிகழும்படி செய்தல் தவிர்க்கப்படல் வேண்டும். தாங்களது மதியீனத்தை உணரத்தக்க சூழலில் மக்களை கொண்டுசெல்லுதல் கூடாது. நாம் தேவ ஜனங்களை கட்டியெழுப்புமாறு ஏற்படுத்தப்பட்டுள்ளோம், மற்றும் அவர்களுக்கு வெட்கம் உண்டாக்கும் சூழலை அவர்களுக்கு உண்டாக்குவது தவிர்க்கப்படல் வேண்டும், வரங்கள் செயல்படாத, சரியான அழைப்பில்லாத, போதிய பயிற்சியில்லாத, ஆயத்தமில்லாத, அனுபவமில்லாத ஊழியர்கள் பொதுக்கூட்டங்கள், மற்றும் ஆராதனைகளை நடத்துதல் கண்டிப்பாய் தவிர்க்கப்படுதல் வேண்டும்.

2 தீமோத்தேயு 2:15-17.

"நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி

ஜாக்கிரதையாய் இரு. சீர்கேடான வீண் பேச்சுகளுக்கு விலகியிரு, அவைகளால் (கள்ளப்போதகர்களான) அவர்கள் அதிக அவபக்தியுள்ளவர்களானார்கள்.
3:14-17. நீ கற்று நிச்சயித்துக் கொண்டவைகளில் நிலைத்திரு அவைகளை இன்னாரிடத்தில் கற்றாய் என்று நீ அறிந்திருக்கிறதும் அல்லாமல், கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயது முதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும். வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது, தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்திற்கும், கடிந்து கொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது."

ஸ்தல சபையின், சபை ஒழுங்குகளை நடத்தக் கேட்டுக்கொள்ளும் போது, அவைகளில் பாண்டித்துவம் பெற்று, அவைகளை திறம்பட நடத்த அவசியமான அஸ்திபாரக் கருத்துக்கள்.

EBCWA அறிவுரையாளர் / உருவாக்குபவர் [mentor] அவர்களுக்கு ஒரு மாணவனாகும்படி ஒவ்வொரு நபரும் ஒரு விண்ணப்பப் படிவத்தைத் தயார் செய்தல் வேண்டும். கீழ்க்கண்டவாறு அப்படிவம் அமைதல் வேண்டும்.

[1] முழுப்பெயர், முகவரி, பிறந்த தேதி.

[2] நன்னடத்தை குறித்து அறிந்து கொள்ள இரு நபர்களது முகவரி.

[3] மாணவரின் விசுவாச சாட்சி அறிக்கை.

[4] மாணவரின் கல்வித் தகுதி பிறப் பயிற்சிகள், மற்றும் செய்யும் தொழில் விபரம்.

[5] மாணவரின் இரட்சிக்கப்பட்ட நாள் முதல் இந்நாள் வரையுள்ள அவர்களது கிறிஸ்தவப் பணிக் குறித்த விபரம்.

[6] இந்த டிப்ளமா கோர்ஸ்ஸை மாணவர் கற்றுக்கொள்வதற்கான நோக்கம் குறித்த விவரணம்.

[7] இப்பாடத்தொடரைக் கற்றுத்தேர்ந்த பின்னர், அவர்கள் ஒரு அறிவுரையாளராய் / உருவாக்குபவராய் திகழும்படி அவர்கள் சிந்தித்து செயலாற்ற வேண்டும்.

[8] கீழ்க்கண்ட கேள்விகளுக்கு அவர்கள் பதில் அளித்தல் வேண்டும்.

கேள்வி 1 - தேவனது குணாதிசயங்களை விவரி, அதை அறிந்துகொள்வதன் முக்கியத்துவத்திற்கான காரணம் எவை?

கேள்வி 2. விசுவாசம் மற்றும் கர்த்தரில் இளைப்பாறுதல் போன்றவற்றைக் குறித்து விவரி, அதன் முக்கியத்துவத்திற்கான காரணம் என்ன?

கேள்வி 3. பாவம் அறிக்கை செய்யப்படுதல் குறித்து விவரி, அதன் முக்கியத்துவத்திற்கான காரணம் என்ன?

கேள்வி 4. ஆவிக்குரிய வாழ்க்கை என்றால் என்ன? நீங்கள் எந்த வகையில் ஆவிக்குரிய வாழ்க்கை செய்து வருகிறீர்கள்?

கேள்வி 5. ஏன் விசுவாசிகள் பாடுகள் / துன்பங்களை அடைந்து வருக்கிறார்கள்?

மாணவர்கள் மேற்கூறிய காரியங்களுக்குரிய பிரதிபலிப்பை இப்பொழுது வெளிக்காட்ட வேண்டும், அவர்கள் இப்பாடங்களைக் கற்றுக் கொண்டு பட்டதாரியான பின்னர், அவர்கள் ஆராதனையை நடத்தத் துவங்கும் முன்னர் இப்பாடங்களை மறு பரிசீலனை செய்தல் வேண்டும். சபையின் அனைத்து மூப்பர்களும் இப்பாடத்தினை வாசித்தறிந்து கொள்ள வரவேற்கிறேன், மேலே கொடுக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தையும், அதன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்கும் இப்பொழுது பதில் அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இதை ஓரிரு ஆண்டுகளில் கற்றுத் தேர்ந்து ஊழியம் செய்வதற்கான ஆயத்தத்தை அடைந்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன். சில காரியங்கள் மாற்றம் அடைவதில்லை, ஆனால் மற்றவர்களைக் குறித்த நமது புரிந்துகொள்ளுதல், குறிப்பிடக்கூடிய வகையில் மாற்றம் அடைகிறதாய் இருக்கிறது. மாற்றமடைந்த காரியங்களில் உங்கள் பிரதிபலிப்பை வெளிக்காட்டி, அவ்வாறு அவர்கள் மாறும்படி செய்தது என்ன என்பதனை கண்டறியுங்கள். விஷேசமாக உங்கள் ஆழமான புரிந்துகொள்ளுதலில் அவைகளை வெளிக்காட்டி, தேவனது குணாதிசயங்கள் மற்றும் உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையை சரிவர புரிந்து கொள்ள முயலுங்கள்.

ஸ்தல சபையில் சேவை செய்வதை இப்பொழுது தேடுகிறவர்களாய் இருக்கிறீர்கள், மற்றும் சபையின், சபை ஒழுங்குகளை நடத்த இருக்கிறீர்கள். ஜெபத்துடன் இப்பாடத்தினை கற்றுக்கொள்ளத் துவங்குங்கள், நீங்கள் செய்யும் அனைத்திலும் தேவனது வல்லமை விளங்க, இவ்வறிவுரைகளை உங்கள் வாழ்வில் பிரதிபலித்து, கர்த்தருக்கு மகிமை கொண்டுவர ஆயத்தப்படுங்கள்.

போதகக் குணாதிசயங்கள் - 2 தீமோத்தேயு 3.

நமது கர்த்தரின் சிலுவைப்பாடுகள், உயிர்த்தெழுதல் மற்றும் பரமேறுதல் முதற்கொண்டு, மும்முரமாய் செயல்பட்டும் வரும் "தூதர்களின் முறண்பாடுகள்" தீவிரமடைந்து வருகிறதாய் இருக்கிற காலக்கட்டத்திற்குள் நாம் வாழ்ந்து வருகிறோம். இக்கால கட்டமானது சரித்திரத்தில் சபை யுகம் என அழைக்கப்படுகிறது. மற்றும் கர்த்தராலும், ஆரம்பகால விசுவாசிகளாலும் இது கடைசி காலம் என அறியப்படுகிறதாய் இருக்கிறது. இக்காலக் கட்டத்திலே நாம் நமது ஸ்தல சபையில், தேவ ஊழியராய் பணியாற்றி வருகிறவர்களாய் இருக்கிறோம். குறைந்த பட்சம், 18 குணாதிசயங்கள் இக்கடைசி காலத்திற்குரியதாய் இருக்கிறது, இது சபையின் குணாதிசயமாகவும் விளங்கி வருகிறது, இக்காலங்களில் சந்திக்கப்படும் மக்கள் எத்தகையவர்களாய் இருப்பர் என்பது, முன்கூட்டியே அறிவிக்கப்பட்டுள்ளது. இதைக் குறித்த எல்லாவித அறிவுடையவர்களாய் நாம் இருத்தல் அவசியம், இதை அறிந்து நாம் செயல்பட வேண்டியவர்களாய் இருக்கிறோம். நாம் சேவகராய், யுத்தவீரராய், ஸ்தானாபதியாய் ஆயத்தமாக வேண்டியுள்ளது, பின்னர் நாம் கிறிஸ்துவுக்குள் சேவகம் செய்து, ஜெயம் பெறுபவர்களாய் யுத்தம் செய்ய வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

சபையுகத்தில் கடைபிடிக்க வேண்டிய சபை ஒழுங்குகள், தேவதூதரின் முறண்பாடுகளின் உண்மைத்துவமாய் இருக்கிறது. இதனிமித்தமே சபை ஒழுங்குகளை மிகவும் கவனமாய் ஆசரிக்க வேண்டியது அவசியமாய் விளங்கிவருகிறது. இப்படிப்பட்ட சபை ஒழுங்குகளை நமக்கு ஆதரவு தெரிவிக்கும், மற்றும் நம்மை எதிர்க்கும் இருபாலரான தேவதூதர்கள் முன்னிலையிலும், செய்ய வேண்டியுள்ளது. எபிரெயர் 12:1-3 ல் பவுல் கூறும்போது, கடினமான சமயங்களில், நாம் சேவை செய்ய ஆயத்தபட வேண்டியுள்ளது, நாம் சந்திக்க இருக்கும் மக்கள் எக்காலத்திலும் மிகவும் நேர்த்தியான மக்கள் என்று கூறுவதற்கில்லை என எச்சரிக்கிறார். அப்படிப்பட்டவர்களுக்காக நாம் ஆயத்தப்பட வேண்டும், நமது மந்தையை இப்படிப்பட்டவர்களிடமிருந்து பாதுகாத்துக் கொள்ள முயலுதல் அவசியமாய் இருக்கிறது. சத்தியத்தின்படி வாழ்தல் வேண்டும், தீமை செய்கிறவனுக்கு எதிராய், பலசாலிகளாய் விளங்குதல் வேண்டும். "இக்கடைசி காலத்தில்" இதுவே எல்லா ஊழியரின் "சட்டதிட்டங்களாய்" இருக்கின்றன.

2 தீமோத்தேயு 3:1-8.

"மேலும் கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக. எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய்தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும், சுபாவ அன்பில்லாதவர்களாயும், இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், இசையடக்கமில்லாதவர்களாயும், கொடுமையுள்ளவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும், துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப்பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயும், தேவ பக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள், இப்படிப்பட்டவர்களை நீ விட்டு விலகு. பாவங்களால் நிறைந்து, பற்பல இச்சைகளால் இழுப்புண்டு, எப்பொழுது கற்றாலும் ஒரு போதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்களாயிருக்கிற பெண்பிள்ளைகளுடைய வீடுகளில் இப்படிப்பட்டவர்கள் நுழைந்து அவர்களை வசப்படுத்திக் கொள்ளுகிறார்கள். யந்நேயும், யம்பிரேயும் மோசேக்கு எதிர்த்து நின்றது போல, இவர்களு சத்தியத்திற்கு எதிர்த்து நிற்கிறார்கள், இவர்கள் துர்புத்தியுள்ள மனுஷர்கள், விசுவாச விஷயத்தில் பரீட்சைக்கு நில்லாதவர்கள்."

இவ்வகையான பதினெட்டு குணாதிசயங்களும், சுயத்தின் தீமைகளாகவும், மற்றும் சுயத்தை மையமாய்க் கொண்டு செயல்படுபவைகளுமாய் இருக்கின்றன, இவ்விரு குணாதிசயங்களுமே சாத்தானின் குணாதிசயமாய் விளங்குகின்றன. தேவனுக்குக் கீழ்ப்படிய மறுத்து சுயத்தை மேன்மைப்படுத்துகிறவனாய் இருக்கிறான். ஒழுங்குபடுத்தப்பட்ட இறையியல் பாடத்தில், சாத்தானின் உபாய தந்திரங்களில் இருந்து கர்த்தருடைய மந்தையை எவ்வாறு பாதுகாப்பது குறித்து விரிவாய் கொடுக்கப்பட்டுள்ளதை நினைவில் கொள்ளவும். எல்லா சாத்தானது உபாய தந்திரங்களும், சுயத்தை மையமாய்க் கொண்டு செயல்படுவதாய் இருக்கிறது. அது ஒருபோதும் தேவனை மையமாய்க் கொண்டு செயல்படுவதாக இல்லை. சபையுக, சபை ஒழுங்குகள் யாவும் கிறிஸ்துவை மையமாய்க் கொண்டு செயல்படுத்தப்படுகிறதாய் இருக்கின்றன.. -- அது சுயத்தை மையமாய் கொள்ளாது, சத்துருவின் கண்ணோட்டத்தின் படி செயல்படாது, தேவனது திட்டத்தின்படியே செயல்படுகிறதாய் இருக்கிறது. கீழ்க்காணும் பதினெட்டு குணாதிசயங்களும், ஏற்கனவே

எதிராளியால் கையாளப்பட்டு வருகிறதாய் இருக்கிறது, இவைகளைப் பவுல் கீழே பட்டியலிட்டு காட்டுகிறவராய் இருக்கிறார்.

1. தற்பிரியர் - தன்னையே மையமாய் கொண்டு செயல்படுவது என்பது, சுய நோக்கோடு ஒவ்வொரு காரியங்களையும் வியாக்கியானித்து செயல்படுவதைக் காட்டுகிறது; இது ஒரு ஒழுக்கரீதியாக, ஒப்பிடும் செயல்பாடுகளாய் இருந்து, தேவனையும் அல்லது மற்றவர்களையும் மையமாய் கொண்டு செயல்படாது, தன்னையே / சுயத்தை மையமாய் கொண்டு செயல்படுவதாய் இருக்கிறது.

2. பணப்பிரியர் - இவர்கள் பணத்தின் மீது ஆசை கொண்டவர்கள், ஒவ்வொரு காரியமும் விலையுள்ளதாயும், அதன் கிரயத்தை பணத்தால் மதிப்பிடப்படக்கூடிவர்களாய் இருக்கின்றனர்..

3. வீம்புக்காரர் - இப்படிப்பட்டவர்களை ஜனங்கள் "உஷ்ணக்காற்றால் நிறைந்தவர்கள்" **"full of hot air";** என்று சொல்லுகிறார்கள். இவர்கள் மனப்பூர்வமாய் எதையும் செய்கிறவர்கள் அல்லர், இவர்கள் தங்களைக்குறித்த பெரிய காரியங்களை எப்பொழுதும் பேசுகிறவர்களாய் இருக்கின்றனர்.

4. அகந்தையுள்ளவர்கள் (**Pride**) - அகந்தை வரையரைகளை அறியாது, தேவனது கருத்துக்களைப் புறக்கணித்து, சுயமாய் எல்லாத்தீர்மானங்களையும் எடுக்கிறவர்களாய் விளங்குகின்றனர்.

5. தூஷிக்கிறவர்கள் - இப்படிப்பட்டவர்கள் தங்களுக்குத் தேவனைக்காட்டிலும் எல்லாம் தெரியும் எனக் கூறுபவர்களாயும், மற்றும் இவர்கள் மிக விரைவாக, நேரடியாக தேவனையும், அவரது வார்த்தைகளையும், அவமதிக்கிறவர்களாய் காணப்படுவர், அவர்களது பார்வையில் தேவனை நம்புவது மூடத்தனமாய் இருக்கிறது, இவர்கள் தேவனது சட்டதிட்டங்கள் அவரது வார்த்தையின் கட்டுப்பாடுகள் இவைகளை மீறி செயல்படுகிறவர்களாய் இருக்கின்றனர்.

6. தாய்தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்கள் - மனப்பூர்வமாக, ஒரு தேசத்தின் பெலமானது, குடும்ப அங்கத்தினருக்குள் அளிக்கப்படும் மரியாதையில் வேர் விட்டிருக்கிறது. குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களாகும்போது, அவர்கள் பெற்றோர்களை உதாசீனப்படுத்துவது, கீழ்ப்படிய மறுப்பது, அல்லது பெற்றோர்களை மதியாமல் நடப்பது போன்றவைகள், ஆரோக்கியமற்ற, ஒழுங்கீனங்களைக் காட்டுகிறதாய் இருக்கிறது. சமுதாயமானது தனது சொந்த பெற்றோர்களை மதியாத பிள்ளைகளினிமித்தம், துயரமடைகிறது மட்டுமல்லாது, இப்படிப்பட்டவர்கள் தங்களது வாழ்க்கையை, அல்லது சொத்தை, மற்றும் மற்றவர்களை மதியாமல் நடக்கிறவர்களாய் இருக்கின்றனர். இதினிமித்தம் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் தங்களை மதிக்கும் வண்ணமும், பிள்ளைகள் பெற்றோரை மதித்தும், கனப்படுத்தியும் வாழக்கற்றுக்கொள்ளுதல் அவசியம்.

7. நன்றியறியாதவர்கள் - இப்பதத்தின் அர்த்தமானது, தீமை செய்து வரும் மக்களைக் குறித்து கூறுகிறது, இப்படிப்பட்டவர்கள் மற்றவர்களைக் குறித்து, எப்பொழுதும் அவதூறுகளைக் கூறித் தூற்றிக்கொண்டு திரிவார்கள். நீங்கள் சில மக்களுக்கு மிகச்சிறப்பான காரியங்களைச் செய்தும், அவர்கள் அதை அலட்சியப்படுத்தி, உங்களைப் புண்படுத்தும் வகையில், உங்களை நிந்தித்து அல்லது உங்களது சாந்தகுணத்தை அவர்கள் புறிந்துகொள்ளாத வண்ணம் உங்களை தூற்றிதிரிவதற்கான

காரணம் என்ன? அதன் பதில் இங்கே இருக்கிறது. தவறான உபதேசத்திற்கும், தீமைக்கும், தங்களை அற்பணித்துக்கொண்டவர்கள், எல்லாவித நன்மையான கண்ணோட்டத்தை இழந்து, அவர்கள் சுபாவமானது நன்றியற்ற தன்மைக்கு வழிநடத்தி, அழிவுக்கும், அவர்களை அகம்பாவத்திற்குள்ளும் வழிநடத்துகிறதாய் இருக்கிறது.

8. பரிசுத்தமில்லாதவர்கள் - பரிசுத்தம் என்பது தங்களைத் தேவனது சேவைக்காக வேறுபடுத்திக்கொண்டு வாழ்வதையும், அசுத்தமாய் வாழ்வது/பரிசுத்தமில்லாது வாழ்வது என்பது, மேற்சொன்னவற்றிற்கு எதிராய் வாழ்வதையும் காட்டுகிறதாய் இருக்கிறது. இது தேவனுக்கு தங்களது வாழ்வை அற்பணியாது, சுயத்திற்காகவும், தீமைக்காகவும் தங்களை அற்பணித்துக்கொண்டு வாழ்வதைக் காட்டுகிறதாய் இருக்கிறது. இது மிகவும் தீவிரமான ரீதியில், எதிராளிக்குச் சேவை செய்து வாழ்வதைக் காட்டுகிறதாய் இருக்கிறது.

9. சுபாவ அன்பில்லாதவர்கள் - அன்பு கூறத்திராணியில்லை என்பது, மிகவும் அபாயகரமானதும், ஆழமான நிலையில் தன்னை முற்றிலும் தீமைக்கு அற்பணித்து வாழ்கின்ற வாழ்க்கையைச் சுட்டிக்காட்டுகிறதாய் இருக்கிறது. ஜனங்கள் தங்களை மட்டுமே நேசித்து வாழ்வார்களேயானால், அவர்கள் பிறரிடத்தில் அன்பு செலுத்தும் யோக்கிதையை இழந்து காணப்படுகிறவர்களாய் இருக்கின்றனர்.

10. இணங்காதவர்கள் - ஜனங்கள் ஒழுக்கமற்றவர்களாய் இருப்பார்களேயானால், அவர்கள் சுய ஆசையுள்ளவர்களாய், ஒரே காரியத்தை மட்டும் அவர்கள் கண்ணோக்குகிறவர்களாய், மற்ற எதைப்பற்றியும் கவலைப்படாதவர்களாயும் இருப்பார்கள். இவர்கள் காற்றைப்போல நிலயற்றவர்களாய் இருப்பார்கள்! இப்படிப்பட்டவர்களது வார்த்தைகளை ஒரு போதும் நம்புவதற்கு இயலாது.

11. அவதூறு செய்கிறவர்கள் - சுயம் இராஜாவாய் ஆழுகை செய்யும் இடத்தில், தீங்கிழைக்கும் கிசு கிசுப்புக்களின் பெருக்கம் அபரிமிதமாய் காணப்படும். ஜனங்கள் கர்த்தரைக் குறித்துப் பேசாது, அவர்கள் பேசும் பேச்சானது, மற்றெல்லாவற்றைக்குறித்தும், அவசியமற்ற எல்லாவற்றைக்குறித்துமாய் இருக்கும்.

12. இச்சையடக்கமில்லாதவர்கள் - இவர்கள் இச்சையடக்கமற்றவர்களாய் இருப்பார்கள். இப்படிப்பட்ட ஜனங்கள் சத்தியத்தையும் நீதியையும் பின்பற்றுகிறோம் என எண்ணிக்கொண்டு, சொந்த கற்பனைகளையும் மற்றும் சுய ஆசைகளையும் பின்பற்றுகிறவர்களாய் இருப்பர், சுய ஆசைகளையும், இச்சைகளையும் பின்பற்றுகிறவர்களாயும் இருப்பார்கள்.

13. கொடுமையுள்ளவர்கள் - கொடூர மனிதர்கள் சாத்தானின் மனிதராய் இருக்கின்றனர். சாந்த குணமுள்ளவர்கள் தேவனின் மனிதராய் இருக்கின்றனர். சபையில் மற்றவர்களை தங்களது வார்த்தைகளாலோ அல்லது கரங்களாலோ கிழித்தெறிவதற்கு இடமே இல்லை. நாம் காட்டு நாய்களைப் போன்று மூர்க்கத்தனமாய் இருத்தல் கூடாது, கர்த்தரைப்போன்று சாந்தமுள்ளவர்களாய் இருத்தல் வேண்டும். கொடூரமான மனிதன் கள்ளச் சகோதரனாய் இருக்கிறான்.

14. நல்லோரைப் பகைக்கிறவர்கள் - ஒரு மனிதன் தனது தோழனால் அறியப்படுகிறான், மற்றும் அவர்கள் அவன் அன்பு கூறுகிறவர்களாலே அறியப்படுகிறான். ஒரு நல்ல மனிதனும் நல்லமனிதர்களை புறக்கணிக்கிறவர்கள் அல்லர், ஆனால் ஒவ்வொரு தீயமனிதரும் நல்லோரைப் பகைக்கிறவர்களாய் இருக்கின்றனர். மற்றவர்கள்

சிநேகிக்கும் குழுக்களைப் பார்த்து, அவர்களது இருதயம் எங்கேயிருக்கிறது என்று அறிந்து கொள்ளுங்கள்.

15. துரோகிகளாய் இருக்கிறவர்கள் - ஒரு நபர் சாக வேண்டுமானால், இப்படிப்பட்டவர்கள் எதைக்குறித்தும் சிந்தியாமல் உங்களைக் காட்டிக்கொடுக்கிறவர்களாய் இருப்பார்கள். தீமையானது சுய திருப்தி என்னும் நிலையை உடையதாய் இருக்கிறது. நல்லோரைக் காட்டிக்கொடுத்தல் தற்காலிக இலாபத்திற்காய் தீமை செய்யும் மனிதரிடமிருந்து எதிர்பார்க்கப்படும் ஒன்றாய் இருக்கிறது.

16. துணிகரமுள்ளவர்கள் - தீமை செய்யும் மனிதனுக்குரிய தனிப்பண்பானது சிந்திக்காது செயல்படுவது ஆகும். விளைவைக்குறித்து அவர்கள் எவ்வளவேனும் சிந்திப்பதே கிடையாது, இவர்கள் கண்மூடித்தனமுள்ளவர்களும், மதியீனருமாய் இருக்கின்றனர். மற்றவர்களைக்குறித்த கரிசனை அற்றவர்களும், அவர்களைக்குறித்த முன்னறிவற்றவர்களாய் இருக்கின்றனர்.

17. இறுமாப்புள்ளவர்கள் - இப்படிப்பட்டவர்கள் தங்களுக்குத் தாங்களே கண்மூடித்தனமுள்ளவர்களாயும், மதியீனமருமாய் இருக்கின்றனர். இவ்வாறு தாங்கள் இருப்பதுமன்றி இப்படிப்பட்ட பெயர்களை மற்றவர்கள் மீது பயன்படுத்துகிறவர்களாய் இருக்கின்றனர். தங்களது நடத்தைகளால் உண்டாகும் எவ்விதப்பிரச்சனைகளையும் இவர்கள் காண்டுகொள்ளமாட்டார்கள். அவர்கள் தங்களது பார்வைக்கு மிகவும் பூரணமானவர்களாய் இருப்பார்கள்.

18. சுகப்போகப்பிரியர்கள் - இவர்களது தேவன் அவர்களது வயிறு. பிலிப்பியர் 3:19. அவர்களுக்கு எது நல்லது எனத்தோன்றுகிறதோ அதையேச் செய்வார்கள், அது அவர்களுக்கும் அவர்களைச் சார்ந்த மற்றவர்களுக்கும் ஆதாயம் தேடித்தருவதாய் இருக்கும்.

வல்லமை எங்கிருந்து வருகிறதாய் இருக்கிறது?

இக்கொடிய பட்டியலில் இருப்பவர்கள், பவுலின் நாட்களில் இருந்தைப் போன்றே, நமது நாட்களிலும் இருந்து வருகின்றனர். இது இவ்வுலகின் மீது, தீமை பிரகடனப்படுத்தப்படுவதற்கான அடையாளமாய் இருக்கிறது. இப்படிப்பட்டக் காரியங்கள் சாத்தானாலும், அவனது வேலையாட்களாலும் (மனிதர் மற்றும் பிசாசுகள்) சபைக்குள் ஊட்டி வளர்க்கப்படும் செயல்களாய் இருந்து விசுவாசிகளை, தேவனிடமிருந்தும், தேவ நோக்கங்களிலிருந்தும் விலகச் செய்கிறதாய் இருக்கிறது. இத்தகைய செயல்பாடுகள் மற்றும் சிந்தனைகள் போன்றவற்றிலிருந்து, நமது இருதயத்தை அதற்கு இணங்கவிடாது, இருத்தல் வேண்டும், இப்படிப்பட்ட காரியங்கள் வாழ்க்கையைத் தீட்டுப்படுத்திக் கலங்கப்படுத்துகிறதாய் இருக்கிறது. ஐந்தாம் வசனத்தில் பவுல் இப்படிப்பட்ட மக்களது மத்தியக் கருத்தை இனங்கண்டுகொள்கிறவராய் இருக்கிறார். உண்மையாகவே பயப்படுத்தக்கூடிய விஷயம் என்னவென்றால், இப்படிப்பட்டவர்கள் சபையில் இருந்துகொண்டு செயல்படுகிறவர்களாய் இருக்கின்றனர், பவுலின் நாட்களில், உண்மையான விசுவாசிகளை விட இவர்கள் அதிக ஆவிக்குரியவர்களாய் விளங்கிவந்தனர்.

மெய்யான ஆவிக்குரிய தன்மையானது வல்லமையால் வகையறுக்கப்படுகிறதாய் இருக்கிறது, தவறான சகோதரரும், சகோதரிகளும் தங்களது வாழ்க்கை முறைக்கான வல்லமையை சுயமாய் பெறுகிறவர்களாய் இருக்கிறார்கள், மெய்யான விசுவாசிகள் தங்களது வாழ்க்கை முறைக்கான வல்லமையை தேவனிடமிருந்து பெறுகிறவர்களாய் இருக்கின்றனர். இதற்குமுன் நீங்கள் கற்றுக்கொண்ட போதக இறையியல் வேதபாடத்தில், விசுவாசிகள் தேவனது வல்லமையில் கிறிஸ்தவ சமுதாயத்தில் வாழும்படி ஊக்கமளிக்கப்பட்டது குறித்து கற்றதை நினைவுபடுத்திக்கொள்ளுதல் அவசியம். ஊழியமானது ஒவ்வொரு வாரத்திலும், மனிதக் கண்ணோட்டம், மற்றும் தெய்வீகக் கண்ணோட்டம், மனித வல்லமை, யுக்திகள் மற்றும் பரிசுத்த ஆவியானவரால் அளிக்கப்படும் வல்லமை இவைகளுக்குள்ள வித்தியாசத்தை கண்டுகொள்ள சவால்களை அளிக்கிறதாய் இருக்கிறது.

சாத்தானின் நோக்கம் எப்பொழுதும், மக்களை குடிபோதைக்கு அடிமைகளாய் வைப்பது அல்ல, மாறாக அவர்கள் தங்களது சுயநீதியிலும், மாய்மாலம் செய்கிற லீகலிஸ்டுகளாய். வாழும்படி செய்து, தேவ மக்களுக்கு மத்தியில் எல்லாவிதக் குழப்பங்களையும் உருவாக்குகிறவனாய் இருக்கிறான். சாத்தானால் வஞ்சிக்கப்பட்ட மக்கள் பெருமையினால் உருவாக்கப்படும் வல்லமை தவிர வேறு உண்மையான வல்லமையானது அவர்களில் செயல்படுவது இல்லை. மனிதர்களின் சுயம் சார்ந்து செயல்படும் பட்டியலில் உள்ள பண்புகளைத் தவிர, கலாத்தியர் 6 ம் அதிகாரத்தில் ஆவியின் கனி அவர்களில் காணப்படுவது இல்லை. சாத்தானின் கொள்கையானது, தேவ மக்களின் வல்லமையைத் திருடுவதும், தேவ நோக்கத்திலிருந்து அவர்களை வழிவிலகச் செய்வதுமாய் இருக்கிறது.

போதக இறையியல், சபையில் செயல்பட்டு, தொடர்ந்து தேவனது கொள்கைகளை நிலைநாட்டி, கர்த்தரது ஜனங்களை சத்துருவின் சோதனைகளால் சிதறடிக்கப்படாத வண்ணம் எச்சரிக்கை செய்கிறதாய் இருக்கிறது. சபையுகத்தில் செயல்படுத்த வேண்டிய சபை ஒழுங்குகள், கர்த்தரால் வடிவமைக்கப்பட்டு, அளீக்கப்பட்டுள்ளது.

W Hendricksen அவர்கள் குறிப்பிடுகையில்: "இப்படிப்பட்ட தவறான ஜனங்கள், ஆவிக்குரிய வல்லமையில் குறைவுபட்டவர்களாய் இருக்கின்றனர். அவர்கள் தேவன் மீது அன்பற்றவர்களாய் இருக்கின்றனர், அவரது வெளிப்பாட்டைக் குறித்து கரிசனையற்றவர்களாய் இருக்கின்றனர், மற்றும் அவரது ஜனங்கள் மீது அக்கரையோ, கரிசனையோ, அன்போ இல்லாதவர்களாய்க் காணப்படுகின்றனர். அவர்கள் ஆவியானவரால் நிரப்பப்படாதவர்களாய் இருக்கிறபடியால், அவர்கள் ஆவிக்குரிய வல்லமையில் குன்றினவர்களாய் இருப்பது குறித்து ஆச்சரியப்படுவதற்கில்லை." (Pastoral Epistles, page 286). இவர்கள் மிகப்பெரிய நடிப்பாளர்களும், மாய்மாலக்காரரும், தேவ வல்லமை மற்றும் தெய்வ நம்பிக்கையில் வெறுமையானவர்களுமாய் இருக்கின்றனர். யூதா 12 ம் வசனத்தின் படி, "காற்றுக்களால் அடியுண்டோடுகிற தண்ணீரற்ற மேகங்களாய்" இருக்கின்றனர், அவைகள் தவித்துவிடாய்த்து போயிருக்கும் நிலத்திற்கு அதிகமாய் வாக்குப்பண்ணி, எதுவுமே அளியாது இருக்கிற வெறுமையான மேகத்தைப் போன்றிருக்கிறார்கள்.

இவ்வுலகில் உள்ள அநேகர், கீழ்ப்படியாமையை அல்லது பாவவாழ்வில் எவ்வித மாற்றத்தையும் கொண்டுவராத, அல்லது பழைய பாவசுபாவத்தை எவ்விதத்திலும் கண்டுகொள்ளாத மதத்தினையே விரும்புகிறவர்களாய் இருக்கின்றனர். போலியான விசுவாச மார்க்கத்தை அதிகம் விரும்புகிறார்கள், உண்மையான கிறிஸ்தவத்தை அவர்கள் விரும்புவதோ அல்லது அதற்குள் கடந்து வருவதற்கு அஞ்சுகிறவர்களாய்

காணப்படுகின்றனர். ஒரு இரட்சகரின் அவசியத்தை, ஜனங்கள் காணவிடாதபடி செய்வது சத்துருவின் வாஞ்சையும், விருப்பமுமாய் இருக்கிறது. இவ்வாறு செய்து கர்த்தராகிய இயேசுவைப் பின்பற்றுவதைத் தடை செய்கிறவனாய் இருக்கிறான். சாத்தான் ஜனங்கள் போலியான சமாதானத்துடனும், சௌக்கியத்துடனும் இருப்பதை வாஞ்சிக்கிறான், அவர்கள் நித்தியம் குறித்த உண்மைகளைக் குறித்து, அவர்களது கவனங்களை திசை திருப்புகிறவனாயும் இருக்கிறான். அவன் ஜனங்களது கவனச்சிதறல்கள் குறித்து எவ்வித அக்கரையும் கொள்ளாது, பாவத்தையும், தீமையையும், சுயமான நற்கிரியைகளையும் செய்வதில் அவர்களுக்கு ஊக்கமளிக்கிறவனாய் இருக்கிறான்.

ஜனங்கள் எப்பொழுதும், நித்தியத்திற்கு அடுத்த உண்மையின் பிரகாரம், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையில் நடந்து கொண்டு, மற்றும் வேதாகம வெளிச்சத்தின் சத்தியத்தில் தங்களை உறுதி செய்து கொள்ள, போதக இறையியலானது அவர்களை பார்வையடையச் செய்கிறது. வேதாகம சத்தியத்திலிருந்து மந்தையானது வழிவிலகிச் சென்று, ஆவிக்குரிய வஞ்சக செயல்களுக்கு உட்படாது அவைகளைத் தடைசெய்கிறதாயும் இருக்கிறது. போதக இறையியலானது, மந்தையை, முழுமையாய் பரமாரிப்பதற்கு, இருதயம் போன்று, மையமாய் திகழ்கிறது. சபையுக சபை ஒழுங்குகள், இதற்கு மையமாய் அமைந்து, நமது அனுதின கிரியைகள், கர்த்தரின் ஆளத்துவம், மற்றும் அவரது கிரியைகளுக்குரிய சத்தியத்தினை அறிவிக்கிறதாய் இருக்கிறது.

ராபர்ட் மௌன்ஸ் அவர்கள் நம்மை புண்படுத்துமாறு துள்ளியமாய் கூறுவது என்னவென்றால், "மக்கள் விரும்பும் மதமானது, எதையும் கேட்டுக்கொள்வதோ, எவ்வித மாற்றத்தையும் அளிக்காது இருத்தல் வேண்டும். அதில் பழைமைவாய்ந்த பாரம்பரியம் இருத்தல் வேண்டும், அது எவர்களையும் எதிர்க்காவண்ணம் எல்லோரையும் ஆதரிக்கும் வண்ணம் இருத்தல் வேண்டும். ஜனங்களுக்கு தங்கள் சொந்த விருப்பத்திற்கிசைய அது இருப்பது மிகவும் அவசியம். என்கிறார்." (1 Timothy, page 134).

தவறான சகோதரர்களை தவிர்ப்பதில், பவுல் மிகவும் கவனமாய் கட்டளை கொடுக்கிறவராய் இருக்கிறார். நாம் கர்த்தரது சேவகராய் ஊழியத்தில், இப்படிப்பட்டவர்களை விட்டு விலகுதல் வேண்டும். மற்றும் இப்படிப்பட்டவர்களை புறக்கணித்து, அவர்களை தவிர்த்துவிடல் வேண்டும், சபையின் சமுதாய வாழ்விலும், தனிப்பட்ட வாழ்விலும் இப்படிப்பட்டவர்களைவிட்டு விலகியிருத்தல் வேண்டும் அவர்களை "சாபத்தீடானவர்களாய்" பார்த்தல் வேண்டும். 1 கொரிந்தியர் 16:22, வாதைக்கு விட்டு விலகுவது போன்று இப்படிப்பட்டவர்களைக் காணும் போது விலகியிருத்தல் அவசியம். ஆவிக்குரிய ரீதியில் இப்படிப்பட்டவர்கள் மிகக்கொடிய வாதையாய் இருக்கிறார்கள்.

Harry Ironside அவர்களின் இருதயப்பூர்வமான ஜெபத்துடன் நாமும் இணைந்து கொள்ளுதல் வேண்டும், "தேவரீர் எங்களுக்கு உண்மையும், நேர்மையுமான காரியங்களை அளித்து, எங்கள் ஆத்துமாவை நித்திய காரியங்களில், நிலைவரப்படுத்தி, எங்கள் வாழ்விலும், செய்கையிலும் கர்த்தருக்குச் சாட்சியாய் வாழும்படி எங்களுக்கு அனுக்கிரகம் செய்தருளும்." (Ironside, 1 Timothy, page 220).

கள்ளப்போதகர்கள் அருவருக்கத்தக்கவர்களாய் பவுல் வருணிப்பதைக் காண்கிறோம், இப்படிப்பட்டவர்கள் தங்களது சுயத்தை மையமாய்க் கொண்டு, எதை வேண்டுமானாலும் சாதித்துக் கொள்கிறவர்களாய் விளங்கிவருகின்றனர். "பக்கவழியாய்

நுழைதல்" கள்ளப்போதகர்களின் ஒரு குணாதிசயமாய் விளங்குகிறது. அவர்கள் திருடரைப் போன்று இருக்கிறார்கள், அவர்கள் இலக்குவைத்து, நிலையானத்தன்மையையும், மகிழ்ச்சியையும், திருடுகிறவர்களாய் இருக்கின்றனர். அவர்கள் திருடரைப்போன்று கண்ணமிட்டுத் திருடுகிறவர்களாய் இருக்கின்றனர், அவர்கள் ஆவிக்குரிய நிலையில், பெலவீனமானவர்களைத் திருடுகிறவர்களாய் இருக்கின்றனர்.

போதக இறையியலானது, போதக பரமாரிப்பைப் பற்றியதாய் இருக்கிறது. பலவீனமானவர்களை பாதுகாக்க இது மிகவும் வலியுறுத்துகிறதாய் இருக்கிறது. அவர்கள் பரிசுத்தாவியானவரின் வல்லமையால் பெலப்படுவதற்கு அவர்களுக்கு உதவியாய் இருத்தல் வலியுறுத்தப்படுகிறது. சபையுக சபை ஒழுங்குகள், கர்த்தரால் வடிவமைக்கப்பட்டு, பொதுவான சடங்காக அனுசரிக்கப்பட்டு, நிலையானத்தன்மையானது ஸ்தாபிக்கப்பட்டு, எல்லோரையும் சத்தியத்தில் பெலப்படுமாறு செய்கிறதாய் இருக்கிறது.

போதகர், தனது மந்தையை தீமையான மனிதரிடமிருந்து பாதுகாக்க வேண்டியவராய் இருக்கிறார், மற்றும் தேவனது வார்த்தையிலிருந்து சத்தியத்தினை போதித்து, புதிய விசுவாசிகளுக்கு பகுத்தறியக்கூடிய அறிவினைக் கற்றுக்கொடுக்கிறவராயும் இருக்கிறார். சபையின் எல்லா நியமங்களும், சத்தியத்தினைப் புரிந்து கொள்ள, குறிப்பிடத்தக்க சத்தியத்தினை நமக்களிக்கிறதாய் இருக்கிறது, பரிசுத்தவான்களின் ஐக்கியமானது, மற்றும் அவர்களது சேவைகள், ஸ்தல சபையினரை ஒன்று சேர்த்து, அவர்களை கர்த்தருக்குள் பெலப்படுத்தி, கர்த்தருக்கு முன்பாக பரிசுத்த நடக்கை செய்ய வழிநடத்துகிறதாய் இருக்கிறது.

நமது ஆராதனையில், கேட்க, கற்றுக்கொள்ள, விசுவாசிக்க, மற்றும் அடிப்படைப் பரிசுத்த சத்தியத்தினை கைக்கொள்ள தவறும்போது, சமுதாயத்தில் அவநம்பிக்கையுள்ள மதத்தினரால், நாம் பயன்படுத்தப்படுகிறவர்களாகிவிடுவோம். வழிநடத்துவோர் ஒவ்வொருவரும், பவுல் வலியுறுத்தும் முன்னெச்செரிக்கையை எடுத்துக்கொள்ளத் தவறுகிறவர்களாய் இருக்கின்றனர். மதியீனர் மட்டுமே மதியீனத்திற்குள்ளாகின்றனர், ஒரு போதகர் சத்தியத்தினை போதிக்கத் தவறும்போது, கர்த்தர் அவர்களது கடமையினைக் குறித்து அவர்களை உணர்த்துகிறவராய் இருக்கிறார்.

எசேக்கியேல் *3:17-20. "மனுபுத்திரனே, உன்னை இஸ்ரவேல் வம்சத்தாருக்குக் காவலாளனாக வைத்தேன், நீ என் வாயினாலே வார்த்தையைக் கேட்டு, என் நாமத்தினாலே அவர்களை எச்சரிப்பாயாக. சாகவே சாவாய் என்று நான் துன்மார்க்கனுக்குச் சொல்லுகையில், நீ துன்மார்க்கனைத் தன் துன்மார்க்கமான வழியில் இராதபடிக்கு எச்சரிக்கும்படியாகவும், அவனை உயிரோடே காக்கும்படியாகவும், அதை அவனுக்குச் சொல்லாமலும், நீ அவனை எச்சரிக்காமலும் இருந்தால், அந்தத்துன்மார்க்கன் தன் துன்மார்க்கத்திலே சாவான், அவன் இரத்தப்பலியையோ உன் கையில் கேட்பேன். நீ துன்மார்க்கனை எச்சரித்தும், அவன் தன் துன்மார்க்கத்தையும் தன் ஆகாத வழியையும் விட்டுத் திரும்பாமற்போவானாகில், அவன் தன் துன்மார்க்கத்திலே சாவான், நீயோவென்றால் உன் ஆத்துமாவைத் தப்புவிப்பாய். அப்படியே, நீதிமான் தன் நீதியை விட்டுத் திரும்பி, நீதிகேடு செய்யும் போதும், நான் அவன் முன் இடறலை வைக்கும் போதும், அவன் சாவான். நீ அவனை எச்சரிக்காதபடியினாலே அவன் தன் பாவத்திலே சாவான், அவன் செய்த நீதிகள் நினைக்கப்படுவதில்லை, அவனுடைய இரத்தப்பழியையோ உன் கையிலே கேட்பேன்.*

போதக பராமரிப்பின் பொருள் என்னவெனில், மந்தைக்கு தேவனின் சத்திய வார்த்தைகளை போதிய அளவில் அளித்து அவர்களை பரமாரிப்பு செய்து, சத்தியத்தினைக் குறித்த முழு அறிவையும் அவர்கள் அறிந்து கொண்டு, அவர்கள் பாதுக்காக்கப்பட, அவர்கள் எவ்வித சாக்குபோக்குகள் செல்லி தப்பித்துக் கொள்ளாத வண்ணம் அவர்களை வழிநடத்தி, பராமரிப்பு செய்வதாகும். ஒரு போதகர் தனது மந்தைக்கு சத்தியத்தினை சொல்லாதபட்சத்தில், மந்தையானது குழப்பங்களுக்குள் செல்லும்போது, கர்த்தர் அந்தப்போதகரை அதற்கு காரணராய் பிடித்துக் கொள்கிறவராய் இருக்கிறார். எசேக்கியேல் 2:3-8, 3:8-11, 17-19, 33:1-7. இவ்வசனங்கள் அனைத்தையும் வாசித்து அறியுங்கள். இது எசேக்கியேலுக்கு கர்த்தரால் அளிக்கப்பட்டவைகளாய் இருந்த போதிலும், இது மந்தையை மேய்க்கும் ஒவ்வொரு போதகருக்கும் உரியதாய் இருக்கிறது. தேவனது மக்களை பராமரிப்பது என்பது, மிகவும் கவனத்திற்குரிய ஒன்றாய் இருக்கிறது, இதன் கவனம் சபை ஒழுங்குகளை ஆசரிக்கப்படும் போது விளக்கப்படுகிறதாய் இருக்கிறது.

பேதுரு சாத்தானின் தாக்குதலை, கர்ஜ்ஜிக்கிற சிங்கத்திற்கு ஒப்பனையாய் கூறுகிறவராய் இருக்கிறார். 1 பேதுரு 5:8-9. சிங்கத்தின் குறிக்கோள், அவைகள் கொலை செய்ய இருக்கும் மிருகத்தின் மீது மிகவும் கவனம் நிறைந்ததாய் இருக்கும். அவைகள் மிகவும் பெலவீனமானவைகளை தெரிவு செய்யும், நோய்வாய்ப்பட்டவைகளைத் தெரிவு செய்யும், மற்றும் தனது சக மிருகங்களை விட்டு தனித்திருக்கும் மிருகங்கள் மீது அது நோக்கமுள்ளதாய் இருக்கும். தேவனது வார்த்தையை தனது வாழ்விற்கு கைக்கொள்ளாது, ஆவிக்குரிய நிலையில் நோய்வாய்ப்பட்டு, பலவீனமாய் இருக்கும் எந்த ஒரு விசுவாசியும் சாத்தானின் இலக்காய் இருக்கின்றனர். அவர்கள் தங்களது மந்தையைவிட்டு தனித்து இருக்க, மந்தையைவிட்டு வெளியேறுகிறவர்களாய் இருப்பர், சபை ஒழுங்குகளை சபையுடன் இணைந்து நிறைவேற்றாது இருப்பர். போதக பராமரிப்பானது, மந்தையை கூட்டிச்சேர்த்து அவர்களை பரமாரிப்பு செய்கிறதாய் இருக்கிறது. அவைகளுக்கு வேதவசனத்தால் போஷாக்கு அளித்து, கள்ளச் சகோதரர்களைப் புறம்பாக்கி, கர்த்தரிடமிருந்து பெற்றுக்கொண்டவைகளை, அவைகளுக்கு அளித்து, சபை ஒழுங்குகளை அவைகளுடன் கவனமாய் ஆசரித்து, கர்த்தருக்கு மகிமையை கொண்டுவரவேண்டியதாய் இருக்கிறது. மத்தேயு 28:18-20.

மக்கள் இவ்வுலகில் நடந்து கொள்ளும்போது, அடிக்கடி காயப்படுகிறவர்களாய் இருக்கின்றனர். முதலாவதாக அவர்கள் பாவச்சுமையால் காயப்படுகிறவர்களாய் இருக்கின்றனர். வேத வசனத்தின்படி, அவர்களது பாவத்துடன் ஒவ்வொரு நிமிடமும், கவனமாய் இருந்து, அதனுடன் ஈடுபடத்தவறுகிறவர்களாய் இருக்கின்றனர். 1 யோவான் 1:9. சாத்தானின் தாக்குதல்களுக்கு உள்ளாகி அவர்கள் அதிக அதிகமாய் காயப்படுகிறவர்களாகிறார்கள். வசனம் வசனமாய் தேவனது முழுமையான ஆலோசனையை போதிப்பது, கர்த்தருடைய ஜனங்களைப் பாதுகாத்து, பாவத்திலிருந்து மனந்திரும்பும் அநேக தேவ செய்திகளைக் கேட்பதன் மூலம் தீமைக்கும், சாத்தனது தாக்குதலுக்கும், தீமைக்கும் உள்ளாகாது பாதுக்காக்கப்பட ஏதுவுண்டாக்குகிறது. வழக்கமாய் பாவத்துடன் ஈடுபடுவதைக் குறித்த சவால், அவர்கள் தேவனது வார்த்தைக்குக் கீழ்ப்படிவதன் மூலம் அவர்கள் பாதுக்காக்கப்படுகிறவர்களாய் இருக்கிறார்கள், மற்றும் அவர்களது பாவத்தை அறிக்கை செய்வதன் மூலமும், அவர்கள் தங்கள் வழியை செவ்வைபடுத்தி சீராக்குவதன் மூலமும், அடுத்த முறை எளிதாய் விழுவது என்பது அரிதாய் இருக்கிறது. எபிரெயர் 12:12-15.

ஒழுங்குபடுத்தப்பட்ட இறையியலில், போதக பழக்கவழக்கங்கள் வேர்விடப்பட்டு, அதில் அஸ்திபாரமிடப்படுகிறதாய் இருக்கிறது, பாவத்தின் வல்லமை மற்றும் பழைய

பாவசுபாவத்தின் தன்மை போன்றவற்றைக் குறித்த, முழுமையான அறிவடைந்து மெய்யான சத்தியத்தினை அறிந்து செயல்படச் செய்கிறதாய் இருக்கிறது. பாவத்தை அறிக்கை செய்வது என்பது, பாதி அனுபவமாய் இருக்கிறது, இது பரிசுத்தமாகுதலின் முதல் பாதி அனுபவமாய் இருக்கிறது, மற்றும் இது பரிசுத்தத்திற்கேதுவான கதவை, சபையின் ஒழுங்காகிய கர்த்தருடைய மேஜையில் பங்கு பெறுவதன் மூலம் திறக்கிறதாய் இருக்கிறது.

சபையுக, சபை ஒழுங்குகள், நமக்கு நினைவுபடுத்துவது என்னவெனில், அதன் எல்லாவித சத்தியமும், கர்த்தருக்கு முன்பாக நாம் பரிசுத்தமாய் நடந்து கொள்வதற்கு துணை செய்கிறதாய் இருக்கின்றன. 2 தீமோத்தேயு 3 ம் அதிகாரத்தில், இரண்டாவது பிரச்சனையாய் பவுல் குறிப்பிடுவது என்னவெனில், "மதிகேடாய் நடக்கிறவர்களைக்" குறித்ததாய் இருக்கிறது, "அவர்கள் தங்கள் சொந்த இச்சையின்படியே, ஜனங்களை வழிநடத்துகிறவர்களாய் இருக்கின்றனர்." அவர்கள் தங்கள் சுய இச்சைகளை எதிர்ப்பதற்குப் பதிலாக இவ்வாறு செய்கிறவர்களாய் இருக்கின்றனர். வலுவான ஆசைகளுக்கு செவிகொடுத்தல் தவிர்க்கப்படல் வேண்டும், அவைகளை பகுத்து நிதானித்தல் வேண்டும். அப்படிப்பட்ட ஆசைகள் நல்லதாய் இருக்குமானால், அதைப் பின்பற்றுதல் வேண்டும், அது தவறானதாய் இருக்குமேயானால், அப்படிப்பட்ட ஆசைகளுக்கு எதிர்த்து நிற்றல் வேண்டும், யாக்கோபு நம்மை எச்சரிப்பது போன்று, இச்சைகளை மேற்கொள்ளும் வல்லமை அளிக்கப்பட்டிருந்தும், நாம் நமது சொந்த இச்சைகளால் விழுவோமேயானால், நாம் தேவனை குற்றப்படுத்தலாகாது, யாக்கோபு 1:13-15.

சத்துருவானவன், எப்பொழுதும் யாராவது ஒருவரை அல்லது ஏதோ ஒரு காரியத்தை, நாம் சத்தியத்திலிருந்து வழுவிச் செல்லப் பயன்படுத்துகிறவனாய் இருக்கிறான். சத்தியத்திற்குப்பதிலாக வேறொரு காரியத்தை விஷேசமாய் செய்து நிறைவேற்ற ஊக்கமளிக்கிறவனாய் இருக்கிறான். வலுவான ஆசை இச்சைகளை குறித்து நாம் கவனமுள்ளவர்களாய் இருத்தல் அவசியம். அதன் பெலமானது சத்தியத்திற்கோ அல்லது நன்மையானவைகளுக்கோ உத்திரவாதம் அளிப்பது இல்லை. பரிசுத்தத்தை தேவன் எதிர்பார்க்கிறவராய் இருக்கிறார், அது பகுத்து அறிந்து கொள்ளுதல் மற்றும் தீர்மானம் எடுப்பது இவ்விரண்டையும் உள்ளடக்கியுள்ளது என்பதை நினைவில் கொள்ளுதல் வேண்டும். எபிரெயர் 12:16-29.

மூன்றாவது குணாதிசயமாய், புத்தியீன நபரைக் குறித்து கூறப்படுகிறது, இவர்கள் எப்பொழுதும் நூதனமான காரியங்களைக் கற்றுக்கொள்கிறவர்களாய் இருக்கின்றனர். இதனால் அவர்கள் எதையும் ஆதாயப்படுத்துவதோ அல்லது ஆவிக்குரிய நிலையில் பெலப்பட்டு வளருவதோ இல்லை. இங்குள்ள பிரச்சனை என்ன? தேவனது வார்த்தையில் ஏதேனும் தவறு இருக்கிறதா அல்லது கேட்போருக்கு ஏதாகிலும் பிரச்சனை இருக்கிறதா?

இப்பிரச்சனை குறித்து வேதாகமம் தெளிவுற கூறுகிறது, முக்கியமாய் கேட்போரின் மறதித் தன்மையே இதற்குக் காரணம் என, யாக்கோபு 1:19-25. கூறுகிறது. எபிரெயர் 4:2 ல் கண்டுகொள்ளும் வண்ணம், அனுதினமும் கர்த்தருடைய வார்த்தையைக் கைக்கொள்ளும்போது, கேட்போரின் விசுவாசத்துடன் அது கலக்க வேண்டியதாய் இருக்கிறது. இதைக் கைக்கொள்ளாதபட்சத்தில், புரிந்து கொள்ளுதலோ மற்றும் வளர்ச்சியோ இன்றி காணப்படும். உபதேச பயன்பாடில்லாது ஜனங்கள் அழிந்து போவர். போதக பராமரிப்பானது, மக்கள் சத்தியத்தை கேட்கும்படி செய்து, சத்தியத்தை அனுதின வாழ்விற்கு பயன்படுத்த வற்புறுத்துகிறதாய் இருக்கிறது. சபை அமைப்பானது இந்த வழியில் செயல்பட்டு, சத்தியத்தைக் கேட்கும்படியாக, அநேகத் தருணங்களை,

மக்களுக்கு அளிக்கிறதாய் இருக்கிறது. சபையுகத்தில் உள்ள சபை ஒழுங்கானது, சபை ஆராதனையில் நிலையான தன்மையுடையதாய், அதன் செய்தியானது, அனுதின வாழ்க்கைக்கு அவசியமான பரிசுத்தத்தில் வேர்விடுகிறதாய் இருக்கிறது.

போதக பராமரிப்பின் பொருள் என்னவென்றால், ஜெபிப்பதற்கும், கவனமாய் வேதாகம போதனை அளிப்பதும், மக்களின் அனுதின வாழ்வில் கைக்கொள்ள வேண்டிவற்றை எடுத்துக் கொண்டு, அவர்களை பரிசுத்தமாய் வாழும்படி ஊக்கமளிப்பதும் ஆகும். சபை ஒழுங்குகளை பயபக்தியுடன் ஆசரித்து, தேவனது திட்டப்படியே, அதை முறையாக கைக்கொள்ளுதல் மிகவும் அவசியம். சிலர் இவற்றைக் குறித்து கவனம் எடுக்க தவறுகிறவர்களாய் இருக்கின்றனர். ஆனால் போதகர்கள் கர்த்தருக்கு முன்பாக தங்களது கடமையிலிருந்து தவறாது, மந்தைக்கு முன்மாதிரிகளாய் இருந்து, மந்தைக்கு முன், குற்றமற்றவர்களாய் விளங்குதல் வேண்டும்.

கள்ளப்போதனையாளர்கள்:

கள்ளப் போதகர்கள் எப்பொழுதும் ஒரே காரியத்தைச் சார்ந்து இருப்பவர்களாய் இருக்கின்றனர், அவர்கள் எப்பொழுதும் சத்தியத்திற்காக நிற்பவர்களை எதிர்க்கிறவர்களாய் இருக்கின்றனர். அவர்கள் தொடர்ந்து சத்தியத்தை எதிர்க்கிறவர்களாய் இருக்கின்றனர். அவர்களால் சத்தியத்தில் நிலைத்திருக்க இயலாதவர்களானபடியால் அவர்களை எல்லாவிதத்திலும் எதிர்க்க வேண்டும். 2 தீமோத்தேயு 3:8 ல் இரு நபர்கள் குறிப்பிடப்படுகின்றனர், அவர்கள் மோசேயிக்கு எதிர்த்து நின்ற யந்நேயும், யம்பிரேயும் ஆவார்கள். இவர்கள் சாத்தானின் வல்லமையால், பயன்படுத்தப்பட்டு, மோசேயின் தலைமைத்துவத்தை எதிர்த்து நின்ற கள்ளச் சகோதரராய் விளங்கினர். தேவன் இதில் இடைபட்டு, அவர்களைப் புறக்கணித்தார். அவர்கள் சத்தியத்தை அறிந்து கொள்வதை விரும்பவில்லை.

பவுல் இவர்களைக் குறிப்பிடும்போது "துர்புத்தியுள்ளவர்கள்" எனக்குறிப்பிடுகிறார். இவர்கள் நற்புத்தியுள்ளவர்களாய் சத்தியத்தைக் கைக்கொண்டு வந்தவர்கள், தீமையானது இவர்களது புத்தியை ஆண்டுகொள்ளவே, இவர்கள் துர்புத்தியுள்ளவர்களானார்கள். இதுவே தேவனால் இவர்கள் புறக்கணிக்கப்படக் காரணமாய் அமைந்தது, இவர்கள் குயவனால் உபயோகத்திற்கு தகுதியில்லாத மண்பாத்திரங்களை ஒதுக்கி வைக்கப்படுவது போல ஒதுக்கி வைக்கப்பட்டனர். தகுதியில்லாவற்றை செய்கிற இவர்கள் நல்லவர்களே, இவர்கள் கர்த்தருக்குரியவர்கள், இவர்கள் தேவனால் சிட்சிக்கப்படுகிறவர்களாய் இருக்கின்றனர். சபை ஒழுங்குகளை ஆசரிக்கும்போது, இது மிகவும் முக்கியமானதாய் இருக்கிறது, இச்சந்தர்ப்பத்தில் நாம் சத்தியத்தைப் போதித்து அவற்றை அறிவிக்கிறவர்களாய் இருக்கிறோம், சத்துருவானவன் எப்பொழுதும் சத்தியத்தை அறிய விடாது ஜனங்களை சிதறடிக்கிறவனாய் இருக்கிறான்.

சரித்திரத்தில் இப்படிப்பட்ட கள்ளச் சகோதரர்களும், சகோதரிகளும், மற்றும் தீமையான அற்புதம் செய்கிறவர்களும் நிறைந்து, குப்பை கூலங்களைப் போல மலிந்து காணப்படுகின்றனர். சில வேளைகளில் இப்படிப்பட்டவர்கள் நீண்டகாலம் வாழ்ந்தவர்களாய் இருந்தனர், இருப்பினும் முடிவாக சத்தியம் வெளிவருகிறதாய் இருந்தது, இவர்கள் விழுந்து போனவர்களாய், நமது பார்வையிலிருந்து அகன்று போயினர். இவர்களது மாய்மாலத்தை இறுதியாய் எல்லோரும் காணக்கூடியதாய் இருந்தது. 2 தீமோத்தேயு 3:8-11. நம்மை அவர்களால் சிதறடிக்க இயலாது,

அப்போஸ்தலரின் நடக்கையைக் கைக்கொண்டு, அவர்களது உபதேசத்தைப் போதித்து, எல்லாக்காரியங்களிலும் ஆதி சபையானது செயல்பட்டது போல நாமும் செயல்படுவோமாக.

எல்லா விசுவாசிகளும், தவறான கள்ளப்போதகர்களை இனம் கண்டு கொள்ளுதல் அவசியம், எல்லாவற்றிற்கும் மேலாக மந்தையை அவர்களது கள்ள உபதேசத்திற்கு நீங்கலாக காத்துக்கொள்ளுதல் மிகவும் அவசியம். நாம் நடந்து கொள்ள வேண்டியபிரகாரம் நடந்து கொள்வோமெனில் நாம் பாதுகாப்பாய் இருப்போம். நாம் கர்த்தரது வார்த்தையை விட்டு வழிவிலகுவோமெனில், நாம் வஞ்சிக்கப்படும் அபாயத்திற்குள்ளாவோம். "நம்பி கீழ்ப்படிவோம், இதைத் தவிர வேறு மார்க்கம் எதுவுமில்லை, இயேசுவை நம்பிக் கீழ்ப்படிவோம், ["trust and obey, for there is no other way, to be happy in Jesus but to trust and obey!"] , என்ற பழைய பாடலை நினைவில் கொண்டு நம்பிக்கீழ்ப்படிதல் அவசியமான ஒன்றாய் இருக்கிறது. போதக இறையியலானது, இவைகள் சபையில் சுமூகமாய் நிகழ வகை செய்கிறதாய் இருக்கிறது.

கீழ்க்காணும் உபதேசங்களை கவனமாய் பரிசீலனை செய்து அவற்றை கைக்கொள்ள ஒப்புக்கொடுங்கள்,

உபதேசங்கள்:

கிறிஸ்தவ வாழ்க்கை:

1. தேவன் விசுவாசிகளுடன் திருப்தியோடு இருக்கிறார்
   - சரியான காரியங்களை கேட்பதன் மூலம் (1 இராஜாக்கள் 3:9, 10)
   - வேறு பிரிக்கப்பட்ட வாழ்க்கை வாழ்வதன் மூலம். (எபிரெயர் 13:20, 21)
   - அவரது சித்தத்தை செய்வதன் மூலம் (எபிரெயர் 13:20, 21)
   - அவருடன் ஐக்கியப்பட்டு அவரோடு நடப்பதன் மூலம்.(எபிரெயர்11:5, ஆதியாகமம் 5:24)
   - தேவனைத் துதிப்பதன் மூலம் (சங்கீதம் 69:30, 31)
   - தேவன் பலனளிப்பவர் என விசுவாசித்து அவரில் அமர்ந்து இருத்த்ல் மூலம் (எபிரெயர்11:6)

2. கிறிஸ்தவ வாழ்க்கை நடக்கையை உள்ளடக்கியது.
   - சத்தியத்தில் நடத்தல் (2 யோவான் 4)
   - விசுவாசத்தின் மூலம் ஞானமாய் நடத்தல் (2 கொரிந்தியர் 5:7, கொலோசெயர் 4:5)
   - ஆவியில் நடத்தல் (கலாத்தியர் 5:16, 25)
   - அன்பில் நடத்தல் (எபேசியர் 5:2)
   - புதிதாக்கப்பட்ட வாழ்க்கைக்கேற்ப நடத்தல் (ரோமர் 6:4)
   - அழைக்கப்பட்ட அழைப்புக்கு பாத்த்திரமாய் நடத்த்தல் (எபேசியர் 4:1)
   - கர்த்தருக்குப் பாத்திரமாய் நடத்தல் (கொலோசெயர் 1:10, 1தெசலோனிக்கேயர் 2:12)
   - சீராய் நடத்தல் (ரோமர் 13:13)
   - நற்கிரியைகளை செய்து நடத்தல். (எபேசியர்2:10)
   - வெளிச்சத்தில் நடத்தல் (எபேசியர் 5:8, 1 யோவான்1:7)
   - கிறிஸ்து இயேசுவுக்குள் நடத்தல் (கொலோசெயர் 2:6)

ஞானமுள்ளவர்களைப்போல கவனமாய் நடந்து கொள்ளுதல் (எபேசியர்5:15,16)
m) சமய சூழ்நிலைக்கேற்ப நடந்து கொள்ளுதல் (1 தெசலோனிக்கேயர் 4:1)

3. கிறிஸ்தவ வாழ்க்கை புகழ்ச்சிக்குரிய நன்நடத்தையை வளியுறுத்துகிறது:
அ) விசுவாசிகளுக்கு கிறிஸ்துவில் சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளது. (கலாதியர் 5:1), ஆனால் நமது நடத்தை கீழ்கண்டவாறு இருக்கக்கூடாது.
பெலவீனருக்கு இடறலாய் இருக்கக்கூதாது. (1 கொரிந்தியர் 8:9);
மாய்மாலம் செய்யக்கூடாது (1 பேதுரு 2:16);
பக்தி விருத்தியை கெடுப்பனவற்றை செய்யக்கூடாது (1 கொரிந்தியர் 10:23);
அடிமத்தனத்துக்கு வழிநடத்தும் பழக்க வழக்கங்களில் ஈடுபடக்கூடாது (1 கொரிந்தியர் 6:12);
சுயாதீனத்தை மாம்சத்திற்கு ஏதுவாய் அனுசரிக்கக்கூடாது. (கலாதியர் 5:13);
தங்களது மனசாட்சியை எதிர்க்கக்கூடாது (ரோமர் 14:5).
ஆ) தேவனோடுள்ள நம்முடையத் தொடர்பு:
அவருடைய நாமத்தில் செய்தல் (1 தீமோத்தேயு 6:1)
தேவனுக்கு என செய்தல் (கொலோசெயர் 3:23)
அவரது நாம மகிமைக்கென செய்தல் (1கொரிந்தியர்10:31)
அவருக்குப் பாத்திரமாய் இருத்தல் (1 தெசலோனிக்கேயர் 2:12; 2தெசலோனிக்கேயர்1:5)
இ) மற்றவர்களுடன் நமக்குள்ள தொடர்பு:
நல்ல முன் மாதிரியுடன் இருக்கவேண்டும். (ரோமர்14:7; 1 தீமோத்தேயு 4:12)
நமது அழைப்புக்குப் பாத்திரமாய் நடந்து கொள்ளவேண்டும். (எபேசியர்4:1)
யோக்கியமாய் நடந்து கொள்ளவேண்டும். (2 கொரிந்தியர் 8:21)
பொல்லாங்காய் தோன்றுகிறவைகளை விட்டு விலகவேண்டும். (1 தெசலோனிக்கேயர்5:22)
பிறருக்கு உதவி செய்தல் வேண்டும். (ரோமர் 12:18; 15:2)
தடுக்கிவிழ காரணமாய் இருக்கக்கூடாது (ரோமர்14:13)
ஒருவரின் பெற்றோரை கனப்படுத்துதல் வேண்டும். (கொலோசெயர் 3:20)
அரசாங்கத்தை கனப்படுத்துதல் வேண்டும். (தீத்து 3:1)
அந்நிய நுகத்தில் அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படக்கூடாது (2கொரிந்தியர்6:14)
பிறரை நியாந்தீர்த்தல் கூடாது. (ரோமர் 14:10-13)
நமது நடக்கையினாலே பிறர் தடுக்கிவிழச் செய்யக்கூடாது. (ரோமர் 14:15,21-23)
ஈ) நமது சுயத்தொடர்பு:
இச்சைக்கேதுவாய் இருக்கக்கூடாது, சுத்தமானதாய் இருக்கவேண்டும். (1தீமோத்தேயு 5:22; 1 பேதுரு 2:11)
தீட்டுபடக்கூடாது (1 கொரிந்தியர்3:17; தீத்து 1:15)
தன்னை குற்றவாளி என தீர்த்துக்கொள்ளக்கூடாது. (ரோமர்14:22)
நல்ல கிரியைகளை செய்யவேண்டும். (தீத்து 3:8)

4. கிறிஸ்தவ வாழ்க்கை கடின உழைப்பை எதிர்பார்க்கிறது:
மற்றவர்களிடத்தில் அன்பு கூறுதல். (கலாத்தியர் 2:20, 2 கொரிந்தியர் 8:8). நம்மைவிட தாழ்வில் உள்ளவர்களுக்கு உதவிசெய்ய ஆர்வம் காட்டவேண்டும்,

விஷேசமாய் சுவிஷேசத்தை அவர்களுக் கொடுக்கவேண்டும்.
பரிசுத்தவான்களை (பிற விசுவாசிகளை) மிகக்கவனமாய் பார்த்துக்கொள்ள வேண்டும் (எபிரெயர் 6:11, 2கொரிந்தியர்7:12, 2 கொரிந்தியர்8:16,17, 2 தீமோத்தேயு 1:17)
தேவனின் அடிப்படை சித்தாந்தங்கள், மற்றும் அவரது வாக்குத்தத்தங்களின் மீது மிகவும் ஆர்வத்துடன் அவைகளை சார்ந்துகொள்வது அவசியம். உதாரணமாக யாத்திராகம சந்ததியைப்போல், வாக்குத்தங்களை சார்ந்து இருக்கக்கூடாது. (எபிரெயர் 4:11)
நமது அழைப்பை உறுதிப்படுத்துதல் - (2 பேதுரு 1:5, 2 பேதுரு1:10) நாம் கிறிஸ்துவுக்காக ஆர்வத்துடனும், வைராக்கியத்துடனும் சாட்சி பகற வேண்டும்.
சரீர ஒற்றுமை (எபேசியர்4:3)சரீர ஒற்றுமையை பேணிக்காப்பதில் வைராக்கியமாய் இருக்க வேண்டும்.
தேவனது அங்கீகாரத்தைப்பெற்று இருக்கவேண்டும். (2 தீமோத்தேயு 2:15).நீங்கள் தேவனால் அங்கீகரிக்கப்பட்டு இருக்கிறீர்கள் என்பதைக் காட்டுவதில் ஆர்வம் காட்ட வேண்டும்.
கலங்கமற்ற வாழ்வைப் பெற்று இருக்க வேண்டும். (2 பேதுரு 3:14)தேவனுடன் நெருங்கி நடந்து தேவையற்ற சோதணைக்குரிய இடங்களில் நம்மை வெளிப்படுத்தாது இருக்கவேண்டும்.

கிறிஸ்தவ வாழ்க்கை -- முன்னுரிமைகள்

1. முதல் நபர் -- இயேசுக்கிறிஸ்துவே எல்லாவற்றிற்கும் மேலான முன்னுரிமை அளிக்கப்படவேண்டியவர் -- கொலோசெயர் 1:16-18.

2. முதன்மையான உடமைகள் -- தேவனது இராஜ்ஜியம், எல்லாவற்றிலும் பெரிய வெகுமதி -- மத்தேயு 6:33.

3. முதல் காணிக்கை -- தன்னையே முற்றிலுமாய் அற்பணித்தல் -- 2 கொரி. 8:5.

4. முதல் மறுதலிப்பு - சுயத்தை மறுதலித்தல் - மத்தேயு 7:5.

5. முதல் ஒழுக்கம் -- ஜெபிக்கும் ஒழுங்கு - 1 தீமோத்தேயு 2:1-4.

6. முதலாவது கட்டளை -- தேவனது உன்னத தன்மையில் அன்புகூறுதல் -- மத்தேயு 22:37-38.

7. முதலாவது சாக்குப்போக்கு -- தேவனுடன் நேரம் செலவழிக்க முடியாது மிகவும் உலக அலுவல்களுக்கு முதலிடம் அளிப்பது -- மத்தேயு 8:21-22.

கிறிஸ்தவ வாழ்க்கை -- ஒப்புக்கொடுத்தல் (பாதுகாப்பாய் இருப்பதற்கு)

1. முதல் ஒப்புக்கொடுத்தல் -- இரட்சிப்பின் போது விசுவாசி கர்த்தரிடம் ஒப்புவிக்கிறார். (2 தீமோத்தேயு 1:12) உங்கள் வாழ்க்கையை கர்த்தரிடம் ஒப்புவிங்கள்.

2. இரண்டாம் ஒப்புக்கொடுத்தல் -- கிறிஸ்தவ வாழ்க்கையில் கர்த்தர் வேதாகம உபதேசங்களை விசுவாசி வசம் ஒப்படைக்கிறார் -- போதிக்கிறவர்கள் மற்றும் படிப்பதன் மூலம். (1 தீமோத்தேயு 1:14).

3. மூன்றாம் ஒப்புக்கொடுத்தல் -- கிறிஸ்தவ வாழ்க்கை வழிமுறையில் விசுவாசி தனது பயங்கள், பிரச்சனைகள், நெருக்கங்கள் போன்றவற்றை ஒப்புக்கொடுக்கிறவர்களாய் இருக்கின்றனர் (1 பேதுரு 4:19), இவற்றை 1 பேதுரு 5:7, சங்கீதம் 55:22 ன் அடிப்படையில் செய்கின்றனர்.

4. நான்காம் ஒப்புக்கொடுத்தல் -- கிறிஸ்தவ வாழ்க்கை முறையில் விசுவாசி சுவிஷேசத்தை அவிசுவாசியிடம் ஒப்புக்கொடுக்கின்றனர். (ரோமர் 1:14).

கிறிஸ்தவ வாழ்க்கை -- சுயாதீனப் பிரமாணங்களும் மற்றும் பொறுப்புகளும்:

1. நாம் இப்பொழுது மோசேயின் - நியாயப்பிரமாணத்திற்குக் கீழாக இல்லை:

மோசேயின் நியாயப்பிரமாணம் எதிர்பார்த்த அனைத்தையும் கிறிஸ்து நிறைவேற்றித் தீர்த்துவிட்டார். (மத்தேயு 5:17). பரிசுத்த ஆவியானவர், நம்மீது ஆதிக்கம் செய்வார் எனில், நாம் தானாகவே நியாயப்பிரமாணத்தின் நீதியை நிறைவேற்றுகிறவர்களாய் இருப்போம்.

2. சுயாதீனப்பிரமாணம்:

நியாயப்பிரமாணமானது தன்னில்தானே வழிநடத்திக் கொள்வதாய் இருக்கிறது. வேதாகம ரீதியில் கூறுவோமெனில், நீங்கள் சில குறிப்பிட்ட காரியங்களைச் செய்ய உரிமையுள்ளவர்களாய் இருக்கிறீர்கள். அவைகள் தனிப்பட்ட நிலையில் கர்த்தருக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்துவது இல்லை. (1 கொரிந்தியர் 8:8).

3. அன்பின் பிரமாணம்:

இவ்வகையான பிரமாணம், மற்றவிசுவாசிகளை குறித்த கரிசனையை நமக்களிக்கிறதாய் இருக்கிறது. இப்பிரமாணத்தின்படி, நீங்கள் பெலவீனமான உங்கள் சகோதரரிடத்தில் அன்புகூறும்போது, அவர்கள் இடறும்படியான அல்லது அவர்களுக்கு மனமுறிவுண்டாகும் எந்த ஒரு காரியத்தையும், உங்களுக்குச் சுயாதீனம் இருந்தும், அதை அவர்களுக்காக செய்யாமல் இருக்க வற்புறுத்துகிறது. நீங்கள் அவைகளுக்கு விலகியிருப்பது அவைகள் தவறு என்பதற்காக அல்ல, மற்ற பெலவீனமான விசுவாசிகளுக்கு அவைகள் இடறலாய் இருக்கிறபடியால் அவர்கள் நிமித்தம் அவைகளுக்கு விலகியிருக்கிறீர்கள். (1 கொரிந்தியர் 8:9).

4. சமய சந்தர்ப்பத்திற்கேற்ற பிரமாணம்:

இவ்வகையான பிரமாணம் அவிசுவாசிகளைக் குறித்த கரிசனையைக் கொண்டதாய் இருக்கிறது. இது சமய சந்தர்ப்பத்திற்கேற்ப கிறிஸ்துவின் உலகில், உங்களது

வாழ்க்கையை அமைத்துக் கொள்வது. அவிசுவாசிகள் கிறிஸ்தவர்களுக்காய் நடந்து கொள்ள, தராதரத்தை அமைத்துக் கொள்ளுதல்.

இதினிமித்தம் சில காரியங்களுக்கு விலகியிருத்தல் அல்லது சில குறிப்பிட்ட சட்டப்பூர்வமான காரியங்களை நடப்பித்தல் -- இதன் காரணம் அவர்கள் தவறிழைக்கிறவர்களாய் இருக்கிறார்கள், இருப்பினும் அவர்கள் ஒரு அவிசுவாசியை இடறலுக்கு வழிநடத்துகிறவர்களாய் இருக்கின்றனர், மற்றும் கிறிஸ்து அவரது பாவத்திற்காய் மரித்துள்ளார் என்பதைக் கண்டுகொள்ளத் தடை செய்கிறவர்களாய் இருக்கின்றனர். (1 கொரிந்தியர் 9, 20-23)

5. எல்லாவற்றையும் விட உன்னத தியாக பலி குறித்த பிரமாணம்:

இவ்வகையான பிரமாணம் தேவனிடமாய் வழிநடத்துகிறதாய் இருக்கிறது. ஒரு விசுவாசி தனது வாழ்வில் சட்டப்பூர்வமான செயல்பாடுகளை முற்றிலும் நிராகரித்துவிட்டு, கர்த்தரைச் சார்ந்து முற்றிலுமாய் சேவிப்பதற்கு தன்னையே அற்பணித்துக் கொள்ளும் செயல்பாட்டினை உள்ளடக்கியதாய் இருக்கிறது. மிஷனரிமார்கள் இவ்வகையான பிரமாணத்தின் கீழ் செயல்படுகிறவர்களாய் இருக்கின்றனர், இது நாகரிகமற்ற சூழலில் தங்கள் வாழ்க்கைத் தரத்தினை அமைத்துக்கொண்டு தங்களது பணித்தளத்தில் வாழும் வாழ்க்கையினைக் காட்டுகிறதாய் இருக்கிறது. இப்படிப்பட்ட பிரமாணத்தின்படி அமைந்த வாழ்க்கைதரமானது ஆஸ்திரேலியவில் கடைபிடித்து வாழப்படுகிறது. (மத்தேயு 3:1-6)

6. கோட்பாடுகள்:

கிறிஸ்தவர்களாகிய நாம் சுயாதீனத்தைப் பெற்றவர்களாய் இருக்கிறோம். இருப்பினும் முழுமையான சுதந்திரமானது, மற்றவர்களை அடிமைப்படுத்தக்கூடியதாய் இருக்கிறது. நமது சுயாதீனத்தை கடமை உணர்வோடு பயன்படுத்த வேண்டியர்களாய் இருக்கிறோம், நமது சுயாதீனம் மற்றவர்கள் தங்களது சுயாதீனத்தை மீறி அடிமைத்தனத்திற்குள் செல்லாதவாறு பார்த்துக்கொள்ளுதல் வேண்டும். கிறிஸ்தவர்களாகிய நாம் கடமை உணர்வுடன் நடந்து கொள்வது அவசியம். (எபேசியர் 5:15). விசுவாசி தனது வாழ்க்கையின் முழுமையான நோக்கம், கிறிஸ்துவைப் போல மாறுவது மற்றும் வேதாகம ரீதியிலான சுவிஷேச ஊழியம் செய்வது, நமது வாழ்வின் நடுநாயகமாய் இருக்கிறது. நாம் இப்பூமியில் வாழும்படி விட்டுவைக்கப்பட்டதன் நோக்கம், இழந்து போனோரைச் சந்திக்கும்படியாகவும், மற்றும் மாம்சீகப்படி வாழும் பரிசுத்தவான்களை உயிரடையச் செய்யும்படியாகவும் ஆகும். இவ்விரு செயல்பாடுகளும் கர்த்தருக்கு மகிமை கொண்டுவருதல் வேண்டும்.

சபை நியமங்களை செயல்படுத்தும் எல்லா ஊழியர்களுக்கான பரீட்சை:

எல்லா ஊழியரும் தினமும், தங்களைப் பரீட்சித்து பார்த்து கைக்கொள்ள வேண்டியவைகளைக்குறித்து, பவுல் குறிப்பிட்டுள்ளவைகள். கள்ளப் போதகர்களைக் குறித்த பதினெட்டு குணாதிசயங்களிலிருந்து, ஒன்பது குணாதிசயங்கள் உண்மையான

போதகர்க்களுக்கு பரிந்துரை செய்யப்படுகிறது. இப்படிப்பட்ட குணாதிசயங்களை நமது வாழ்வில் பரீட்சித்துப் பார்ப்போம்.

1. உபதேசம்: - பவுலுக்கு எவ்வித இரகசிய உபேசம் இருக்கவில்லை. ஒவ்வொரு உபதேசமும், வெளிப்படையாகவும், தெளிவானதாயும் இருந்தது. இவ்வுபதேசங்கள், பரிசுத்த வேதவாக்கியங்களால் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டு, தனது வாழ்க்கைக்கும், மற்றும் கர்த்தரது வாழ்க்கைக்கும் ஒத்துப்போகக்கூடியதாய் இருந்தது. பவுலின் போதனையானது, முறையாய் கைக்கொள்ளவதற்கு, சத்தியமடங்கிய பேச்சாய் இருந்தது. நாம் எந்த அளவுக்கு ஒளிவு மறைவின்றி, வெளிப்படையாய் ஜீவிக்கிறவர்களாய் இருக்கிறோம்?

2. வாழ்க்கை முறை: - பிரசங்க பலி பீடத்திற்கு வெளியே ஒரு நபர் எவ்வாறு வாழ்க்கை முறை செய்கிறார் என்பதைக் குறித்து பேசப்படுகிறதாய் இருக்கிறது. அவர்கள் வாழவேண்டிய பிரகாரம், அவர்களது அனுதின வாழ்க்கையானது இருக்கிறதா? சுவிஷேச செய்தியின் பிரகாரம் சரியான வாழ்க்கை செய்கிறவர்களாய் இருத்தல் வேண்டும். சத்தியத்திற்கு சாட்சியாய் வாழ்ந்து வேத நியமங்களை அனுசரித்துக் கொண்டாடுதல் வேண்டும். தீத்து 2:10.

3. நோக்கம்: - ஆயத்த சடங்கு [prothesis] என்பதன் பொருள், கிறிஸ்துவை மகிமைப் படுத்துதலாய் இருந்தது, இதுவே பவுலின் வாழ்வில் "guiding principle" ஆக இருந்து வந்தது, தீமோத்தேயுவுக்கும், நமக்கும் இதுவே "guiding principle" ஆக இருத்தல் வேண்டும்.

4. விசுவாசம்: - பவுல் எதை விசுவாசித்தாரோ, அதை அவர் வாழ்வில் உபதேசங்களாய் கடைபிடித்தார் மற்றும் அவரது வாழ்வில் எடுக்கும் ஒவ்வொரு தீர்மானத்திலும், இவற்றைப் பயன்படுத்தினார். பவுலைப் போன்றே நாமும் பரீட்சிக்கப்பட வேண்டியவர்களாய் இருக்கிறோம். நாம் தீர்மானம் எடுக்க வேண்டிய சந்தர்ப்பத்தில், "விசுவாசத்தைக்" கைக்கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறோம். நாம் தேவனது சித்தத்தைத் தேடி, கர்த்தருடைய வார்த்தையை கைக்கொள்கிறவர்களாய் இருக்கிறோமா? இப்படிப்பட்ட காரியங்களில் விசுவாசமானது கடைபிடிக்கப்படுகிறதாய் இருக்கிறது, என்பதை காண்கிறோம். நாம் எதை விசுவாசிக்கிறோமோ அதன் அடிப்படையில் நாம் தீர்மானங்களை எடுக்கிறவர்களாய் இருக்கிறோம்.

5. நீடிய பொறுமை: - இது வலுவான இராணுவச் சொல்லாய் இருக்கிறது, நீண்ட கால இராணுவ முகாமின் போது, மன உறுதியுடன் இருந்து அங்கு பாடு சகிப்பதைக் குறிக்கிறதாய் இருக்கிறது, இது பரிசுத்த ஆவியானவரின் முக்கியமான கனிகளில் ஒன்றாய் விளங்குகிறது. இருதயமானது விசாலமாகும் போது, முதிர்ச்சியடைந்த விசுவாசி, இத்தகைய பண்பை வெளிக்காட்டுகிறவராய் இருக்கிறார், பரிசுத்த ஆவியானவருடன் நடக்கும்போது, இத்தகைய பண்பானது இயல்பாய் வருகிறதாய் இருக்கிறது. கர்த்தருடைய நியமங்களை நாம் அனுசரிக்கும் போது, தனிப்பட்ட நிலையில் உணர்ச்சி வசப்படுவதை இடையில் புகுத்துவதைத் தவிர்த்தல் வேண்டும். நாம் எல்லா காரியங்களிலும், பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்படுவோமாக.

6. தாராள மனப்பான்மை / பெருந்தன்மை: - அகாப்பே அன்பு என்பது, ஆவியானவரின் கனியில் மற்றொரு பண்பாய் விளங்குகிறது. இது நாம் விசுவாசிகளாய் இருப்பதற்கான தகுதியினைக் காட்டுகிறதாய் இருக்கிறது, மற்றும் நாம் போதகராய் இருந்து, பேசுவதற்கு தகுதியை அளிப்பதாய் இருக்கிறது. நமக்கு இப்படிப்பட்ட தெய்வீக

அன்பில்லையெனில், நாம் ஓசையிடுகிற கைத்தாளம் போன்றிருப்போம். (1 கொரிந்தியர் 13:1-13); இதைத் தவிர மக்களுக்குக் கொடுப்பதற்கு என நம்மிடம் எதுவுமில்லை.

7. பொறுமை: - மற்றொரு ஆவியின் கனியானது இங்கு வலியுறுத்தப்படுகிறது, கர்த்தருடைய சமயத்திற்காய் பொறுமையுடன் காத்திருத்தலைக் காட்டுகிறது, மாறாக எதை எப்பொழுது செய்ய வேண்டும் என தேவனிடம் கூறுவதைத் தவிர்த்தல் வேண்டும். கர்த்தருக்காய் காத்திருப்பது என்பது, நாம் செயல் இழந்து இருக்கிறோம் என்பது பொருளாகாது. நாம் எல்லா சமயங்களிலும், முன்னேற ஆயத்தமாய் இருக்கிறோம். எப்பொழுது, எங்கு என்பதற்குரிய தெளிவான வழிநடத்துதலைத் தேடுகிறவர்களாய் இருத்தல் வேண்டும். மனுஷீக நிலையில் அவசரப்படுதல் கூடாது, தேவனது வேளைக்காய், மற்றும் கர்த்தரது வழியில் செய்ய காத்திருத்தல் அவசியம். நாம் பேசும்போது, ஆராதனை நடத்தும் போது, நாம் எப்பொழுதும் பரிசுத்த ஆவியானவரது வழி நடத்துதலுக்காக திறந்த மனதுடன் இருத்தல் வேண்டும்.

8. உபத்திரவப்படுத்தப்படுதல்: - ஒருவர் சத்தியத்திற்காய் நிற்கும்போது, பவுல் உபத்திரவப்படுத்தப்பட்டது போலவே, உபத்திரவப்படுத்தப்படுவார்கள். அவர்கள் பொய்யை மிகைப்படுத்தி, அவற்றை நம்பி, உபத்திரவப்படுத்துகிறவர்களாய் இருக்கின்றனர். நாம் நமது நண்பர்களாலும், மற்றும் நமது எதிராளிகளாலும் அறியப்பட்டவர்களாய் இருக்கிறோம். பவுல் எதிராளிகளால் உபத்திரவப்படுவதைக் குறித்து பெருமிதமாய் எண்ணினார், இது எதிராளிகளுக்குத் தான் அபாயகரமானவன் என்பதை விளங்கப்பண்ணுகிறதாய் இருந்தது. நாம் எதிராளிகளால் தாக்கப்படும்போது, எந்த அளவுக்கு, தளர்ந்தவர்களாய் இருக்கிறோம்?

9. துன்பப்படுதல்: - கிறிஸ்துவின் சரீரத்தில், நாம் சத்தியத்திற்காய் பாடு அனுபவிப்பது என்பது ஒரு காரியமாய் இருந்தபோதிலும், உண்மையுள்ள போதகர்கள், மனோ ரீதியாக பாடு அனுபவிக்க அழைக்கப்பட்டுள்ளனர், தங்களது நெருக்கங்கள் நடுவே, தாங்கள் பிறர் நலனுக்காய் பாடு சகிக்கிறவர்களாய் இருக்கின்றனர். இங்கு கூறப்படுவது என்னவெனில், ஆத்துமாவில் உள்ளான நிலையில், பிறர் நலனுக்காய் பாடு சகிப்பதைக் காட்டுகிறது, இது கர்த்தரையும், தேவ ஜனங்களையும் நேசித்து அன்புகூறுகிறவர்களுக்கு அதிகம் சம்பவிப்பதாய் இருக்கிறது. 2 கொரிந்தியர் 11:23-33 ல் பவுலின் சாட்சியானது, எடுத்துரைக்கப்படுகிறதாய் இருக்கிறது. அவரது ஊழியத்தில், அவர் அடைந்த பாடுகளை இது விவரிக்கிறதாய் இருக்கிறது. இதைவிட மிகுதியான நெருக்கங்களை, இந்த நிருபத்தினை பவுல் எழுதும் போது அனுபவித்தார், இவரது ஆரம்பகால பாடுகள், இளம் வயதுள்ள தீமோத்தேயுவை சந்திக்கவும், அவரை உருவாக்கவும் பிரயோஜனமுள்ளதாய் இருந்தது. இப்படிப்பட்ட ஆரம்பகால பாடுகள், தீமோத்தேயுவின் மனதில், உலோகத்தில் செதுக்கி வடிவமைப்பதைப் போன்று, அமைந்தது, ஒரு மிஷனரிப் போதகரின் வாழ்வின் முதற்படியாய் அவர் அடையும் பாடுகள் இன்னதென்பதை அவர் கண்டுகொள்கிறவராய் இருந்தார்.

போதகர்களுக்குரிய பாடு, துன்பங்களை வருணிப்பது எத்துனை சவால் நிறைந்ததாய் இருக்கிறது! Mounce அவர்கள் குறிப்பிடும் போது, "இன்றைய அளவில் விசுவாசிகள் உபத்திரவங்களையும், பாடுகளையும் சந்திக்காமல் இருப்பதன் காரணம், உலகம் நன்மையானவைகளைப் பாராட்டுகிறதாய் இருக்கிறது. சில விசுவாசிகள் உண்மையான கிறிஸ்தவ வாழ்வு வாழத் தீர்மானித்து, இவ்வகையான பாடு துன்பங்களை சகிக்கிறவர்களாய் விளங்குகின்றனர்."

"இறுதியை நெருங்க, நெருங்க, தேவனுக்கு எதிரான கலக அலைகள் மோலோங்கி எழுகிறதாய் இருக்கிறது." ["The nearer we get to the end the higher is the rising tide of rebellion against God", (Ironside).]

இவைகளை நாம் சந்திக்க ஆயத்தமுள்ளவர்களாய் இருத்தல் வேண்டும், குருத்துவப்பணி செய்ய நுழைவோர், அவர்களது பயிற்சியின் போது, இவ்வகையான வாழ்க்கையில் பிரவேசிக்க முன்னதாகவே ஆயத்தமாய் இருத்தல் வேண்டும். "இவ்வுலகிலும், கிறிஸ்துவிலும் இருப்போருக்கு மட்டும், இயல்பாகவே உபத்திரவம் என்பது தவிர்க்க இயலாத ஒன்றாய் இருக்கிறது." (J R S Stott).

உபதேசங்கள்:

தேவதூதர்கள் - தேவ தூதர்களின் முறண்பாடு: ANGELS – ANGELIC CONFLICT

1. தேவதூதர்களின் முறண்பாடு இருந்து வருகிறதாய் இருக்கிறது, அது நாம் இவ்வுலகில் இருக்கும்போது, நமக்கு நெருங்கிய நிலையில் சம்பந்தப்பட்டதாய் விளங்கி வருகிறது.

2. கடந்த கால நித்தியம்:

[அ] ஆரம்பத்தில் தேவதூதர்களை தேவன் சிருஷ்டித்தார். சிருஷ்டிப்பின் போது, அவர்களுக்குள் ஏகமனதும், ஒற்றுமையும் நிலவி வந்தது, தேவ தூதர்கள் ஒருமித்துப் பாடி தேவனை மகிமைப் படுத்தி வந்தனர்.

[ஆ] சாத்தான் என்றழைக்கப்படும் லூசிபர், அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளியாய் தேவதூதர்களுக்கெல்லாம் தலைவனாய் விளங்கினான். ஏசாயா 14. எசேக்கியேல் 28:12-15.

[இ] கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து 2 பேதுரு 1 ம் அதிகாரத்தில் இப்பொழுது அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளி என அழைக்கப்படுகிறார், இதன் காரணம், சாத்தானுக்குப் பதிலாக இயேசுக்கிறிஸ்து அவனை சிலுவையில் வெற்றி கண்டதன் விளைவால், அவனது ஸ்தானமானது கிறிஸ்துவுக்கு அளிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

3. சாத்தானின் வீழ்ச்சி:

[அ] சாத்தானின் பெருமையினால், கர்வமடைந்து, தேவனுக்கு மேலாக தனது ஆழுகையை ஸ்தாபிக்க முயற்சித்தான். ஏசாயா 14:12-17.

[ஆ] சாத்தானின் வீழ்ச்சியின் போது மூன்றில் ஒரு பகுதி தேவதூதர்களை தன்னுடன் சேர்த்துக் கொண்டான். வெளிப்படுத்தல் 12:9.

[இ] தேவ தூதர்கள் எந்நாளும் வசிப்பவர்கள், இதினிமித்தம் இவர்கள் இருசாராராய் பகுக்கப்படுகின்றனர்.

> தெரிந்து கொள்ளப்பட்ட தேவ தூதர்கள், இவர்கள் தொடர்ந்து தேவனுக்கு உண்மையுள்ளவர்களாய் இருக்கின்றனர். (1 தீமோத்தேயு 5:21)

விழுந்து போன தேவ தூதர்கள், இவர்கள் சாத்தானை பின்பற்றுவதைத் தெரிந்து கொண்டவர்கள், இவர்களும் இரு சாராராய் இருக்கின்றனர்.

சிறைபிடிக்கப்பட்டவர்கள், இவர்கள் ஜலப்பிரளயத்தின் போது, தகாதவிதமாய் நடந்து கொண்டவர்கள். (யூதா 6, 2 பேதுரு 2:4).

தற்போது செயல்பட்டு வருகிற பிசாசுகள். (1 கொரிந்தியர் 10:20, 21, மாற்கு 5:1-20).

[ஈ] இதினிமித்தம், விழுந்து போன தேவதூதர்களுக்கும், தெரிந்து கொள்ளப்பட்ட தேவ தூதர்களுக்குமிடையே ஆவிக்குரிய யுத்தம் நிகழ்ந்து வருகிறது, இப்படிப்பட்ட ஆவிக்குரிய யுத்தம் மனித வர்க்கத்தையும் பாதிப்புக்குள்ளாக்கி வருகிறது. (எபேசியர், 6:12, வெளிப்படுத்தல் 12)

4. விழுந்து போன தேவதூதர்கள் மீதான தீர்ப்பு:

[அ] கடந்த கால நித்தியத்தில், சாத்தானுக்கும் அவனுடன் விழுந்து போன தேவ தூதருக்கும் நியாத்தீர்ப்பு அளிக்கப்பட்டு, அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலானது நியமிக்கப்பட்டது. - மத்தேயு 24;51.

[ஆ] தனது தீர்ப்புக்கு எதிர் மனு செய்து சாத்தான், "அன்புள்ள தேவன் தனது சிருஷ்டிகளுக்கு எவ்வாறு அக்கினியும் கந்தகமும், எரிகிற கடலுக்குத் தீர்ப்பு செய்வது? என தீர்ப்பை மறு பரிசீலனைக்குட்படுத்தினான்.

[இ] இதற்கான பதில் அவரது குணாதிசயமாகிய பரிசுத்தர் அதே சமயம் அன்புள்ளவர் என்பதன் மூலம் வெளியாகிறதாய் இருக்கிறது. அவரது பரிசுத்தத்தின்படி அவரால், பாவத்தையும், கலகத்தையும், நியாயந்தீர்ப்பதற்கு மட்டுமே இயலுகிறதாய் இருக்கிறது

[ஈ] இதினிமித்தம் அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலானது, மனுஷருக்காய் சிருஷ்டிக்கப்படவில்லை. மனிதர் இப்படிப்பட்ட கடலில் பங்கடைவது, தாங்கள், தேவனுக்கு விரோதமாக நடந்து கொண்ட தங்களது மாறுபட்ட நடத்தையாலாகும்.

5. தேவ தூதர்களின் முறண்பாட்டில், மனிதரின் பங்கு / கடமை:

[அ] சாத்தானுக்கும் அவனுடன் விழுந்து போன தேவதூதர்களுக்கும் அளிக்கப்பட்டத் தீர்ப்பானது, மனிதனின் தோற்றத்திற்கு முன்னதாகவே அளிக்கப்பட்டதாய் இருக்கிறது. இத்தீர்ப்பானது இன்னும் நிறைவேற்றப்படாது இருக்கிறது, இத்தீர்ப்பானது ஆயிர வருட அரசாட்சியின் முடிவின் போது, நிறைவேற்றப்படும். வெளிப்படுத்தல் 20:10.

[ஆ] இத்தீர்ப்பானது நிறைவேற்றப்படுமுன்னர், நீண்ட இடைவெளி அளிக்கப்பட்டு, மனிதரின் முழு சரித்திரமும் எடுத்துக்கொள்ளப்படுகிறதாய் இருக்கிறது. இதினிமித்தம், மனித வர்க்கத்திற்கு தேவனோடுள்ள உறவு, மற்றும் அவர்கள் வாழ்வில் இடம்பெற்றவைகள் அனைத்தும், தூதர்களுக்கு முன்னதாய் சாட்சியாய் விவரிக்கப்படுகிறதாய் இருக்கும்.

[இ] மனிதனின் சிருஷ்டிப்பின் மூலம், தேவதூதர்கள், மற்றும் சாத்தானது பாவத்தைக் குறித்த சட்ட ரீதியான சாட்சியினை தேவன் அளிக்கிறவராய் இருக்கிறார். மனிதரின் முழு சரித்திரமும், தேவதூதர்களுக்கு குறிப்பிட்ட கருத்துக்களை நிரூபணம் செய்கிறதாய் இருக்கிறது. கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவுக்குள் ஒரு விசுவாசியாக,

உங்கள் வாழ்வில் நிகழும் ஒவ்வொரு காரியமும், தேவதூதர்களுக்கு சாட்சியாய் விவரிக்கப்படும்.

6. மனிதனின் வீழ்ச்சியும் மற்றும் தேவ மனிதரின் ஜெயமும்:

[அ] மனிதரின் துவக்கம் தேவதூதரிலும் சிறியவனாக இருந்தது, எபிரெயர் 2:9. கூறுவது என்னவெனில், இயேசுக் கிறிஸ்து தேவ தூதரிலும் சற்று சிறியவராக்கப்பட்டார்.

[ஆ] ஆதாம் வெற்றிபெறாது தோல்வியைக் கண்டபடியால், அவனுக்குப்பதிலாக இயேசுக் கிறிஸ்து தோன்றி மனுக்குலத்திற்கு வெற்றியைத் தேடித்தந்தார். 1 கொரிந்தியர் 15:22 கூறுகிறது, ஆதாமுக்குள் நாம் அனைவரும் மரித்துப் போய் இருக்கிறோம், கிறிஸ்துவுக்குள் நாமனைவரும் உயிர்பெற்றவர்களாய் இருக்கிறோம்.

[இ] தேவ தூதர்களையும் இவ்வுலகையும் நியாயந்தீர்க்கும் பொறுப்பானது விசுவாசிகளுக்கு அளிக்கப்பட்டுள்ளது. 1 கொரிந்தியர் 6:1-3.

7. தேவதூதர்களுக்கும், மனுக்குலத்திற்கும் இணையான பல ஒற்றுமைகள் உண்டு.

[அ] தேவதூதர்களுக்கும், மனுக்குலத்திற்கும், சுயசித்தம் குறித்து பல இணயான கருத்துக்கள், தேவ தூதர்கள் பரீட்சிக்கப்பட்டது போன்று மனிதரும் பரீட்சிக்கப்பட்டனர் என்பது குறித்து தெளிவாகிறதாய் இருக்கிறது.

[ஆ] தேவதூதர்கள் ஆரம்பத்தில் அறியாமையுள்ளவர்களாகவும், தேவனுக்கு முற்றிலும் கீழ்படிகிறவர்களாகவும் இருந்தனர் (யோபு 38:7, எசேக்கியேல் 28:14-15)
மனிதனும் ஆரம்பத்தில் அறியாமையுள்ளவனாக இருந்தான். (ஆதியாகமம் 2:25)
சாத்தானினின் கலகத்தினால் தேவதூதர்கள் கலகம் செய்தனர். (ஏசாயா 14:12-14)
ஆதாமின் கலகத்தினால், மனிதன் பாவம் செய்தான் (ஆதியாகமம் 3:1-7)
தேவதூதர்கள் இரு பகுதிகளாகப்பிரிக்கப்பட்டனர், தெரிந்துகொள்ளப்பட்டவர்கள், விழுந்துபோனவர்கள்.
மனிதர்களும் விசுவாசிகள், அவிசுவாசிகள் என இரு பிரிவாக பிரிக்கப்பட்டனர்.

8. ஆதாமும், சுயசித்தமும்:

[அ] தேவன் ஆதாமையும், ஏவாளையும் சிருஷ்டித்தபோது, சாத்தானுக்கு மனுஷர்கள் தேவதூதர்களைவிட சிறியவர் எனக்காட்டும்படியாக (எபிரெயர் 2:6-7), மற்றும் அவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படியும்படி தெரிந்து கொள்பவர்கள் என்பதை நிரூபணம் செய்யும்படியாக. இதினிமித்தம் மனுக்குலமானது, சுயசித்தமுள்ளதாயும், தேவனுக்குக் கீழ்ப்படிவதால் ஆசீர்வாதத்தையும், அல்லது கீழ்ப்படிய மறுப்பதால், நியாயத்தீர்ப்பையும் பெற்றனுபவிக்குமாறு சிருஷ்டிக்கப்பட்டனர். (இதைப் போன்றே சாத்தானும் சுயசித்தமுள்ளவனாய் சிருஷ்டிக்கப்பட்டிருந்தான்).

[ஆ] மனிதனின் சுயசித்தத்திற்குப் பரீட்சையானது, ஏற்படுத்தப்பட்டது. அவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படிவார்களா அல்லது கீழ்ப்படிய மறுப்பார்களா? (ஆதியாகமம் 2:16-17). இதினிமித்தம் ஆதாம் மற்றும் முழு மனுக்குலமும் பாவஞ்செய்து தேவனுக்கு விரோதமாய் கலகம் செய்கிறவர்களானார்கள். இதினிமித்தம் மனுக்குலம்

அனைத்தும், சாத்தானைப் போன்றே பாவம் செய்து கலகம் செய்த நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

[இ] எப்படியிருப்பினும் தேவன் மனிதரின் சுயசித்தத்திற்கு மற்றொரு பரீட்சையை ஏற்படுத்தினார். அவர்கள் இயேசுக் கிறிஸ்துவின் மூலம் தேவனிடம் திரும்புவதை தெரிந்துகொள்ளுவார்களா அல்லது தொடர்ந்து பாவத்திலும், கலகத்திலும் நிலை கொண்டிருப்பதை தெரிந்து கொள்வார்களா? (யோவான் 3:16, 2 பேதுரு 3:9).

[ஈ] எந்த ஒரு நபரும் தேவனிடம் திரும்புவதைத் தெரிவு செய்யும்போது, இரட்சிப்பை அடைகின்றனர், எந்த ஒரு நபரும், கலகத்தில் நிலைத்திருப்பதை தெரிவு செய்வார்கள் எனில், அப்படிப்பட்டவர்கள் நியாந்தீர்க்கப்பட்டு, சாத்தான் நியாயந்தீர்க்கப்பட்டு தள்ளப்பட்ட அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலில் இவர்களும் தள்ளப்படுவார்கள். (மத்தேயு 25:41)

[உ] இதினிமித்தம், சிலுவையில் கிறிஸ்துவின் கிரியையில், மனிதர் தங்களது சுயசித்தத்தினால், விசுவாசம் வைக்கும்போது, தேவன் தமதன்பினால் அவர்களை இரட்சிப்பதை மெய்ப்பித்துக் காட்டுகிறவராய் இருக்கிறார், அவரது நியாத்தினால், அவர்களை நியாயந்தீர்க்கிறவராய் இருக்கிறார்.

9. தேவ தூதர்களின் முறண்பாட்டிற்கான தீர்மானங்கள்:

அ) முதல் நிலை: இரட்சிப்பு: விசுவாசத்தினால் தேவன் மனிதனுக்கு அளித்த இரட்சிப்பு மனிதனை தூதர்களின் ஸ்தானத்தைவிட உயந்த நிலைக்கு கொண்டு செல்கிறதாய் இருக்கிறது. (எபிரெயர் 2:6-7)

ஆ) இரண்டாம் நிலை: கிறிஸ்தவ நடக்கை: விசுவாசத்தினால் நடக்கும் கிறிஸ்தவ வாழ்க்கை ஓர் விசுவாசி சாத்தானை மேற்கொள்ளச் செய்கிறதாய் இருக்கிறது. (எபேசியர் 6:10-17)

இ) மூன்றாம் நிலை: கிறிஸ்துவுக்குள்ளான நித்தியத்தில், விசுவாசி சாத்தானையும், விழுந்துபோன தூதர்களையும் நியாயந்தீர்க்கிறவனாகிறான் (எபிரெயர் 2;8, 1 கொரிந்தியர் 6;3)

10. மேகம் போன்ற திரளான சாட்சிகள்:

தேவதூதர்கள் மனுக்குலத்தை உற்றுக் கவனிக்கிறவர்களாய் இருக்கின்றனர். (1 கொரிந்தியர் 4:9, எபேசியர் 3:10, 1 தீமோத்தேயு 5:21, 1 பேதுரு 1:12) தெரிந்து கொள்ளப்பட்ட தேவதூதர்கள் ஒவ்வொருவரும் இரட்சிப்படையும்போது களிகூறுகிறவர்களாய் இருக்கின்றனர் (லூக்கா 15:10)

11. மூன்று அடிப்படைக் கேள்விகள்:

தூதர்களின் கலகம் மூன்று அடிப்படை கேள்விகளுக்கு பதில் அளிக்கிறது :-

[அ] மனிதன் சிருஷ்டிக்கப்பட காரணம் என்ன? மனிதனுக்குள் மனப்பான்மையுடன் கூடிய ஆத்துமாவும் மற்றும் சுயசித்தமும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டு, தேவதூதர்களின் முறண்பாட்டினை தீர்மானிக்கச் செய்கிறதாய் இருக்கிறது.

(கொலோசெயர் 2:14-15, எபிரெயர் 2). தேவ தூதர்களின் முறண்பாட்டில் சிலுவையான உண்மையான ஜெயத்தை அளிக்கிறதாய் இருக்கிறது.

[ஆ] பாவத்திற்கான காரணம் என்ன? பாவம் முதல் நிலையாகிய தேவனது திட்டத்தைத் தீர்மானிக்கச் செய்கிறதாய் இருக்கிறது. சிலுவையில் பாவமானது நியாந்தீர்க்கப்பட்டுவிட்டது. மனிதனுக்கும், தேவனுக்குமிடையே இருந்தத் தடைச்சுவரானது அகற்றப்பட்டுவிட்டது, ஆகையால் மனிதன் தேவனோடு கொள்ளும் உறவானது அவனது சுயசித்தத்தைச் சார்ந்ததாய் இருக்கிறது. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், ஒரு நபர் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் போது, தெரிந்துகொள்ளப்பட்ட தேவ தூதர்கள் மகிழ்ந்து களிகூறுகின்றனர். ஏதேன் தோட்டத்தில் மனிதன் அறியாமையுள்ளவனாய் இருந்தான், அவன் செய்ய வேண்டியதெல்லாம், நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்திற்கு விலகி இருத்தல் ஆகும். இப்பொழுது மனிதன் குற்ற உணர்வுடன் இருப்பதால், அவன் சிலுவை மரத்தண்டைக்கு வர வேண்டியவனாய் இருக்கிறான். (ஆதியாகமம் 2:17, 1 பேதுரு 2:24)

[இ] பாடுகள், துன்பங்களுக்கான காரணம் என்ன? பாடுகளும், துன்பங்களும் இரண்டாம் நிலையை தீர்மானிக்கிறதாய் இருக்கிறது, இது வாக்குத்தத்த அடிப்படைக் கொள்கையை உடையதாய் இருக்கிறது. (1 பேதுரு 1:7-8, ரோமர் 5:2-4). பாடுகளும், துன்பங்களும் ஆசீர்வாதத்திற்காக வடிவமைக்கப்பட்டவைகளும், சாத்தானுக்கு சவுக்கடி கொடுப்பவைகளுமாய் இருக்கிறது. இது தேவனது அன்பை நிரூபணம் செய்கிறதாய் இருக்கிறது, இப்படிப்பட்ட செய்கைகளை நித்தியத்தில் செய்ய இயலாது, காரணம் நித்தியத்தில் வருத்தம், வேதனை அல்லது மரணம் கிடையாது. (வெளிப்படுத்தல் 21:4).

12. தேவதூதர்களின் முறண்பாட்டில் உள்ள நிலைகள் [தேவனது திட்டத்தில், சாத்தானின் தாக்குதல்களைக் காண்க]

[அ] மனிதனின் வீழ்ச்சியிலிருந்து கிறிஸ்து மரித்து, உயிர்த்து பரமேறுதல் வரை, அவர் சாத்தானின் தாக்குதலுக்கு இலக்காய் இருந்தார். பரமேறுதல் சரித்திரத்தில் இடம் பெற்ற பின்னர், சாத்தான் இரட்சகரின் வம்சாவழியை தாக்குதல் இயாலது போய்விட்டது.

[ஆ] கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல், பரமேறுதல், வீற்றிருத்தல் போன்றவைகள், தேவதூதர்களின் முறண்பாட்டில் உச்சக்கட்ட செயல்பாடுகளை விளைவிக்கிறதாய் இருந்து வருகிறது.

[இ] பிதாவாகிய தேவனின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கும்படி கிறிஸ்து மகிமையாய் உயர்த்தப்பட்ட பின்னர், சபையுகத்தில் தேவ தூதர்களின் முறண்பாடானது உச்சக்கட்டத்தை வகிக்கிறதாய் இருந்து வருகிறது.

[ஈ] சபை யுகத்தில் வாழ்ந்து வரும் ஒவ்வொரு விசுவாசியும், தாக்குதலுக்கு இலக்காக இருந்து வருகிறபடியால், கர்த்தரால் விஷேசமான காரியங்கள் அவர்களுக்கு அளிக்கப்படுகிறதாய் இருக்கிறது.

பரிசுத்தாவியானவர் வாசம் செய்தல் (யோவான் 14:17).
இயேசுக் கிறிஸ்து வாசம் செய்தல் (யோவான் 14:23)
முற்றிலுமாய் பகுக்கப்பட்ட பரிசுத்த வேதாகமம் (1 கொரிந்தியர் 13:10)

13. அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலின் முன்னேற்றங்கள்:

இது கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து பிதாவின் வலது பாரிசத்தில் அமர்ந்தது முதற்கொண்டு, இறுதி நியாயத்தீர்ப்புவரை உள்ள செயல்பாடுகளை விவரிக்கிறதாய் இருக்கிறது. சங்கீதம் 110:1 கூறுகிறது. *"கர்த்தர் [பிதாவாகிய தேவன்] என் ஆண்டவரை [குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவை] நோக்கி: நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும் வரைக்கும், நீர் என்னுடைய வலது பாரிசத்தில் உட்காரும் என்றார்."*

[அ] முதல் நிலை: - ஆவிக்குரிய யுத்தக்கிளர்ச்சி - பெந்தெகொஸ்தே முதல் சபை எடுத்துக் கொள்ளப்படுவது வரை.

இக்கால கட்டத்தில், தேவன் ஆகாதவர்கள் எனக் கைவிடப்பட்ட, தேவதூதர்களின் ஆலோசனை சங்கத்திலிருந்த அங்கத்தினருக்குப் பதிலாக, வேறு தனிநபர்களை அழைத்து நியமித்தல். 1 கொரிந்தியர் 4:8, 6:1-3, 2 தீமோத்தேயு 2:12, வெளிப்படுத்தல் 3:21.

இதற்கு முன் இருந்த தேவதூதர்களின் ஆலோசனை சங்கம், தேவனும் இவ்வேதபகுதியில் காணப்படும் தேவ தூதர்களால் அமையப் பெற்று இருந்தது. 1 இராஜாக்கள் 22:19-23 and 2 நாளாகமம் 18:18-23.

[ஆ] இரண்டாம் நிலை: - சபை எடுத்துக்கொள்ளப்படுவதிலிருந்து இரண்டாம் வருகை வரை - நேருக்கு நேர் எதிர்ப்படுதல்.

இக்காலக் கட்டத்தில், தேவ தூதர்களின் சங்கத்தில் புதிய அங்கத்தினராய் சேர்க்கப்பட்டவர்களது, தெய்வீக மற்றும் மனுஷீக நன்மைகள் பரிசீலனை செய்யப்பட்டு, பிரதிபலன் அளிக்கப்படுதல் [1 கொரிந்தியர் 3:11-15], இவர்கள் தங்களது பழைய பாவசுபாவத்தன்மையை இழந்துபோய், உயிர்த்தெழுந்த சரீரத்தில் இருப்பர். கலகம் செய்த அங்கத்தினராகிய, சாத்தான் மற்றும் அவனைப் பின்பற்றி சென்ற தேவதூதர்கள் பரலோகிலிருந்து புறம்பாக்கப்படுவர். வெளிப்படுத்தல். 12:4

[இ] மூன்றாவது நிலை: - இரண்டாம் வருகை முதற்கொண்டு, ஜெயம் கொண்ட நிலை வரை.

கிறிஸ்து சாத்தானையும் அவனுடன் விழுந்து போன தேவதூதர்களையும் ஆயிரம் வருடம் நரகத்தில் தள்ளி அடைத்து, அவர் தனது ஆதிக்கத்தை பூமியில் செலுத்துவார்.

[ஈ] நான்காது நிலை: - இறுதி நியாயத்தீர்ப்பு. அக்கினியும், கந்தகமும் எரிகிற கடல் சாத்தானுக்கும் அவனது தூதர்களுக்கும் என சிருஷ்டிக்கப்பட்டது. மத்தேயு 25:41.

சாத்தான், பிசாசுகள் மற்றும் அவிசுவாசிகளுடன் அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலில் தள்ளப்பட்டான். அவிசுவாசிகள் அவர்களுடன் கந்தகமும், அக்கினியும் எரிகிற கடலில் சேர்ந்து கொள்வார்கள் காரணம், அவர்கள் கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவை, கர்த்தரும், இரட்சகருமாய் ஏற்றுக்கொள்ளவில்லை. பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதியாயின. புதிய வானம் மற்றும் புதிய பூமி தேவனால் விசுவாசிகளுக்கு அளிக்கப்பட்டது. இக்கால கட்டத்தில் எல்லா முழங்கால்களும் முடங்கும், அவரது சத்துருக்களைப் பாதபடியாக்கிப் போடுவேன் என்ற வாக்குத்தத்தம் நிறைவேறும்.

14. விசுவாசிகளும், தேவதூதர்களின் முறண்பாட்டின் விளைவுகளும்:

தேவ தூதர்களின் முறண்பாட்டின் விளைவுகள்:

முதல் நிலை: இரட்சிப்பு - இரட்சிக்கப்பட்ட மனுக்குலமானது ஸ்தான ரீதியாக தேவதூதர்களை விட, உயர் ஸ்தானத்துக்கு உயர்த்தப்பட்டனர்.

இரண்டாம் நிலை: கிறிஸ்தவ நடக்கை - பாடுகள் மூலமாய் விசுவாசி தனது விசுவாசத்தைக் கிறிஸ்துவின் மீது வளர்த்துக்கொள்ளவும், விழுந்து போன தேவதூதர்களுக்கு அவர்களின் அழிவின் நிச்சயத்தை உறுதிபடுத்தவும், செய்கிறார்கள்.

மூன்றாவது நிலை: பரலோகம் - நித்தியத்தில், விசுவாசி தனது உயிர்த்தெழுந்த சரீரத்தில், சரீரப்பிரகாரமாக தேவதூதர்களைவிட உயர்ந்த அந்தஸ்தில் இருப்பர்.

15. இறுதியுரை:

மனிதனின் வீழ்ச்சியினால், மனுக்குலத்தின் ஆதிக்கத்தில் இருக்க அவசியமில்லாத உலகமானது சாத்தானின் ஆதிக்கத்திற்குள்ளாக கடந்து சென்றது.

மனிதன் பிசாசுகளின் உலகில் அவர்களது ஆதிக்கத்தின் கீழ் இருப்பது, மற்றும் இல்லாதிருப்பது, மனிதனின் சுயசித்தத்தைப் பொறுத்ததாய் இருந்து வருகிறது.

தேவனது வார்த்தையை பயன் படுத்துவதன் மூலம், நீங்கள் தீர்மானம் எடுத்து, முற்றிலும் சாத்தானுக்கும் அவனது கொள்கைகளுக்கும் எதிராய் செயல்பட இயலும்.

சாத்தான் இவ்வுலகத்தின் அதிபதியாய் இருக்கிறான். (2 கொரிந்தியர் 4:4, யோவான் 12:31, 14:30, 16:11, எபேசியர் 2:2.

எப்படியிருப்பினும் பரிசுத்த வேதாகமத்தை நாம் பெற்றிருக்கிறோம் - அது கிறிஸ்துவின் சிந்தையாய் இருக்கிறது. (1 கொரிந்தியர் 2:16). நாம் அதை அறிந்துகொள்ளுதலும் மற்றும் உபயோகித்தலும் அவசியம்.

கடைசிக் காலம்: - கடைசிக்காலத்தின் குணாதிசயங்கள்.

ஜலப்பிரளயத்திற்கு முன்னிருந்த ஜனங்களைப் போன்றே, நியாயத்தீர்ப்புக்கேதுவாக கடைசிக்காலத்தில் வாழும் மக்கள் இப்பொழுது நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாய் இருக்கின்றனர்.

1. நோவாவின் காலத்தில் இருந்த ஜனங்கள் போன்றே இந்நாட்களில் உள்ளவர்களும் இருக்கிறார்கள் -- லூக்கா 17:27.

2. தொழில்நுட்பங்கள் மிக விரைவாக முன்னேறிவருதல் - ஆதியாகமம் 4:22.

3. பொருளாசை உள்ளவர்களாய், அதன் மீது வாஞ்சையுள்ளவர்களாய் இருத்தல். லூக்கா 17:28.

4. ஒரே நம்பிக்கையுடன் இருக்கும் மனப்பான்மை - எபிரெயர் 11:7.

5. வசதி வாய்ப்புகள், உலக சிற்றின்பம் இவைகளில் கட்டுக்கடங்கா ஆர்வம் காட்டுதல். ஆதியாகமம் 4:21

6 தேவனைக் குறித்த அக்கரையோ, கரிசனையோ, நம்பிக்கையோ இல்லாதிருத்தல். 2 பேதுரு 2:5, யூதா 15.

7. விவாக உறவின் பரிசுத்தத்தன்மையை உதாசீனப்படுத்துதல். மத்தேயு 24:38.

8. தேவனால் ஏவி எழுதப்பட்ட தேவ வார்த்தையை புறக்கணித்தல். 1 பேதுரு 3:19.

9. ஜனத்தொகைப்பெருக்கம். ஆதியாகமம் 6:1, 11

10. பெருகிவரும் பலாத்காரச் செயல்பாடுகள். ஆதியாகமம் 6:11, 13.

11. சமுதாய முழுவதிலும் ஒழுக்கக்கேடுபாடுகள். ஆதியாகமம் 6:12.

12. கீழ்த்தரமான பாலியல் செயல்பாடுகள். ஆதியாகமம் 4:19; 6:2.

13. தூஷிப்பதற்கான சிந்தனைகளும், வார்த்தைகளும் பரவலாக பெருகிவருதல். யூதா 15.

14. ஒழுங்குபடுத்தப்பட்ட சாத்தானின் செயல்பாடுகள். ஆதியாகமம் 6:1-4.

15. கட்டுக்கடங்கா ஒழுக்கச் சீர்கேடுகள். ஆதியாகமம் 6:5, 12.

<u>கடைசி காலங்கள்: -- இறுதிகால சபையை குணாதிசயப்படுத்திக்காட்டும் மறுதளிப்புகள்:</u>

1. தேவனை மறுதலித்தல் (லூக்கா 17:26; 2 தீமோத்தேயு 3:4-5).

2. கிறிஸ்துவை மறுதலித்தல் (1 யோவான் 2:18, 4:3; 2 பேதுரு. 2:1).

3. கிறிஸ்துவின் வருகையை மறுதலித்தல். (2 பேதுரு. 3:3-4).

4. விசுவாசத்தை மறுதலித்தல். (1 தீமோத்தேயு. 4:1-2; யூதா 3).

5. மெய்யான உபதேசத்தை மறுதலித்தல். (2 தீமோத்தேயு. 4:3-4).

6. வேறுபிரிக்கப்பட்ட வாழ்க்கையை மறுதலித்தல். (செயல்முறை பரிசுத்தமாக்கப்படுதல். 2 தீமோத்தேயு 3:1-7).

7. கிறிஸ்தவ சுதந்தரத்தை மறுதலித்தல். (1 தீமோத்தேயு. 4:3-4).

8. ஆவிக்குரிய தன்மையை மறுதலித்தல். (2 தீமோத்தேயு. 3:1-8; யூதா 18).

9. அதிகாரத்தை மறுதலித்தல். (2 தீமோத்தேயு. 3:4).

<u>சபை எடுத்துக் கொள்ளப்படுதல்</u>

1. சபை எடுத்துக்கொள்ளப்படுதல் என்பது சபையுகத்தின் முடிவைக் காட்டுகிறது, மற்றும் பெந்தெகொஸ்தே நாள் தொடங்கி சபை எடுத்துக்கொள்ளப்படும் நாள் வரை உள்ள எல்லா விசுவாசிகளும், கிறிஸ்துவால் மத்திய ஆகாயத்திற்கு எடுத்துகொள்ளப்படுவதையும் காட்டுகிறது.

2. பொதுவான வேதபகுதி (யோவான் 1 4:1-3, 1 தெசலோனிக்கேயர் 4:13-18).

3. சபை எடுத்துக்கொள்ளப்படுவது குறித்தும், இரண்டாம் வருகை குறித்தும் குழப்பமடையக்கூடாது. இவ்விரண்டு நிகழ்வுகளுக்கு இடையில் 7 வருட உபத்திரவகாலம் பிரிக்கிறதாய் இருக்கிறது.

4. சபை எடுத்துக்கொள்ளப்படுதல்:

இச்சம்பவம் பழைய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்படவில்லை.
சபைக்குறிய வாக்குத்தத்தம் நிறைவேற்றப்படுகிறது.
கிறிஸ்து பிரதிபலனளிக்க அவரது சிங்காசனம் (1 கொரிந்தியர்3:12-15, 2 கொரிந்தியர் 5:10-11, 2 தீமோத்தேயு2:11).
கிறிஸ்து மணவாளனாயும், தலையுமாய் இருக்கிறார்.
விசுவாசிகளின் சரீரம் மாற்றப்படுகிறது (சிருஷ்டிகளில் மாற்றம் இல்லை) (1 கொரிந்தியர் 15:51-58, பிலிப்பியர்3:21).
சபை ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படும் (1 தெசலோனிக்கேயர் 4:17).
நிகழப்போகின்றவை - சபை எடுத்துக்கொள்ளப்படு முன்னர் ஒருஅடையாளமும் நிறைவேறாது.
விசுவாசிகளுக்கான ஆறுதலின் நேரம். (1 தெசலோனிக்கேயர் 4:18).
கிறிஸ்து சபையை மத்திய வானில் சந்திப்பார். (1 தெசலோனிக்கேயர் 4:13-18).
சபை எடுத்துக்கொள்ளப்படுதல் விசுவாசிகளுக்கு மட்டும் நிகழ்வது.
இச்சம்பவம் உபத்திரவகாலத்துக்கு முன் சம்பவிக்கும்.
விசுவாசிகள் உலகத்தினின்று வெளியேறுவர்.
பரிசுத்த ஆவியாவர் பூமியினின்று அகற்றப்படுவார். (2 தெசலோனிக்கேயர் 2:7).

5. இரண்டாம் வருகை:

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் எல்லாராலும் முன்னறிவிக்கப்பட்டுள்ளது. . (சகரியா 14:4).
இஸ்ரவேலுக்கு அளிக்கப்பட்ட வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதல்.
வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு (ஆயிரவருட அரசாட்சிக்குப்பின்) - அவிசுவாசிகளுக்கு. (மத்தேயு25:31, வெளிப்படுத்தல் 20:12-15).
கிறிஸ்து இஸ்ரவேலருக்கு மேசியாவாதல் (தானியேல் 9:25).
இயற்கையில் அடிப்படை மாற்றங்கள். (ரோமர்8:19-22).
சபை பூமிக்குத் திரும்புதல் (1தெசலோனிக்கேயர் 3:13, 4:17).

தீர்க்கதரிசனத்தின் அநேக விரிவான காரியங்கள் நிறைவேறுதல். (வெளிப்படுத்தல் அதிகாரங்கள்6-19).
அவிசுவாசிகளுக்கு பயங்கரமான நேரம். (வெளிப்படுத்தல் 6:15-17).
கிறிஸ்து பூமிக்கு வருவார் (சகரியா14:4).
வெளியரங்கமாய் - எல்லா கண்களும் அவரைக்காணும். (வெளிப்படுத்தல் 1- 7).
உபத்திரவ காலத்திற்குப் பின்பு.
அவிசுவாசிகள் அனைவரும் பூமியிலிருந்து அகற்றப்படுவர் (மத்தேயு 24:37-42).
சாத்தான் அகற்றப்படுவான் (வெளிப்படுத்தல் 20:1-3).

6. உபத்திரவக்காலத்திற்கு முன்பு சபை எடுத்துக்கொள்ளப்படும்: இதை ஒன்பது உண்மைகளால் ஊர்ஜிதப்படுத்துகிறோம்.
கவலைகொள்ளும் தெசலோனிக்கேயர்களுக்கு (2 தெசலோனிக்கேயர் 2:1-6).
தடை செய்கிறவர் அகற்றப்படுதல் (2 தெசலோனிக்கேயர் 2:7-12).
உபத்திரவ காலத்தில் சபை என்னும் பதம் வெளிப்படுத்தலில் இல்லை (வெளிப்படுத்தல்13:9).
டெராயோ (Tereo) என்னும் வினைச்சொல் (வெளிப்படுத்தல் 3:10).
நியாயத்தீர்ப்புக்கு முன் கிருபை (யோவான்14:3).
உயிர்த்தெழுதல் அவரவர் வரிசையில் நிகழும் . (1 கொரிந்தியர் 15:22-26).
உடன்படிக்கை அணுகுமுறை: கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் ஆபிரகாமின் உடன்படிக்கை, தாவீதின் உடன்படிக்கை, பாலஸ்தீனிய உடன்படிக்கை, அனைத்தும் நிறைவேறும்.
முத்திரை நியாயத்தீர்ப்புக்கு முன்னர் சபை கிறிஸ்துவுடன் மத்திய வானில் இருக்கும். (வெளிப்படுத்தல் 4,5).
இரண்டாம் வருகைக்கும், சபை எடுத்துக்கொள்ளப்படுவதற்கும் உள்ள முறண்பாடு.

<u>சபை எடுத்துக்கொள்ளப்படுதல் - உபத்திரவகாலத்திற்கு முந்தி சபை எடுத்துக்கொள்ளப்படும்:</u>

(சபை ஏன் உபத்திரவ காலத்திற்கு ஊடாய் செல்லாது?)

1. இஸ்ரவேல் மற்றும் சபை இவற்றிற்கிடையே உள்ள வேற்றுமையின் அடிப்படையில்:
a) தேவன் ஒரு போதும் இஸ்ரவேல் மற்றும் சபை இவற்றுடன் ஒரே சமயத்தில் ஈடுபட்டது கிடையாது.
b) இஸ்ரவேலுக்குண்டான வாக்குத்தத்தங்கள் இன்னும் நிறைவேற வேண்டியதாய் இருக்கிறது, இஸ்ரவேல் எதிர்காலத்தை பெறவேண்டியது அவசியம். இஸ்ரவேலரின் சுவிஷேச வேலைகள் மற்றும் மிஷனரி கடமைகள் அனைத்தும் உபத்திரவ காலத்தில் நிறைவேற வேண்டியுள்ளது.
c) இஸ்ரவேல் தேசம் இன்னும் நிறைவடையவில்லை.
d) "தானியேலின் 70 வாரங்கள் இன்னும் நிறைவடையவில்லை. (எரேமியா. 25:11, 12, 29:10, தானியேல் 9:2, 24, 25).

2. வெளிப்படுத்தலின் அறிக்கை மற்றும் அமைப்பு:

a) அறிக்கை (வெளி. 3:10) "டெரயோ எக்" "Tereo ek" (to keep out), வெளியே வைப்பது "அய்ரெயோ" என்பதில்லை not "Aireo" வெளியே எடுப்பது அல்ல. இந்த வசனத்தில் இப்பதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
b) அமைப்பு: சபையுகம் - உபத்திரவகாலம் - ஆயிரவருட அரசாட்சி - நித்தியம். (வெளிப்படுத்தல் 2-3, 7-19, 20, 21:1-8).

3. தெசலோனிக்கேயர் நிருபத்தின் அறிக்கை:
a) சபையையும், தடைசெய்கிற பரிசுத்த ஆவியானவரையும் ஒரே நேரத்தில் அகற்றுவது என்பது கூடாத காரியம். 2 தெசலோனிக்கேயர் 2:6,7.
b) 2 தெசலோனிக்கேயர் 2:2ல் உள்ள தவறான மொழிபெயர்ப்பு காரணமாய், "கிறிஸ்துவின் நாள்" என்பது "கர்த்தரின் நாள்" என்று வாசித்தல் வேண்டும். இதினிமித்தம் தவறாய் உபதேசிப்பவர்கள் உபத்திரவ காலம் ஏற்கனவே வந்தாயிற்று என்கின்றனர்.
c) 1 தெசலோனிக்கேயர் 4:16-18 ல் "கிறிஸ்துவுக்குள்" என்னும் பதம் சபையுகத்தில் உள்ள விசுவாசிகளைக் குறிக்கிறது. வசனம் 18ல் தேற்றுங்கள் என்கிற பதம், சபை உபத்திரகாலத்திற்குள்ளாய் செல்லுமென்றால் குறிப்பிடப் பட்டிருக்காது.

4. உபத்திரவ காலத்தில் மீந்திருப்பவர்கள்:
a) தமது பரிசுத்தவான்களுடன் கிறிஸ்து பூமிக்கு திரும்புவார். (1 தெசலோன்னிக்கேயர் 3-13, யூதா 14).

b) இயேசு அதே நேரத்தில், பரிசுத்தவான்களை தமது இரண்டாம் வருகையில் விடுவிப்பார் . (சகரியா 14:1-5).
c) விடுவிக்கப்படும் பரிசுத்தவான்கள் மற்றும் கிறிஸ்துவுடன் வரும் பரிசுத்தவான்கள் என இரு பிரிவார் இருக்கின்றனர். சபைக்குட்பட்ட பரிசுத்தவான்கள், உபத்திரவ கால பரிசுத்தவான்கள். இவ்விரு குழுவினரும் வேறுபட்டவர்கள்.

5. நியாத்தீர்ப்புக்கு முன்னான கிருபை: தேவன் நியாயத்தீர்ப்புக்கு முன்னர் கிருபை அளிக்கிறவராய் இருக்கிறார்.

a) எச்சரிப்பு - தேவனது எச்சரிப்பை கேட்டு கீழ்ப்படிந்தபடியினாலே காப்பாற்றப்பட்டார்.
b) பாதுக்காக்கப்படுதல் - லோத்து தேவனால் பாதுகாக்கப்பட்டார்.

6. தாமதமின்றி நிகழும் சபை எடுத்துக்கொள்ளப்படுவது:
a) சபை எடுத்துக்கொள்ளப்படுதல் நிகழுமுன்னர் வேதவசனத்தில் நிறைவேறாத தீர்க்கதரிசனம் என்றும் எதுவும் இருக்காது. (1 கொரிந்தியர் 1:7, கொலோசெயர் 3:4, 2 தெசெலோனிக்கேயர் 2:1, தீத்து 2:13).
b) சபை எடுத்துக்கொள்ளப்படுதல் எந்த நேரத்திலும் நிகழலாம்.
c) இரண்டாம் வருகைக்கு முன்னர் தீர்க்கதரிசனங்கள் அனைத்தும் நிறைவேறி தீர வேண்டும்.

7. உபத்திரகாலத்தின் தன்மை;
a) உபத்திரவ காலத்தின் நோக்கம்: கிறிஸ்துவை புறக்கணித்த உலகிற்கு நியாயத்தீர்ப்பைக் கொண்டுவருதல். தடை செய்யும் பரிசுத்தாவியானவர்

நீக்கப்பட்டு, சாத்தான் தனது முழு ஆதிக்கத்தில் இருக்கும்போது, மனிதனால் பூரணமான சூழலைக் கொண்டு வருவது அசாத்தியம் என்பதைத் தேவன் நிரூபணம் செய்வதற்கு.

b) தேவன் இஸ்ரவேலுடன் உள்ள தமது ஈடுபாட்டை நிறைவு செய்கிறார், யூதர்கள் பாபிலோன் அடிமைத்தனத்திற்கு பின் துவங்கிய தங்களது மிஷனரி ஊழியத்தை, நிறைவேற்றி முடிக்கின்றனர்.

c) தேவன் இஸ்ரவேலரை நிபந்தனையற்ற உடன்படிக்கைகள் நிறைவேற ஆயத்தப்படுத்தி, அதை கிறிஸ்துவின் வருகையினால், இஸ்ரவேலரின் இருண்ட மணிநேரத்திலும், மனுக்குலத்தின் தாழ்த்தப்பட்ட உபத்திரவ காலத்தில் நிறைவேற்றி முடிக்கிறார்.

8. பரலோகில் சபையின் செயல்பாடுகள்: (வெளிப்படுத்தல் 4,5).

a) எடுத்துக்கொள்ளப்பட்ட சபை கிறிஸ்துவுடன் பூமிக்கு திரும்புமுன்னர், கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன் அவர்களது கிறிஸ்தவ வாழ்க்கைக்குரிய பிரதிபலன்களை பெற வேண்டியவர்களாய் இருக்கிறார்கள். (2 கொரிந்தியர் 5:10, 1 கொரிந்தியர் 3:11-15).

b) இருப்பினும், ஆட்டுக்குட்டியானவரின் மணவாட்டி தன்னை ஆயத்தப்படுத்திக்கொள்ள சிறிது இடைவெளி (7 ஆண்டுகள்) அவசியமாய் இருக்கிறது.

c) ஆட்டுக்குட்டியானவரின் திருமணம் பரலோகில் இடம் பெறும். (வெளிப்படுத்தல் 19:6-8). அதன் பின்னர் மணவாட்டி, மணவாளனுடன் பூமிக்கு திரும்புவாள். (வெளிப்படுத்தல் 19:14). திருமண விருந்து பூமியில் நிகழும். (வெளிப்படுத்தல் 19:9).

<u>பரிசுத்த ஆவியானவர்: ஊழியம் - போதிப்பவர்</u>

1. அவர் ஞானத்தின் ஆவியாய் இருக்கிறார். (ஏசாயா11:2, 40:13-14).

2. தேவனுடைய காரியங்களை அவர் வெளிப்படுத்துகிறார் (1 கொரிந்தியர் 10:13).

3. கிறிஸ்துவினுடைய காரியங்களை அவர் வெளிப்படுத்துகிறார் (யோவான் 16:14).

4. சகல சத்தியத்திற்குள்ளும் அவர் வழிநடத்துகிறார் (யோவான் 14:26, 16:13)

5. ஊழியர்கள் போதிக்க வல்லவர்களாக்குகிறார் (1 கொரிந்தியர் 12:8).

6. உபத்திரவப் படுத்துகிறவர்களுக்கு மறுமொழி கொடுக்க பரிசுத்தவான்களுக்கு போதிக்கிறார். (மாற்கு13:11, லூக்கா 12:12).

7. தெய்வீக வழிகளில் அவர் வழி நடத்துகிறார் (ஏசாயா30:21, எசேக்கியேல் 36:27).

8. கிறிஸ்துவின் வார்த்தைகளை நினைவுக்கு கொண்டு வருகிறார் (யோவான்14:26).

<u>வேதாகமம்: தெய்வீக அகத்தூண்டுதல்</u>

1. தெய்வீக அகத்தூண்டுதலின் அடிப்படை 2 தீமோத்தேயு 3:16 ல் காணப்படுகிறது. "Ntjthf;fpaq;fnsy;yhk; Njt Mtpapdhy; mUsg;gl;bUf;fpwJ@" கிரேக்க மொழியில் "தியோ நியூஸ்டஸ்" பரிசுத்த ஆவியானவர் மனித எழுத்தாளர்களுக்கு, தேவனது முழுமையான திட்டத்தை அறிவித்தார்.
(2 சாமுவேல் 23:2, 3,ஏசாயா 59:21, எரேமியா 1:9, மத்தேயு 22:42, 43,மாற்கு12:36, அப்போஸ்தலர்4:24, 25, 28:25)மனித வேத எழுத்தாளர்கள் தங்களது அந்தஸ்தை பொருட்படுத்தவில்லை, தேவனுடைய திட்டத்தை, அவர்கள் எழுதிய மொழியில் பூரணமாகவும், துள்ளியமாகவும் எழுதி அறிவித்தனர்.

2. வேதத்தின் துவக்கம் மனிதக் கண்ணோட்டத்திற்கு அப்பாற்பட்டதாய் இருக்கிறது. (2 பேதுரு 1:20,21)

3. சத்திய வேதம் கிறிஸ்துவின் சிந்தையாயிருக்கிறது. (1 கொரிந்தியர் 2:16) இதினிமித்தம் இது விசுவாசிகளுக்கு முழுமையான நிலையை ஏற்படுத்துகிறதாய் இருக்கிறது.

4. வேதாகமம் எழுதப்படுவதற்கு முன் தேவனது வெளிப்பாடுகள் அனைத்தும், பரிசுத்தாவியனவர் மூலம் நிகழ்ந்துள்ளது. மோசேயின் காலம் வரை எகுதப்பட்ட வேதம் இல்லை. (2 சாமுவேல் 23:2,எசேக்கியேல் 2:2, 8:3, 11:1, 24,மீகா 3:8, எபிரெயர் 3:7)

5. பழைய ஏற்பாட்டு வெளிப்பாடுகள் நான்கு தொகுப்புகளாக இருக்கின்றன:
   - உரைக்கப்பட்ட வார்த்தை - கர்த்தர் சொல்லுகிறதாவது (ஏசாயா 6:9, 10, அப்போஸ்தலர் 28:25)
   - சொப்பனம். (எண்ணாகமம் 12:6ஆதியாகமம் 15:12, 31:10-13, 31:24, தானியேல் 10:9) - அயர்ந்த நித்திரையின் போது
   - தரிசனங்கள். (ஏசாயா 1:1, 6:1, 1 இராஜாக்கள் 22:19) - தெளிவுடன் விழித்திருக்கும்போது
   - தூதரின் போதனைகள். (உபாகமம் 33:2, அப்போஸ்தலர் 7:53, கலாத்தியர் 3:19,சங்கீதம் 68:17)

6. வெளிப்படுத்தலின் விரிவாக்கம்.
   - அறியப்படாத கடந்த காலம் - வெளிப்படுத்தலுக்கு அப்பாற்பட்ட நிலையில், கடந்தகால சரித்திர விளக்கங்களை வேதம் வர்ணிக்கிறது. (ஆதியாகமம் 1-11). இச்சரித்திர உண்மைகளின் துள்ளியம் தெய்வீக அகத்தூண்டுதலினால் உத்தரவாதம் அளிக்கப்படுகிறது. உ.ம். சிருஷ்டிப்பு, நோவாகாலத்து ஜலப்பிரளயம்.
   - பழங்கால சரித்திரம் - வேதாகமம், சரித்திரங்களை விளக்கும் பாட நூல் அல்ல, எல்லா சரித்திர நிகழ்வுகளும் துள்ளியமாக இருக்கின்றன.
   - நோக்கமுடைய நியாயப்பிரமாணம்: பழைய ஏற்பாடு தேசிய வாழ்க்கை, தனிப்பட்ட வாழ்க்கை இரண்டிற்கும் அநேக நியாயப்பிரமாணங்களை உள்ளடக்கியுள்ளது. இப்படிப்பட்ட நியாயபிரமாணங்கள் யாருக்கு எழுதப்பட்டதோ அவர்களுக்கு தேவனின் பூரணமான சிந்தையை தெரியப்படுத்தியுள்ளது.
   - சில வேத பகுதி தேவனது நேரடி மேற்கோள்களை கொண்டுள்ளது. தெய்வீக அகத்தூண்டுதல் உபதேசப்படி, தேவன் எப்படி விரும்புகிறாரோ அப்படியே, அவரது மேற்கோள்கள் சரியாக எழுதப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

தேவன் குறிப்பிட்ட விசுவாசிகளுக்கு, அவர்களது மனவெழுச்சிகள், உபத்திரவம், வெற்றி இவைகளை பயன்படுத்தி தமது கிருபையை அறிவிக்கிறார். இவைகள் தியான புஸ்தகங்களாகிய சஙீதம், உன்னதப்பாட்டு போன்ற புஸ்தகங்களில் விளங்க பண்ணுகிறார்.

தெய்வீக அகத்தூண்டுதல், தவறானவர்கள் கூறியவற்றைகூட அவர்கள் கூறிய வண்ணம் எழுதி பதிவு செய்துள்ளது. சாத்தான் (ஆதியாகமம் 3:4)

தெய்வீக அகத்தூண்டுதல் எழுதப்பட்ட எல்லா தீர்க்கதரிசன வார்த்தைகள் மிகத்துள்ளியமானவை என உறுதி அளிக்கிறது

CHRISTIAN LIFE [See page 15 above]

LAWS IN THE NEW TESTAMENT [See page 13 above]

சபை யுகத்தில் ஆசரிக்கப்பட்டு வருகிற ஏழு சபை நியமங்கள்:

கிருபை, சத்தியம் இவற்றை, குறிப்பிட்ட சபை ஆராதனைகளில் போதித்தல்.
<u>1. குழந்தை / பெற்றோர்கள் பிரதிஷ்டை - குடும்ப சுத்திகரிப்பு.</u>

நவீன கால திருச்சபைகளில், குழந்தை பிரதிஷ்டையானது, மூன்று முக்கியமான புதிய ஏற்பாட்டு வேதபகுதியின் அடிப்படையில் கொடுக்கப்படுகிறதாய் இருக்கிறது. முதலாவது வேதபகுதி நமக்கு நினைவு படுத்துவது என்னவெனில், இஸ்ரவேல் குடும்பங்களில் முதலாவதாய் பிறக்கும் எல்லா குழந்தைகளையும் கர்த்தருக்கென பிரதிஷ்டை செய்யப்படும், கர்த்தர் மரியாளுக்கு முதலாவதாய் பிறந்தபடியால், அவர் தேவனுக்குரியவராய் பிரதிஷ்டை செய்யப்பட்டார். லூக்கா 2:22-39. மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி, இயேசுக்கிறிஸ்துவின் குடும்பத்தினர் தேவனுக்குக் காணிக்கை செலுத்தினர். யாத்திராகமம் 13:2, 22:29, லேவியராகமம் 12, எண்ணாகமம் 8:17. ,

லூக்கா 2:22-39.

"மோசேயின் நியாயப்பிரமாணத்தின் படியே அவர்களுடைய சுத்திகரிப்பின் நாட்கள் நிறைவேறினபோது: முதற்பேறான எந்த ஆண்பிள்ளையும் கர்த்தருக்குப் பரிசுத்தமானதென்னப்படும் என்று கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறபடி அவரைக் கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுக்கவும், கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தில் சொல்லியிருக்கிறபடி, ஒரு ஜோடு காட்டுப்புறாக்களையாவது, இரண்டு புறாக்குஞ்சுகளையாவது பலியாகச் செலுத்தவும், அவரை எருசலேமுக்குக் கொண்டுபோனார்கள். அப்பொழுது சிமியோன் என்னும் பேர்கொண்ட ஒரு மனுஷன் எருசலேமில் இருந்தான். அவன் நீதியும், தேவபக்தியும் உள்ளவனாயும், இஸ்ரவேலின் ஆறுதல் வரக்காத்திருக்கிறவனாயும் இருந்தான், அவன் மேல் பரிசுத்த ஆவியானவர் இருந்தார். கர்த்தருடைய கிறிஸ்துவை நீ காணுமுன்னே மரணமடைய மாட்டாய் என்று பரிசுத்த ஆவியானவராலே அவனுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அவன் ஆவியானவரின் ஏவுதலினால், தேவாலயத்திலே வந்திருந்தான். இயேசு என்னும் பிள்ளைக்காக நியாயப்பிரமாண முறைமையில்படி செய்வதற்குத் தாய் தகப்பன்மார் அவரை உள்ளே கொண்டு செல்கையில், அவன் அவரைத் தன் கைகளில் ஏந்திக்கொண்டு, தேவனை ஸ்தோத்தரித்து: ஆண்டவரே, உமது வார்த்தையின்படி உமது அடியேனை இப்பொழுது சமாதானத்தோடே போகவிடுகிறீர், புறஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளியாகவும், உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு மகிமையாகவும்,

தேவரீர் சகல ஜனங்களுக்கும் முன்பாக ஆயத்தம்பண்ணின உம்முடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டது என்றான். அவரைக் குறித்துச் சொல்லப்படவைக்காக யோசேப்பும், அவருடைய தாயாரும் ஆச்சரியப்பட்டார்கள். பின்னும் சிமியோன் அவர்களை ஆசீர்வதித்து, அவருடைய தாயாகிய மரியாளை நோக்கி: இதோ, அநேகருடைய இருதய சிந்தனைகள் வெளிப்படத்தக்கதாக, இஸ்ரவேலில் அநேகர் விழுகிறதற்கும் எழுந்திருக்கிறதற்கும் விரோதாகப் பேசப்படும் அடையாளமாவதற்கும், இவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். உன் ஆத்துமாவையும் ஒரு பட்டயம் உருவிப்போகும் என்றான். ஆசேருடைய கோத்திரத்தாளும், பானுவேலின் குமாரத்தியுமாகிய அன்னாள் என்னும் ஒரு தீர்க்கத்ரிசி இருந்தாள், அவள் கன்னிப்பிரயாத்தில் விவாகமானது முதல் ஏழு வருஷம் புருஷனுடனே வாழ்ந்தவளும், அதிக வயது சென்றவளுமாயிருந்தாள். ஏறக்குறைய என்பத்து நாலு வயதுள்ள அந்த விதவை தேவாலயத்தைவிட்டு நீங்காமல், இரவும், பகலும் உபவாசித்து, ஜெபம் பண்ணி, ஆராதனை செய்து கொண்டிருந்தாள். அவளும் அந்நேரத்திலே வந்து நின்று, கர்த்தரைப் புகழ்ந்து எருசலேமிலே, மீட்புண்டாகக் காத்திருந்த யாவருக்கும் அவரைக் குறித்துப் பேசினாள். கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தின்படி சகலத்தையும் அவர்கள் செய்து முடித்த பின்பு, கலிலேயா நாட்டிலுள்ள தங்கள் ஊராகிய நாசரேத்துக்குத் திரும்பிப்போனார்கள்."

ஆண்குழந்தைகள் பிறந்த எட்டாம் நாளில் விருத்த சேதனம் செய்யப்படுவர், மற்றும் எட்டாம் நாளில் சுத்தமான மிருகங்களில் பிறந்த தலையீற்றுக்கள் அனைத்தும் கர்த்தருக்கென அற்பணிக்கப்படும். யாத்திராகமம் 22:29-30. இதைக் குறித்த சபையின் புரிந்துகொள்ளுதல், இக்கட்டளை இஸ்ரவேலருக்கு பொருந்தக்கூடியதாய் இருந்தது, முதற்பலனாய் பிறந்தவர்கள் மட்டும் இஸ்ரவேலரின் யுகத்தில் கர்த்தருக்கென அற்பணிக்கப்பட்டனர், நாம் அனைவரும் கிறிஸ்துவுடன் இணைக்கப்பட்டுள்ளபடியால், முதற்பலனாய் பிறந்த புது சிருஷ்டி அனைவரும் கர்த்தருக்கென அற்பணிக்கப்படுகிறவர்களாய் இருக்கின்றனர்.

இஸ்ரவேலில் முதற்பேராய் பிறந்த பிள்ளைகள் மட்டும் கர்த்தருக்கென அற்பணிக்கப்பட்டனர், சபையுகத்தில், சபைப்பிதாக்களின் விசுவாசத்தின் படி, தெய்வீகப் பெற்றோருக்குப் பிறந்த ஒவ்வொரு குழந்தையும் கர்த்தருக்கென அற்பணிக்கப்படுகிறவர்களாய் இருந்தனர். கிறிஸ்தவப் பெற்றோர்களுக்கு விசுவாசத்தின் மூலம் சொல்லப்படுவது என்னவெனில், எல்லா சிருஷ்டிகளிலும் முதற்பலனான கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை, இக்குழந்தையானது அறிந்து கொள்ளவும், அவரில் அன்புகூறவும் செய்வது இவர்களது கடமையாய் இருக்கிறது. ரோமர் 8:28-29, கொலோசெயர் 1:15-19.

குழந்தைகளைப் பிரதிஷ்டை செய்வதற்கான, இரண்டாவது திறவுகோள் சுவிஷேச வேதபகுதியில், கர்த்தர் குழந்தைகளை குறித்து விஷேச பராமரிப்பும், கரிசனையும் உள்ளவராய் காணப்பட்டார். இதினிமித்தம், சமுதாய தலைமைத்துவம், மற்றும் எல்லா பெற்றோர்களும் தங்கள் குழந்தைகளைப் பாதுகாத்து, அவர்களைப் பரிசுத்தப்படுத்துவது அவர்களது தலையாய பணியாய் இருக்கிறது.

மாற்கு 10:13-16.

"அப்பொழுது, சிறு பிள்ளைகளை அவர் தொடும்படிக்கு அவர்களை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள், கொண்டு வந்தவர்களைச் சீஷர்கள் அதட்டினார்கள். இயேசு அதைக் கண்டு, விசனமடைந்து, சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடம்

கொடுங்கள், அவர்களைத் தடைபண்ணாதிருங்கள், தேவனுடைய இராஜ்ஜியம் அப்படிப்பட்டவர்களுடையது. எவனாகிலும் சிறு பிள்ளையைப் போல் தேவனுடைய இராஜ்ஜியத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால், அவன் அதில் பிரவேசிப்பதில்லையென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி, அவர்களை அனைத்துக்கொண்டு, அவர்கள் மேல் கைகளை வைத்து, அவர்களை ஆசீர்வதித்தார்."

மூன்றாவது புதிய ஏற்பாட்டு வேதபகுதியானது, குழந்தைகளைப் பிரதிஷ்டை செய்வதற்குப் பொருத்தமான வேதபகுதியாய் இருக்கிறது. மத்தேயு 18:1-11. சிறு பிள்ளைகளை அசட்டை செய்தல், அவர்களுக்கு இடறல் உண்டாக்கல் குறித்து, கர்த்தரின் வலுவான மனப்பான்மையை இங்கு காண்கிறோம். இவ்வேதபகுதியானது, பிள்ளைகளைக் குறித்து அக்கரையும், கரிசனையும் கொண்டு, அவர்களில் அன்புகூறும் கர்த்தர், குழந்தைப் பிரதிஷ்டைக்கான முக்கியத்துவத்தை பெரிதுபடுத்துவதைக் காண்கிறோம். அவர்களுக்கு இடல் உண்டாக்குகிறவர்களை அவர் நியாயந்தீர்க்கிறவராய் இருக்கிறார். குழந்தைகளுக்கு இடறல் உண்டாக்குதலைக் குறித்து, கர்த்தர் வன்மையாய் கண்டித்து எச்சரிப்பது குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது, அவ்வாறு குழந்தைகளுக்கு இடறல் உண்டாக்குகிறவர்களுக்கு விஷேசித்த சிட்சை அளித்து, அவர்கள் மனந்திருந்தி, தங்கள் மனப்பான்மையையும், குணநலன்களையும் மாற்றிக்கொள்ளாவிட்டால் அவர்களை நியாயந்தீர்க்கிறவராய் இருக்கிறார்.

மத்தேயு 18:1-11.

"அவ்வேளையிலே சீஷர்கள் இயேசுவினிடத்தில் வந்து, பரலோக இராஜ்ஜியத்தில் எவன் பெரியவனாயிருப்பான் என்று கேட்டார்கள். இயேசு ஒரு பிள்ளையைத் தம்மிடத்தில் அழைத்து, அதை அவர்கள் நடுவே நிறுத்தி, நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால், பரலோக இராஜ்ஜியத்தில், இரவேசிக்கமாட்டீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகையால் இந்தப் பிள்ளையைப் போலத் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ, அவனே பரலோக இராஜ்ஜியத்தில் பெரியவனாயிருப்பான். இப்படிப்பட்ட ஒரு பிள்ளையை என் நாமத்தினிமித்தம் ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்கிறான். என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ, அவனுடைய கழுத்தில் எந்திரக்கல்லைக் கட்டி, சமுத்திரத்தின் ஆழத்திலே அவனை அமிழ்த்துகிறது அவனுக்கு நலமாயிருக்கும். இடல்கள் நிமித்தம் உலகத்திற்கு ஐயோ, இடறல்கள் வருவது அவசியம், ஆனாலும் எந்த மனுஷனால் இடறல் வருகிறதோ, அவனுக்கு ஐயோ! உன் கையாவது உன் காலாவது உனக்கு இடறல் உண்டாக்கினால், அதைத் தறித்து எறிந்துபோடு, நீ இரண்டு கையுடையவனாய், அல்லது இரண்டு காலுடையவனாய் நித்திய அக்கினியிலே தள்ளப்படுவதைப் பார்க்கிலும், சப்பாணியாய் அல்லது ஊனனாய், நித்திய ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும். உன் கண் உனக்கு இடறல் உண்டாக்கினால், அதைப் பிடுங்கி எறிந்துபோடு, இரண்டு கண்ணுடையவனாய் எரிநரகத்தில் தள்ளப்படுவதைப் பார்க்கிலும், ஒற்றைக்கண்ணனாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாய் இருக்கும். இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாய் இருங்கள். அவர்களுக்குரிய தேவ தூதர்கள் பரலோகத்திலே என் பரம பிதாவின் சமூகத்தை எப்பொழுதும் தரிசிக்கிறார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். மனுஷ குமாரன் கெட்டுப்போனதை இரட்சிக்க வந்தார்."

கர்த்தர் சிறுபிள்ளைகள் மீது தனது கைகளை வைத்து அவர்களை ஆசீர்வதித்தார். புராட்டஸ்டன்ட் சபைகளில், சிறுபிள்ளைகளை கர்த்தர் ஆசீர்வதித்ததை போதித்து

அதன் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறி குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கின்றனர். வேதாகமத்தின் அடிப்படையில் குழந்தை ஞானஸ்நானம் என்பது இல்லை. அதற்கு வேதாகமம் எவ்வித சான்றுகளையும் அளிக்கவில்லை. தண்ணீரில் முழுகி ஞானஸ்நானம் பெறுவது விசுவாசிகளுக்கு மட்டும் என்பதை தெளிவுபடுத்துகிறது. கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவை நீங்கள் ஏற்றுக்கொண்டு கிறிஸ்தவர்களாகியிருக்கிறீர்கள் என்பதைக் காட்டும்படி, வெளிப்படையாய் தண்ணீரில் முழுகி ஞானஸ்நானம் எடுக்கிறவர்களாயிருக்கிறீர்கள். அதைக் குறித்து கீழே கற்றுக்கொள்வோம். குழந்தை பிரதிஷ்டை என்பது, குழந்தை ஞானஸ்நானத்திலிருந்து மாறுபட்டதாய் இருக்கிறது.

குழந்தை பிரதிஷ்டையின் கருத்து என்னவெனில், முழுச் சபைக்குடும்பமும், குழந்தையின் பெற்றோரும், அக்குழந்தையை அன்பிலும், கிருபையிலும், அறிவிலும், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் வளர்க்க, தங்களை அற்பணித்துக் கொள்ளுதல் ஆகும். அக்குழந்தையை உருவாக்குவதற்கும், பாதுகாப்பதற்கும், போதித்து அக்குழந்தையை ஊக்கமளிப்பதற்கும், கர்த்தருக்குள் அக்குழந்தையை பேணிப் பாதுகாத்து வளர்க்க வேண்டியது அவர்களது கடமையாய் இருக்கிறது. நீங்கள் அக்குழந்தையின் பெற்றோரை, உற்சாகப்படுத்தி, அக்குழந்தையை வளர்க்கும் பெரும்பணியில், தேவனும், சபை மக்களும் உடந்தையாய் இருக்கிறார்கள் என்பதை நினைவுபடுத்துதல் வேண்டும், அக்குழந்தையைத் தவறாய் பயன்படுத்துவோர் மீது, தேவன் தீவிரமான நியாயத்தீர்ப்பைக் கொண்டு வருகிறவராய் இருக்கிறார்.

வேதாகமத்தின் புரதாணக் காலங்களில், பிள்ளைகளைத் தத்தெடுப்பது என்பது மிகவும் பொதுவான ஒன்றாய் விளங்கி வந்தது. அவ்வாறு தத்தெடுத்து வளர்க்கும் பிள்ளைகளுக்கு அப்பெற்றோர் முழுமையான உத்திரவாதம் அளிக்கிறவர்களாயும், அக்குழந்தைக்கு செய்ய வேண்டிய அனைத்துக் கடமைகளையும் செய்யக்கடமை பட்டிருந்தனர். குழந்தைகளைத் திட்டுவது என்பது, தேவனை நிந்திப்பதாய் இருக்கிறது, மற்றும் அக்குழந்தையை தவறாய் பயன்படுத்துவது, சமுதாயத்தில் எதிர்கால அங்கத்தினரை திருடுவதற்கு சமமாய்க் கருதப்பட்டு, அதை மிகவும் ஜாக்கிரதையாக எடுத்துக்கொள்ளப்பட்டது.

அநேகக் கலாச்சாரங்களிலே குழந்தைகள் விற்பனைப் பொருட்களாய் கருதப்பட்டு, மிகவும் மோசமான நிலையில் நடத்தப்படும் பொழுது, வேதாகம் அறிவுரையானது, மோசேயின் காலந்தொட்டே, அவர்கள் நலனில் கண்ணோக்கமாய் இருக்க போதித்து வருகிறதாய் இருக்கிறது. பிள்ளைகள் விலையேறப்பட்டப்பட்டவர்களாய்க் கருதப்பட்டு, அவர்கள் தேவனிடமிருந்து கிடைக்கப்பெற்ற சுதந்திரமாய் கருதப்பட்டு வருகின்றனர். குழந்தை பிரதிஷ்டை ஆராதனையை, இப்படிப்பட்ட வேத சத்தியங்களை சுட்டிக்காட்டி, இயேசுக்கிறிஸ்து பிள்ளைகளுக்குச் செய்தது போன்றே சபையானது பிள்ளைகளுக்கு செய்து வருகிறதாய் இருக்கிறது.

இப்படிப்படிப்பட்ட சபை நியமத்தினை சபையானது நிறைவேற்றத் தீர்மானிக்குமானால், இதற்கு பிண்ணனியில் உள்ள சரித்திரப்பிரகாரமான உண்மைகளை அறிவித்து, இதனைக் கொண்டாடுதல் வேண்டும். நான் விசுவாசிப்பது என்னவெனில், இது ஒரு சபைக் குடும்பத்தின் அற்பணிப்பாய் இருக்கிறது, இது ஒரு ஞாயிறு காலை ஆராதனையில் நிகழ்த்தப்படவேண்டிய ஒன்றாய் இருக்கிறது. ஸ்தல சபையின் சமுதாயத்தினர் முன்னிலையில் இது போன்ற குழந்தை பிரதிஷ்டை செய்தல் வேண்டும். இவ்வாராதனையில் கலந்து கொள்வோர் அநேகராய் இருப்பார்களானால், இவ்வாரதனையை மற்றொரு நாளில் விஷேச ஆராதனையாய் ஒழுங்கு செய்யலாம்.

இப்படிப்பட்ட குழந்தைப் பிரதிஷ்டை ஆராதனை ஒரு சுவிஷேச ஆராதனையாய் நடத்தலாம்.

சுவிஷேச வேத பகுதியிலிருந்து கீழ்க்காணும் குறிப்புகள் இவ்வாரதனையில் இடம்பெறுதல் அவசியம்:

1. மேற்கண்ட வேதபகுதியை வாசித்து ஆராதனையை துவங்குதல் வேண்டும்.

2. இப்படிப்பட்ட குழந்தை பிரதிஷ்டை ஆராதனையை, குழந்தையின் தெய்வீக எதிர்காலத்திற்காகவும், அது தீமைக்கு நீங்கலாகி பாதுகாக்கப்படும் பொருட்டு, மற்றும் அதன் பாதுகாவலர் / பெற்றோர்களுக்காக பக்தியாய் ஜெபித்தல் அவசியம்.

3. பின்னர் குழந்தையையும், அதன் பெற்றோரையும் பிரசங்க பீடத்திற்கு அருகில் வரும் படி அழைப்புக் கொடுத்தல் வேண்டும், அவர்களுடன் அவர்களது குடும்ப அங்கங்கள் அனைவரும் முன்னே வருதல் வேண்டும். அக்குழந்தையின் முழுக்குடும்பத்தினருக்காக, தேவனின் ஆசீர்வாதத்திற்காக இயேசுவின் நாமத்தில் ஜெபித்தல் வேண்டும்.

4. பிரதிஷ்டை வாக்கை, பெற்றோர்களுக்கு வாசித்துக் காட்டுதல் வேண்டும். - தேவ ஊழியர் ஒவ்வொருவரும், இப்படிப்பட்ட வாக்குமூலத்தை சொந்தமாய் தயாரித்து வைத்துக்கொள்ளுதல் வேண்டும். அது இதைப்போன்றிருத்தல் வேண்டும். "இக்குழந்தைக்கான தேவனது நோக்கங்களைத் தேடி ....ஆகிய நீங்களும்.................................... ஆகிய நீங்களும், ... ஆகிய இக்குழந்தையை கர்த்தருக்கென பிரதிஷ்டை செய்ய இருக்கிறீர்களா? பதில் .... தெய்வீக வழியில் இக்குழந்தை வளர்க்க நீங்கள் உங்களை அற்பணித்து, உங்களை நீங்களே பிரதிஷ்டை செய்து கொள்ளுகிறீர்களா? பதில் .... இக்குழந்தை கர்த்தரது அன்பை அறியவும், குழந்தை பிராயத்தில் எல்லா இடறல்களுக்கு நீங்கலாகி பாதுக்காக்கப்பட நீங்கள் உறுதுணையாய் இருப்பீர்களா? பதில்.................... இப்படிப்பட்ட வாக்குறுதியை, சபைக்கு முன்னிலையில், குழந்தையின் பெற்றோர் மற்றும் அதன் குடும்பத்தினரிடம் கேட்டு உறுதி செய்து கொள்ளுதல் வேண்டும்.

5. பின்னர் தேவ ஊழியர் தனது கரத்தில் அக்குழந்தையை வாங்கி, கர்த்தருடைய நாமத்தினால் அதன் மீது, ஆசீர்வாதங்களைக் கூறி பின்னர் அக்குழந்தையை பெற்றோரின் கரத்தில், அக்குழந்தையை கர்த்தருக்காய் வளர்த்துவிட கொடுத்தல் வேண்டும். சில சபைகளில் அக்குழந்தைக்குத் தீர்க்கதரிசன வார்த்தைகள் அளிக்கப்படும். அத்தீர்க்கதரிசன வார்த்தைகள் சபையால் அங்கீகரிக்கப்பட்ட தீர்க்கதரிசியினால் அளிக்கப்படுகிறதாய் இருக்கும். இது சிமியோன், மற்றும் அன்னா தேவாலயத்தில் கர்த்தருக்கு உரைத்த தீர்க்கதரிசன வார்த்தைகள் போன்றிருக்கும். இப்படிப்பட்ட தீர்க்கதரிசனம் உரைப்பவர்கள், பரிசுத்த ஆவியானவரின் நடத்துதல் மற்றும் ஏவுதலின்படி இருக்க நீங்கள் கவனமாய் இருத்தல் அவசியம். திடீரென யாராவது எழுந்து தவறான வார்த்தைகளை கூறுவது குறித்து நீங்கள் மிகவும் ஜாக்கிரதையுடன் இருத்தல் அவசியம். தேவ ஊழியர் இப்படிப்பட்ட ஆராதனையில், முழு கவனத்துடன், ஆராதனையை தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்வது அவசியம். குழப்பங்களைக் கொண்டுவருவதில் பிசாசு மகிழ்கிறவனாய் இருக்கிறான், என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

6. இறுதியாய், குழந்தைக்காகவும், பெற்றோருக்காகவும், முழு சபையினருக்காகவும் ஜெபித்து, அவர்கள் எடுத்த தீர்மானத்தை நிறைவேற்றவும், குழந்தையை முன்மாதிரியாய் வளர்த்து கிறிஸ்துவின் அன்பில் வளர அக்குழந்தைக்கு அனைவரும் முன்மாதிரியாய் இருக்க ஜெபித்து முடித்தல் வேண்டும்.

இப்படிப்பட்ட ஆராதனையில், மற்ற வேதபகுதிகளையும் பயன்படுத்தலாம், குழந்தையின் பெற்றோர் மற்றும் குடும்பத்தினரில் ஒருவர் அவ்வேதபகுதியினை ஆராதனையில் வாசிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படலாம்.

சில கலாச்சாரங்களில், குழந்தைப் பிரதிஷ்டை ஆராதனை ஒழுங்கானது அச்சிடப்பட்டு அதில் குழந்தை மற்றும் அதன் பெற்றோர் பெயர்கள் குறிப்பிடப்பட்டு சபையோர் அனைவருக்கும் வழங்கப்படும். இது தனிப்பட்டவர்களது கலாச்சார அனுசரனையாய் இருக்கிறது, இது ஒரு நல்ல காரியமாய் இருக்கிறது, அவிசுவாசிகள் தங்கள் கரங்களில் அச்சிடப்பட்ட ஆராதனை ஒழுங்கினை தங்களுடன் எடுத்துச்செல்லவும், அதில் உள்ள இயேசுக்கிறிஸ்துவின் வார்த்தைகளை அறிந்து கொள்ளவும், கிறிஸ்தவப்பெற்றோர்களது தன்மையினைப் புரிந்து கொள்ளவும், தங்களது புறஜாதிய அணுகுமுறையிலிருந்து இது மாறுபட்டதாய் இருப்பதை அவர்கள் புரிந்து கொள்ளவும் செய்கிறதாய் இருக்கிறது.

இப்படிப்பட்ட ஆராதனையில், பயன் படுத்த வேறுசில வேதபகுதிகளும் தெரிவு செய்து பயன்படுத்தலாம். உபாகமம் 6:4-7, 1 சாமுவேல் 1:24 – 2:1, சங்கீதம் 103:17-18, 127:1-3, எபேசியர் 6:1-4, கொலோசெயர் 3:20-21.

2. <u>முதிர்ந்தவர்கள் தங்களது விசுவாச அறிக்கையின்பேரில், எடுக்கும் தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானம்:</u>

தண்ணீரில் முழுகி ஞானஸ்நானம் பெறுவது என்பது, பல நூற்றாண்டுகளாய் சபை பிளவுபடுவதற்கும், மற்றும் சபையின் முக்கியமான விசுவாசக் கொள்கையாய் விளங்கிவருகிறது. ஸ்தாபனங்கள் சார்ந்த நிலையில் அல்ல, சரித்திரத்தில் ஞானஸ்நானமானது எவ்வாறு செயல்படுத்தப்பட்டு வந்தது என்பதை இங்கு விவரிக்க விரும்புகிறோம்.

இது ஒரு பழமைவாய்ந்த யூத சடங்காய் இருக்கிறது, பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து, திரும்பிய சமயம், இத்தகைய ஞானஸ்நானமானது, நடைமுறைப் படுத்தப்பட்டுவந்தது. புதை பொருள் ஆராய்ச்சியாளர்கள், ஞானஸ்நான தொட்டிகளை பாலஸ்தீன தேசத்தின் வீடுகளில், இயேசுக்கிறிஸ்துவின் ஊழிய நாட்களுக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே கண்டுபிடித்தனர். இப்படிப்பட்ட சடங்கினை, நேரடியாய் சபையுகத்தில் கைக்கொள்ளுமாறு கர்த்தரால் கட்டளை பெற்று ஒரு விசுவாசி உண்மையாய் இரட்சிக்கப்பட்டதை உறுதி செய்துகொள்ள கைக்கொள்ளப்பட்டு வருகிறது.

ultra-dispensational theological camp ல் உள்ள அநேகர், ஞானஸ்நானம் என்பது, யூத சடங்காய் இருக்கிறபடியால், அதற்கும் சபைக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது எனப்போதித்து வருகின்றனர். இவ்வாறு அவர்கள் போதிப்பது தவறான உபதேசமாய் இருக்கிறது. அவர்களது விவாதம் என்னவெனில், பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானமே முக்கியம் வாய்ந்ததாய் இருக்கிறது, தண்ணீரில் முழுகி

ஞானஸ்நானம் பெறுவது, இவ்வனுபவத்தை விவரிப்பதாய் இருக்கிறது, ஆகையால் இது இப்பொழுது அகற்றப்பட்டு வருகிறது என்கின்றனர். பரிசுத்த ஆவியானவரது ஞானஸ்நானம் என்பது, மாறுபட்ட ஒன்றாய் இருந்தபோதிலும், ஒரு நபர் உண்மையாய் இரட்சிப்படையும் போது, அது தானாகவே அந்நபரில் நிகழ்வதாய் இருக்கிறது என நாங்கள் விசுவாசிக்கிறோம். கர்த்தர் உலகெங்கும் புறப்பட்டுப்போய், சுவிஷேசத்தை பிரசங்கித்து, விசுவாசிப்போருக்கு பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவரது நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுக்குமாறு கட்டளை கொடுத்தார். மத்தேயு 28:18-20. பரிசுத்த ஆவியானவரது ஞானஸ்நானம் என்பது, நாம் செயல்படுத்துவது அல்ல, [இது தேவனது கிரியையாய் இருக்கிறது -- நமதல்ல] இவ்வேதபகுதியில் கூறப்பட்டுள்ள ஞானஸ்நானம் என்பது, யூத முறைமையின்படி, mikvah pool, என்ற தண்ணீர் தொட்டியில் அல்லது முழுகி ஞானஸ்நானம் பெறும் தண்ணீர் நிலைக்குச் சென்று, தண்ணீரில் முழுகி ஞானஸ்நானம் பெறுவதைக் காட்டுகிறதாய் இருக்கிறது.

தண்ணீரில் முழுகி ஞானஸ்நானம் பெறுவது எப்பொழுதும் கடைபிடிக்கப்பட்டுவந்தது, தண்ணீர்ப் பற்றாக்குறையுள்ள ஸ்தலங்களில் மட்டுமே, தண்ணீரை மொண்டு தலையில் ஊற்றி ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. கர்த்தரின் கட்டளைக்கு நாம் உண்மையாய் இருக்க, புதிதாய் கர்த்தரை ஏற்றுக்கொண்டவர்களுக்கு, தண்ணீரில் முழுகி ஞானஸ்நானம் கொடுப்பது நல்லது. நாம் ஏன் தண்ணீரில் முழுக்கு ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும் என்பதற்கு, மிக முக்கியமான காரணங்கள் உண்டு. முழுமையாய் தண்ணீரில் முழுகி எழுவது, உண்மையான இரட்சிப்பைப் படம்பிடித்துக் காட்டுகிறதாய் இருக்கிறது. இது ஆவிக்குரிய யதார்த்தத்தை வருணிக்கிறதாய் இருக்கிறது, விசுவாசியானவர், பழைய வாழ்க்கைக்கு மரித்து, தண்ணீரில் இருந்து எழுந்து, தேவனது பிள்ளையாக புதிய ஜீவனில் பிரவேசிப்பதை இது காட்டுகிறதாய் இருக்கிறது.

தண்ணீர் மொண்டு தலையில் ஊற்றுதலிலும் உண்மை இருக்கிறது, அது பரிசுத்த ஆவியானவரை, புதிய விசுவாசியின் தலையில் ஊற்றுவது சித்தரிக்கப்படுகிறதாய் இருக்கிறது, இது ஒரு கெட்ட காரியமாய் இருக்கிறது என்று கூறுவதற்கில்லை, உண்மை என்னவெனில், தண்ணீரில் முழுகி ஞானஸ்நானம் பெறுவது என்பது, கர்த்தரின் கட்டளையை அவர் கூறியபடி நிறைவேற்றுவதாய் இருக்கிறது. கர்த்தர் கட்டளையிட்டபடியேயும், அப்போஸ்தலரும், சீஷர்களும் இவற்றைக் கடைபிடித்தனர், நாமும் கடைபிடித்தல் வேண்டும் என அறிவுரை கூறுகிறோம்.

தண்ணீரில் முழுகி ஞானஸ்நானம் பெறுவது, ஒரு யூதச் சடங்காய் இருந்த போதிலும், இயேசுக் கிறிஸ்துவின் நாட்களில் இது பரவலாக அனுசரிக்கப்பட்டு வந்தது. பாலஸ்தீனத்தின் பெரிய வீடுகளில் Mikvah என்றழைக்கப்படும் ஞானஸ்நான தொட்டியானது கட்டப்பட்டிருந்தது. பெண்கள் மாதவிடாய் காலங்களில், சுத்திகரிக்கும் பொருட்டு இதில் முழுகி எழுவர். இது பழைய மாதவிடாய் சுழற்சியிலிருந்து சுத்திகரிக்கப்பட்டு, புதிய மாதவிடாய் சுழற்சியில் பிரவேசித்து கருத்தரிக்கும் பாக்கியம் பெறுவது இதன் முக்கிய நோக்கமாய் இருந்து வந்தது. ஆவிக்குரிய முக்கியத்துவம் வாய்ந்த வாழ்வில், பெரிய மாற்றங்களை, மற்றவர்களுக்குக் காட்டக்கூடியவகையில், இத்தொட்டியில் முழுகி எழுவது, ஆண்கள் மற்றும் பெண்கள் இருபாலருக்கும் முக்கியம் வாய்ந்த ஒன்றாய் விளங்கிவந்தது.

அப்போஸ்தலர் 10:39-48 வரையுள்ள வேதபகுதியை வாசியுங்கள், பேதுரு சுவிஷேசத்தைப் பிரசங்கித்தார், கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை ஜனங்கள் ஏற்றுக்கொண்டனர், தேவ ஆவியானவர் ஜனங்கள் மீது அசைவாடியபடியால், அவர்கள்

அந்நிய பாஷைகளைப் பேசினர், யூதனாய் இருந்த பேதுருவுக்கு இது ஒரு அடையாளமாய் இருந்தது, அவர்கள் தேவனால் அங்கீகரிக்கப்பட்டவர்கள் என்பதை அதன் மூலம் அவர் அறிந்து கொண்டார். இதனைக் கண்ட பேதுரு, மனம் மாறிய இவர்களுக்கு உடனடியாய் ஞானஸ்நானம் கொடுக்கப்படுவதன் அவசியத்தை உணர்ந்தார். அதன் அவர்களுக்கு ஜனங்களின் முன்னிலையில், இயேசுக்கிறிஸ்துவின் மீது அவர்களுக்கிருந்த விசுவாசத்தின் பேரிலும், கர்த்தர் மேசியா என அவர்கள் அறிக்கை செய்து ஏற்றுக்கொண்டதன் அடிப்படையிலும், அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். அவர்கள் பேதுருவைக் கேட்டுக்கொண்டதன் பேரில், அவர்களுடன் அநேக நாட்கள் தங்கி, கிறிஸ்துவில் இயேசுவில் உள்ள அவர்களது புதிய வாழ்க்கையானது ஸ்திரப்படும்படி, அவர்கள் புரிந்து கொள்ளும் வண்ணம் உபதேசங்களை அவர்களுக்கு போதித்தார்.

இங்கு பேதுரு இயேசுக் கிறிஸ்துவின் கட்டளைக்கு கீழ்ப்படிந்ததைப் பார்க்கிறோம். **மத்தேயு 28:18-20**. The ultra dispensationalist theologians கூற்றுப்படி, இது ஒரு இடைக்கால சடங்காய் ஆசரிக்கப்பட்டது, இதினிமித்தம் இத்தகைய சடங்கு நடைமுறை பழக்கவழக்கத்திற்கு ஒவ்வாது இருக்கிறது என்கின்றனர். இப்படிப்பட்ட வாக்குவாதம் உண்மையற்றதாய் இருக்கிறது, காரணம் இப்படிப்பட்ட சடங்கை அப்போஸ்தலர் நடபடிகள் முழுவதிலும், மற்றும் சபையுகத்தில் கடைபிடித்து வந்ததையும் நாம் காண்கிறவர்களாய் இருக்கிறோம். (அப்போஸ்தலர் 2:41, 8:34-39), and afterwards (அப்போஸ்தலர் 16:15, 33, 18:8, 19:3-5, 22:16).

இப்படிப்பட்ட சபை நியமத்தை அநேக வேதாகம பகுதிகளில் காண்கிறவர்களாய் இருக்கிறோம். அப்போஸ்த நடபடி புஸ்தகத்தில் இடம் பெற்ற ஞானஸ்நான சம்பவங்களை வாசித்து அறியுங்கள். அப்போஸ்தலர்கள் கைக்கொண்டு வந்த இத்தகைய சபை நியமத்தை நாம் கைக்கொள்ளத் தவறுவோம் எனில், நாம் அப்போஸ்தலர் மற்றும் கர்த்தரைவிட்டு புறம்பாக்கப்பட்டவர்களாய் இருக்கிறோம். யூதா 3. அப்போஸ்தலர் கைக்கொண்டு வந்தவற்றை நாம் பின்பற்றுகிறவர்களாய் இருக்கிறோம். ஆகையால் தண்ணீரில் முழுகி ஞானஸ்நானம் பெறுவதை நாமும் கைக்கொள்கிறவர்களாய் இருக்கிறோம். பேப்டிஸ்ட் பாரம்பரியத்தின் மீது, அநேக சபைகள் கட்டப்பட்டுள்ளன, மற்றும் சபைக் கட்டிடங்கள் கட்டப்படும்போதெ, ஞானஸ்நானத் தொட்டியும் அதனுடன் கட்டப்பட்டு வருகின்றன, உங்கள் சபையானது ஆற்றோரம் இருக்குமேயானால், அல்லது பொதுவான நீச்சல் குளம் இருக்குமேயானால், அல்லது கடற்கரையில் இருக்குமேயானால், இப்படிப்பட்ட நீர் நிலைகளை ஞானஸ்நானத்திற்கென பயன்படுத்தலாம்.

ஆரம்ப காலத்தில் *mikvah's* கள் தனிப்பட்ட வீடுகளில் இருந்தது. சுவிஷேசங்களிலும், அப்போஸ்தல நடபடியிலும் நாம் காண்கிற பிரகாரம், ஆதிஅப்போஸ்தலர், நீர் நிலைகள் எதுவாயினும் அவற்றை பயன்படுத்தி வந்தனர். அவிசுவாசிகளின் முன்னிலையில், ஞானஸ்நான ஆராதனையானது, சுவிஷேச ஆராதனையாக இருக்கக்கூடாது, இருப்பினும் அநேக கலாச்சாரங்களில், இது ஒரு வாழ்க்கையை மாற்றி அமைக்கக் கூடிய உபகரணமாயும், ஆச்சரியப்படக்கூடிய தருணமாயும் இருப்பது குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது. அது தனிப்பட்ட நிலையிலோ அல்லது பொதுவான நிலையில் கொடுக்கப்பட்டாலும், ஒரு விசுவாசியின் மாற்றப்பட்ட வாழ்க்கையை அறிவிக்கிறதாய் இருக்கிறது, அவர்களது விசுவாசமனது அவர்களை இரட்சிப்பின் கிரியைகளுக்கு ஏதுவாய் வழிநடத்திற்று.

தண்ணீரில் முழுகி ஞானஸ்நானம் பெறுவது, கிறிஸ்துவுடன் இணைக்கப்பட்டதை சித்தரிக்கிறதாய் இருக்கிறது, பழைய ஜீவியத்திற்கு மரித்து, பரிசுத்த ஆவியானவரின் வாசம் செய்தல் மூலம், அவரது வல்லமையுடன் புதிய ஜீவியம் செய்ய எழுப்பட்டதாய் இருக்கிறது. அப்போஸ்தலரின் வழக்கத்தின்படி, ஒரு விசுவாசி இரட்சிக்கப்பட்ட அன்றே அவர்களது வாழ்வில் ஞானஸ்நானம் இடம் பெற்று வந்தது. அவர்களுடன் சில வாரங்கள் தங்கி, வேதாகம போதனைகளால் அவர்களை நிலைவரமாய் இருக்க பெலப்படுத்தி வந்தனர். ஆரம்பகால சபையில், ஞானஸ்நானம் என்பது இரட்சிப்பிற்கு அருகில் செயல்பட்டு வந்தது, இதினிமித்தம் ஒருவர் இரட்சிப்படைந்த பின்னர் தாமதிப்பது, வேத நியமத்திற்கு முறண்பட்டதாய் இருக்கிறது. அப்போஸ்தல நடைமுறைகளை கைக்கொள்வது குறித்து, உங்களுக்கு சிறப்பான வாக்குவாதம் இருத்தல் வேண்டும்.

ஞானஸ்நானம் என்பது, ஸ்தல சபையில் நுழைவதற்கு ஒரு ஏதுகரமாய் இருக்கிறது. மனந்திருந்தய பின்னர் ஞானஸ்நானம் என்பது, குறிப்பிடத்தக்க ஒன்றாய் இருக்கிறது. கர்த்தரின் கட்டளைப் பிரகாரம் ஞானஸ்நானம் பெறுங்கள். மற்றொரு கேள்வியைக் குறித்து நாம் காண்போம், ஞானஸ்நானம் பெறும் தண்ணீர், ஓடக்கூடியதாய் இருத்தல் அவசியமா அல்லது நிலையாய் தேங்கி இருக்கக்கூடியது அவசியமா? அது உப்புத்தண்ணீராய் இருத்தல் அல்லது நல்ல தண்ணீராய் இருத்தல் அவசியமா? வேதாகமத்தில் சில இடங்களில் ஓடக்கூடிய தண்ணீரில் ஞானஸ்நானம் கொடுத்தனர் என்றும் சில இடங்களில் தேங்கி நிற்கும் தண்ணீரில் ஞானஸ்நானம் கொடுத்தனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையாக நாம் ஏற்கனவே கண்டபடி, தண்ணீர் எத்தகையதாய் இருப்பது என்பது அவர்களுக்கு ஒரு பொருட்டாக இல்லை. அவர்களுக்கு எந்தெந்த இடங்களில் எப்படிப்படிப்பட்ட சூழ்நிலையிருப்பினும் அதை அவர்கள் பயன்படுத்திக்கொள்கிறவர்களாய் காணப்பட்டனர். அவர்கள் இரட்சிப்படைந்த போது, அவர்களில் ஏற்பட்ட மாற்றங்கள் விவரிக்கப்படுவதையே அவர்கள் முக்கியப்படுத்துகிறவர்களாய் கருதி வந்தனர்.

ஆரம்ப காலத்தில் யூதரல்லாத புறஜாதிய சபைகளில், வீடுகளில் கழுவுவதற்காக தண்ணீர் தேக்கப்பட்ட தொட்டிகளிலும், தனிப்பட்ட வீடுகளில் *mikveh",* (Jewish ritual baptismal pool in a private home – as many new converts at that time were Jewish). களிலும் ஞானஸ்நானம் கொடுத்து வந்தனர். சபைகளில் யூதர்களின் *Mikvehs ஐ* போன்றே ஞானஸ்நான தொட்டிகளை வடிவமைக்கிறவர்களாய் இருக்கிறோம். ஞானஸ்நானமானது, தனிப்பட்ட நிலையில் யூதர்களின் வீடுகளில் அமைந்த *Mikvehs களில்,* கொடுக்கப்பட்டு வந்தது. ஆரம்ப கால சபையில் ஞானஸ்நான ஆராதனையானது, நாம் அனுசரிக்கும் சுவிஷேச ஆராதனையாய் இருக்கவில்லை என்பதனை நினைவில் கொள்ளுதல் வேண்டும். இதினிமித்தம், ஞானஸ்நான ஆராதனையானது, சுவிஷேச ஆராதனையாய் இருக்கக்கூடாது என்பது அர்த்தம் ஆகாது.

இவ்வாரதனையை நடத்துவது யார்? திருவிருந்து ஆராதனையுடன், இதுவும் சபையின் நியமமாய் இருக்கிறது, ஆகையால் சபையின் தலைமைத்துவம், இதை நடத்துதல் வேண்டும். தண்ணீர் எங்கு போதிய அளவில் இருக்கிறதோ, அவ்விடத்தில், இவ்வாராதனையை நடத்தலாம். அவ்விடமானது சபைக்கும், மக்களுக்கும் முக்கியம் வாய்ந்த இடமாய் இருத்தல் அவசியம். அது பொதுவானதாகவோ அல்லது தனிப்பட்ட நிலையிலோ ஆதி சபையில் இருந்து வந்தது.

பண்டைய உலகில், சபை துவங்கி நூறு ஆண்டுகளுக்குப் பின்னர் ஞானஸ்நானமானது, பழமையான ஒரு சபை நியமமாய் மாறிவிட்டது, ஒருவர் இரட்சிப்படைந்தவுடன், சபையானது ஞானஸ்நானத்திற்கு ஆயத்தமாய் இருப்போரைக் கூட்டிச் சேர்க்கும், அவர்கள் குழுவாக சேர்க்கப்பட்டு முதலாவதாய் அவர்களுக்கு அறிவுரை வழங்கப்படும், அதன் பின்னர் ஈஸ்டர் பண்டிகைக்கு முன்னர் அவர்களுக்கு ஞானஸ்நான ஆராதனை ஒழுங்கு செய்ப்படும். இப்படிப்பட்ட ஞானஸ்நான ஆராதனையை அப்பட்டணத்தில் உள்ள பிஷப் அவர்கள் நடத்திவைப்பார்கள். ரோம சாம்ராஜ்யம் விசுவாசிகளைக் கொடுமையாய் துன்பப்படுத்தி வந்ததன் விளைவாகவும், மற்றும் சபைக்குள் சாக்ரமெண்டலிஸம் கடந்து வந்தபடியாலும், அப்பட்டணத்தின் பிஷப் மட்டுமே சபை நியமங்களை நடத்த வேண்டும் என்பதை வலியுறுத்தி வந்தனர்.

அநேக சபைகள் வெண்மை வஸ்திரங்களை ஞானஸ்நானத்திற்கென வைத்திருந்தனர், இப்படிப்பட்ட பழக்கம் ஆதி சபையில் கைக்கொள்ளப்பட்டு வந்தது. கலாச்சாரத்தில் சுத்திகரிப்புக்கு ஏற்ற வஸ்திரம் எது என நிர்ணயிக்கப் பட்டுள்ளதோ அப்படிப்பட்ட வஸ்திரங்களை பயன்படுத்துதல் வேண்டும், சுத்திகரிப்பை அல்லது பரிசுத்தத்தை வருணிக்கக்கூடிய வண்ணத்தை உள்ளூர் கலாச்சாரமானது ஏற்றுக்கொள்வதை பயன்படுத்துதல் அவசியமானது. ஆரம்பகால சபையில் முதலாவது ஞானஸ்நானம் கொடுத்து, பின்னர் அவர்களுக்கு உபதேசித்தனர், அவர்களுக்கு உபத்திரவம் நேரிட்டபோது, இது தலைகீழாக மாறத்துவங்கியது, ஞானஸ்நானத்தின் அர்த்தம் மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்து, ஞானஸ்நானம் கொடுக்கும் முன்னரே, அவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. அந்நாட்களில் ஞானஸ்நானம் பெறுவது, கைது செய்யப்படுவதற்கும், சிறைச்சேதம் செய்தலுக்கும் வழிநடத்துகிறதாய் இருந்து வந்தது. அந்நாட்களில் ஞானஸ்நானம் என்பது, மிகக் கவனமாய் கடைபிடிக்க வேண்டிய ஒன்றாய் இருந்தது, ஞானஸ்நானத்தைக் குறித்த முழுமையான போதனை, ஞானஸ்நானம் பெறும் முன்னர் அளிக்கப்பட்டு வந்தது.

சபை நியமத்திற்கு முன்போ, அல்லது அதற்கு பின்னரோ போதனை அளிப்பது ஒரு பொருட்டாக கருதப்படவில்லை, (இவ்வாறு செய்வது சபைக்கு ஏற்பட்ட உபத்திரவத்தினால், நிகழ்வதாய் இருந்தது) தேவ ஊழியரால், சபை நியமம் குறித்து, முழுமையான போதனை அளிக்கப்பட்டு அதைக்குறித்து முழுமையாய் அறியப்பட்டு வந்தது.

ஆதி சபையில் சுவிஷேசம் அறிவிக்கப்பட்டு, இரட்சிப்படைந்தோருக்கு உடனடியாய் ஞானஸ்நானமானது கொடுக்கப்பட்டு வந்தது, சபை ஆரம்பமாகி 100 ஆண்டு காலங்களில், ஞானஸ்நானமானது, சபை ஆராதனையில் முக்கியப்படுத்தப்பட்டு, முக்கியமாய் ஈஸ்டர் காலங்களில் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டு வந்தது. வழக்கமாய் நடந்து வரும் சபை ஆராதனையில், விஷேசமாய் ஒரு பகுதியை ஞானஸ்நான ஆராதனைக்கென நேரம் ஒதுக்கி, இவ்வாராதனையை நடத்துவது பரிந்துரை செய்யப்படுகிறது. இது ஒரு விஷேசித்த ஆராதனையாய் ஆசரிப்பதும் முக்கியமானதாய் இருக்கிறது. குறிப்பாக ஞானஸ்நானம் பெறக்கூடிய நீர் நிலையானது சபைக்கு வெகு தொலவில் இருக்குமேயானால், ஞானஸ்நான ஆரதனை அங்கு ஒழுங்குபடுத்தி, அதை விஷேசமாய் ஆசரித்தல் வேண்டும். அதை ஒரு சுவிஷேசம் அறிவிப்பதற்குரிய தருணமாய் பயன்படுத்திக்கொள்ளுதல் அவசியம், ஜெபத்துடன் எது தகுதி எனத் தீர்மானிக்கிறார்களோ அவற்றை செயல்படுத்த முன்வாருங்கள்.

ஞானஸ்நான ஆராதனைக்கு அவசியமானவைகள்:

1. கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவை வெளிப்படையாக, தங்களது இரட்சகராகவும், கர்த்தராகவும் ஏற்றுக்கொண்டவர்கள் மட்டுமே ஞானஸ்நானத்திற்கு தகுதிபெற்றவர்களாய் இருக்கின்றனர். அப்போஸ்தல நடபடிகள் பாரம்பரியத்தைப் பின்பற்றி, ஞானஸ்நான ஒழுங்கைப் பின்பற்றுதல் வேண்டும், கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தை, ஞானஸ்நானத்திற்கு கீழ்ப்படிந்து, வெளியரங்கமாய் அறிக்கை செய்ய, சபையில் யாவரும் கேட்கும் வண்ணம் அழைப்புக் கொடுத்தல் வேண்டும். இதற்கு மறுமொழியாய் ஞானஸ்நானம் எடுக்க மனதுள்ளவர்கள், ஆமென் என்றோ அல்லது அல்லேலூயா என்றோ அல்லது எளிய நிலையில் நாங்கள் ஒப்புக்கொடுக்கிறோம் என மறுமொழியை உறுதி செய்து கொள்ளுதல் வேண்டும்.

2. ஞானஸ்நானம் எடுக்கும் நபர்கள் தேவஊழியரை அணுகி, தண்ணீரில் இறங்கி நிற்கும் தேவ ஊழியரிடம் செல்லுதல் வேண்டும், தேவ ஊழியர் தண்ணீரில் நின்று கொண்டு ஞானஸ்நானம் குறித்த முக்கியத்துவம், மற்றும் அதன் அர்த்தம் போன்றவைகளை விளங்கச் செய்யும் வேதவசனங்களை மேற்கோள் காட்டி, இந்த சபை நியமத்தினை நிகழ்த்துதல் வேண்டும். தேவ ஊழியருக்கு அருகில் இரு நபர்கள் உதவி செய்ய இருத்தல் வேண்டும். ஒருவரிடம் தேவ ஊழியர் ஞானஸ்நானம் கொடுக்கும் போது தனது வேதாகமத்தை கொடுத்து, அதை அவர் பாதுகாக்கவும், மற்றொருவர், ஞானஸ்நானம் பெறுவோரை தண்ணீரில் முழுகிய பின்னர் தூக்கிவிடவும், செய்தல் வேண்டும்.

3. ஒவ்வொரு நபரும் ஞானஸ்நானம் பெற வருகிற போது, அவர்கள் விசுவாச உறுதிப்பாட்டை அவர்களிடம் கேட்டறிதல் வேண்டும். இவ்வுறுதிப்பாட்டை ஞானஸ்நானம் பெறுவோர், உரத்த சத்தமாய் எல்லோரும் கேட்கும் வண்ணம் அறிக்கை செய்தல் வேண்டும். பின்னர் அவர்களது கரங்களை இறுகப்பற்றிக்கொண்டு, தேவ ஊழியர் அவர்கள் ஞானஸ்நானம் பெறுவதற்கான அறிவிப்பை அளித்தல் வேண்டும்.

4. தேவ ஊழியர் செய்யும் அறிவிப்பானது, கீழ்க்கண்டவாறு இருத்தல் வேண்டும்: "எனக்கன்பான சகோதரன் / சகோதரி, ...யே, இயேசுக்கிறிஸ்துவின் பரிசுத்த கட்டளைக்கு நீங்கள் கீழ்ப்படிந்ததன் பேரிலும், கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை, விசுவாசத்தின் மூலம், உங்களது சொந்த இரட்சகராய் ஏற்றுக்கொண்டதை உறுதியாய் அறிக்கை செய்ததின் பேரிலும் உங்களுக்கு பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாவனரின் நாமத்தில், இந்த தண்ணீரில் ஞானஸ்நானம் கொடுக்கிறேன்." இதனுடன் இன்னும் சேர்த்துக்கொள்ளலாம், ஆனால் இதுவே முக்கியமாய் கூறப்பட வேண்டிய சாராம்சமாய் இருக்கிறது.

5. ஞானஸ்நானம் கொடுக்கும்போது, தேவ ஊழியர், ஞானஸ்நானம் பெறுபவரை தண்ணீரில் முழுகும்படி செய்தல் வேண்டும், அந்நபர் தண்ணீரில் முழுவதும் மூழ்கிய பின்னர், முன் அவர்கள் நின்ற நிலைக்கு அவர்களை எடுத்து நிறுத்துதல் வேண்டும். அவர்கள் ஞானஸ்நானம் எடுக்கும் நிலையில் அவர்களை ஜெபிக்கும் படி அனுமதித்தல் தவிர்க்கப்படல் வேண்டும்.

6. ஞானஸ்நானம் பெற்றவர் தண்ணீரில் முழுகி எழுந்த பின்னர், தேவ ஊழியர் தனிப்பட்ட நிலையில், அவர் மீது, தனது கைகளை வைத்து அவருக்காய் ஜெபித்தல் வேண்டும், அவருக்காக தீர்க்கதரிசன வார்த்தைகள் எதுவும் அளிக்கப்படவிருந்தால் அதைத் தனிப்பட்ட நிலையில் அவருக்கு அளித்தல் வேண்டும். சுற்றி நிற்கும் சபை

விசுவாசிகளை தேவ ஊழியர் ஞானஸ்நானம் பெற்றவருக்காக, தங்களது கரங்களை அவருக்கு நேராக நீட்டி ஜெபிக்கும்படி கேட்டுக்கொள்ளலாம். பின்னர் அந்நபர் தண்ணீரிலிருந்து வெளியேறி, நனைந்திருக்கும் தன்னை உலர்த்திக்கொண்டு வேறு ஆடை அணியும் படி அனுப்பலாம். இவ்வாறு தொடர்ந்து ஒவ்வொரு நபருக்கும் செய்து ஞானஸ்நானம் கொடுக்கலாம்.

7. எல்லா நபர்களுக்கும் ஞானஸ்நானம் கொடுத்துத் தீர்ந்த பின்னர், தேவ ஊழியர் சபையாருடன் தேவனுக்கு நன்றி சொல்லி ஜெபித்து ஞானஸ்நான ஆராதனையை நிறைவு செய்யலாம். இப்படிப்பட்ட ஞானஸ்நான ஆராதனை ஒவ்வொன்றிற்கும் அடுத்தபடியாக, கர்த்தருடைய திருவிருந்து பரிமாறப்பட்டு, அதைத்தொடர்ந்து ஒரு ஐக்கிய விருந்தை ஒழுங்கு செய்தல் அவசியம். ஆரம்பகால சபையில், ஞானஸ்நானமானது, கர்த்தருடைய மேஜையில் / திருவிருந்தில் பங்கெடுக்க வகை செய்வதாய் இருந்தது, ஞானஸ்நானம் பெறாத ஒருவரும், திருவிருந்தில் பங்கெடுப்பது இல்லை. இது ஒரு நல்ல சட்ட ஒழுங்காய் இருக்கிறது, இது அப்போஸ்தலர் காலந்தொட்டே பழக்கத்தில் இருந்து வந்தது. இதைப் போன்றே உங்களது சபையிலும், பழக்கப்படுத்திக் கொள்வது அவசியம்.

ஞானஸ்நானம் குறித்த உபதேசம்:

1. பேச்சு வழக்கில் இருந்த கிரேக்கமொழியில் "ஞான்ஸ்நானம்" என்ற சொல் வழக்கச்சொல்லாக இருந்து வந்தது. (350 கி.மு)

ஆங்கில மொழியில் இப்பதம், 'பாப்டிஜோ' என்ற கிரேக்கச்சொல்லில் இருந்து மொழிபெயர்ப்பு செய்யப்பட்டது, இதன் மூல மொழியின் அர்த்தம், அடையாளம் கண்டுகொள்ளுதல். இச்சொல்லை கிரேக்க கவிஞர்கள், நாடக எழுத்தாளர்கள், சரித்திர வல்லுநர்கள் தங்களது காவியங்களில் பயன்படுத்தினர். பொதுவாக சரித்திர வல்லுனர்கள் இப்பதத்தினை, ஓர் பொருள் இரண்டாம் பொருளுடன் சேர்ந்து தனது இயல்பான தன்மை, குணங்கள் மாற்றப்படுவதை வருணிக்க இப்பதத்தை பயன்படுத்தினர்.

உதாரணமாக சென்பன் (கி.மு நான்காம் நூற்றாண்டு) என்பவர், ஸ்பார்ட்டன் யுத்த வீரர்கள், யுத்தத்திற்குச் செல்லுமுன்னார், தங்களது ஈட்டியை பன்றியின் இரத்தத்தில் தோய்த்து எடுத்துச்செல்வார்களாம், இதன் பொருள் தங்களது ஈட்டி, வேட்டையாட பயன்பட்டதிலிருந்து, யுத்தித்திற்கு பயன்படப்போகிற தன்மை படைத்ததாய் மாறிவிட்டது என்பதைக்காட்ட, இப்படி செய்வார்கள் எனக்கூறுகிறார்.

யூரிப்பெடஸ் (கி.மு. ஐந்தாம் நூற்றாண்டு) இச்சொல்லை கடலில் மூழ்கும் கப்பலை விவரிக்கப் பயன்படுத்துகிறார். கப்பல் மூழ்க, மூழ்க அதன் தன்மை, குணங்கள் மாறுகின்றன. இப்பொழுது கப்பலை அடையாளம் கண்டுகொள்வோமென்றால், அது மிதக்கும் தன்மை மாறி, உடைந்துபோய் மூழ்கும் தன்மையை பெற்றுள்ளது. மூழ்குதல் என்ற பதம் ஞானஸ்நானம் ("baptised") என்கிற சொல்லாக பயன்படுத்தினர்.

2. பேச்சு வழக்கு கிரேக்க மொழியில் இதன் பொருள்:

வினைச்சொல்: "பாப்டோ" தண்ணீரில் முழுகச்செய் (லூக்கா 13:26, லூக்கா 16:24)

வினைச்சொல்: "பாப்டிஜோ" தண்ணீரில் முழுகச்செய், தண்ணீரில் மூழ்கு, கழுவி சுத்தம் செய்,

பெயர்ச்சொல்: "பாப்டிஸ்மாஸ்" பாத்திரங்களை கழுவுதல், (மாற்கு 7:4) ஞானஸ்நானத்தின் உபதேசம் (எபிரெயர் 6:2)
பெயர்ச்சொல்: "பாப்டிஸ்மா" ஞானஸ்நான சடங்கு (மத்தேயு 3:7, 21:25) ஆவிக்குரிய ஞானஸ்நானம் (ரோமர் 6:4) இரத்தசாட்சியின் ஒப்புமை (மாற்கு 10:38, லூக்கா 12:50)
பெயர்ச்சொல்: பாப்டிஸ்டஸ்: யோவான் ஸ்நானகனைப்போல, ஞானஸ்நானம் கொடுப்பவர் (மத்தேயு 3:1, 11:11, மாற்கு 6:25)

3. *மெய்யான ஞானஸ்நானங்கள்*: உண்மையான நிலையில் அடையாளம் கண்டுகொள்ளப்படுதல் - மெய்யான ஒன்றுடன், ஒரு நபர் அடையாளம் கண்டுகொள்ளப்படுதல். இவைகள் உலர்ந்த ஞானஸ்நானம். இப்படிப்பட்ட ஞானஸ்நானத்திற்கு தண்ணீர் அவசியமற்றது. நான்கு மெய்யான ஞானஸ்நானங்கள் இருக்கின்றன.

1. மோசேயின் ஞானஸ்நானம்: இது செங்கடலில் இஸ்ரவேல் மக்களின், இரட்டிப்பான நிலையில், அடையாளம் கண்டுகொள்ளப்படுதலை குறிக்கிறது. (1 கொரிந்தியர் 10:2)

அ) மோசேயுடன் - இது மோசேயின் விசுவாசத்தில், தலமைத்துவத்தில், விடுதலையில் இஸ்ரவேல் ஜனங்கள் அடையாளம் கண்டுகொள்ளப்படுகின்றனர். "மோசேக்குள்ளாக" ஜெயமடைந்தனர்.

ஆ) மேகங்களுடன் - இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுடன் (மேகத்துடன்) அடையாளம் கண்டுகொள்ளப்படுகின்றனர். அவர் இஸ்ரவேல் ஜனங்களை செங்கடலின் நடுவே உலர்ந்த தரை வழியே நடக்கப்பண்ணி, அவர்களைப் பின்தொடர்ந்த அவர்களது சத்துருக்களை செங்கடலில் அழித்துப்போட்டார். அவர்கள் "தேவனுக்குள்ளாக" ஜெயமடைந்தனர்.

2. அக்கினியின் ஞான்ஸ்நானம்: அவிசுவாசிகள் அணைவரும், நியாயத்தீர்ப்பில் அடையாளம் கண்டுகொள்ளப்படுகின்றனர்.(மத்தேயு 3:11, 13:24 - 30, 2 தெசலோனிக்கேயர் 1:7-9)

3. ஞானஸ்நானத்தின் பாத்திரம்: சபை யுகத்தில் வாழும் விசுவாசிகள், இயேசுக்கிறிஸ்துவின் சிலுவை மரணத்திற்குப்பின் உள்ள ஜெயத்தில் (வெற்றியில்) அடையாளம் கண்டுகொள்ளப்படுகின்றனர். இயேசுக்கிறிஸ்து நமது பாவங்களில் அடையாளம் கண்டுகொள்ளப்படுகிறார். (மத்தேயு 26:39, 2 கொரிந்தியர் 5:21)

4. பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம்: சபை யுகத்தில் விசுவாசிகள் கிறிஸ்துவின் சரீரத்தில் நுழைவதை இது காட்டுகிறது, இதினிமித்தம் கிறிஸ்துவில் சகலமும் அடையாளம் கண்டுகொள்ளப்படுகிறது. (1 கொரிந்தியர் 12:13, ரோமர் 6, எபேசியர் 1:3)

4. *ஞானஸ்நானங்களின் சடங்கு*:இது தண்ணீருடன் சம்பந்தப்பட்டது. இது கீழ்க்கண்ட காரியங்களை பிரதிபலிக்கிறதாய் இருக்கிறது

அ) இயேசுக்கிறிஸ்துவின் ஞானஸ்நானம்: தனித்தன்மை வாய்ந்தது (மத்தேயு 3:13-17) தண்ணீர் பிதாவின் திட்டத்தை பிரதிபலிக்கிறது. இயேசுக்கிறிஸ்து பிதாவின் சித்தமாகிய, சிலுவைக்கு செலவதை தன்னில்தானே அடையாளம் கண்டுகொள்கிறார்.

ஆ) யோவானின் ஞானஸ்நானம்: (மத்தேயு 3:1-11, யோவான் 1:25-33, அப்போஸ்தலர் 18:25). தண்ணீர் தேவ இராஜ்யத்தை பிரதிபலிக்கிறது. யோவான் மூலம் ஞானஸ்நானம் பெற்றவர்கள் இயேசுக்கிறிஸ்துவுடனும், அவரது இராஜ்யத்திலும் அடையாளம் கண்டுகொள்ளப்படுகிறார்கள்.

இ) விசுவாசிகளின் ஞானஸ்நானம்: (அப்போஸ்தலர் 2:38,41; 8:36-38; 9:18, 10;47-48; 16:33).

தண்ணீர் இயேசுக்கிறிஸ்துவின் கிரியையை பிரதிபலிக்கிறது.

சபை யுக விசுவாசிகளுக்கு, ஞானஸ்நானம் என்பது, கிறிஸ்துவின் மரணம் (தண்ணீரில் முழுகுவது) கிறிஸ்துவின் அடக்கம் (தண்ணீருக்குள் இருப்பது) மற்றும் அவரது உயிர்த்தெழுதல், உயிர்த்து புதிய ஜீவனை உடையவர்களாதல், (தண்ணீரை விட்டு வெளிவருதல்) இது போன்றவைகளால் கிறிஸ்துவில் அடையாளம் கண்டுகொள்ளப்படுகிறார்கள்.

ஈ) சபைக்காக இரு விதிமுறைகள் உள்ளன:

தண்ணீர் ஞானஸ்நானம் - ஒரே ஒரு முறை நிகழ்வது; இரட்சிப்பை பிரதிபலிக்கிறது.

திரு விருந்து - திரும்பத் திரும்ப நடைபெறுவது; ஐக்கியத்தைப் பிரதிபலிக்கிறது.

<u>3. உயிர்த்தெழுந்த நாளில் பரிசுத்த ஆராதனை:</u>

சங்கீதம் 29:2 ஐ வாசிக்கவும், *"கர்த்தருடைய நாமத்துக்குரிய மகிமையை அவருக்குச் செலுத்துங்கள், பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுது கொள்ளுங்கள்."* ஆராதனைக் குறித்து தீர்மானிக்க வேண்டிய முதலாவது கருத்தாய் இது இருக்கிறது. பழைய ஏற்பாட்டு இஸ்ரவேலர் தேவாலய ஆராதனையை விட, சபையுகத்தின் ஆராதனையானது அதி உன்னத நிலையில் ஆராதிக்க வேண்டியதாய் இருக்கிறது, தாவீது மற்றும் சாலமோன் கொண்டாடியதைவிட அதிக அளவில் ஆராதனையில் கொண்டாட்டம் என்பது அவசியமானதாய் இருக்கிறது. சபை ஆராதனையை ஒரு சபையின் "நியமமாகக்" கருதாது, அது தொடர்ந்து மாற்றமில்லாத செயல்பாடாக, செயல்பட வேண்டியதாய் இருக்கிறது. கர்த்தருடைய ஊழியத்தில், ஞாயிற்றுக்கிழமை என்பது மிகவும் முக்கியம் வாய்ந்த நாளாகவும், சபையுகத்தில் இந்நாளானது ஆராதனைக்கென அற்பணிக்கப்பட்ட நாளாகவும், கூடி ஆராதனை செய்வது இந்நாளின் நியமுமாய் இருக்கிறது.

ஆராதனை என்பதன் பொருள், தேவன் யார் என்பதையும், அவர் என்ன செய்தார், அவர் என்ன செய்து கொண்டிருக்கிறார், என்ன செய்ய இருக்கிறார் என்பதனை அறிந்து, தேவனைக் கனப்படுத்தி, அவரை உயர்த்துவதாகும். எல்லா ஆராதனைகளிலும், துதி உள்ளடங்கியுள்ளது, கர்த்தரைக் குறித்து அதிகமாய் கற்றுக்கொள்வதும், அவரை மதிக்கவும், அவரில் அன்புகூறவும், அதிகமாய் அவரைத் துதித்து உயர்த்தவும், அராதனையில் அவருக்கு உரிய மகிமையை அவருக்கே செலுத்தவும் வேண்டியதாய் இருக்கிறது. இதனால் அவருக்கு சேவை செய்து, அவருக்கென நம்மை அற்பணித்துக் கொள்ளுதல் அவசியம். நமது ஆராதனையில் இப்படிப்படிப்பட்ட காரியங்கள் இடம் பெறாத பட்சத்தில், சங்கீதம் 29:2 ஐ நிறைவேற்றாதவர்களாய் காணப்படுவோம். Refer below to the BTB study of this Church – Worship and Praise.

எல்லா நாளிலும், கர்த்தரை ஆராதித்து, ஒவ்வொரு நாளையும் கர்த்தருக்கென வாழ்ந்து விடுதல் வேண்டும், இவ்வாறு நடந்து கொள்ளுதல் சபை யுகத்தில் வாழும் ஒவ்வொரு விசுவாசிகளாகிய நமது கடமையாய் இருக்கிறது, ஞாயிற்றுக் கிழமை என்பது, சரித்திரத்தை மாற்றி அமைத்த விஷேசித்த நாளாய் இருக்கிறபடியால், அந்நாளுக்கு

முக்கியத்துவம் அளித்து, அந்நாளைக் கொண்டாடுகிறவர்களாய் இருக்கிறோம். இந்த நாள் கிறிஸ்து உயிர்தெழுந்த நாளாய் இருக்கிறபடியால், இந்நாள் சரித்திரத்தில் முக்கியத்துவம் பெற்ற நாளாய் இருக்கிறது, இயேசுக்கிறிஸ்து மரித்து உயிர்தெழுந்தபடியால், பாவத்தையும், மரணத்தையும், கல்லறையையும் மேற்கொண்டு ஜெயம் பெற்றுள்ளார்.

முதலாவதாக: கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து, நமக்காக பாவத்தின் மீது, மரணத்தின் மீதும் ஜெயமெடுத்துள்ளபடியால், ஒவ்வொரு நாளும் இதை மனதில் கொண்டு, கர்த்தருக்கு மகிமை செலுத்தி வாழும்படி கடமைப் பட்டுள்ளோம். பின்னர் கர்த்தர் நமக்களித்துள்ள சபை நியமங்களை அனுசரித்து, கர்த்தரின் உயிர்த்தெழுதலை, பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால், ஞாயிறு ஆராதனையில் கொண்டாடி மகிழ்தல் அவசியமானதாய் இருக்கிறது.

கொலோசெயர் 3:16-24.
"கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக, சங்கீதங்களினாலும், ஞானப்பாட்டுக்களினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பக்தியுடன் பாடி, வார்த்தைகளினாலாவது, கிரியைகளினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரியுங்கள். மனைவிகளே, கர்த்தருக்கேற்கும்படி, உங்கள் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள். புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூறுங்கள், அவர்கள் மேல் கசந்து கொள்ளாதிருங்கள். பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள், இது கர்த்தருக்குப் பிரியமானது. பிதாக்களே, உங்கள் பிள்ளைகள் திடனற்றுப் போகாதபடி, அவர்களுக்குக் கோபமூட்டாதிருங்கள். வேலைக்காரரே, சரீரத்தின்படி உங்கள் எஜமான்களாயிருக்கிறவர்களுக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்து, நீங்கள் மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல், தேவனுக்குப் பயப்படுகிறவர்களாகக் கபடமில்லாத இருதயத்தோடே ஊழியஞ்செய்யுங்கள். நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவைச் சேவிக்கிறதினாலே சுதந்தரமாகிய பலனைக் கர்த்தரால் பெறுவீர்களென்று அறிந்து, எதைச் செய்தாலும், அதை மனுஷருக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்."

தேவனது நாமத்திற்கு மகிமை செலுத்துவது ஆராதனையாய் இருக்கிறது. மெய்யாகவே தேவன் யாராய் இருக்கிறார், என்பதை இனங்கண்டுகொள்வதை இது உள்ளடக்கியுள்ளது, அவரிடம் ஜெபிப்பதும், அவருக்கு முன் மௌனமாய் இருத்தலும், அவரது நாமத்தை வார்த்தைகளாலும் மற்றும் பாடல்களாலும் துதித்து உயர்த்துவதும், அவருக்கு முன் பணிந்து, குனிந்து வணங்குவதும் ஆராதனையின் உள்ளடக்கமாய் இருக்கிறது. மேற்கூறிய வேதபகுதியில், குடும்பத்தினர் அனைவரும், மற்றும் சமுதாய உறவுகளும், ஒவ்வொரு நாளும், ஆராதிக்கும் ஆவியுடன் வாழ்ந்து தேவனுக்கு மகிமை கொண்டு வர வேண்டும் என்பதை அறிவுறுத்துகிறதாய் இருக்கிறது. ஒரு ஸ்தல சபையில் உங்களுக்கு ஆராதனை ஒழுங்குகள் இருக்குமேயானால், இப்படிப்பட்ட காரியங்களை அவ்வாராதனையானது வெளிப்படுத்துகிறதாய் இருத்தல் வேண்டும்.

இரண்டாவதாக: ஆராதிக்கும் ஆவியினை பரிசீலனை செய்வோமாக. தேவனுடைய வார்த்தையை அளிப்பதாய் ஆராதனை அமைதல் வேண்டும். வேத வசனங்கள் மூலம் தேவன் முழுமையாய் அறியப்படுதல் வேண்டும், ஆராதனையில் ஜெபம் முக்கிய

இடத்தை வகிக்கிறதாய் இருக்கிறது, கொடுத்தல், பாடித் துதித்தல், மௌனமாய் இருத்தல், தேவையுள்ளோருக்கு செய்யும் சேவை, ஒருவர் மற்றொருவருடன் ஐக்கியம் கொள்ளுதல் போன்றவை ஆராதனையில் இடம் பெறுதல் வேண்டும். ஜனங்களுக்கு தேவனது மகிமையை தியானிக்கவும், தேவன் யார் என்பதை உணர்ந்து அவரை மௌனமாய் துதித்து உயர்த்தவும், அவருக்கு சேவை செய்யவும் ஆராதனையில் தருணம் அளிக்கப்படுதல் வேண்டும். இதில் எந்த ஒரு காரியம் இடம்பெறாமல் போனாலும், ஆராதனை முழுமைபெறாது. நவீன காலத் திருச்சபைகளில், பாடித் துதி செய்வதே "ஆராதித்தல்" எனக்குறிப்பிடுகின்றன; ஆனால் இது ஆராதனையின் ஒரு பகுதி என்பது குறிப்பிடத்தக்கது.

மத்தேயு 28:5-10, 16-20. ஐத் திருப்பிக் கொண்டு அதை வாசியுங்கள்: இயேசு உயிர்த்தெழுந்த பின்னர் அவர் பாதத்தில் விழுந்து அவரைத் தொழுது கொண்டனர், இது அவரது கர்த்தத்துவத்தை அவர்கள் இனங்கண்டு கொண்டதை அறிவிக்கிறது. சிலர் சந்தேகப்பட்டனர், சிலர் அவ்வாறு பணிவதற்கு மனமற்றவர்களாய் இருந்தனர், இருப்பினும் அவரைத் தொழுது கொள்வதில் அவர்களுக்குள் எவ்வித கருத்து வேறுபாடின்றி காணப்பட்டது. ஆராதனை என்பது தேவன் யாராய் இருக்கிறார் என்பதை இனங்காணுவதை உள்ளடக்கியுள்ளது, அவர் கர்த்தர் என அறிந்து உங்களை நீங்களே அவருக்கு அற்பணிப்பத்தல் வேண்டும், அவரது வார்த்தையை திறந்து வாசித்து, கற்றுக்கொள்ளுதல் வேண்டும், இதற்கென உங்களை அற்பணித்துக் கொண்டு முழுமையாய் அவரது வழிநடத்துதலுக்காக ஒவ்வொருநாளும் நேரிடும் வாழ்க்கைப் பிரச்சனைகளில் அவரைச் சார்ந்து வாழுதல் வேண்டும்.

யோவான் 13:12-17, 15:7-15 ஐத் திருப்பிக் கொண்டு அதை வாசியுங்கள்: இவ்வேதபகுதியில் நாம் அவருக்கு நண்பர்களாய் இருக்கிறோம் என்பது தெளிவுபடுத்தப்படுகிறது, அவர் எதையெல்லாம் செய்யும் படி கூறுகிறாரோ அதை எல்லாம் செய்யக்கடனாளிகளாய் இருக்கிறோம். ஆராதனை என்பது நட்புறவை உள்ளடக்கியுள்ளது. இது ஐக்கியத்திற்கு வழிநடத்துகிறதாய் இருக்கிறது, மற்றும் அவரது வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து அவருக்களிக்கப்பட்ட சேவையை தொடர்ந்து நாம் நிறைவேற்ற வழி நடத்துகிறதாய் இருக்கிறது. இது மற்றவர்களுடன் நாம் கொள்ளும் உறவில் பெலப்படவும், ஆராதனையின் வெளிச்சத்தில் கர்த்தருடன் கொள்ளும் ஐக்கியத்திலும், அவரது வார்த்தைகளை முற்றிலுமாய் புரிந்துகொள்ளவும் வகை செய்கிறதாய் இருக்கிறது. ஆராதனை மற்றவர்களுக்கு சேவை செய்வதன் மூலம் வெளிப்படுகிறதாய் இருக்கிறது. ஆராதனையின் விளவு, பரிசுத்த ஆவியானவரின் கனியாய் இருக்கிறது.

இப்படிப்பட்ட காரியங்கள் இடம் பெற, ஆராதனையில் தருணங்கள் இல்லையெனில், ஆராதனை ஒழுங்கை மாற்றி அமைத்து, மேற்சொன்ன காரியங்கள் அனைத்தும் ஆராதனையில் இடம் பெற வகை செய்தல் வேண்டும். தேவ ஊழியராகிய நீங்கள் ஆராதனை நடத்தி, ஆராதனை சிறப்பாய் இருக்க வழி வகை செய்தல் வேண்டும். இதை உங்கள் ஊழியத்தில் தொடர்ந்து செய்தல் வேண்டும், மற்றவர்களையும் இதைப் போன்று ஆராதனை நடத்த பயிற்சி அளித்து, அவர்களை ஊக்குவித்தல் வேண்டும். வேதாகம ரீதியில் ஆராதனை செய்வதற்கு, ஜனங்களுடன் முன்னதாகவே இவற்றைக் குறித்து தெளிவுபடுத்தி, ஆராதனை ஒழுங்குகளை செவ்வையாய் தயார் செய்து கர்த்தரை ஆராதிப்பதும், பரிசுத்த அலங்காரத்துடன் கர்த்தரைத் தொழுது கொள்வதும் ஆராதனைக்கு சிறப்பைத் தேடித் தருவதாய் இருக்கிறது. இதன் மூலம் தேவன் மகிமைப்படுகிறவராயும், உயர்த்தப்படுகிறவராயும் விளங்குவார்.

மூன்றாவதாக: இஸ்ரவேலரின் யுகத்திற்கும், சபை யுகத்திற்கும் உள்ள வேறுபாட்டை, நாம் தீர்மானித்தல் வேண்டும், சபை யுகமானது, பெந்தெகொஸ்தே நாளில் துவங்கி, கிறிஸ்துவின் சிலுவை, மற்றும் உயிர்த்தெழுதலை அஸ்திபாரமாய்க் கொண்டு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இதில் முக்கியமான வித்தியாசத்தை அளிப்பது, கர்த்தரை ஆரதிப்பது மற்றும் ஆராதனை வழிமுறையாகும். கர்த்தரை ஆராதிக்கும் ஆராதனையில் இவ்வித்தியாசத்தை நாம் பிரதிபலிக்கிறவர்களாய் இருக்கிறோம். யூதர்களின் ஏழாம் நாள் சாபத் தினத்திற்கும், சபை யுகத்தில் கர்த்தர் உயிர்த்தெழுந்த வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுக்கிழமையில் ஆராதனை செய்வதற்கும் உள்ள வித்தியாசத்தை நாம் பிரதிபலித்தல் வேண்டும், ஞாயிறு ஆராதனையானது உயிர்த்தெழுதலின் செய்தியை பெரிது படுத்துகிறதாய் இருக்கிறது.

"சாபத்" [SABBATH] தினமும், கர்த்தருடைய நாளும். [THE SABBATH AND THE LORD'S DAY]

1. சாபத் (Sabbath) என்பதன் பொருள் ஓய்வு. நமக்கு 'ஒரு நாள் ஓய்வு' என்பது இனி ஒருபோதும் இல்லை, ஆனால் சிலுவை மூலம், வெறுமையான கல்லறை மூலம், பெந்தெகொஸ்தே நாள் மூலம் கர்த்தர் நமக்களித்துள்ள வெளிச்சத்தில் ஒவ்வொரு நாளும் வாழ்ந்து, கிறிஸ்துவுக்கு மகிமை கொண்டுவருதல் நமக்கு அவசியமானதாய் இருக்கிறது.

2. இரட்சிப்பு என்பது நமக்கு நித்தியமான "சாபத்" ஆக (ஓய்வாய்) இருக்கிறது. (மத்தேயு 11:28) - நமது சொந்த கிரியைகளைத்தவிர்த்து, நமது இரட்சிப்பிற்காய் தேவனை முழுமையாய் நம்புதல் வேண்டும்.

3. வாக்குத்தத்தங்களில் நம்பிக்கை வைப்பது அநுதின "சாபத்" ஆக இருக்கிறது. (எபிரெயர் 3:11). - நமது அனைத்து தேவைகளையும் தேவன் சந்திக்க, நாம் அவரில் நம்பிக்கை வைத்தல் வேண்டும்.

4. உண்மையான சாபத் (ஆதியாகமம்2:2, 3)ல் காணப்படுகிறது. தேவன் ஆறு நாளும் தனது சிருஷ்டிப்பின் கிரியைகளை முடித்து, ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார்.

5. இஸ்ரவேலரின் சாபத்.. (யாத்திராகமம்20:8-11,உபாகமம்5:12-15).
   - பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலர் ஏழாம் நாளில் எவ்வித வேலையும் செய்யாமல் ஓய்ந்திருக்க கட்டளை பெற்றனர். அவர்களது தேவைகள் அனைத்தையும் தேவன் சந்திப்பார் என, அவர் செய்து முடித்த கிரியைகளை நம்பி (சார்ந்து) ஓய்ந்து இருக்கவேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டது..
   - சாபத் (சனிக்கிழமை) பழைய சிருஷ்டிப்பு, மற்றும் பழைய உடன்படிக்கையினை நினைவு கூறும் நாளாக, சாபத் அநுசரிக்கப்பட்டது. (யாத்திராகமம்20:10-11, 31:12-17, எபிரெயர் 4:4).
   - கிரியைகளை முக்கியப்படுத்துவோர் [லீகலிஸ்டுகள்] 'சாபத்' தினத்தில் அதிகமான வேதாகமகக் கட்டளைகள் மற்றும் இன்னும் சில கடமைகள் போன்றவற்றை நிறைவேற்ற வேண்டும் என இந்த நாளை அதிகப்பாரமாக்கினார்கள்.
   - மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழ் சாபத் வருடம் இருந்து வந்தது. இதன் படி ஒவ்வொரு ஏழாவது வருடமும் ஓய்ந்திருக்க வேண்டும். (யாத்திராகமம்23:10, 11).

e) சாபத் அநுசரனைகளை யூதர்கள் கைக்கொள்ளாத காரணத்தால் 70 ஆண்டு காலங்கள் பாபிலோன் அடிமைத்தனத்தில் இருக்க நேர்ந்தது. (லேவியராகமம்26:33-35, 2 நாளாகமம்36:20, 21, தானியேல் 9:2, எரேமியா25:11, 12, எரேமியா29:10).

6. சாபத் தினமானது [சனிக்கிழமை] பழைய சிருஷ்டியைக் குறித்து பேசுகிறதாய் இருக்கிறது யாத்திராகமம் 20, 31 and எபிரெயர் 4. - கர்த்தருடைய நாள் [ஞாயிற்றுக்கிழமை] புதிய சிருஷ்டியைக் குறித்து பேசுகிறதாய் இருக்கிறது. சனிக்கிழமையானது தேவனின் குடும்பமாகிய இஸ்ரவேலருக்குரியதாய் இருக்கிறது, ஞாயிற்றுக்கிழமையானது ராஜரீக தேவனது குடும்பமாகிய சபைக்கு உரியதாய் இருக்கிறது. மத்தேயு 28:9, கலாத்தியர் 6:15, எபிரெயர் 9:15, 10:20, 1 பேதுரு 2:9-10.

7. கர்த்தரின் நாள்:

கர்த்தரின் நாள் (ஞாயிற்றுக்கிழமை) புதிய சிருஷ்டியின் ஞாபகார்த்த தினமாய் இருக்கிறது, மற்றும் கிறிஸ்துவுக்குள் சபையின் உயிர்த்தெழுந்த தினமாய் அநுசரிக்கப்படுகிறது. (2 கொரிந்தியர்5:17, கலாத்தியர்6:15,எபிரெயர்9:15, 10:20).
புதிய ஏற்பாட்டில் எல்லா நாட்களும் கர்த்தரின் நாட்களாய் இருக்கின்றன. (ரோமர் 12:1-2, எபேசியர் 4:1-3).
சபை யுகத்தில் விசுவாசிகளுக்காக ஒவ்வொரு சந்தர்ப்பமும் "சாபத்" ஆக இருக்கிறது. (எபிரெயர்4:1-3).

8. ஞாயிற்றுக் கிழமை முக்கியம் வாய்ந்த நாளாயிருப்பதற்கான காரணம்:

இது கர்த்தர் உயிர்த்தெழுந்த நாளாய் இருக்கிறது. (மத்தேயு 28:1).
சீஷர்கள் கூடின முதல் நாளாய் இருக்கிறது. (யோவான்20:19).
கர்த்தர் புதிய போதனைகள் அளித்த நாளாய் இருக்கிறது. (லூக்கா24:36-39).
இது பெந்தெகொஸ்தே நாளில் சபை துவங்கின நாளாய் இருக்கிறது, பெந்தெகொஸ்தே நாள் எப்பொழுதும் ஞாயிற்றுக் கிழமையாகவே இருக்கிறது. (அப்போஸ்தலர் 2.)
ஆரம்பகால சபை இந்நாளில் கூடி ஆராதனை செய்தது. (அப்போஸ்தலர் 20:6-7).
இந்த நாள் காணிக்கைகளை கொடுக்கும் நாளாய் அனுசரிக்கப்பட்டது.. (1 கொரிந்தியர்16:2).
இந்த நாள் இயேசுக் கிறிஸ்து உயிர்த்தெழுந்தபின்னர் தேவனிடத்திற்கு ஏறிப்போன நாளாய் இருக்கிறது. (யோவான் 20:17).

9. ஞாயிற்றுக் கிழமையானது தேவனால் ஆசீர்வதிக்கப்பட்ட நாளாய் இருக்கிறது. ஒரு வேளை ஏழாம் நாள் ஓய்வை ஆசரிக்கும் செவந்த் டே அட்வண்டிஸ்ட்கள் சனிக்கிழமையை ஓய்வு நாளாய் ஆசரிப்பதற்கு முன்னரே, ஞாயிற்றுக் கிழமைகளில் ஆதி சபையினர் ஆராதனை செய்து இந்நாளை முக்கியப்படுத்தின சந்தர்ப்பத்தில் கிறிஸ்து தலையிட்டு இதற்கு தடை செய்திருக்க வேண்டும்.

10. "கிறிஸ்தவ சாபத்" என்ற ஒன்றே கிறிஸ்தவத்திற்கு கிடையாது. எபேசியர் 4:1-3, ரோமர் 12:1, 2. ஒவ்வொரு நாளும் கிறிஸ்தவர்களுக்கு முக்கியமான நாளாய்க் கருதி, ஒவ்வொரு நாளிலும் கர்த்தருக்காய் வாழ எதிர்பார்க்கப்படுகின்றனர். ஒவ்வொரு நாளும் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டு வாழுதல் மிகவும் முக்கியமானதாய் இருக்கிறது. புதிய பிறப்பை கொண்டாடும்படி, நாம் கர்த்தருடைய நாளில் ஒன்று கூடுகிறவர்களாய் இருக்கிறோம், இந்நாள் கர்த்தர் ஜெயம்கொண்ட நாளாய்

இருக்கிறது, இந்நாளில் சபையானது துவங்கினதாய் இருக்கிறது, [இந்நாள் சபையின் பிறந்த நாளாய் இருக்கிறது.]

11. ஒவ்வொரு சந்தர்ப்பமும் "சாபத்" என்னும் கருத்து குறித்து, பழைய ஏற்பாட்டில், நான்கு வேதபகுதிகள் விவரிக்கப்படுகின்றன.

செங்கடலில் மோசே (யாத்திராகமம்14:10-14).
ஆபிரகாம் (ரோமர்4:17-21, ஆதியாகமம்22, எபிரெயர் 11:17-19).
யோசேப்பின் எழும்புகள். (எபிரெயர் 11:22).
காலேபும் இராட்சதர்களும் (எண்ணாகமம் 13,14, யோசுவா 14:6-14, 15:14, நியாதிபதிகள் 1:20).

ஞாயிறு ஆராதனை ஒழுங்குகள் - இதில் பரிமாறப்படுபவைகள் எவைகள்?

[அ] உங்கள் ஆராதனையில் முதலாவதாக, எப்பொழுதும் சிலுவை, மற்றும் உயிர்த்தெழுதல், கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து உயர்த்தப்படுதல் அவசியம்.

[ஆ] ஆராதனையில் ஜனங்கள் இரட்சகரின் பாதத்தில் நேரம் செலவளிக்க ஒதுக்கப்படுதல் வேண்டும். ஜனங்கள் வாய்விட்டு, அல்லது மனதில் கர்த்தை துதித்தல் மிகவும் அவசியமானது.

[இ] ஆராதனையில் பொதுவான மற்றும் தனிப்பட்ட ஜெபங்கள் இடம் பெறுதல் வேண்டும். ஜெபம் ஆராதனையின் மையமாய் இருத்தல் வேண்டும். அமைதியான ஜெப நிலை மிகவும் அத்தியாவசியமானது, இதினால் ஒவ்வொரு நபரும் தனிப்பட்ட நிலையில் கர்த்தருக்கு முன்னிலையில் ஜெபிக்க வாய்ப்பை அளிக்கிறோம். பொதுவான ஜெபக்குறிப்புக்களுக்காய் அனைவரும் ஒருமித்து ஜெபிக்க ஒருவர் ஜெப ஆராதனை நடத்துதல் வேண்டும். ஆராதனை நேரத்தில் அநேக ஜெப நேரங்களை ஒதுக்குதல் வேண்டும்.

[ஈ] துதிப்பாடல்களும் மற்றும் அற்பணம் செய்தலும் ஆராதனையின் ஒரு பகுதியாய் இருக்கிறது. பாடல்கள் தெரிவு செய்யும் போது அவைகள், ஆராதனை, தொழுது கொள்ளுதல், துதி, அற்பணிப்பு போன்ற அர்த்தங்களை தழுவிய பாடல்களாய் இருத்தல் அவசியம். கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின் ஆளத்துவம் மற்றும் அவர் ஆற்றிய ஒப்பற்ற கிரியைகள் இவைகளை மேன்மை படுத்துவதாய் இருத்தல் வேண்டும்.

[உ] தேவனது வார்த்தையை அளிப்பது ஆராதனையின் மையமாய் திகழுதல் வேண்டும். மக்கள் தேவனது வார்த்தை மூலம், கர்த்தரிடமாய் இழுத்துக் கொள்ளப்படுதல் வேண்டும். இதன் மூலம் அவர்கள் கர்த்தரை அதிகமாய் அறிந்து கொண்டு அவர் அருகில் செல்ல வழிநடத்தப்படுதல் வேண்டும். மற்றும் சத்தியத்தை அறிவதன் மூலம் அவர்களில் விடுதலையுண்டாக வேண்டும், அவர்களைப் பற்றிக்கொண்டுள்ள தவறான உபதேசங்களின் அடிமைத்தனத்திலிருந்து அவர்களுக்கு விடுதலை உண்டாகுதல் வேண்டும்.

[ஊ] ஒவ்வொரு ஆராதனையிலும் வேதாகம உபதேசங்கள் அறிவிக்கப்படுதல் வேண்டும்; அது கர்த்தரிடம் அதிகமாய் அன்பு கூற வழிநடத்துகிறதாய் இருக்கும், அவருக்கு பணிவிடை செய்ய, அவரை அதிகமாய் அறிந்து கொள்ள வகை செய்வதாய் இருக்கும். நாம் சேவை செய்வதற்கென இரட்சிப்படைந்துள்ளோம். ஐக்கிய நேரம்

முடிந்து வெளியே செல்லும் போது, வீதிகளில் சேவை செய்யும் தருணங்களை ஏற்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

[எ] ஆராதனைகளில் இரட்சிப்பிற்கேதுவான செய்தி அளிக்கப்படுதல் வேண்டும். இரட்சிப்பை சுவிஷேசமாய் அறிவித்தல் வேண்டும். அவர் நம்மை இரட்சித்ததை நினைவு கூர்ந்து, அவரை துதித்து உயர்த்தி மகிமை படுத்துதல் அவசியம். ஒவ்வொரு ஞாயிறு ஆராதனைக்கும் கூடும் சந்தர்ப்பங்களில், ஒவ்வொருவரும், கர்த்தர் முதல் ஞாயிறு காலை வேளையில் என்ன செய்தார் என்பதையும், அவர் ஜெயம் பெறும்படியாக சிலுவையில் என்ன செய்தார் என்பதனைக் குறித்து கேட்டு செல்கிறவர்களாய் இருத்தல் வேண்டும். "உங்கள் சரீரங்களை பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுத்தல் வேண்டும்." ஆராதனை என்பது தேவனுக்கும், தேவ ஜனங்களுக்கும் இடையே உள்ள சம்பாஷனையாய் இருக்கிறது.

பரிந்துரை செய்யப்படும் ஆராதனை ஒழுங்கு குறித்த பட்டியல்:

வித விதமான நல்ல ஆராதனை ஒழுங்களை பட்டியலிடுதல் அவசியம். உங்கள் ஆராதனை ஒழுங்கு குறித்த பட்டியலானது மிகவும் கண்டிப்பு நிறைந்ததாய் இருத்தல் கூடாது, அது சமயத்திற்கேற்ப மாற்றிக் கொள்ளுதலும் அவசியம். அவ்வாறு மாற்றிக்கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்களில், எவ்வகையான மாற்றங்களை செய்யவிருக்கிறீர்களோ அதை செய்யும் முன் கீழ்க்காணும் கேள்விகளைக் கேட்டு பின்னர் மாற்றிக்கொள்ளுதல் வேண்டும்.

1. இப்படிப்பட்ட மாற்றம், கர்த்தரின் ஆளத்துவம் மற்றும் அவரது கிரியைகள் குறித்து அதிகமாய் கவனம் செலுத்துகிறதற்கு வழிநடத்துகிறதா?

2. இப்படிப்பட்ட மாற்றமானது ஜனங்கள் இயேசுவில் அதிகம் அன்பு செலுத்தி, அவரிடம் நெருங்கும் தருணங்களை அளிக்கிறவைகளாய் இருக்கிறதா?

3. இப்படிப்பட்ட மாற்றமானது, ஜனங்கள் தங்களை "வேறுபடுத்திக் கொண்டு" [பரிசுத்தப்படுத்திக்கொண்டு] கர்த்தரை கனப்படுத்த வழிநடத்துகிறதாய் இருக்கிறதா?

4. இப்படிப்பட்ட மாற்றங்கள் கர்த்தருடன் அதிகமாய் ஐக்கியப்பட ஜனங்களுக்கு தருணங்களை அளிக்கிறதாய் இருக்கிறதா?

5. இப்படிப்பட்ட மாற்றங்கள் ஒவ்வொருவரின் காதுகளில் சுவிஷேசம் தொனிக்கும்படி செய்கிறதை நிச்சயப்படுத்துகிறதாய் இருக்கிறதா?

ஆராதனையின் முதல் பகுதியானது, செயல்பாடுகள் உள்ள பகுதியாய் இருத்தல் வேண்டும், அவைகள் செய்கிறவைகளாகவோ, அல்லது செய்ய வேண்டியவைகளாகவோ இருத்தல் வேண்டும். செய்ய வேண்டியவைகளை ஜனங்கள் தீர்மானிக்கும் போது, பியானோ வாசிப்பவர், சிந்தனையைக் கவரும் இசையை இசைத்தல் வேண்டும், ஜனங்கள் அமைதியுடன் இருந்து, ஜெபித்து தீர்மானங்களை எடுத்தல் வேண்டும், இசையானது ஜனங்கள் சத்தமிட்டு ஜெபியாத வண்ணம் மெல்லிய தொனியில் இசைத்தல் வேண்டும். ஒவ்வொரு வாரத்திலும், ஒரு வாக்குத்தத்த வசனம் எழுதப்பட்ட பேனர் ஒன்றை தயார் செய்து ஜனங்கள், அதை வாசித்தறிய, பின்னர் அதை தியானிக்க வகை செய்யும் விதத்தில் தொங்கவிடப்படுதல் வேண்டும். அல்லது

சபையில் டீ.வி. டிஸ்ப் பிளே இருக்குமானால் அதை பவர் பாயிண்ட் ல் எழுதி எல்லா டிஸ்ப்பிளேயிலும் எல்லாரது கண்ணில் படுமாறு செய்தல் வேண்டும். ஞாயிறு பள்ளி சிறுவர்களுகள் இதனை பெரியவர்களுக்காக தயார் செய்து அவர்கள் மனப்பாடம் செய்த வசனத்தை டிஸ்ப்பிளே செய்தல் வரவேற்கப்படுகிறதாய் இருக்கிறது. இதனால் இரு சாராரும் ஆசீர்வதாம் பெற வகை செய்யப்படுகிறது.

பல்லவிகள் / பாடல்கள் பாடப்படும் வேளையில் செயல்பாடுகளை நிகழ்த்துதல் வேண்டும். பரிசுத்தமுள்ள ஆவியுடன், செய்ய மற்றும் செய்யவிருக்கும் செயல்பாடுகளை நிகழ்த்துதல் வேண்டும். இதன் பொருள் வலுக்கட்டாயமாய் "தங்களை வேறுபடுத்திக்கொள்வது" இதன் பொருள் தங்கள் கவலை துக்கங்களை ஒதுக்கி வைத்துவிட்டு, அவ்வாரம் முழுவதும் கர்த்தரை ஆராதிக்கும்படி தங்களை பிரத்தியேகப்படுத்திக்கொள்வது. "ஆராதனை செய்யும்படியான அழைப்பு" செயல்பாடுகளை எல்லாம் செய்து முடித்த பின்னர் உள்ள ஆராதனையின் பகுதியாய் இருக்கிறது.

"ஆராதனைக்கு அழைப்பு" என்ற இப்பகுதியின் போது, கர்த்தருடைய ஊழியர் (அல்லது மற்ற சபையின் மூப்பர் / தலைவர்) எழுந்து நின்று (இவ்வாறு எழுந்து நிற்கும் போது, இராஜாதி இராஜாவின் அறிவிப்பாளராய், அவரது வார்த்தைகளை அறிவிக்க எழுந்து நிற்கிறோம் என்பதை நினைவில் கொள்ள வேண்டியது அவசியமாய் இருக்கிறது) அவர் சொல்ல வேண்டியது, "தேவனது வார்த்தையைக் கேளுங்கள்" எனக் கூறி, தெரிவு செய்யப்பட்ட வேதபகுதியை வாசித்தல் வேண்டும். இவ்வாறு ஆராதனைக்கு அழைப்புக் கொடுத்து, ஆராதனையைத் துவங்கும் மூப்பர் ஜெபித்து, பரிசுத்த ஆவியானவரால் ஆராதனைக்கு அவசியமான வேதபகுதியை தெரிவு செய்து வாசித்தல் வேண்டும்.

ஒரு தலைப்பின் கீழ் தேவ ஊழியர் பிரசங்கிப்பாரானால், அதை முன்கூட்டியே அறிவித்தல் வேண்டும், தேவ ஊழியர் எப்பொழுதும், மூப்பர் ஆராதனையை நடத்த அனுமதித்தல் வேண்டும், அவர் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதல் பேரில் ஆராதனைய நடத்துதல் வேண்டும், ஆராதனைத் தலைவர் சரியான பாடல்களை தெரிவு செய்து பாடல் ஆராதனையை நடத்துதல் வேண்டும்.

தேவ ஊழியராகிய நாம், பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்து, மற்ற தலைவர்கள் சரியான வேதவாசிப்பு மற்றும் பாடல்களைப் பாட அவரை நம்புதல் வேண்டும். பரிசுத்த ஆவியானவர் மற்றவர்களை வழி நடத்துவதை நாம் நம்பும்போது, தலைமைத்துவத்தில், நாம் ஆராதனை ஆவியை கட்டி எழுப்புகிறவர்களாய் இருப்போம். எல்லோரும் மகிழ்ச்சியுடன் ஆராதனையில் வழிநடத்தப்படுகிறவர்களாய் இருப்போம். தேவ ஊழியரே எல்லாவற்றையும் தெரிவு செய்வார் எனில், பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்துதலை அசட்டை செய்கிறவர்களாயிருப்போம்.

சபையின் ஆராதனையானது, எப்பொழுதும் தேவனது வார்த்தையுடன் துவங்குதல் வேண்டும். மட்டுமின்றி நமது ஆராதனையானது, சத்தியத்தில் வேரூன்றி, அஸ்திபாரமிடப்பட்டதாய் இருத்தல் வேண்டும். நாம் கட்டுக்கதைகளை பின்பற்றவில்லை, மாறாக சத்தியத்தைப் பின்பற்றுகிறவர்களாய் இருக்கிறோம், ஆராதனையின் ஆரம்பமும், முடிவும் சத்தியத்தின் அடிப்படையில் இருத்தல் வேண்டும். தேவனது வார்த்தை, மற்றும் இராஜாதி இராஜா மற்றும் கர்த்தாதி கர்த்தாவின் உயிர்தெழுந்த வல்லமை ஆராதனையில் விளங்குதல் மிகவும் அத்தியாசவசியமானது. 2 பேதுரு 1:16.

ஒழுங்கு படுத்தப்பட்ட "ஆராதனைக் குரிய அழைப்பு" இதனைத் தொடர்ந்து, "**ஒழுங்குபடுத்தப்பட்ட அற்பணிப்பின் ஜெபமானது**" ஏறெடுக்கப்படுதல் வேண்டும். பின்னர் அற்பணிப்பின் ஞானப்பாட்டு ஒன்றை அல்லது பாடல்கள் / பல்லவிகளை பாடி தேவஜனங்கள் ஆராதிப்பதற்கு அவர்களது இருதயங்களையும், மனதையும் ஆயத்தப்படுத்துதல் வேண்டும். அவர்கள் மகிழ்வுடனே அல்லது மிகக்கவனத்துடனே ஆராதனை ஆவியை ஏவி எழுப்புகிறவர்களாய் இருத்தல் வேண்டும், பாடலின் பொருள் மற்றும் அதன் வார்த்தைகள் தேவ ஜனங்களுக்கு ஊக்கமளிப்பதாயும், மற்றும் சவாலாகவும் அமைதல் வேண்டும், ஞாயிறு ஆராதனையில் இடம் பெறும் ஒவ்வொரு காரியமும், உயிர்த்தெழுந்த முதல் ஞாயிரன்று என்ன நிகழ்ந்தது என்பதை நினைவிற்குக் கொண்டுவருகிறதாய் இருத்தல் வேண்டும்.

முதல் பாடலைத் தொடர்ந்து, தேவனது வார்த்தையை வாசித்தல் வேண்டும், (இச்சமயத்தில் ஒரு சங்கீதப்பகுதியை வாசித்தல் வேண்டும் --- 1 கொரிந்தியர் 14:26) இதைத் தொடர்ந்து ஜெபித்தல் வேண்டும். பொதுவாய் ஏறெடுக்கப்படும் ஜெபம் எப்பொழுதும் சுருக்கமாய் இருத்தல் வேண்டும், மற்றும் வல்லமை பொருந்தினதாய் இருத்தல் வேண்டும், எப்பொழுதும் தனி ஜெபம் நீண்டதாய் இருத்தல் வேண்டும். பொதுவான ஜெபம் செய்யும் போது ஒரு ஐந்து நிமிடங்கள் ஜெபிப்பாரானால், அவர் நான்கு நிமிடங்கள் அதிகமாய் ஜெபித்துள்ளார். ஆராதனை நேரங்களில் ஏறெடுக்கப்படும் ஜெபம் எப்பொழுதும் சுருக்கமாய், கருத்தாய், வல்லமையுடன் இருத்தல் அவசியம், எதற்காக ஜெபிக்க வேண்டுமே அதற்காக மட்டும் ஜெபித்தல் மிகவும் அவசியம்.

காணிக்கை கொடுப்பது, ஆராதனையின் ஒரு பகுதியாய் இருக்கிறது. காணிக்கை கொடுக்கும் ஆராதனையானது, செய்தி முடிந்த பின்னர், ஆராதனையின் இறுதி நேரத்தில் இருக்க பரிந்துரை செய்யப்படுகிறது. இதுவே இறுதியான பரிந்துரை என்று அல்ல, காணிக்கை வசதிக்கேற்ப எப்பொழுது வேண்டுமானாலும் ஆராதனை நேரத்தில் எடுக்கலாம்.

பாடிய பாடல்களுக்குப் பொருத்தமான செய்தி அமைதல் அவசியமாய் இருக்கிறது. செய்தியைத் தொடர்ந்து துதி பாடலைப் பாடி, இறுதி ஆசீர்வாதத்துடன், தேவ ஜனங்களைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்து ஜெபித்து முடித்தல் வேண்டும். ஆராதனையானது உற்சாகமூட்டும் இசையுடன் நிறைவு செய்யப்படுதல் வேண்டும். ஜனங்கள் வெளியே செல்லும் போது, தாங்கள் ஒரு யுத்த களத்தில், யுத்தம் செய்வதற்காய் செல்கிறோம் என்கிற உணர்வுடன் வெளியே செல்லுதல் வேண்டும். இதைத் தொடர்ந்து ஐக்கிய விருந்தானது, பரிமாறப்படுதல், புசித்து, குடித்து, சகோதர ஐக்கியத்தைப் பெலப்படுதிக்கொண்டு, ஒருவர் பாரத்தை ஒருவர் ஏற்றுக்கொண்டு, பாரப்படுவோருக்காய் ஜெபித்து அவர்களுக்கு ஊக்கமளித்தல் நமது ஐக்கியத்தின் உயிர் நாடியாய் இருக்கிறது.

சபை ஆராதனை நேரமானது ஒரு மணி அல்லது ஒன்றரை மணி நேரம் இருத்தல் வேண்டும். ஆராதனை மாரத்தான் போன்று இருப்பது குறித்து எச்சரிக்கையாய் இருத்தல் வேண்டும். மக்கள் நீண்ட நேரம் ஆராதனையில் கவனம் செலுத்தக்கூடும், ஆனால் சிறுபிள்ளைகளோ, குறுகிய நேரத்திற்கு மட்டுமே அமைதி காக்கிறவர்களாய் இருப்பர். பிள்ளைகள் கூச்சலிட்டு, குழப்பமுண்டாக்கும் போது, ஜனங்கள் எதையும் தெளிவாக கேட்டு உணர இயலாதவர்களாய் இருப்பர். நீங்கள் ஒரு நீண்ட ஆராதனை செய்ய வேண்டியவர்களாய் இருக்க நேரிடும் போது, சிறு பிள்ளைகள் பொறுப்பெடுக்கப்பட்டு, அவர்கள் நன்கு உபசரிக்கப்பட ஆயத்தம் செய்திருத்தல்

அவசியமானதாய் இருக்கிறது. நீண்ட ஆராதனை நடத்துவது குறித்து எச்சரிப்புடன் இருங்கள், இப்படிப்பட்ட நீண்ட ஆராதனையானது வல்லமையுடன் இருத்தல் மிகவும் அவசியமானதாய் இருக்கிறது. ஜனங்களுடன் அதிகமாய் பேசுவதைக் காட்டிலும், பரிசுத்தாவியானவரின் வல்லமையால் ஜனங்கள் ஆட்கொள்ளப்படுவது முக்கியமாய் இருக்கிறது, வேதாகமத்தை போதிக்கும் போது, ஜனங்கள் பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னத்தை உணர்ந்து, ஆவியினால் நிரப்பப்படுகிறவர்களாய் இருத்தல் அவசியமாய் இருக்கிறது.

தேவ ஊழியர், சபை போதகர் ஒரு போதனையாளராய் இருக்கிறார் என்பதனை நினைவில் கொள்ளுதல் வேண்டும். **2 தீமோத்தேயு 4:2** ஐ வாசிக்கவும். ஒரு போதகர் தேவனது வார்த்தையை பகுத்துப் போதிக்கிறவராய் இருத்தல் வேண்டும். பேதுருவுக்கு இயேசுவின் வார்த்தைகள் வல்லமை பொருந்தினதாயும், எளிமையானதுமாய் இருந்தது -- "எனது மந்தையை மேய்ப்பாயாக" யோவான் 21:15-19. உங்கள் போதனையில் நான்கு கருத்துகளை நினைவில் கொள்ளுதல் வேண்டும்.

[அ] <u>ஜெபத்துடன் கூடிய கடின முயற்சி செய்து கற்றுக்கொள்ளுதல், பிரசங்க பீடத்தில் நீங்கள் பீதியடைந்து வியர்த்துக் கொட்டி, மக்கள் முன்னிலையில் குற்ற மனசாட்சியுடன் நிற்பதைத் தவிர்க்கும்.</u> 2 தீமோத்தேயு 2:16,16 ஐ வாசிக்கவும், -- ஒரு தேவ ஊழியர் அறியாதவற்றையும், புரியாதவற்றையும் உளருகிறவராய் இருத்தல் கூடாது, மிகவும் சுறு சுறுப்பான மற்றும் மிகுந்த மன அழுத்தத்துடன் தேவ மனிதரிடம் வந்து, தேவனது வார்த்தைகளை கேட்க வரும் மக்களை ஏமாற்றி அனுப்புதல் கூடாது, அவர்களுக்கு அவசியமான தேவனது வார்த்தைகளைக் கூற வேண்டுமேயல்லாது, புத்தக அறிவை அவர்களுக்கு புகட்டுதல், சொந்த கருத்துக்களை அளித்தல் தவிர்க்கப்படுதல் வேண்டும். ஒரு தேவ ஊழியர், தேவ வார்த்தைகளை வல்லமையுடன் அளிக்கும் தேவ உழியராய் இருத்தல் அவசியம், இதன் பொருள் மனதையும், இருதயத்தையும் பரிசுத்த ஆவியானவரின் நிறைவானது ஆக்கிரமிப்பு செய்யும் வண்ணம் பிரசங்கித்தல் வேண்டும்.

[ஆ] KISS method ஐப் பயன்படுத்துதல் வேண்டும் -- <u>**K**eep **i**t **S**imple and **S**incere</u>. எளிமையும் யதார்த்தமுமானவைகளாய் நமது போதனை இருத்தல் வேண்டும். பாடத்திட்ட ஒழுங்கு பிரகாரம், மற்றும் குழப்பங்கள் மிகுதியாய் போதனை செய்ய முயலுதல் கூடாது. அதிகமான புத்தகங்களில் இருந்து அதிகமான மேற்கோள் காட்டுதல் கூடாது, வேத வசனங்களை தெளிவுபடுத்தி, வேத வசனங்களை மேற்கோள் காட்டுதல் அவசியம். ஒரு வேளை மனிதரின் மேற்கோள்களை உங்கள் பிரசங்கத்தில் கொடுக்க நினைப்பீர்களானால், பின்னர் ஜனங்கள் அவற்றை ஒப்பிட்டுப்பார்க்க அவற்றை உங்கள் பிரசங்க குறிப்பில் இருக்குமாறு ஜனங்களுக்குக் கொடுங்கள், அதே சமயம் மனிதரின் மேற்கோள்களை மக்கள் பெரிது படுத்தி அதை தங்கள் மனதில் இறுத்திக் கொள்ளாதவாறு பார்த்துக்கொள்ளுதல் வேண்டும். வேதாகமத்தையும், வேத வசனங்களை மட்டுமே மனிதர் கேட்டல் அவசியம், அதுவே தேவனது கொள்கையாய் இருக்கிறது, மனிதரின் சிந்தனைக் கருத்துக்களை மனதில் இடம் பெற அனுமதித்தல் தவிர்க்கப்படல் வேண்டும்.

[இ] <u>அதிகமான வாக்குத்தத்தம் அளித்து ஒன்றும் நிகழாதிருக்கச் செய்தல் கூடாது:</u> ஏதோ ஒன்றை மூடி மறைக்க, வாக்குகள் அளித்துவிட்டு, பின்னர் அதைச் செய்யாது இருத்தல் கூடாது. எந்த ஒன்றையும் அதிகமாய் மூடி மறைக்க முயலாதிருங்கள், உங்களது ஆழமான விஷயங்களில் இருந்து வெளிவர முயலாது இருங்கள். நீங்கள் போதிக்க இருக்கும் வேதபகுதியின் அர்த்தம் என்ன என்பதை தெளிவாய் புரிந்து

கொள்ளும் வரைக் காத்திருங்கள். அவ்வேதபகுதியுடன் பரிசுத்த ஆவியானவரின் சமூகத்தில் அமர்ந்து, புரிந்து கொள்ள முயன்று, அதில் தெளிவடைந்த பின்னர், அவ்வேதபகுதியை போதியுங்கள். அவ்வேதபகுதிக்குரிய மேலோட்டக் கருத்துக்கள் அல்லது அருவருப்பான விபரங்களை பயன்படுத்தாதிருங்கள். சில வேளைகளில் ஜனங்கள் அதிர்ச்சிக்குள்ளாகக் கூடும், இப்படிப்பட்ட அதிர்ச்சி தரும் செய்திகளையே உங்கள் போதனையாக்கிக்கொள்ளாதிருங்கள். ஒருவருடன் முக முகமாய் கூறத்தைரியமில்லாத கருத்துக்களை பிரசங்க பீடத்திலிருந்து சொல்லுதல் கூடாது. நீங்கள் சொல்வது பரிசுத்த ஆவியானவரது செய்தியாய் இருக்கிறது என்பதை நிச்சயித்துக் கொண்டு பின்னர் அதைச் சொல்லுங்கள்.

[ஈ] <u>வேதாக ரீதியில் பிரசங்கம் செய்யுங்கள், வேத வசனங்களை மட்டுமே போதிக்கத் தலைப்படுங்கள்:</u> உதாரணங்கள் கொடுத்து உங்கள் பிரசங்கம் உயிருடன் இருக்கச் செய்யுங்கள், வேத வசனங்களுக்கு உயிர்கொடுங்கள். மிகவும் ஆர்வமுள்ளவராய் இருங்கள். நீங்கள் ஆர்வக்குறைவின்றி காணப்படுவீர்களானால், உங்கள் ஆவிக்குரிய வாழ்வில் ஏதோ குறைபாடு உண்டு என்பதனை அது காட்டுகிறதாய் இருக்கிறது. கர்த்தரில் மகிழ்ச்சியாய் இருந்து அது உங்கள் பெலனாகுவரைக்கும், பிரசங்க பீடத்தை விட்டு விலகியிருங்கள். நீங்கள் போதிக்கும் ஒவ்வொரு சத்தியத்தமும், கர்த்தரின் உயிர்த்தெழுதலை சுற்றிலும் நங்கூரமாய் அமைவதாக. அதுவே "நற்செய்தியின்" மையமாய் இருக்கிறது. அதையே நாம் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் அறிவிக்கிறவர்களாய் இருக்கிறோம்.

ஜெபக்கூடுகைகள் சபையின் வல்லமை வெளிப்படும் வீடாய் கருதப்படுகிறது. உங்கள் ஞாயிறு ஆராதனை வல்லமை குன்றிக் காணப்படுமானால், அவ்வாரத்தில் சபையானது ஜெபத்தில் பெலவீனமாய் காணப்பட்டு வருகிறது என்பதைக் காட்டுகிறது. வாராந்திர ஜெபக்கூடுகைகளை ஒழுங்கு செய்து, அதில் ஒரு வேதபகுதியை வாசித்து, அதைத் தொடர்ந்து, அற்பணிப்பிற்காக, ஜெப நேரத்தை செலவளியுங்கள், அதைத் தொடர்ந்து அமைதியாய் ஜெபிக்க நேரம் ஒதுக்குங்கள். இப்படிப்பட்ட ஜெபக்கூடுகைகளில், சுருக்கமான போதனை நேரம் இருப்பது வரவேற்கப்படுகிறது. இப்போதனையில், வேதாகமத்தில் காணப்படும் வல்லமை மிக்க பெரிய ஜெபங்களைக் குறித்து போதனை அளித்தல் வேண்டும். இவ்வேத போதனை சுருக்கமாய் 15-20 நிமிடங்களுக்குள் இருத்தல் வேண்டும்.

கரும்பலகையில் அல்லது பேப்பர் ஷீட்டில், ஜெபக்குறிப்புகளை எழுதி, கூடிவந்தவர்கள் அனைவரும் வாசித்து ஜெபிக்க செய்தல் வேண்டும். இப்படிப்பட்ட ஜெபக்குறிப்புகளை சேகரித்தல், சபையின் ஜெப ஒருங்கினைப்பு செய்யும் மூப்பரும், அவரது குழுவும், தொகுத்து அளித்தல் வேண்டும்.

இப்படிப்பட்ட ஜெபக்கூடுகைகளில், தனிப்பட்ட நபரின் பாவத்தை குறித்து விவாதித்தல் கூடாது. (இப்படிப்பட்ட சூழலில் அவர்களது பாவமானது விவாதிக்கப்படுமேயானால், இப்படிப்பட்டவர்கள் சபைக்குள் வருவது தடை செய்வதாய் இருக்கும்.) இப்படிப்பட்ட செயல்பாடுகள் சிட்சை அளிக்கும் வழிமுறையில் இறுதியான காரியமாய் இருக்கிறது.

உங்கள் குழுவானது பெரிதாய் இருக்குமேயானால், அதை சிறிய குழுக்களாக்கி, குழுவில் உள்ள ஒவ்வொருவரும் ஜெபிக்கத் தருணம் அளித்தல் வேண்டும், அவர்களுக்கு ஜெபக்குறிப்பை அவர்கள் கரத்தில் கொடுத்து ஜெபிக்க அவர்களை ஊக்குவித்தல் வேண்டும். இப்படிப்பட்ட வழிமுறையில் ஒவ்வொரு நபரும், ஒரு தலைப்பைக் குறித்து கவனம் செலுத்த ஊக்கமளித்தல் வேண்டும். தேவ ஊழியர் குழு

குழுவாக ஜெப விண்ணப்பங்களை பகிர்ந்தளித்தல் வேண்டும். இது மக்கள் எவ்வாறு ஜெபிக்கிறார்கள் என்பதனைக் கண்டுகொள்ளச் செய்கிறதாய் இருக்கிறது. ஜனங்கள் கூடுகைக்குத் தக்கவாறு உங்கள் குழுக்களை அமைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

சிறு குழுக்களில் ஜெபக்குறிப்புகளை அளித்து ஜெபித்து தீர்ந்த பின்னர், எல்லாக் குழுக்களையும் மறுபடியும் ஒன்று கூடச் செய்தல் வேண்டும். பின்னர் ஜெபக்கூட்டத்தை நிறைவு செய்ய, தேவனைப் பாடி துதிசெய்து, கர்த்தர் செய்த யாவற்றையும் நினைவுகூர்ந்து அவரை துதித்து, உயர்த்தி, மகிமை படுத்தி, ஜெபக்கூட்டத்தை நிறைவு செய்தல் வேண்டும். அவர்கள் ஏறெடுத்த ஜெபத்தைக் குறித்து அவர்களை உற்சாகப்படுத்தி, அவர்கள் வரக்கூடிய நாட்களில் கர்த்தரின் கோரிக்கைகளை ஏற்று அதற்குக் கீழ்ப்படிய சவாலாய்க் கூறி அவர்களை ஊக்குவித்தல் வேண்டும். இப்படிப்பட்ட ஜெபக்கூட்டங்களில், கணவன், மனைவி, அல்லது குடும்பம் என பிரித்து ஜெபிக்க வைக்க அவசியமில்லை.

C H Spurgeon அவர்கள் மரணத்தருவாயில் கூறிய வார்த்தைகள்: "அதிக ஜெபியுங்கள், அதிகம் விசுவாசியுங்கள், அதிகம் பெற்றுக்கொள்கிறவராகுங்கள்."

உபதேசங்கள்:

<u>சபை ஒழுங்கு</u>

1. சபைக்குள் வேத வசனங்களுக்கு கீழ்ப்படியாதவர்களை முதலாவது, எச்சரித்தல் வேண்டும், பின்னர் அவர்களை கடிந்துகொள்ள வேண்டும். (தனிப்பட்ட நிலையில் அத்தவறுகளை செய்திருப்பாரெனில் தனிப்பட்ட நிலையில் எச்சரித்து கடிந்து கொள்ள வேண்டும், பொதுவாய் எல்லார் முன்னிலையில் செய்திருப்பார் எனில் எல்லார் முன்னிலையில் எச்சரித்து கடிந்துகொள்ளபடுதல் வேண்டும்) 2 தெசலோனிக்கேயர் 3:14, தீத்து 1:13, 14.

2.. தொடர்ந்து சத்தியத்திற்கு கீழ்படியாமல் மீறி நடக்கும் தனிப்பட்ட நபரை சபை ஐக்கியத்தை விட்டு புறம்பாக்க வேண்டும், சபையின் மற்ற அங்கத்தினர் அத்தகைய நபரிடமிருந்து தங்களது ஐக்கியத்தை விலக்கிக்கொள்ளுதல் வேண்டும். 1 தீமோத்தேயு 6:3-5.

3. இன்னும் அவர்களில் ஒரு மாற்றமும் காணப்படவில்லையானால், அப்படிப்பட்டவர்களை முழுவதுமாய் (நிரந்தரமாய்) ஐக்கியத்திலிருந்து விலக்கிவிடுதல் வேண்டும். தீத்து 3:10 கலாத்தியர் 1:6 -10.

4. பவுல் தவறான போதனை குறித்து எச்சரிப்பு கொடுக்கிறார். 1 தீமோத்தேயு1: 4, 11. இம்மனேயு, அலெக்சாந்தர் இவ்விருவரையும் தவறான போதனை கொடுத்ததினிமித்தம் அவர்கள் சத்தியத்தை அறியவும், தூஷிப்பதை நிறுத்தவும் அவர்களை சபையிலிருந்து வெளியேற்றினார். 1தீமோத்தேயு1:18-20.

5. சபைக்கு புறம்பாக்குதல் என்பது தற்காலிகமாயிருக்கிறது, இது அந்நபர் மனந்திரும்பாதவரை நீடிக்கும், அவர் மெய்யாய் மனந்திரும்பி வருவாரேயானால் அவரை கெட்ட குமாரனைப்போல மறுபடியும் ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். லூக்கா15:11-32, விபச்சாரத்தில் உள்ள மனிதனுக்கும் அப்படியே செய்யப்படுதல்

வேண்டும். 1 கொரிந்தியர் 5:1-13. 2கொரிந்தியர்2:5-11.

இசை:

1. இசை என்பது சிருஷ்டிப்பின் ஆரம்பத்திலிருந்தே இருக்கிறதாய் இருக்கிறது (யோபு 38:7).

2. எகிப்திலிருந்து விடுதலையாக்கப்பட்ட இஸ்ரவேலர்கள் தங்களது பாடல் மூலமாய் தேவனுக்கு, நன்றியினை தெரிவித்தனர். (யாத்திராகமம் 15:1).

3. புனிதமான இசை அளிப்பவைகள்:-

> புத்துணர்வு மற்றும் அசுத்த ஆவிகளை துரத்துவது (1 சாமுவேல் 16:23).
> தேவனது வார்த்தையின் பிரசங்க ஊழியத்துக்கு, துணை செய்கிறதாய் இருக்கிறது. (2 இராஜாக்கள் 3:15,16).
> மனிதனை தேவனிடம் கொண்டுவர உதவுகிறது. (சங்கீதம் 40:1-3).
> எதிரியை தோற்கடிக்க உதவியாய் இருக்கிறது. (2 நாளாகமம் 20:21-22).
> தேவனது வீட்டை மகிமையால் நிரப்புவது. (2 நாளாகமம் 5:13,14).

4. சிறைப்பட்டுப் போன யூதர்கள் தங்களது பாடல்களை மறந்து விட்டனர் (சங்கீதம் 137:1-6) ஆனால் தங்களது சொந்த தேசத்திற்கு திரும்பிய போது அதை திரும்பப் பாடினர். (எஸ்றா 3:2,11).

5. வேதாகமத்தில் நாம் சங்கீதம், மிரியாமின் பாடல் போன்ற அநேக கீர்த்தனை பாடல்களைப் பெற்றிருந்தும் அவைகளுக்கு முறையாய் பாடும்படியான இசை நோட்ஸ் இல்லை. கீர்த்தனைப்பாடல்கள் இசையோடு சேர்ந்து பாடுதல் மிகவும் முக்கியம் வாய்ந்ததாய் இருக்கிறது, அவ்வாறு பாடும்போது விசுவாசி உணர்ச்சிவசப்பட்டு பரவசத்துடன் பாடி தேவனை துதிக்கும்படியான விளைவை அது உண்டாக்குகிறதாய் இருக்கும்.

6. மீட்கப்பட்டவர்கள் பாடும் பாடல் இருக்கிறது (கொலோசெயர் 3:16) இதன் விளைவு பரிசுத்த ஆவியானவரின் நிறைவை அளிக்கிறதாய் இருக்கிறது. (எபேசியர் 5:18,19).

7. பரலோகில் புதிய பாடல் இருக்கும் (வெளிப்படுத்தல் 5:9).

<u>கர்த்தருடைய மேஜை / திருவிருந்து</u>

திருவிருந்து ஆராதனையானது, கர்த்தருடன், விசுவாசிகளை ஐக்கியத்தில் இணைக்கிறதாய் இருக்கிறது, மட்டுமின்றி விசுவாசிகள் ஒருவருடன் ஒருவராய் இணைக்கிறதுமாய் இருக்கிறது. இப்படிப்பட்ட சந்தர்ப்பங்கள் எப்பொழுதும், மகிழ்ச்சிநிறைந்த பயபக்திக்குரிய சந்தர்ப்பமாய் விளங்குகிறது. இது கர்த்தரின் மரணம், உயிர்த்தெழுதல், திரும்ப வருவிருப்பதன் நிச்சயத்தை நினைவுபடுத்துவதாய் இருக்கிறது. இது ஒரு வெற்றியின் கொண்டாட்டமாய் ஆசரிக்கப்படுகிறது. கிறிஸ்து எல்லாவற்றிலும் ஜெயமெடுத்தார். அவர் திரும்ப வரும் வரை இதைக்

கொண்டாடுகிறவர்களாய் இருக்கிறோம். இருப்பினும் நமது கண்களை சிலுவை மீது பதித்து -- அவர் செலுத்திய கிரயத்தினை நினைவு கூறுகிறவர்களாய் இருக்கிறோம்.

பொருத்தமான வேதபகுதிகள்: மத்தேயு 26:26-30, மாற்கு 14:22-24, லூக்கா 22:19-20, யோவான் 13:1-20, 1 கொரிந்தியர் 11:20-34. இவ்வேதபகுதிகளை வேதத்தை திறந்து வாசித்து, இவற்றை திருவிருந்து ஆராதனைகளில் பயன்படுத்துதல் வேண்டும்.

மத்தேயு 26:26-30.

"அவர்கள் போஜனம் பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து, நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாய் இருக்கிறது என்றார். பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி அவர்களுக்குக் கொடுத்து, நீங்கள் எல்லாரும் இதிலே பாணம் பண்ணுங்கள், இது பாவ மன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக் குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது. இது முதல் இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடேகூட என் பிதாவின் இராஜ்ஜியத்திலே நான் பானம் பண்ணும் நாள் வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டைப் பாடிய பின்பு, ஒலிவ மலைக்குப் புறப்பட்டுப் போனார்கள்.

***மாற்கு** 14:22-26.*

"அவர்கள் போஜனம் பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து நீங்கள் வாங்கிப்புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அதை அவர்களுக்குக் கொடுத்தார். அவர்களெல்லாரும் அதிலே பானம் பண்ணினார்கள். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி, இது அநேகருக்காச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது. நான் தேவனுடைய இராஜ்ஜியத்தில் நலமான ரசத்தைப் பானம்பண்ணும் நாள் வரைக்கும் திராட்சப்பழரசத்தை இனி நான் பானம்பண்ணுவதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் செல்லுகிறேன் என்றார். அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டைப் பாடிய பின்பு, ஒலிவ மலைக்குப் புறப்பட்டுப்போனார்கள்."

***லூக்கா** 22:14-30.*

"வேளைவந்தபோது, அவரும் அவருடனே கூடப் பன்னிரண்டு அப்போஸ்தலரும் பந்தியிருந்தார்கள். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி; நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாய் இருந்தேன். தேவனுடைய இராஜ்ஜியத்திலே இது நிறைவேறுமளவும் நான் இனி இதைப் புசிப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி, அவர் பாத்திரத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, நீங்கள் இதை வாங்கி உங்களுக்குள்ளே பங்கிட்டுக் கொள்ளுங்கள். தேவனுடைய இராஜ்ஜியம் வருமளவும் நான் திராட்சைப்பழ இரசத்தைப் பானம் பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். பின்பு அவர் அப்பத்தை எடுத்து ஸ்தோத்திரம் பண்ணி, அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து, இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது, என்னை நினைவு கூறும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம் பண்ணின பின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் கொடுத்து, இந்தப்பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாய் இருக்கிறது

என்றார். பின்பு, இதோ, என்னைக் காட்டிக்கொடுக்கிறவனுடைய கை என்னுடனேகூடப் பந்தியிருக்கிறது. தீர்மானிக்கப்பட்டபடியே மனுஷகுமாரன் போகிறார். ஆனாலும் அவரைக் காட்டிக்கொடுக்கிற மனுஷனுக்கு ஐயோ என்றார். அப்பொழுது அவர்கள் நம்மில் யார் அப்படிச் செய்வான் என்று தங்களுக்குள்ளே விசாரிக்கத் தொடங்கினார்கள். அன்றியும் தங்களில் எவன் பரியவனாயிருப்பான் என்று அவர்களுக்குள்ளே வாக்குவாதம் உண்டாயிற்று. அவர் அவர்களை நோக்கி; புறஜாதியாரின் இராஜாக்கள் அவர்களை ஆளுகிறார்கள், அவர்கள்மேல் அதிகாரம் செலுத்துகிறவர்களும் உபகாரிகள் என்னப்படுகிறார்கள். உங்களுக்குள்ளே அப்படியிருக்கக் கூடாது, உங்களில் பெரியவன் சிறியவனைப் போலவும், தலைவன் பணிவிடைக்காரனைப் போலவும் இருக்கக்கடவன். பந்தியிருக்கிறவனோ, பணிவிடை செய்கிறவனோ எவன் பெரியவன்? பந்தியிருக்கிறவன் அல்லவா? அப்படியிருந்தும், நான் உங்கள் நடுவிலே பணிவிடைக் காரனைப்போல் இருக்கிறேன். மேலும் எனக்கு நேரிட்ட சோதனைகளில் என்னோடே கூட நிலைத்திருந்தவர்கள் நீங்களே. ஆகையால், என் பிதா எனக்கு ஒரு இராஜ்ஜியத்தை ஏற்படுத்தினது போல, நானும் உங்களுக்கு ஏற்படுத்துகிறேன். நீங்கள் என் இராஜ்ஜியத்திலே என் பந்தியில் போஜனம் பண்ணி, இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கிறவர்களாய்ச் சிங்காசனங்களின்மேல் உட்காருவீர்கள் என்றார்."

***யோவான்** 13:1-26.*

"பஸ்கா பண்டிகைக்கு முன்னே இயேசு இவ்வுலகத்தைவிட்டுப் பிதாவினிடத்திற்குப் போகும்படியான தம்முடைய வேளை வந்தது என்று அறிந்து, தாம் இவ்வுலகத்திலிருக்கிற தம்முடையவர்களிடத்தில் அன்புவைத்தபடியே, முடிவுபரியந்தமும் அவர்களிடத்தில் அன்புவைத்தார். சீமோனின் குமாரனாகிய யூதாஸ்காரியோத்து அவரைக் காட்டிக்கொடுக்கும்படி பிசாசானவன் அவன் இருதயத்தைத் தூண்டிய பின்பு, அவர்கள் போஜனம் பண்ணிக் கொண்டிருக்கையில், தம்முடைய கையில் பிதா எல்லாவற்றையும் ஒப்புக்கொடுத்தாரென்பதையும் தாம் தேவனிடத்திலிருந்து வந்ததையும், தேவனிடத்திற்கு போகிறதையும் இயேசு அறிந்து, போஜனத்தை விட்டெழுந்து, வஸ்திரங்களைக் கழற்றிவைத்து, ஒரு சீலையை எடுத்து, அரையிலே கட்டிக்கொண்டு, பின்பு பாத்திரத்தில் தண்ணீர்வார்த்து, சீஷருடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக்கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார். அவர் சீமோன் பேதுருவினிடத்தில் வந்த போது, அவன் அவரை நோக்கி, ஆண்டவரே, நீர் என் கால்களைக் கழுவலாமா என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக நான் செய்கிறது இன்னதென்று இப்பொழுது நீ அறியாய், இனிமேல் அறிவாய் என்றார். பேதுரு அவரை நோக்கி, நீர் ஒருக்காலும் என் கால்களைக் கழுவப்படாது என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக, நான் உன்னைக் கழுவாவிட்டால், என்னிடத்தில் உனக்குப் பங்கில்லை என்றார். அதற்கு சீமோன் பேதுரு; ஆண்டவரே என் காலகளை மாத்திரமல்ல, என் கைகளையும் என் தலையையும் கூடக் கழுவவேண்டும் என்றான். இயேசு அவனை நோக்கி, முழுகினவன் தன் கால்களை மாத்திரம் கழுவ வேண்டியதாயிருக்கும், மற்றபடி அவன் முழுவதும் சுத்தமாயிருக்கிறான், நீங்களும் சுத்தமாயிருக்கிறீர்கள், ஆகிலும் எல்லரும் அல்ல என்றார். தம்மைக் காட்டிக்கொடுக்கிறவனை அவர் அறிந்திருந்தபடியால், நீங்கள் எல்லாரும் சுத்தமுள்ளவ்வர்கள் அல்ல என்றார். அவர்களுடைய கால்களை அவர் கழுவிய பின்பு, தம்முடைய வஸ்திரங்களைத் தரிந்துக் கொண்டு, திரும்ப உட்கார்ந்து, அவர்களை நோக்கி; நான் உங்களுக்குச் செய்ததை அறிந்திருக்கிறீர்களா? நீங்கள் என்னைப் போதகரென்றும், ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள், நீங்கள் சொல்லுகிறது

சரியே, நான் அவர்தான். ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள். நான் உங்களுக்குச் செய்தது போல, நிங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன். மெய்யாகவே, மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல, அனுப்பப்பட்டவன் தன்னை அனுப்பினவரிலும் பெரியவனல்ல. நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியால், இவைகளைச் செய்வீர்களானால், பாக்கியவான்களாயிருப்பீர்கள். உங்களெல்லாரையுங்குறித்து நான் பேசவில்லை, நான் தெரிந்துகொண்டவர்களை அறிவேன்; ஆகிலும் வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக; என்னுடனே அப்பம் புசிக்கிறவன் என்மேல் தன் குதிகாலைத் தூக்கினான். அது நடக்கும்போது நானே அவரென்று நீங்கள் விசுவாசிக்கும்பொருட்டு, இப்பொழுது அது நடப்பதற்கு முன்னமே அதை உங்களுக்குச் சொல்லுகிறேன். நான் அனுப்புகிறவனை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான், என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்ளுகிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். இயேசு இவைகளைச் சொன்னபின்பு, ஆவியிலே கலங்கி, உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என்று மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேனென்று சாட்சியாகச் சொன்னார். அப்பொழுது யாரைக் குறித்துப் பேசுகிறாரோ என்று சீஷர்கள் ஐயப்பட்டு, ஒருவரையொருவர் நோக்கிப்பார்த்தார்கள். அந்த சமயத்தில் அவருடைய சீஷரில் இயேசுவுக்கு அன்பானவனாயிருந்த ஒருவன் இயேசுவின் மார்பிலே சாய்ந்து கொண்டிருந்தான். யாரைக் குறித்துச் சொல்லுகிறாரென்று விசாரிக்கும்படி சீமோன் பேதுரு அவனுக்குச் சைகை காட்டினான். அப்பொழுது அவன் இயேசுவின் மார்பில் சாய்ந்துகொண்டு ஆண்டவரே, அவன் யார் என்றான். இயேசு பிரதியுத்தரமாக, நான் இந்த துணிக்கையைத் தோய்த்து எவனுக்குக் கொடுப்பேனோ, அவன்தான் என்று சொல்லி, துணிக்கையைத் தோய்த்து, சீமோனின் குமாரனாகிய யூதாஸ்காரியோத்துக்குக் கொடுத்தார்."

1 கொரிந்தியர் 11:23-34.

"நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன், என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அதைப் பிட்டு, நீங்கள் வாங்கிப்புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம் பண்ணின பின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து, இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாய் இருக்கிறது, நீங்கள் இதைப் பானம் பண்ணும்போதெல்லாம் என்னை நினைவுகூறும்படி இதைச் செய்யுங்கள் என்றார். ஆகையால், நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும், அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள். இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரதில் பானம் பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும், இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாய் இருப்பான். எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப்பாத்திரத்தில் பானம்பண்ணக்கடவன். என்னதினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம் பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி

போஜனபானம் பண்ணுகிறான். இதினிமித்தம் உங்களில் அநேகர் பலவீனரும், வியாதியுள்ளவர்களுமாயிருக்கிறார்கள், அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள். நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம். நாம் நியாயந்தீர்க்கப்படும்போது உலகத்தோடே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு, கர்த்தராலே சிட்சிக்கப்படுகிறோம். ஆகையால், என் சகோதரரே, நீங்கள் போஜனம் பண்ணக்கூடி வரும்போது, ஒருவருக்காக ஒருவர் காத்திருங்கள். நீங்கள் ஆக்கினைக்கேதுவாகக் கூடிவராதபடிக்கு, ஒருவனுக்குப் பசியாயிருந்தால் வீட்டிலே சாப்பிடக்கடவன், மற்றக் காரியங்களை நான் வரும்போது திட்டம்பண்ணுவேன்."

சுவிஷேசங்களில் கர்த்தருடைய மேஜயைக்குறித்த எளிமையான காரியங்கள் வெளிக்கொண்டுவரப்பட்டுள்ளது. மத்தேயு 26 ம் அதிகாரம் லீகலிஸத்திற்குள் வழிநடத்துகிறதாய் இருக்கிறது. இதற்கு இணையான மாற்கு சுவிஷேச வேதபகுதி, மற்றும் 1 கொரிந்தியர் 11 ம் அதிகாரத்தில் திருவிருந்து ஆசரிக்கப்பட்ட விதம் போன்றவை ஆரம்ப கால சபையில் திருவிருந்து கொண்டாடப்பட்ட விளக்கங்களை அளிக்கிறதாய் இருக்கின்றன.

மத்தேயு 26 ம் அதிகாரத்திலிருந்து சிலர் transubstantiation [இரசமும், அப்பமும், உண்மையாகவே இயேசுக்கிறிஸ்துவின் இரத்தமும், சரீரமுமாய் மாறிவிடுகின்றன என்பது குறித்த உபதேசம்] ஐ போதிக்கிறவர்களாய் இருக்கின்றனர். யூதா 3 ம் வசனத்தில் யூதா பரிசுத்தவான்களுக்கு அளிக்கும் அறிவுரை, மற்றும் அப்போஸ்த போதனைகள், இவற்றின் முலம் நாம் இரட்சிப்படைந்துள்ளோம், 1 கொரிந்தியர் 11 ன் விளக்கப்படி, எல்லாத் தவறுகளையும் சரிசெய்து, திருவிருந்தைக் குறித்து இருந்த ஐயப்பாடுகளை புறம்பாக்குகிறதாய் இருக்கிறது. இவ்வித காரியங்கள் மற்ற வேதவாக்கியங்களால் என்ன விவரிக்கப்படுகிறது என்பதும் முக்கியம் வாய்ந்தனவாய் இருக்கின்றன.

1 கொரிந்தியர் வேதபகுதியின் ஆரம்ப சில வசனங்கள் ஆதி சபையினர் வாரத்தில் ஒரு முறை திருவிருந்தை ஆசரித்து வந்தனர் என்பதை தெளிவுபடுத்துகிறதாய் இருக்கிறது. ஞாயிற்றுக்கிழமை இரவு, அவர்கள் அனைவரும் ஒருமித்து கூடி, ஐக்கியப்படுகிறவர்களாய் இருந்தனர். இதில் அகாப்பே / அன்பின் விருந்தானது பரிமாறப்படுகிறதாய் இருந்தது. இவ்விருந்தானது திருவிருந்து ஆராதனையின் இறுதியில் பரிமாறப்படுகிறதாய் இருந்தது. இதைத் தொடர்ந்து வேதாகமப் போதனையானது, வரம் பெற்ற போதகரால் போதிக்கப்பட்டுவந்தது. அப்போஸ்தலர் 20:1ff. பவுல் கொரிந்தியரைச் சந்தித்தபோது, அவர்களுக்குள் காணப்பட்ட பிரச்சனையானது, அன்பின் விருந்தானது கலங்கப்படுத்தப்படுகிறதாய் இருந்தது. பெருந்தீனி, குடிவெறி, பொறாமை இன்னும் இதரப் பாவங்களால், இவர்களது அன்பின் விருந்தானது கறைப்பட்டதாய்க் காணப்பட்டது. இவைகள் அனைத்தும் பவுலின் கடிதத்தில் சரிசெய்யப்பட்டு எழுதப்பட்டுள்ளன. மட்டுமின்றி கர்த்தருடைய மேஜையை அவர்கள் எவ்வாறு ஆசரித்தல் வேண்டும் என்பது குறித்தும் விவரிக்கப்பட்டுள்ளது

அவர்கள் உணவு உட்கொண்ட பின்னர், கர்த்தருடைய மேஜையை (திருவிருந்து) ஆசரித்தனர், பின்னர் பிரசங்கியார் ஒரு நீண்ட பிரசங்கத்தை இதைத் தொடர்ந்து செய்வார். இதினிமித்தம் சிலரது மன நிலையானது, மற்றும் அநேகரது செயல்பாடுகள், அகாப்பே விருந்தானது கர்த்தரின் மேஜையை அவமரியாதைக்குள்ளாக்குகிறதாய் இருந்தது. இதன் விளைவால் சில கொரிந்தியர்கள் "மரணத்திற்கேதுவான பாவத்தில்" விழுவதற்கு ஏதுவுண்டானது.

இது மிகவும் கவனமாய் நமக்கு நினைவு படுத்தப்படும், தெய்வீக சபை நியமமாய் இருக்கிறது, இதை அசட்டை செய்து தூஷிப்போமெனில், கர்த்தரிடமிருந்து நியாயத்தீர்ப்பைப் பெறுகிறவர்களாயிருப்போம், இது சபை யுகத்தில் தெய்வீகமாய் ஆசரிக்க வேண்டிய சபை நியமமாய் இருக்கிறது. இதன் நோக்கம், கர்த்தருடைய காரியங்களில், "புறஜாதிய வழிமுறையில் எந்த ஒரு காரியம்" செல்லும் என்றாலும், அது தேவனது நியாயத்தீர்ப்புக்குட்படுத்தப்படுகிறது. கொரிந்து சபையில் தேவனது நேரடி நியாயத்தீர்ப்பினால் இந்தவிதமாய் இறந்தனர். இதனால் நாம், நமது விருப்பப்படி கர்த்தருடைய மேஜையை அனுசரியாது இருக்க நாம் எச்சரிக்கப்படுகிறவர்களாய் இருக்கிறோம்.

இங்கு பவுல் "ஒருவருக்காய் ஒருவர் காத்திருங்கள்" என்கிறார், அகாப்பே ஐக்கியவிருந்தானது, உண்பதற்கு போதிய அளவில் இருந்தது, ஆனால் அளவுக்கு அதிகமாய் இருக்கவில்லை. இவ்வாறு பகிர்ந்தளிக்கும் உணவுடன் மதுபானம் எதுவும் வழங்கப்படாது இருந்தது. ஒருவன் மிகவும் பசியாய் இருப்பானேயானால், சபைக்கு வருவதற்கு முன், வீட்டில் சற்றுப்புசித்து இளைப்பாறி வரும்படி கேட்டுக்கொள்ளப்பட்டான், இதினிமித்தம் அன்பின் விருந்தில், கட்டுப்பாடுகளை மீறி நடந்து கொள்ளாதவாறு இருக்க வகை செய்கிறதாய் இருக்கும். திருவிருந்து ஆராதனைக்கு முன்னாக இருக்கும் அன்பின் விருந்தானது, மரியாதையுடனும், அன்புடனும், நல்லொழுக்கத்துடனும், பரிசுத்த ஆவியானவரது கனி வெளிப்படும் வகையில் பிரதிபலிக்க வேண்டியதாய் இருந்தது.

இதில் எது குறைவுபட்டாலும் அது பாவமாகவும், திருவிருந்தானது கறைப்பட்டுப் போனதாயும் கருதப்பட்டது. இதன் அடிப்படைக் கருத்து என்னவெனில், தேவன் இத்தகைய சபை நியமத்தை மிகவும் கவனமாய் கையாள எதிர்பார்க்கிறவராய் இருக்கிறார். நீங்கள் அதை அவமரியாதைப் படுத்தும்போது, நினைவுபடுத்திக்கொள்ள வேண்டிய சிலுவையை, புறக்கணிப்பு செய்கிறவர்களாய் இருப்பீர்கள். இதனால் கர்த்தருடைய மேஜையானது, மிகவும் கவனமாய், அதிக ஜாக்கிரதையுடன் ஆசரிக்கப்பட வேண்டியதாய் இருக்கிறது.

திராட்சை இரசமானது இயேசுக் கிறிஸ்துவின் இரத்தத்தை நினைவுபடுத்துவதாயும், அப்பம் அவரது சரீரத்தை நினைவுபடுத்துவதாயும் இருக்கிறது. உங்கள் வாழ்வில் அறிக்கை செய்யாத பாவத்துடன், விருந்தில் பங்கெடுப்பீர்களானால், நீங்கள் குற்றமனசாட்சியுள்ளவர்களாய், கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் இரத்தத்தைக் குறித்தும், அவரது சரீரத்தைக் குறித்தும் குற்ற மனசாட்சியுள்ளவர்களாய் இருப்பீர்கள், மற்றும் இயேசுவை அவமதிக்கிறவர்களாயிருப்பீர்கள். திருவிருந்து ஆராதனைக்கு முன்னரே, பாவத்துடன் இடைபட்டு, ஆராதனை ஆரம்பிக்கும் முன்னரே பாவங்களை அறிக்கை செய்து மன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

பவுல் கூறுகிறார், நம்மை நாமே சோதித்து அறிந்தால், நாம் தேவனால் நியாயந்தீர்க்கப்படோம், என்கிறார். 1 கொரிந்தியர் 11:31. அப்பமும், திராட்சை இரசமும் உங்கள் வாழ்வில் உள்ள பாவத்துடன் இடைபடாதவரை அது உங்கள் உதடுகளை தொடாதிருக்கப்பார்த்துக்கொள்ளுதல் வேண்டும். 1 யோவான் 1:5-10. திருவிருந்திற்கு முன் பரிமாறப்படும் அன்பின் விருந்தில், அவமரியாதைக்குரிய செயல்பாடுகளானது, பெரிதான பாவத்தை உருவாக்குகிறதாய் இருந்தது, அது தீர்த்துவைக்கப்படாததாய் இருந்தது, தேவன் சில விசுவாசிகளுக்கு மரணத்தை அளித்து அதைத் தீர்த்துவைக்கிறவராய் இருந்தார்.

1 கொரிந்தியர் பதினொன்றாம் அதிகாரத்தில், கர்த்தருடைய மேஜைக்கான அடிப்படை ஒழுங்கைப் பெற்று இருக்கிறோம். நாம் 1 கொரிந்தியர் நிருபத்தில் சொல்லப்பட்டுள்ளவைகளில் இருந்து விலகுவோமெனில், நாம் அப்போஸ்தல போதனையிலிருந்து வழிவிலகுகிறவர்களாய் இருப்போம். பவுல் இங்கு என்ன சொல்கிறாரென்றால், திருவிருந்தை கவனமாய் கைக்கொள்ளாததினால், தேவன் சபையாரை நியாயந்தீர்க்கிறவராய் இருக்கிறார். உங்கள் சபையில் திருவிருந்தின் போது, பிரச்சனைகள் இருக்குமேயானால், உங்கள் ஆசரிப்பை பரிசீலனை செய்து பார்க்கவேண்டியவர்களாய் இருக்கிறீர்கள். கர்த்தருடைய மேஜையை மிகவும் கவனமாய் ஆசரித்தல் வேண்டும், அதை உதாசீனப்படுத்துதல் ஒரு போதும் நிகழாதிருக்கப் பார்த்துக்கொள்ளுதல் வேண்டும்.

கர்த்தருடைய மேஜையில் பங்கெடுத்தல்:

திருவிருந்தில் யார் பங்கெடுப்பது? ஐக்கியத்தில் உள்ள அனைத்து விசுவாசிகளும் கர்த்தருடைய மேஜையில் பங்கு பெறத் தகுதியுள்ளவர்களாய் இருக்கின்றனர். அல்லது முழுகி ஞானஸ்நானம் பெற்றவர்கள் இதில் பங்கு பெற வேண்டியவர்களாய் இருக்கின்றனர். வேதாகம ரீதியில் கர்த்தருடைய மேஜையானது, கர்த்தரை ஆவியுடனும், உண்மையுடனும் நேசிக்கும் அனைவரும் அதில் பங்கு பெறும் வண்ணம் அது திறந்த நிலையில் வைக்கப்படுகிறதாய் இருக்கிறது. (கர்த்தருடைய மேஜை நம்முடையது அல்ல, அது கர்த்தருடையதாய் இருக்கிறது). கர்த்தருடைய மேஜையில் கலந்து கொள்வோர், பாவத்தை அறிக்கை செய்து விட்டுவிட்டோராய் இருக்க உற்சாகமளிக்கப்படுகிறார்கள், அதில் கலந்து கொள்ளுமுன்னர் அவர்கள் அவர்கள் பரிசுத்த ஆவியானவரால் கட்டுப்படுத்தப்படுகிறவர்களாய் இருத்தல் வேண்டும். இது கர்த்தருடைய மேஜையாய் இருக்கிறது, அது நம்முடையது அல்ல! அது மிகவும் கவனமாய் ஆசரிக்க வேண்டியதாய் இருக்கிறது, அதில் கலந்து கொள்வோருக்கு இவ்வுண்மைகளை தெளிவுபட அறிவிப்பது முக்கியமானதாய் இருக்கிறது.

திருவிருந்து ஆராதனையை நடத்துவது யார்? திருவிருந்தானது சபை நியமமாய் இருக்கிறபடியால், சபைத்தலைவர்கள், மூப்பர்கள் அல்லது டீக்கன்கள் இதை நடத்துதல் வேண்டும். இங்கே சாக்கிரமந்து கருத்தானது புகுத்தப்படவில்லை. எல்லோரும், வேதாகமத்தில் இது குறித்த வேதபகுதியை வாசித்தல் வேண்டும், கர்த்தரின் ஜனங்களை அழைத்து, ஜெபித்து அப்பத்தையும், திராட்சை இரசத்தையும் கர்த்தருடைய பந்தியில் கலந்து கொள்வோருக்கு பகிர்ந்தளிக்கச் செய்தல் வேண்டும். சபை மக்கள் கூடும் இடம், ஒரு சபைக்கட்டிடத்திற்குள் இருக்கலாம், அல்லது ஒரு சாதாரண கட்டிடத்தில் இருக்கலாம், அல்லது சிறைச்சாலையில், மற்றும் திறந்தவெளியில் இருக்கலாம். இது தனிப்பட்ட ஒரு காரியம் அல்ல, இது குடும்பம் சார்ந்த காரியமாய் இருக்கிறது. சபைக் குடும்பமானது, ஒன்று கூடி இதை ஆசரிக்க கடமைப் பட்டுள்ளார்கள். இயேசுக்கிறிஸ்துவின் விலையேறப்பட்ட இரத்தமானது அவர்கள் அனைவரையும் ஒன்றினைக்கிறதாய் இருக்கிறது. இந்த சபை நியமமானது, கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்து சிலுவையில் ஆற்றிய அவரது ஒப்பற்ற கிரியையின் நடுநாயகமாய் விளங்குகிறதாய் இருக்கிறது.

ஆரம்பகால சபையானது, வீடுகளில் கூடிவந்து இதை ஆசரித்து வந்தது. இன்றைய அளவில், கர்த்தருடைய திருவிருந்தானது, சபை கூடுகிற இடங்களில், அது வீடாக இருந்தபோதிலும் அங்கு நிகழ்ந்து வருகிறதாய் இருக்கிறது, ஆஸ்திரேலியா போன்ற

வனாந்திர இடங்களில், 100 மைல்கள் தூரம் கடந்து வந்து ஆட்டு கொட்டகைகளில் சபை மக்கள் கூடி ஆராதித்து, கர்த்தருடைய மேஜையை அனுசரித்து வருகிறவர்களாய்க் காணப்படுகின்றனர். 1 கொரிந்தியர் 13:5, மத்தேயு 5:23,24 ஐ வாசியுங்கள். இங்கு கூறப்படுகின்ற முதலாவது அடிப்படைக் கருத்து என்னவெனில், கர்த்தருக்கு முன்பாக நமது பாவங்களுடன் இடைபட்டு, கர்த்தரிடம் அவைகளுக்கான பரிகாரத்தைக் கண்டடைதல் வேண்டும்.

ஒருவர் சபைக்கு வர இயலாதவராய் வீட்டிலேயே மரணத்தை எதிர்நோக்கினவராய் இருந்து, திருவிருந்து எடுக்க வாஞ்சையுடன் இருப்பார்களேயானால், அப்படிப்பட்ட விசுவாசிகளை அச்சபையின் மூப்பர்களோ அல்லது டீக்கன்களோ சென்று சந்தித்து அவர்களுக்கு திருவிருந்து கொடுக்கலாம். அப்படிப்பட்ட நபர்களின் வீடு சபையாய் செயல்படுகிறதாய் இருக்கிறது, எங்கே இரண்டோ மூன்றோ பேர்கள் கூடுகிறார்களோ அங்கே நான் இருப்பேன் என்ற கர்த்தரின் வாக்குத்தத்திற்கு இசைய இது சபையாய் கருதப்படுகிறதாய் இருக்கிறது. மத்தேயு 18:20.

இதைப்போன்ற விஷேசித்த திருவிருந்து ஆராதனையானது, ஒரு சாக்கிரமந்து செயல்பாடாய் இராதிருக்கிறது. இது அந்நபர் கர்த்தரை முகமுகமாய் காண்பதற்கு முன் இப்பூமியில் அவர் எடுக்கும் இறுதி திருவிருந்தாய் இருக்கலாம். இப்படிப்பட்டவர்களுக்கு சபையின் டீக்கன் அல்லது டீக்கனஸ் பொறுப்பெடுக்க வேண்டியவர்களாய் இருக்கின்றனர். இவர்கள் அவர்களிடம் சென்று ஜெபித்து, கர்த்தரைத் துதித்து திருவிருந்தை அவர்களுடன் ஆசரிக்க வேண்டியவர்களாய் இருக்கின்றனர்.

திருவிருந்து ஆராதனையை எப்பொழுது ஆசரிப்பது? ஞாயிற்றுக்கிழமை பொதுவான ஆராதனைக்கு முன்னர், பிரசங்கம் செய்வதற்கு முன்னர் இதை விஷேச ஆராதனையாய் ஒழுங்கு செய்து ஆசரிப்பது சிறப்பானது. அல்லது திருவிருந்தில் கலந்து கொள்ளும் விசுவாசிகளுக்கு மட்டும், இரவு உணவு தயார் செய்து சாப்பிட்ட பின்னர், திருவிருந்தை ஆசரிக்கலாம், இது போன்று ஆரம்பகாலத் திருச்சபையில் ஆசரித்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது. இவ்வாறு நீங்கள் செய்வீர்களானால், உங்கள் ஐக்கிய நேரம், அவசரமின்றி பொறுமையுடன் எல்லாவற்றையும் சிறப்பாய் செய்ய போதுமான நேரம் உடையதாய் விளங்கும். எப்படியிருப்பினும், உங்கள் வசதிக்கேற்ப இதற்கு நேரம் ஒதுக்கி ஆசரிக்க நீங்கள் தீர்மானம் எடுக்க வேண்டியவர்களாய் இருக்கிறீர்கள், திருவிருந்து ஆராதனையை வாரந்தோறும், அப்போஸ்தலர் ஆசரித்ததைப் போன்று ஆசரிக்க முயலுவது சிறப்பாய் இருக்கும், இதைக் கர்த்தருக்கு முன்பாக பரிசுத்தத்துடன் ஆசரிப்பது அவசியமானதாய் இருக்கிறது.

திருவிருந்து ஆராதனைக்கு முன்னர் உள்ள அகாப்பே விருந்தானது, ஆரம்பகால சபையில், எளிமையானதாய் இருந்தது, பிரட், சீஸ் மற்றும் திராட்சை இரசம், இதோடு இறைச்சை, காய்கறிவகைகள், ஸ்டீவ் அல்லது சூப் போன்றவைகள் பரிமாறப்பட்டன. இந்நாளில் இதைப் போன்ற காரியங்களை "pot luck supper", என அழைக்கிறோம், எல்லா உணவு பதார்த்தங்களும் ஒரு பரந்த மேஜையின் வைக்கப்பட்டு, பரிமாறப்படும். இப்படிப்பட்ட "pot luck supper", ஐ எளிதானதாய் பரிமாறப்படுமேயானால், சுத்தம் செய்வது எளிதாய் அமையும், ஆல்கஹால் வஸ்துகளை எல்லா கலாச்சாரங்களிலும் தவிர்க்கப்படுகிறதாய் இருக்கிறது. கொரிந்து சபையில் பிரச்சனைகளுக்கு காரணமாய் அமைந்ததே ஆல்கஹால் ஆகும். அது இன்றைய அளவில்கூட அதேபோன்ற பிரச்சனைகளைக் கொண்டு வருகிறதாய் இருக்கிறது.

ஒரு முறை ஆசரிக்கப்பட்ட திருவிருந்திற்குப் பின்னர் மறுமுறை அதை எப்பொழுது ஆசரிப்பது? ஆதிக்கால திருச்சபையில், வாரம் ஒரு முறை திருவிருந்தை ஆசரித்தனர், இதை விஷேச மாலைப்பொழுதாக, போதிக்கும் ஆராதனையுடன் அனுசரித்து வந்தனர். இவ்வாரதனையானது விசுவாசிகள் தங்களது இரட்சிப்பிற்காய் செலுத்தப்பட்ட கிரயத்தினை நினைவுபடுத்தும் ஆராதனையாய் இருந்தது. பாவத்தை அறிக்கை செய்வதன் முக்கியத்துவம், கிறிஸ்துவில் நமது ஸ்தானம் குறித்த உபதேசங்கள், கிருபை குறித்த உபதேசங்கள் இதில் போதிக்கப்பட்டு வந்தன. அவர்கள் இது வழக்கமாய் நிகழக்கூடியதாய் விசுவாசித்தனர். இதை நாங்கள் வரவேற்கிறோம், வாரந்தோரும் அப்போஸ்தலரைப் போன்று திருவிருந்து ஆசரிப்பது வரவேற்கப்படுகிறதாய் இருக்கிறது! **யூதா 3.** இதையே நாமும் கைக்கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

திருவிருந்தை ஆசரிக்க அவசியமானவைகள் எவைகள்? இதை ஆசரிப்பதற்கு சாதாரண பிரட் மற்றும் திராட்சை இரசம் போதுமானது. அல்லது புளிப்பில்லாது கைகளால் பிசைந்து உருவாக்கப்பட்ட ரொட்டி (சப்பாத்தி) மற்றும் புதிதாய் பிளியப்பட்ட திராட்சை இரசம் இதற்கு போதுமானது. நீங்கள் அப்போஸ்தலரைப் பின்பற்ற வேண்டுமானால், புதிதாய் பிளிந்தெடுக்கப்பட்ட திராட்சை ஜூஸ், மற்றும் புளிப்பில்லாது புதிதாய் பிசைந்து உருவாக்கப்பட்ட பஸ்காவிற்காய் தயார் செய்யப்பட்ட ரொட்டியாக இருத்தல் வேண்டும். இப்படிப்பட்ட வஸ்துக்கள் கிறிஸ்துவின் மாசற்ற இரத்தத்தையும், அவரது பரிசுத்த வாழ்க்கை முறையினையும் பிரதிபலிக்கிறதாய் இருக்கிறது. இது பாவம், தீமையில்லாது அவர் வாழ்ந்த வாழ்வினைக் காட்டுகிறதாய் இருக்கிறது. இதினிமித்தம் நாம் திருவிருந்திற்காய் பயன்படுத்தும் வஸ்துக்கள், சிறப்பான காரியங்களைப் பிரதிபலித்தலுக்காக பயன்படுத்தபடுபவை என்பதை மனதில் கொள்ளுதல் அவசியம். உங்கள் தேசத்தில், ஒருவேளை யூதர்கள் புளிப்பில்லாது செய்த பிரட்கள் கிடைக்குமானால் அவைகளைப் பயன்படுத்தலாம், அல்லது உங்களது கலாச்சாரத்தில் பஸ்காவை ஆசரிக்கத்தக்கதாய் எந்தவைகையான பிரட் தயாரிக்கப்படுகிறதோ, மற்றும் புளிக்கவைத்து, போதை ஏற்றாத திராட்சை இரசம் கிடைக்குமானால், அவற்றை, திருவிருந்திற்காய்ப் பயன்படுத்தலாம்.

உபதேசம்:

திருவிருந்து: கர்த்தரின் இராப்போஜனம்

1.மூன்று இராப்போஜனத்துக்கு மனிதர் அழைக்கப்படுகிறவர்களாய் இருக்கிறார்கள்:-

சுவிஷேச இராப்போஜனம் (லூக்கா 14:15-24)
ஆட்டுக்குட்டியனவரின் கலியாண விருந்து (வெளிப்படுத்தல். 19:7-9)
கர்த்தரின் இராப்போஜனம் (1 கொரிந்தியர் 11:23-29)

2. சுவிஷேச இராப்போஜனத்தை ஏற்றுக்கொண்டவர்கள், ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்திலும் காணப்படுவர், பூமியிலிருக்கும் காலம் வரைக்கும் கர்த்தரின் இராப்போஜனத்திலும் பங்கு பெறுவர்.

3’ கர்த்தரின் இராப்போஜனத்தில், விசுவாசி தியானிக்க வேண்டியவை:

சொந்த இரட்சக்ராகிய இயேசுக்கிறிஸ்துவின் மரணம்
உயிர்த்தெழுந்த இயேசுக்கிறிஸ்து தனக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசுவதை,
கர்த்தர் தமது சபைக்காக மீண்டும் வருவார் மற்றும் பூமியில் தனது

ஆழுகையை ஸ்தாபிப்பார்.

4. கர்த்தரின் இராப்போஜனம் பஸ்காவிலிருந்து தோன்றியது. (யாத்திராகமம் 12:1-11, 1 கொரிந்தியர் 11:23-32).கிறிஸ்துவாகிய பஸ்கா நமக்காய் பலியிடப்பட்டிருக்கிறார். (1கொரிந்தியர். 5:7)

5. அப்பம், அவரது சரீரம் நமது பாவங்களுக்காக சிலுவையில் நொறுக்கப்பட்டதை பிரதிபலிக்கிறது. (1கொரிந்தியர்11:24). திராட்சை ரசம், அவரது இரத்தத்தை பிரதிபளிக்கிறது மற்றும் நமது இரட்சிப்புக்கு உத்திரவாதமாய் இருக்கிறது. இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு இல்லை. (1 கொரிந்தியர். 11:25)

6. சத்துருக்களுக்கு முன்பாக கர்த்தர், விசுவாசிகளுக்கு தமது பந்தியை ஆயத்தப்படுத்துகிறார். (சங்கீதம் 23:5).

7. விசுவாசி ஐக்கியத்தில் இருந்துகொண்டு, கர்த்தரின் இராப்போஜனத்தைக்குறித்து உள்ள அர்த்தத்தை நிதானித்து அறிய வேண்டும்.
(1 கொரிந்தியர்.11:29).சுயமாய் நீதிகரித்தல் மூலம் இது செய்து முடிக்கப்படுகிறது. (1 கொரிந்தியர். 11:31, 1 யோவான் 1:9)

8. தேவனோடு ஐக்கியமில்லாது கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கெடுப்பது வியாதி அல்லது மரணத்தைக் கொணடுவரும்.
(1 கொரிந்தியர். 11:30)

திருவிருந்து ஒழுங்குமுறை:

1. கர்த்தருடைய இராப்போஜனத்தை ஆசரிக்க எதிர்பார்த்து, சபை கூடிவரும்பொழுது இது ஆசரிக்கப்படும். இது முன்னதாகவே அறிவிக்கப்பட்டிருப்பதால், தங்கள் வாழ்வையும், இருதயத்தையும் அந்த வாரம் முழுமையும் ஆயத்தப்படுத்தி வருவர்.

2. வாராந்திர கூட்டங்களை நடத்தும் சபையின் மூப்பர் அல்லது டீக்கன் [கண்கானி] எழுந்து நின்று, ஜனங்களை ஜெபத்திற்கும், பாவங்கள் எதுவாயினும் அவற்றை அறிக்கை செய்து நல்மனம் பொருந்துமாறு அழைப்பு கொடுப்பர், அவ்வாறு அறிக்கை செய்து நல் மனம் பொருந்தாத பட்சத்தில், அவர்கள் மீது நியாயத்தீர்ப்பு கடந்து வருகிறதாய் இருக்கிறது. 1 கொரிந்தியர் 11 ம் அதிகாரத்தை முழுவதும் வாசித்து அறியவும்.

3. அமைதியாய், ஓரிரு நிமிடங்கள் பாவ அறிக்கை மற்றும் ஜெபித்தல் வேண்டும்.

4. சபையின் மூப்பர் / கண்கானி, அப்பத்தையும், திராட்சை இரசத்தையும் பரிமாற ஆயத்தமாய் இருப்போரை முன்னே வரும்படி அழைப்பு கொடுப்பர். இவர்கள் திருவிருந்திற்கு ஆயத்தமாய் முன் கடந்துவந்த ஒவ்வொருவருக்கும் அப்பத்தையும், திராட்சை இரசத்தையும் கொடுப்பர்.

5. அனைவரும் அப்பத்தையும், திராட்சை இரசத்தையும் பெற்றுத்தீர்ந்த பின்னர், அவற்றை புசிப்பதற்கு முன்னர் அதற்காய் ஜெபித்து, நன்றி சொல்லுதல் வேண்டும்.

6. அப்பமும் திராட்சை இரசமும் ஒவ்வொருவருக்கும் கொடுத்து தீருமட்டும், சபையோர் காத்திருந்து அனைவரும், தங்கள் கரத்தில் அப்பத்தையும், திராட்சை இரசத்தையும் பெற்றுக்கொண்ட பின்னர் அனைவரும் சேர்ந்து புசித்து பானம் பண்ணுவது நன்மை பயக்கக்கூடியதாய் இருக்கிறது.

7. ஆராதனையை நடத்துபவர், இப்படிப்பட்ட சபை நியமத்தை கர்த்தருக்கென அற்பணம் செய்து ஜெபித்தல் வேண்டும், பின்னர் இவ்வாராதனையானது ஜெபத்துடனும், ஸ்தோத்திர பாடலுடனும் நிறைவு பெறும்.

8. பின்னர் திராட்சை இரசம் பரிமாறப்பட்ட கப்கள் அனைத்தும், சேகரிக்கப்பட்டு, போதிக்கும் ஆராதனைக்கு ஆயத்தம் செய்தல் வேண்டும்.

<u>கிறிஸ்தவத் திருமணம்:</u>

தேவ ஊழியரின் கையேடு, திருமணம் நடத்துவதற்கான கரப்புத்தகம் இவைகள் திருமண ஆராதனையை நடத்த பயனுள்ளவைகளாய் இருக்கின்றன. இப்படிப்பட்ட புத்தகங்களை மிகவும் கவனமாய் கையாளுதல் அவசியம், ஒருவேளை இப்படிப்பட்ட புத்தகங்கள் விசுவாசிகளால் எழுதப்படவில்லையானால், அவர்கள் புறஜாதிய பழக்கவழக்கங்களை அதிகம் வலியுறுத்துகிறவர்களாய் இருப்பர். மற்றும் தவறான காரியங்களை போதிக்கிறவர்களாயும் விளங்குவர். திருமணம் நடத்துவதற்கு எத்தகைய புத்தகங்களைப் பயன்படுத்துகிறீர்கள் என்பது குறித்து, கவனமாய் இருத்தல் வேண்டும்.

அடக்க ஆராதனை, திருமணம் போன்றவைகளை நடத்துவதற்கான புத்தகங்கள் இன்டர்நெட் மூலமாகவும், புத்தகவடிவிலும் அதிகம் கிடைக்கின்றன. திருமணம் மற்றும் அடக்க ஆராதனை போன்றவற்றை நடத்துவதற்கு, வேதாகமப்பூர்வமான உங்கள் சொந்த ஆராதனை வழிமுறையை தொகுத்து அவைகளை தக்கவிளக்கங்களுடன் வைத்துக் கொள்வது சிறப்பானதாய் இருக்கும். ஊழியத்திற்கு அவசியமான, நல்ல செய்திகளை கிறிஸ்தவ செய்தித்தாள்கள் அல்லது மாதாந்திர பத்திரிக்கைகள் போன்றவற்றிலிருந்து, திருமணம், விவாகரத்து, குழந்தைகளை வளர்த்தல், மற்றும் ஊழியத்திற்கு அவசியமான தகவல்களை சேகரித்து வைத்துக் கொள்ளுதல் வேண்டும். இது பின்னர் பயனுள்ளதாய் இருக்கும்.

அப்போஸ்தலர் நடபடிகள் இந்தவிஷயங்களில், அதிகம் நமக்கு உதவுவதாக இல்லை, ஆரம்ப கால சபையானது திருமணம், அடக்க ஆராதனை போன்றவற்றில் அதிகம் ஈடுபாடு காட்டவில்லை. இன்றைய அளவில் நாம் புரிந்து கொண்டிருக்கும் அளவிற்குக் கூட இவ்விரு சடங்குகளில் அவர்கள் ஈடுபாடுகாட்டவில்லை. திருமணத்தின் புனிதத் தன்மையை நாம் பாதுகாக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். இதற்கான போதிய வேத ஆதரங்களின்றி, நாம் எவ்வாறு வேதாக ரீதியில் இதை நடத்த இயலும்? எப்படியிருப்பினும், திருமணவாழ்வைக் குறித்து வேதாகமம் கூறுபவைகளை வைத்து, சத்தியத்தை வலியுறுத்தி இதை செயல்படுத்த வேண்டியவர்களாய் இருக்கிறோம். திருமணவாழ்வு என்பது தெய்வீகமாய் ஆசரிக்கப்பட வேண்டியதாய் இருக்கிறது, திருமண ஆராதனை அல்ல.

ஆதி அப்போஸ்தலரின் காலத்தில், திருமணம் என்பது, சமுதாயம் சார்ந்ததாயும், குடும்பம் / கலாச்சாரம் சார்ந்ததாயும் இருந்துவந்தது. மரணம் என்பதும் குடும்பம் சார்ந்த சடங்காக கருதப்பட்டு வந்தது. ஆரம்ப கால சபையில் இவ்வித சடங்குகளை

ஆசரிக்கும்போது, அவர்கள் இஸ்ரவேலரின் சட்டதிட்டங்களை, கிறிஸ்தவ யூதர்கள் தழுவினர், மற்றும் புறஜாதிய கிறிஸ்தவர்கள் கிரேக்க சட்டதிட்டங்களை தழுவினார்கள். பல நூற்றாண்டுகள் உருண்டோடவே, சபையானது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டது, இப்படிப்பட்டச் சடங்குகள், சபையால், இன்றைய அளவில் நடத்தப்படுவது போன்று, நடத்தப்பட ஆரம்பமானது. இதற்கு முன் அவர்கள் ஆசரித்து வந்த கலாச்சார பிண்ணனியம் இவ்வைபங்களில் கிறிஸ்தவ கலாச்சாரமாக உருவெடுத்தது. கி.பி 320 ல், இது சபைக்குள் தலைதூக்கியது, ஆகையால் திருமணச் சடங்குகளை நிகழ்த்தி வைக்கும் போது, மிகக்கவனமாக அவைகளை நடத்தி வைக்கக் கடமைப்பட்டுள்ளோம். விவாகம் என்பது தெய்வீக அமைப்பாய் இருக்கிறது, திருமண வைபவம் அல்லது அடக்கம் செய்தல் போன்றவை அப்போஸ்தலர் காலத்தில் சபையின் அடிப்படையான காரியமாய் இல்லை என்பதை நினைவில் கொள்ளுதல் வேண்டும்.

ஜெபமும், வேதவாசிப்பும், முதல் நூற்றாண்டில் திருமணத் தம்பதிகளை ஆசீர்வதிப்பதற்காக, குழந்தைகளை பிரதிஷ்டை செய்து ஆசீர்வதிப்பதற்காக, மற்றும் ஒரு விசுவாசியை அடக்கம் செய்யும்போது, பயன்படுத்தப்பட்டு வந்தது என்பது குறிப்பிடத்தக்கது. சபையின் சரித்திரத்தில், இது போன்ற வைபவங்கள் எளிமையான சபை ஆராதனை செய்யப்பட்டு நிகழ்த்தி வைக்கப்பட்டது என்பதற்கு அநேக மாதிரிகள் மலிந்து கிடக்கின்றன. ஆகையால் சரித்திர நிகழ்வுகளில் இருந்து திருமண ஆராதனைக்குரிய தகவல்கள் ஏறாளமாய் கிடைக்கின்றனவாய் இருக்கின்றன.

ஒரு போதகராய் இருக்கும் நீங்கள், உங்களது கலாச்சாரப் பிண்ணனியிலிருந்து பொருத்தமானவற்றை தெரிவு செய்து அவற்றை கிறிஸ்தவ திருமண வைபவங்களில் பயன்படுத்த வேண்டியவர்களாய் இருக்கிறீர்கள். 100 விசுவாசிகள் நிரம்பிய சபையில், ஒவ்வொரு ஆண்டிலும், ஓரிரு திருமணங்கள், இரண்டிலிருந்து - நான்கு குழந்தை பிரதிஷ்டைகள், மற்றும் இரண்டிலிருந்து, மூன்று அடக்க ஆராதனைகள் நிகழ்த்த வேண்டியிருக்கும். இப்படிப்பட்ட காரியங்கள் "சபையின் நியமங்களாய்" விளங்குகின்றன. ஆனால் அவைகளை நாம் நிகழ்த்துவதில் வித்தியாசங்கள் காணப்படுகின்றன. இப்படிப்பட்ட சடங்குகளைச் செய்வதில் நமக்கு சுயாதீனம் அளிக்கப்பட்டு இருக்கிறது, ஆகையால் இவைகளை ஆசரிக்கும் போது, வேதாகம ஒழுங்குகளை மனதில் கொண்டு, இவற்றில் நமது செயல்பாடுகள் இருக்க வேண்டியது அவசியமாய் இருக்கிறது. நாம் விசுவாசிக்கும் காரியங்களை, அறிவித்து, ஜனங்கள் அவைகளுக்குச் செவி கொடுக்கும்போது, நமது வார்த்தைகளைவிட, நமது செயல்பாடுகளுக்கு முக்கியம் அளிக்கிறவர்களாய் இருக்கின்றனர்.

இவ்வுலகில் உள்ள அநேக மக்கள், சபையானது குஞ்சு பொரித்து, பொருத்தம்பார்த்து, அனுப்பிவைக்கும் ஸ்தாபனமாய் [the "hatch, match and despatch" organisation] இருக்கிறது எனக்கருதி வருகின்றனர். அவர்கள் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்க விருப்பமுள்ளவர்களாய் இருக்கின்றனர், பாவிகளை திருமணம் செய்து கொள்கிறார்கள், பாவிகளாகவே அடக்கம் செய்கிறார்கள், இவர்கள் பரிசுத்தவான்கள் என்றறியப்பட்டவர்களாய் இருக்கின்றனர். நீங்கள் வேதாகமத்தை விசுவாசிக்கும் தேவ ஊழியராய் இருப்பீர்களானால், இதைப்போன்றுள்ள காரியங்களைச் செய்தல் கூடாது, நீங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திற்கு போதிய வேத ஆதாரங்கள் இருத்தல் மிகவும் அவசியம். சபையின் மூப்பர்கள் அல்லது சபை போர்ட் அங்கத்தினர் இவர்களுடன் ஸ்தல சபைக்கான கொள்கைகளை வகையறுத்து, தேசீய சட்ட உறவுகளுக்கு பங்கம் ஏற்படாதவண்ணம் அமைத்துக்கொள்ளுதல் வேண்டும். இதைப் போன்ற காரியங்களை ஆதிகால சபை செய்யவில்லை, இருந்தபோதிலும் சில

வேதாகம முன்நிகழ்வுகள் மூலம், ஆரம்ப கால சபையில் இப்படிப்பட்ட பழக்கவழக்கங்கள் இருந்து வந்ததை தீர்மானிக்கிறவர்களாய் இருக்கிறோம்.

இப்படிப்பட்ட சடங்குகளில், தேசிய ரிஜிஸ்டர்களில், கையொப்பம் இட வேண்டிய அவசியம் உள்ளது, தேசிய ரீதியில், பிறப்பு, திருமணம், மரணம் போன்றவைகளை பதிவு செய்ய வேண்டியுள்ளது. உலகலாவிய நிலையில் சூழ்நிலைகள் இருண்டு கொண்டு இருக்க, வேதாகமத்தை விசுவாசிக்கும் சபைகளுக்கு உபத்திரவம் பெருக ஆரம்பித்து இருக்கும் இக்கால கட்டத்தில், ஸ்தல சபையானது இது போன்ற காரியங்களில், கவனமாய் இருக்க வேண்டியுள்ளது. ஒவ்வொரு சபையும் என்ன செய்யவேண்டும் என்பதை தீர்மானிக்க வேண்டியுள்ளது, அரசாங்கத்துடன் ஒத்துப்போகும் வண்ணம் தங்களது சபையின் கொள்கைகளை அமைத்துக் கொள்வது சபையின் தலையாய கடமையாய் இருக்கிறது.

வேதாகம திருமணத்தைச் சித்தரிக்கும் -- யூதத்திருமணக் கலாச்சாரம்:

கிறிஸ்து வாழ்ந்த காலத்தில் திருமணமானது "திருமணத் தரகர்கள்" மூலம் ஒழுங்கு செய்யப்படுகிறதாய் இருந்தது, இதில் மணமகனின் தந்தை இறுதித் தீர்மானம் எடுக்கிறவராய் விளங்கினார். நாம் தேவனுடன் கொண்டுள்ள உறவை பகுப்பாய்வு செய்து பார்க்க யூத திருமணம் ஒரு முன்மாதிரியாய் திகழ்கிறது. திருமணம் என்பது ஒரு விசுவாசிக்கு, ஆவிக்குரியதாயும், நடைமுறை சார்ந்ததாயும், அதேசமயம் சமுதாயம் சார்ந்ததாயும் இருக்கிறது.

ஆவிக்குரிய சத்தியங்களைத் தழுவி, யூத மக்களின் திருமண கலாச்சாரம் எவ்வாறு அமைந்துள்ளது என பகுப்பாய்வு செய்து பார்ப்போம். இவ்வித திருமணச் சடங்குகளை நாம் பகுப்பாய்வு செய்யும் போது, நமது ஸ்தல சபையின் திருமண கலாச்சாரங்களை எவ்வாறுக் கைக்கொள்வது என சீர்தூக்கிப்பார்க்க, இது மிகவும் அவசியமானதாய் விளங்குகிறது. அந்தந்த சூழலுக்குரிய பழக்கவழக்கங்களை இதில் புகுத்த விரும்புவீர்களானால், அது அத்தியாவசியமானது என எண்ணுவீர்களானால் அதற்கு விதிவிலக்குண்டு.

1. மணமகன், மணமகளை முதன் முறையாக பெண்பார்க்க மணமகனின் தகப்பன் திருமணத்தரகர் மூலம் உறவை ஏற்படுத்திக் கொடுக்கிறவராய் இருக்கிறார். (எபிரெயர் 2:13)

பகுப்பாய்வு - பிதாவாகிய தேவன் - திட்டமிடுகிறவராய் இருந்து, கடந்த கால நித்தியத்தில் இவ்வேற்பாடுகளை முன் திட்டமிட்டுள்ளார்.

2. எதிர்கால மணவாளன், மணவாட்டியை சந்தித்து அவளுடன் ஐக்கியம் கொள்ளுகிறான்.

பகுப்பாய்வு: - நமது ஆவிக்குரிய மணவாளனாகிய கிறிஸ்து இப்பூமிக்கு தனது முதலாம் வருகையில் கடந்து வந்து, மனிதருடன் தனது நாட்களைச் செலவு செய்தார்.

3. மணமகள் வீட்டை விட்டு மணமகன் வெளியேறும் போது, தன் எதிர்கால மணவாட்டிக்கான முழு வரதட்சனை [whole dowry] அல்லது அதற்கான கிரயம் முழுமையும் கொடுத்துச் செல்வான்.

பகுப்பாய்வு: - கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் போது, மனுக்குலத்தின் அனைத்துக் கடன்களுக்குரிய கிரயம் செலுத்தப்பட்டு தீர்ந்தாயிற்று. (எபிரெயர் 9:23-28).

4. மணமகன் தனது தகப்பன் வீட்டிற்குத் திரும்பி வந்து, தன் எதிர்கால மணவாழ்க்கைக்கான வீட்டை, புதிதாய் தொடங்கவிருக்கும் வாழ்விற்காக கட்டிமுடிப்பான்.

பகுப்பாய்வு: - கிறிஸ்து தனது பிதாவின் வீட்டிற்கு ஏறிச்சென்று, தனது மணவாட்டிக்காய் ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் செய்கிறவராய் இருக்கிறார். (யோவான் 14:1-3).

5. தந்தையின் வேண்டுகோளுக்கிணங்கி, மகன் மணவாட்டியின் வீட்டிற்குச் சென்று, மணவாட்டியை தனது வீட்டிற்கு அழைத்துவருவான்.

பகுப்பாய்வு: - கிறிஸ்து தனது சபையாகிய மணவாட்டியை அழைத்துக் கொள்ள, மத்திய ஆகாயத்திற்கு கடந்து வருவார்.

6. மணமகள் தனது வீட்டைவிட்டு வெளியேறி, மணமகனை மனம்புரிந்துகொண்டு தனது இல்லற வாழ்வை துவங்குவாள். (1 கொரிந்தியர் 15:51-58).

பகுப்பாய்வு: மத்திய வானில் கிறிஸ்துவை சந்திக்க எடுத்துக்கொள்ளப்படும் அவரது சரீரமாகிய திருச்சபையானது, கிறிஸ்துவின் மணவாட்டி யாகிறது.

7. மணவாட்டி தனது திருமண வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு மணமகனுக்காய் காத்திருப்பாள், மணமகன் தனது மணவாட்டியை அலங்கரித்து திருமண இரா விருந்துக்கு அழைத்துச் செல்வான்.

பகுப்பாய்வு: - கிறிஸ்துவின் வருகைக்காய் சபையானது காத்திருக்கும்பொழுது, மணவாளனாகிய கிறிஸ்துவுக்கு அளிக்கும்படியாய் பொன், வெள்ளி, விலையேறப்பட்ட கற்களை உருவாக்குகிறதாய் இருக்கிறது. கிறிஸ்துவின் நியாயாசனத்தில், அவரது சரீரமாகிய சபைக்கு இறுதியான ஆடை ஆபரணங்கள் தரிப்பிக்கப்படும். (1 கொரிந்தியர் 3:12-15).

8. மணவாட்டியும், மணவாளனும், மணமகனின் தந்தையின் வீட்டில் திருமணவிருந்தை ஆசரிப்பர், மணமகனின் தந்தையின் ஐசுவரியத்தைப் பொறுத்து இவ்விருந்தானது, ஒரு வாரம் முதற்கொண்டு, ஒரு மாதமளவிற்கு அளிக்கப்படுகிறதாய் இருக்கும்.

பகுப்பாய்வு: - கிறிஸ்துவின் திருமணவிருந்தானது, 1000 ஆண்டு காலம் நீடிப்பதாய் இருக்கும். -- உபத்திரவ காலமும், ஆயிரவருட அரசாட்சியும் இப்பூமியில் இடம் பெறுகிறதாய் இருக்கிறது.

9. மணமகன், மணவாட்டியைச் சென்று அழைத்து வருவதற்கு முன்னதாகவே, மணமகனின் தகப்பன் வீட்டில், மணமகனது சிநேகிதர்கள், திருமணவிருந்தில் கலந்து கொள்கிறவர்களாய் இருப்பர்.

பகுப்பாய்வு: பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் உயிர்த்தெழுந்த சரீரத்தில், ஆயிர வருட அரசாட்சியில் தாங்கள் உட்படவிருப்பதற்காக, மகிழ்ந்து களிகூறத்துவங்குவர்.

10. மணவாட்டியின் தோழிகள், மணவறைக்கு வெளியே, தீவட்டிகளுடன் மணமக்களது வருகைக்காய் எதிர்நோக்கி காத்திருப்பர், அவர்கள் அங்கு வந்து சேர்ந்த பின்னர் திருமணவிருந்தில் அனைவரும் பங்கு பெறுவார்கள். (மத்தேயு 25:1-13).

பகுப்பாய்வு: - உபத்திரவ கால பரிசுத்தவான்கள், மற்றும் மகா உபத்திரவ காலத்தில் மீந்திருக்கும் பரிசுத்தவான்கள் அவர்களது மாம்சீக சரீரத்துடன் ஆயிரவருட அரசாட்சியில் பிரவேசித்து, பூமியைத் திரும்பச் செழிக்கச் செய்கிறவர்களாய் இருப்பர்.

திருமணங்கள்:

ஆரம்ப கால சபையில் திருமண ஆராதனை என்பது இல்லையென்பதனை நினைவில் கொள்ளுதல் வேண்டும். பண்டைய உலகில் திருமணங்கள், கலாச்சார, சமூக மற்றும் சட்டரீதியாக நிகழ்ந்தது. பல நூற்றாண்டு காலமாய் திருமண ஆரதனை என்பது, ஒரு சபைக் கட்டிடத்திற்கு நிகழ்ந்ததாக சபை சரித்திர தகவல் எதுவும் கிடைக்கவில்லை. இந்நாட்களில் சில சபைக் கட்டிடங்களும், வீட்டு சபைகளும் இந்த போதிலும், அவைகள் அனைத்தும் உபத்திரவத்திற்குள்ளாக கடந்து செல்வதாய் இருந்தது. கி.பி. 320 லிருந்து, தொடர்ந்து திருமண ஆராதனையானது ஆலயக்கட்டிடங்களில் நடந்தேறி வந்தன. இதைப் போன்றே அடக்க ஆராதனையும் நிகழ்ந்து வந்தன. அரசாங்க உபத்திரவத்திற்குள்ளாக இருந்த சபையானது, இன்றைய அளவில் நிகழ்த்தும், திருமண ஆராதனை, மற்றும் அடக்க ஆராதனை போன்றவற்றை நடத்தை இயலாது இருந்து வந்தது.

பவுலின் காலத்தில் வாழ்ந்த ஒரு தேவ ஊழியர், திருமணத்தையோ, அல்லது அடக்க ஆராதனையோ நடத்தியதாக, வேத உதாரணங்கள் இல்லை. கிறிஸ்தவ அடக்க ஆராதனையானது, மரித்த நபரை புதைக்கும் போது, குடும்பத்தினருடன் சேர்ந்து செய்யும் ஜெபத்துடன் இருந்து வந்தது, அல்லது அவர்களை வழக்கமாய் புதைக்க அனுமதி மறுக்கப்பட்டதேயானால், குகைகளில் [catacombs] கொண்டு சென்று அடக்கம் செய்து வந்தனர். பரிசுத்த வேதாகமத்தில் இதைப் போன்ற ஆராதனைகளுக்கான முன் நிகழ்வுகள் எதுவும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது.

வேதாகம வழக்கத்திற்கு அப்பாற்பட்ட, இவ்விரு சடங்குகளுக்கும் உள்ள வேதாகம வழிநடத்துதலை, நாம் எப்படியோ வேதாகமத்திலிருந்து பெற்று இருக்கிறோம். திருமணமும், அடக்க ஆராதனையும், சுவிஷேசம் அறிவிப்பதற்கான தருணங்களை நமக்களிக்கிறதாய் இருக்கிறது, இவ்விரு சடங்குகளை நாம் நிகழ்த்தும்போது, இதுவே நமது முக்கிய குறிக்கோளாய் இருக்கிறது. இத்தருணங்களில் வேதாகம சத்தியத்தியங்களை அறிவிக்கும் தருணம் நமக்களிக்கப்படுகிறதாய் இருக்கிறது. காரணம் திருமணம் என்பது தெய்வீக நியமமாய் திகழ்கிறது, மரணம் என்பது சிலுவையினால் மேற்கொள்ளப்பட்டு, தோற்கடிக்கப்பட்டுள்ளது, இதற்கு காலியான கல்லறையானது உயிர்த்தெழுதலுக்கு ஆதாரமாய் விளங்கி வருகிறது. இவ்விரண்டு சடங்குகளும், சபை நியமங்களாய் விளங்கி வருகின்றன. நமது விசுவாசத்தைத் தழுவியதாக உயிர்த்தெழுந்த சத்தியத்தை அறிவிக்கிறதாய் விளங்கி வருகின்றன.

கிறிஸ்தவ திருமணம்:

கிறிஸ்தவத் திருமணமானது, கனத்திற்குரிய உறவுமுறையாகவும், கணவன், மனைவியிடையே உள்ள உறுதிப்பாட்டை வெளிப்படுத்துவதும், நம்பிக்கை மற்றும் அன்பு இவற்றை வெளிப்படுத்தக்கூடியதாயும் இருக்கிறது. எப்படிப்பட்ட குடும்பத்தைக் கர்த்தர் திருமணத் தம்பதிகளுக்கு அளித்தாலும், அதற்கு தங்களை அற்பணிப்பதாயும் இருக்கிறது. திருமணத்தைக் குறித்த கிறிஸ்தவக் கருத்தானது, உன்னதமானதாயும், பிரசித்திப் பெற்ற ஒன்றாயும், திருமண தம்பதியரின் பொறுப்புக்கள் வலியுறுத்தப்பட்டு, தங்களை குடும்ப வாழ்விற்கென அற்பணித்துக் கொள்வதை எடுத்துரைக்கிறதாயும் இருக்கிறது. திருமணம் குறித்த வேதபகுதிகளை எபேசியர் 5, 1 கொரிந்தியர் 7, கொலோசெயர் 3 போன்ற அதிகாரங்கள் உள்ளடக்கியுள்ளன. அநேக வேதபகுதிகளில் கர்த்தர், பொறுப்பு மற்றும் அன்பு குறித்து அநேக வழிகளில் பேசியுள்ளார். இவைகள் அனைத்தையும் இணைத்து, பிரயோஜனமான, வல்லமைமிக்க ஒரு திருமண ஆராதனையை நடத்த, போதுமானவைகளாய் இருக்கின்றன. இவ்வகையான செய்தியை நீங்கள் அரசாங்க அதிகாரம் பெற்ற திருமண பதிவாளராய் இருந்து கொண்டோ, அல்லது அரசாங்க திருமணப்பதிவு மையம் சென்று திருமணப் பதிவு செய்த பின்னர் நிகழும் திருமண வைபவத்தின் போதும் அளிக்கலாம்.

பண்டைய காலத்தில், திருமணம் என்பது, மணமகளை அவளது தாய் தகப்பனிடனிமிருந்து, பிரித்து, மணமகன் அவளைக் குறித்த முழு பொறுப்பையும் எடுத்துக்கொள்வதாய் இருந்து வந்தது. திருமணத்திற்குப் பின்பு, தனது மகளைக் குறித்த பொறுப்பு அவளது பெற்றோருக்கு இல்லாதிருந்தது, அவளுக்குரிய முழுபொறுப்பையும் ஏற்று நடத்துவது மணமகனே ஆகும். திருமண விருந்தானது "மனைவியை அடைந்தபின்னர்" [“capture of the wife”] ஒரு வார காலம் நீடிக்கும், கானா ஊரின் திருமண விருந்தைப் போன்று யோவான் 2. இவ்விருந்து அளிக்கப்பட்டது. ஓரிரு தினங்களில் மணமகள் வீட்டார், திருமண விருந்தில் கலந்து கொள்வர், இவ்விருந்தில் இருவீட்டாரும் பரஸ்பர ஐக்கியத்தை பெலப்படுத்திக்கொள்வர். பண்டைய யூதேய உலகில், கன்னிமை என்பது மிகவும் முக்கியமானதாய்க் கருதப்பட்டது, புருஷனும், மனைவியும் ஒருவருக்கொருவர் மட்டுமே சொந்தம் எனவும், அவர்களது உறவானது சுத்தமானதாயும், அன்பின் அற்பணிப்புள்ளதாயும் இருக்க எதிர்பார்க்கப்பட்டது.

திருமண பந்தத்தில் உள்ள உபதேசமானது மிகவும் முக்கியம் வாய்ந்ததாய் இருக்கிறது. தங்களது பெற்றோரைவிட்டு, விலகி ஒருவரோடு ஒருவர் இணைந்து, புதிய உறவை அமைத்துக் கொண்டு, அதிகாரத்துடன் செயல்படுவது, இவ்வுறவில் முக்கியமானதாய் கருதப்பட்டது. புருஷனானவன், தனது மனைவியைக் குறித்துப் பொறுப்பெடுத்து, பராமரிப்பு செய்வது அவன் மீது விழுந்த கடமையாய் இருக்கிறது. மனைவியானவள் தனது புருஷனைப் பின்பற்ற வாக்குறுதி அளித்து, எல்லாவற்றிலும், புருஷனுக்குக் கீழ்ப்படிந்து நடக்க கடனாளியாகிறாள். இப்படிப்பட்ட திருமண ஒழுங்கிற்குப் பின்னர் பெற்றோர், கைக்கெட்டும் தூரத்தில் ஒதுங்கிக் கொள்கின்றனர். சில சூழ்நிலைகளில் திருமணத்திற்குப் பின்னர், அவர் அப்படியே மறைந்து கொள்கின்றனர், அதற்குப் பின் அவர்களை, இவர்களது குடும்பத்தில் ஒரு போதும் காணாது இருக்கிறார்கள். இதுவே இன்றைய அளவில் திருமணம் குறித்த, முக்கிய அடிப்படைக் கருத்துக்களாய் இருக்கிறது. இது குறித்த உபதேசம் அடங்கிய வேதபாடத்தினை ஒப்பிட்டுப்பார்க்க.

திருமணம் என்பது முதிர்ச்சியடைந்தோருக்கு மட்டும் உரியதாய் இருக்கிறது, குழந்தைகளுக்குரியது அல்ல. மக்கள் தங்கள் செயல்பாடுகளில் முதிர்ச்சியுற்று, குடும்ப பொறுப்பை ஏற்று நடக்க இயலாது இருப்போர் எனில், அவர்கள் திருமணம் செய்து

கொள்ளக்கூடாது. அவர்களது திருமணத்திற்கு முன்னரே, பாலுறவில் ஈடுபட்டு அவர்களுக்குப் பிள்ளையுண்டாகி இருக்குமேயானால், அது பாவமாகக் கருதப்படுகிறது. அக்குழந்தையானது பாதுகாக்கப்பட்டு பரமாரிக்கப்படுதல் வேண்டும். அது தீமையினால் அவர்களுடைய பாவத்துடன் சேர்க்கப்பட்டு, பாவச்செயலாய்க் கருதப்படுகிறது. புருஷனானவன், முதிர்ச்சியடைந்த புருஷனாய் இருத்தல் வேண்டும். புருஷனானவன், தனது மனைவியை போஷித்துக் காப்பாற்றப் போதுமான பொருளாதாரம் உள்ளவனாயும், அவளை முழுமையாய் பொறுப்பெடுக்கிறவனாயும் இருத்தல் இன்றியமையாதது, ஒருவேளை அவ்வாறு செய்யத் திராணியற்றவனாய் இருப்பானேயானால், அவன் விவாகம் செய்து கொள்ளுதல் கூடாது. மனைவியானவள் தனது தாய் மற்றும் குடும்பத்தினரைவிட்டுப் பிரிந்து புருஷனுடன் வாழ சம்மதியாமல் இருப்பாளேயானால் அவள் திருமணம் செய்து கொள்ளக்கூடாது.

2 கொரிந்தியர் 6:14 ல் பவுல் தெளிவுப் படுத்துகிறபிரகாரம், திருமணத் தம்பதிகள் குடும்ப உறவாகிய நுகத்தில் "சமமாயிராது" சேர்ந்து வாழுதல் கூடாத காரியம் என்கிறார். இது பழைய ஏற்பாட்டில், எருதையும், கழுதையையும் கட்டி ஏர் உழுதல் கூடாது என்கிற கட்டளையைச் சுட்டிக்காட்டுகிறதாய் இருக்கிறது. ஒரு மிருகமானது பாதிப்பிற்குள்ளாகும் எனில், நுகத்தில் உள்ள மற்ற மிருகத்தால் அச்சுமையை இழுத்துச் செல்லுதல் என்பது இயலாத காரியம். புருஷனும், மனைவியும் சரிசமமானவர்கள், அவர்கள் இருவரும் சரியான சுமையை வாழ்க்கையில் சுமக்க வேண்டியவர்களாய் இருக்கின்றனர். இதன் பொருள், அவர்கள் ஆவிக்குரிய நிலையில், புத்திகூர்மையில், தொழில்சார்ந்த நிலையில், சமுதாய ரீதியில் சமமாய் கருதப்படுகிறார்கள், அவர்கள் சமுதாயத்தில், இணைந்து ஒரே அந்தஸ்தில் வேலை செய்ய வேண்டியவர்களாய் இருக்கின்றனர்.

தம்பதியர் "சமமாய்" இல்லாத பட்சத்தில், ஒருவர் பாதிப்பிற்குள்ளாகி, கர்த்தருக்கு முன்பாக செயல் திறன்பாட்டை அடைய இயலாது பாதிப்பிற்குள்ளாவர். திருமண உறவில் "அன்பு கூறுதல்" மட்டும், வேதாகம ரீதியில் கர்த்தரால் வல்லமையாய்ப் பயன்படுத்தப்படுவதற்கு போதுமானது அல்ல. அன்பில் நிலைத்திருத்தல் தவிர்க்கமுடியாத முக்கியம் வாய்ந்ததாய் இருப்பினும், ஒருவரையொருவர் சரிசமமாய் கருதுதல் திருமண உறவில் மிகவும் முக்கியம் வாய்ந்ததாய் இருக்கிறது, இவ்வாறு இல்லையேல், அவர்களது இணைப்பில் பிளவு உண்டாகி அதிக சேதத்தை வருவிப்பதாய் இருக்கும்.

தேவ ஊழியராகிய உங்களுக்கு, கர்த்தருக்கு முன்பாக, ஆவிக்குரிய தம்பதிகளுக்கு வேதாகம பொறுப்புகளை சரியான வகையில் புரிந்துகொள்ள வைப்பது என்பது தலையாய கடமையாய் இருக்கிறது. திருமண வாழ்வில் மணமக்களது பெற்றோரின் குறுக்கீடு இருக்குமானால், அல்லது அவர்கள் இல்லற வாழ்விற்கு ஆயத்தமற்ற நிலையில் இருப்பார்கள் எனில் அல்லது அவர்கள் சம நிலையின்றி காணப்படுவார்களேயானால், திருமண ஒழுங்குகளை தொடர்ந்து செய்தல் நிறுத்தப்படுதல் வேண்டும்.

திட்டமிடப்பட்ட திருமண பந்தத்திற்கு முன், அவர்கள் பாவத்திற்குட்பட்டு, குழந்தை உருவாயிருக்குமென்றால், அப்படிப்பட்டவர்கள் திருமணம் செய்தல் கூடாது, அவர்களது இணைப்பானது சமநிலையின்றி இருப்பதாலும் அல்லது வேதாகம ரீதியில் இல்லாதிருப்பதாலும் இவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது. எல்லா சபைகளிலும், பாவ சுத்திகரிப்பானது இருதரப்பிலுமிருந்து உறுதி செய்யப்படுகிறதாய் இருக்கிறது,

அவர்களது சுருங்கிய வாழ்நாளில், கர்த்தருக்கு முன்னிலையில் அவர்களது செயல் திறனை செயல்படுத்த இயலாதிருக்கிறார்கள்.

திருமணம் என்பது, ஒரு பெண்ணானவள் தனது வாழ்க்கைக்காக ஒரு மனிதனை முற்றிலும் நம்பி தனது பெற்றோரைவிட்டு அவனுடன் இணைந்து வாழும் பந்தமாய் இருக்கிறது. அநேக சந்தர்ப்பங்களில் இதை பிரசங்கிக்க தவறிவிடுகிறோம், புதியதாய் திருமண வாழ்வில் பிரவேசிக்கும் தம்பதிகள், அவர்கள் தனித்து தேவனுக்கு முன்பாகவும், சமுதாயத்திற்கு முன்பாகவும் காணப்படுகிறவர்களாய் இருக்கின்றனர். இதைப்போன்ற வேதாகம ரீதிக்கு ஒத்துவராத திருமண பந்தங்களை தடுத்து நிறுத்துவது நல்லது, பின்னர் குறுகிய காலப்போக்கில் அவர்கள் விவாகரத்திற்காய் எதிர்பட வேண்டியிருக்கும்.

இவைகள் சில வேதாகம அடிப்படைக் கருத்துக்களாய் இருக்கின்றன, இப்படிப்பட்ட கருத்துக்களை ஒரு தேவ ஊழியர் சீர்தூக்கிப்பார்த்து, அரசாங்க நியமங்கள் வேதாகமக் கருத்திற்கு விகற்பமாய் காணப்படுமேயானால் அத்தைகைய புறஜாதிய பழக்கவழக்கங்களுக்கு உடன்படாது, தனது மந்தையைக் காத்துக்கொள்ளுதல் வேண்டும். ஒவ்வொரு சபையும் இத்தகைய செயல்பாடுகளில், தங்களது வேதாகமக் கொள்கைகளுக்கு முக்கியத்துவம் அளித்து, தங்களது சபை போர்டுகளும் இதற்கு ஆதரவு அளித்து சபைத் திருமணங்களை நடத்துதல் மிகவும் அவசியம்.

பாலியல் உறவுகள் [பாலுறவு]

நீங்கள் வாலிப குழுக்களுடன் ஈடுபாடுடையவர்களாய் இருப்பீர்களானால், விசுவாசிகள், பாலுறவு கொள்ளுதல் அவர்களது திருமணத்திற்குப் பின் திருமண உறவில் மட்டும் என்பதை வலியுறுத்துதல் அவசியம். தேவன் ஏனோ காரணம் கருதி, திருமணத்திற்கு முன் பாலுறவு கூடாது எனக்கூறவில்லை. வேதாகம சட்டப்படி, தேவன் விசுவாசிகளது வாழ்வில், அக்கரை சென்றடையாதபடி கப்பற்சேதம் ஏற்பட்டுவிடக்கூடாது என கவனமுள்ளவராய் இருக்கிறார் என்பதைக் காட்டுகிறது. மக்கள் தவறான காரியங்களைச் செய்யக்கூடும், அவர்களுக்கு உண்மையை / சத்தியத்தை கூறுவீர்களானால், அவர்கள் எச்சரிப்படைந்து கவனமாய் இருக்க வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பவர்களாய் இருப்பீர்கள். மனதார சத்தியத்தை அறிந்து தவறிழைப்பவர்களுக்கு, நாம் பொறுப்பாளிகள் அல்ல. அவர்களை எச்சரித்துப் புத்திசொல்வதற்குரிய பொறுப்பானது நமக்களிக்கப்பட்டுள்ளது. எசேக்கியேல் 3:4-17, 18:30-32, 33:1-7, 34:1-10.

தேவ ஊழியராகிய நீங்கள், மிகவும் தெளிவுள்ளவர்களாய் இருத்தல் அவசியம், அவசியப்பட்டால், அறிவு மழுங்கிய நிலையிலும் இருக்க வேண்டியது அவசியம். திருமணம் குறித்த வேதாகமக் கண்ணோட்டம் குறித்து மிகவும் கவனமாய் இருத்தல் அவசியம். இங்கு கூறப்படுகிற செய்தியானது மிகவும் தெளிவானதாய் இருக்கிறது "திருமணத்தை தேவனது வழியில் செய்து நிறைவேற்றுங்கள்" பாலுறவை புருஷன் மனைவிக்குள் மட்டும் நுகர்ந்து அகமகிழுங்கள். இன்றைய அளவில் புறஜாதியர் "பாதுகாப்பான பாலுறவு" என்கின்றனர், நாம் அழைக்கும், பாதுகாப்பான, முழுமையான, திருப்தி அளிக்கக்கூடிய, வாழ்நாள் முழுவதும் நீடிக்கும் பாலுறவு என அழைக்கப்படுவது, திருமண உறவில் ஏற்படும், புருஷன் மனைவிக்கிடையே உள்ள பாலுறவு ஆகும்.

பெண்ணானவள் ஏற்கனவே கருத்தரித்து, அத்தம்பதிகள் திருமணம் செய்து கொள்ளவிரும்புவார்களெனில், மற்றும் அவர்களில் ஒருவரது பெற்றோர்களுடன் வாழும்படியான நிர்பந்தம் அவர்களுக்கு ஏற்பட்டு இருக்குமானால், அதோடு சம்பந்தப்பட்ட மக்களுடன் நீங்கள் சம்பாஷித்து, அவர்கள் இருவரும் அதேவீட்டில் தனித்து வாழ இடமுண்டானால் அவ்வொழுங்கை செய்யவும். அவ்வாறு இல்லாத பட்சத்தில் அத்திருமணம் நீடிக்கப்போவதில்லை, அவர்கள் தொடர்பு கொள்ள இயலாது போவதால், புருஷனானவன் தனது மனைவியை பொறுப்பெடுத்துக் கொள்ள இயலாத நிலைக்குத் தள்ளப்படுகிறான். அவர்கள் உறவில் போராட்டமானது குவிக்கப்படுகின்றன, காரணம் அவர்கள் திருமண உறவானது பரிசுத்தமாக்கப்படுவதைக் காட்டிலும், பாவத்தில் ஆரம்பமானது.

தேவனால் நிகழாத திருமண பாவ பந்தத்தை, பரிசுத்தமாக்கும் வீம்பை செய்யத்துணியக்கூடாது, அதன் விளைவு விவாகராத்தில் முடியும். இப்படிப்பட்ட பெற்றோரால், ஒரு குழந்தை பிறக்குமேயானால், பாவமானது நிலைத்திருக்கிறதாய் இருக்கிறது, திருமணத்தை ஸ்தாபித்துக் கொள்வது இருவருக்கும் தவறான காரியமாய் இருக்கிறது, இது ஒரு போதும் அக்குழந்தைக்கு உதவுவதாய் இல்லை, இதைத் தொடர்ந்து பிறக்கும் பிள்ளைகளும் ஆசீர்வாதமாய் இருக்கப்போவதில்லை. போதிப்பவராகிய நீங்கள் இளம் தம்பதியினருக்கு, இதைப் போன்ற தகாத உறவுகளின் விளைவைக் குறித்து கவனமாய் எடுத்துக் கூறி, இதைப் போன்ற சூழல்களைத் தவிர்க்க புத்திமதி அளித்தல் மிகவும் அவசியமாய் இருக்கிறது.

2 கொரிந்தியர் 6:14 ஐ வாசிக்கவும், நெகேமியா 13: 23 - 27. ஐயும் வாசிக்கவும். இதில் கூறப்படும் அடைப்படைக் கருத்து குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது. எக்காரணம் கொண்டும் ஒரு விசுவாசி, அவிசுவாசியை திருமணம் செய்தல் கூடாது. ஒரு விசுவாசி பாலுறவு சம்பந்தமான பாவம் செய்து, குழந்தை பிறக்குமானால், அக்குழந்தை குறித்த பொறுப்பை அவர்கள் எடுக்க வேண்டியவர்களாய் இருக்கின்றனர். அநேக ஊழியங்கள் அழிவுற்று வருகின்றன, இளம் விசுவாசிகள் வழிவிலகி செல்கிறவர்களாய் இருக்கின்றனர், அவர்கள் தீமையாலும், தகாத பாலுறவு பழக்கவழக்கங்களாலும், தங்கள் வாழ்வை அழித்துக் கொண்டு வருகின்றனர். பாவத்தை நாம் அவசரமான திருமணத்தைச் செய்து சுத்திகரிக்க முயலுவது, ஒழுக்கக்கேடானவற்றை மூடிமறைக்க முயலுவதாய் இருக்கிறது.

இன்றைய அளவில் பல தேசங்களில், ஓரின சேர்க்கை சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு, அவர்களுக்கு திருமணம் செய்து வைக்கப்படுகிறது. ரோமர் 1:16-32. ல் திருமணம் என்னும் பதம் ஓரினச் சேர்க்கைக்கு சம்பந்தப்பட்ட பதமல்ல, அது தீமை என வேத வசனங்கள் தெளிவுபடுத்துகிறது. வேதாகமத்தை விசுவாசிக்கும் திருச்சபைகள், ஓரின சேர்க்கை திருமணங்களை நிராகரிப்பு செய்கிறது, அதைப் பாவமாய்க் கருதுகிறது.

திருமணமும் விவாகரத்தும்:

விவாகரத்து செய்த ஒரு நபர் மறுமணம் செய்யலாமா? வேதாகமத்தை நல்ல நிலையில் விசுவாசிக்கும் கிறிஸ்தவர்களிடையே பிரிவினைகள் இருக்கின்றன. உபாகமம் 24:1-4, மத்தேயு 5:27-32, 19:3-12, 1 கொரிந்தியர் 7:15. போன்ற வேதபகுதிகளை வாசிக்கவும். திருமணத்தைக்குறித்த உபதேசங்களை கீழே வாசித்தறியவும், ஒரு நபர் சட்டரீதியாக விவாகரத்து செய்திருப்பாரேயானால், தனது வாழ்க்கைப் பங்காளர், விபச்சாரத்தில் விழுந்து போய், அந்நபர் தனது வாழ்க்கைப் பங்காளரை விட்டுவிட்டு

மற்ற நபருடன் இணைந்து வாழ்வாரேயானால், மறுமணம் செய்து கொள்ள விசுவாசிக்கு உரிமை அளிக்கப்படுகிறதாய் இருக்கிறது.

பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்தின் கீழ், விபச்சாரியானவள் கொலை செய்யப்படுகிறாள், ஆகையால் மற்ற வாழ்க்கைப் பங்காளர் மறுமணம் செய்து கொள்ள விடுதலையாய் இருக்கிறார். காரணம் அவர்கள் விதைவைகளாகவும், விதவையராகவும் இருக்கின்றனர். விபச்சாரிகள் கொலை செய்வது என்பது இக்காலத்தில் இல்லை, நமது மீடியாக்கள் இத்தகைய தீமைகளைக் கொண்டாடி மகிழ்கிறவைகளாய் இருக்கின்றன, நாம் சத்தியத்திற்காய் உறுதியாய் நிற்றல் வேண்டும்.

ஒரு விபச்சாரி மறுமணம் செய்வதற்கு உரிமையில்லை என வேதாகமம் தெளிவாய் அறிவிக்கிறது, அவ்வாறு மறுமணம் செய்து கொண்டால் அது தேவனது பார்வையில் விபச்சாரமாகவே கருதப்படுகிறது. இது ஆதி சபையின் கொள்கையாய் இருந்தது,

மனந்திருந்திய விபச்சாரிகள், சபையில் கலந்து கொள்வதை அனுமதிப்பதாய் இருந்தது. ஆனால் அவர்களுக்குச் சபையில் எவ்வித அலுவல்களோ, பொறுப்போ அளிக்கப்படுவதில்லை. அவர்கள் சபையை தங்களது மோசமான செயல்களால், அவமரியாதை செய்தபடியால், இத்தகைய சட்டமானது அவர்களுக்கு விதிக்கப்பட்டது. ஆரம்ப கால சபையில், பாலுறவு ஒழுக்கக்கேடுகளில் தவறியவர்கள் மனந்திரும்பும்படி, பல ஆண்டுகள் அவர்களுக்காக ஒதுக்கப்பட்டது, அவர்கள் மனந்திருந்திய பின்னர் திருவிருந்தில் மறுபடியும் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். மற்றும் ஐக்கியத்திலும், சபை ஆராதனையிலும் பங்கெடுக்க தகுதி பெற்றனர். விபச்சாரம் செய்தவர், மறுமணம் செய்ய தகுதியற்றவர். சில சபைகள் மட்டுமே இதைப் போன்ற ஆதி சபைக் கொள்கையைக் கைக்கொண்டு வருகின்றனர், இது வேதாகம ரீதியானதாய் இருக்கிறது.

விவாகரத்து, மறுமணம் செய்தல் போன்றவைகுறித்து, நன்கு அறிந்திருத்தல் வேண்டும், ஸ்தல சபையில், நீங்கள் என்ன விசுவாசிக்கிறீர்கள், எதை வழக்கத்தில் கொண்டுள்ளீர்கள் என்பது குறித்து தெளிவுபடுத்துவது மிகவும் அவசியமாய் இருக்கிறது. மற்றொரு பிரச்சனை என்னவெனில் இரு அவிசுவாசிகளுக்கு திருமணம் நடத்தி வைப்பது, அவர்கள் "white wedding"; சபையில் நடத்தக்கோரி விரும்புவதாகும். ஒரு நபர் ஒழுக்கக்கேடாய் நடப்பார் எனில் அத்தகையோர், “Hollywood Wedding” ஐ விருப்பமுள்ளவராய் இருப்பர். ஆகையால் இப்படிப்பட்டோருக்கு போலியான வேதாகமக் கருத்துக்களைக் கொண்டு தெய்வீக திருமணத்தை நடத்திக் கொடுத்தல் வேண்டும்.

சபையில் வைத்து நிகழும், white wedding குறித்த கருத்து என்னவெனில், சுத்திகரிக்கப்பட்ட தேவனது திட்டமானது கொண்டாடப்படுவது ஆகும். தேவனுடைய வார்த்தைக்கு ஊழியக்காரராகிய நீங்கள் ஒழுக்கக் கேடான காரியங்களுக்கு உடன்போகக்கூடாது. இப்படிப்பட்ட காரியங்களில் உங்கள் பங்கு என்ன மற்றும் சபை போர்டின் பங்கு என்ன என்பதை சரியாய் நிதானித்து செயல்படுதல் மிகவும் அவசியம்.

திருமண நாள் பரியந்தம் இளம் விசுவாசிகள் எவருடனும் உடலுறவு கொள்ளாதிருத்தல், பெரிய சாட்சியாய் இருக்கிறது. தேவ ஊழியராகிய நீங்கள் ஒரு அவிசுவாசிக்கு திருமணச் சடங்குகளை செய்து வைப்பீர்களானால், இந்த விஷயத்தில் நீங்கள் மிகவும் கவனமாய் இருத்தல் அவசியம். தங்களது வாழ்நாளில் மூன்றே முறை

சபைக்கு வருகிறவர்களுடன், அதிக நேரத்தை செலவளிப்பதில் எங்களுக்கு உடன்பாடு இல்லை.

திருமண வைபவங்களில், சுவிஷேசம் கூறுவதற்கான தருணங்கள் மிகவும் சொற்பமாய் இருப்பதால், அவர்கள் என்னவிரும்புகிறார்களோ அதை மட்டும் செய்து முடிக்கப்பாருங்கள். இது ஆவிக்குரிய நிலையில் பெலனைடையும் பகுதியாய் விளங்குகிறது.

அநேக அவிசுவாசிகள், தங்களது பெற்றோர் அல்லது தங்களது பெற்றோரின் பெற்றோருடன் சபைக்கு வருவது, திருமணம் செய்து கொள்ளத்தான், அவர்கள் விருப்பம் நிறைவேற சபைக்கு வருகிறவர்களாய் இருக்கின்றனர். அவர்கள் என்ன கூறுகிறார்களோ அதன்படி, நீங்கள் செய்ய எதிர்பார்க்கிறவர்களாய் இருக்கிறார்கள். புறஜாதியர் சமுதாயத்திற்கு தொண்டு செய்யும் நிறுவனம் சபை எனக் கருதுகிறவர்களாய் இருக்கின்றனர், திருமணம் நடத்துவதற்குரிய அங்கீகாரத்தை நீங்கள் அரசாங்கத்திடமிருந்து பெற்று இருப்பீர்களானால், அவர்கள் உங்களை அவிசுவாசிகளுக்கு திருமணம் நடத்திவைக்க உங்களை அதிகம் நெருக்குகிறவர்களாய் இருப்பர், உங்கள் சபைக்குரிய கொள்கைகளை எவ்வாறு எழுதியுள்ளீர்கள் என்பது குறித்து நீங்கள் பரிசீலனை செய்ய வேண்டியவர்களாய் இருக்கிறீர்கள்.

இப்படிப்பட்ட காரியங்கள் மேற்கத்திய நாடுகளில் உள்ள சபைகளில் அதிகரித்து வருகிறதாய் இருக்கிறது, இன்னும் சில ஆண்டுகளில் உலகலாவிய நிலையில் இது பரவுவதற்கு வாய்ப்புகள் அதிகம் காணப்படுகிறது. இதைக் குறித்து சபை போர்டில் சபைக்குரிய விசுவாச அறிக்கை தயார் செய்து, சபையின் கௌரவத்தை பேணிக்காப்பது அவசியமாய் இருக்கிறது. தேவனையும் அவரது வார்த்தையையும் கனப்படுத்தி பேணிக்காப்பது சபையின் தலையாய கடமையாய் இருக்கிறது. சத்துருவானவன் இப்படிப்பட்ட அலுவல்களில் மிகவும் சுறுசுறுப்புடன் செயல்பட்டுவருகிறவனாய்க் காணப்படுகிறான், ஆகையால் சபையானது எத்தகைய காரியங்களில் நிலைத்திருக்க வேண்டும் என்பதை நிதானித்து பகுத்தறிந்து செயல்பட வேண்டியிருக்கிறது.

ஆரம்ப கால சபையானது, அரசாங்க காரியங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்ட நிலையில் செயல்படுகிறதாய் இருந்தது, ஆனால் தற்காலத்திலோ, நாம் சமுதாயத்திற்கு செய்யும் அறப்பணியினால், அரசாங்கத்திற்கு வரிப்பணம் செலுத்துவதில் சிலாக்கியங்களைப் பெறுகிறவர்களாய் இருக்கிறோம். இவ்வித சிலாக்கியங்களால், வேதவசனங்களை சில சந்தர்ப்பங்களில், போதிக்க தடையுண்டாகிறதாயும், சில காரியங்களுக்கு ஒத்துப்போகவும் செய்கிறதாய் இருக்கிறது. இவ்விதமாய் அரசாங்கம் செல்கிற போக்கில் செல்வோமானால், ஓரினச் சேர்க்கை திருமணம், இன்னும் பல வேதாகமத்திற்கு ஒத்துப்போகாத காரியங்களை சபையானது செய்ய வேண்டும் என்ற நிர்பந்தத்திற்குள் தள்ளப்படுகிறவர்களாவோம். இருள் சூழும் காலம் வந்து கொண்டிருப்பதால், சபையானது இத்தகைய காரியங்களில் தனது கொள்கையை வலியுறுத்தி, தெளிவான வேதாகமக் கொள்கையினை அமைத்துக் கொள்ள முயலுதல் வேண்டும். ,

சபையின் சாக்கிரமந்துகளைக் குறித்து மக்கள் வினவும் எல்லாவிதக் கேள்விகளுக்கும் சபைப் போர்டானது, பதில்கூற ஆயத்தமாய் இருத்தல் வேண்டும். நாம் "நோவாவின் நாட்களில்" சம்பவித்தது போன்ற காரியங்கள், சம்பவிக்கும் கொடிய நாட்களில் வாழ்ந்து வருகிறோம், பாலியல் ஒழுக்கக்கேடுகள் மலிந்து காணப்படுகின்றன, புறஜாதிய வழிபாடுகள் மிகுந்து காணப்படுகின்றன, மக்கள் தங்களைத் தாங்களே

வழிபட்டுவருகின்றனர், தங்களைப் பிரதிபலிக்கும் உருவங்களைச் செய்து தெய்வங்களாக வழிபட்டு வருகின்றனர். மட்டுமின்றி, அவர்கள் நம்மையும் வேதாமத்திற்குப் புறம்பான காரியங்களை செய்யுமாறு வற்புறுத்தி வருகிறவர்களாய் இருக்கின்றனர், சாத்தானின் வஞ்சகம், மற்றும் அவனது ஏமாற்று காரியங்களில் ஈடுபட மறுப்போர் மீது கோபங்கொள்கிறவர்களாய் இருக்கின்றனர். மத்தேயு 24:36-39. இப்படிப்பட்ட காலக்கட்டத்தில், நாம் என்ன விசுவாசிக்கிறோம், எதைப் பின்பற்றுகிறோம் என்பதைக் குறித்த தெளிவும், பொதுவான விசுவாசக் கொள்கையும் இத்தகைய காரியங்களில் நமக்கு அவசியம் தேவைப் படுகிறதாய் இருக்கிறது. தீமையானது புயல் உருவம் கொண்டு கொந்தளிக்கும் முன்பு நமக்கு இப்படிப்பட்ட காரியங்களுக்கடுத்த பொதுவான வேதாகம விசுவாச அறிக்கை அவசியமாய் இருக்கிறது.

இன்றைய புறஜாதிய உலகில், சபை போர்டின் திருமணக் கொள்கைகள்:

பலதார விவாகம், ஓரினச் சேர்க்கையரின் விவாகம், பெண்கள் ஓரின சேர்க்கையினரின் விவாகம், மற்றும் புறஜாதியாரை விவாகம் செய்தல் போன்றவற்றைக் குறித்த சபைப் போர்டின் கொள்கைகளை பரிந்துரை செய்தல்:

1. திருமணம் என்பது கனத்துக்குரியது, தெய்வீகமானது, சமுதாயத்தில் இதை வலியுறுத்தி, இதன் முக்கியத்துவத்தை நிலைநாட்டுகிறோம்.

2. திருமணம் நடத்தி வைப்பதில், பரிசுத்த வேதாகமத்திற்குப் புறம்பான அரசாங்க கட்டுப்பாடுகளில் இருந்து வேறுபட்டு, சபையானது வேத நியமப்படியும், வேத ஒழுங்கின்படியும் திருமணங்களை நடத்தி வைக்கும். (அரசாங்க திருமணச் சட்ட ஒழுங்கின்படி, எல்லாவகையான திருமணங்களையும் சபைக்கட்டிடத்திற்குள் வைத்து சபையானது நடத்தி வைக்காது).

3. அற்பணிப்புள்ள கிறிஸ்தவ அங்கத்தினருக்கு, வேதாகம ரீதியில் தகுதிபெற்றோருக்கு, சபையானது திருமணம் செய்து வைக்கும், மற்றும் சபையானது திருமண விழாக்களை ஆசரித்து கொண்டாடி, திருமண ஆசீர்வாதங்களை அளிக்கும்.

4. சரித்திரத்தில் இதுவே, ஆரம்ப கால சபைகளின் அந்தஸ்தாய் விளங்கியது, இதன் வெளிச்சத்தில், இன்றைய அளவில் அத்தகைய சபையின் அந்தஸ்தை நிலைநாட்டுகிறவர்களாய் இருக்கிறோம்.

இன்றைய அளவில் வாலிபர், வேதாகம ரீதியில் வாழ்வதற்கு அநேக இடையூறுகளைச் சந்திக்க வேண்டியதாய் இருக்கிறது. தேவ வார்த்தையின் படி வாழும், கர்த்தருடைய ஊழியர் அவிசுவாசிகளின் திருமணத்தை நடத்தி வைப்பது அவர்களுக்கு தகுதியாய் இராது, என எண்ணுகிறோம். ஒரு வேளை அவர்களுக்கு, தெளிவான சுவிஷேசத்தை அறிவிக்க, பரிசுத்த ஆவியானவர் ஒரு தருணம் அளிப்பாரானால் இது விதிவிலக்காயிருக்கும். எப்படியிருப்பினும், ஒரு அவிசுவாசி மற்றொரு அவிசுவாசியை மணம் செய்து கொள்வது, "சமமாய் நுகத்தை" சுமப்பதாய் இருக்கும். இதை இவ்வாறு நாங்கள் ஏன் கூறுகிறோம் எனில், இன்றைய ஒழுக்க கேடுபாடுகளுக்கூடாய் சபைக்கு வருவோருக்கெல்லாம் திருமணம் நடத்தி வைப்பது என்பது, மிகவும் அபாயகரமானதாய் இருக்கும். கிறிஸ்தவ சம்பிரதாயப்பிரகாரம், அவிசுவாசிகள் திருமணத்தில் கொடுக்கும் வாக்கானது, தேவனுக்கு முன்பாக ஏமாற்று

அல்லது எத்தானதாய்க் கருதப்பட்டு, அவர்களது நித்திய இரட்சிப்பிற்கு அபாயத்தைத் வருவிக்கிறதாய் இருக்கிறது.

ஸ்தல சபைகளில் அவிசுவாசிகளுக்கு திருமணம் செய்து வைப்பதைக் குறித்த கொள்கைகளை அமைத்துக் கொள்வது அவசியமான ஒன்றாய் இருக்கிறது. இத்தைகய கொள்கையினை அமைத்து அதனைப் பின்பற்றுதல் வேண்டும் அல்லது தேவனது ஊழியர் அத்தகைய சபையை விட்டு வெளியேறுதல் வேண்டும். அப்படி ஒரு வேளை சபையானது புறஜாதிய திருமணங்களை நடத்த நிர்பந்திக்கப்படும் போது, சுவிஷேசம் அறிவிப்பதற்கான தருணங்கள் இருக்குமானால், வருடத்தில் இரு திருமணங்களை நடத்திக் கொடுக்க தீர்மானிக்கலாம். இங்கு மிகவும் கவனமாய் இருத்தல் அவசியம், உங்களது இலக்கானது மிகவும் சரியாய் இருந்து, திருமணவீட்டாருக்கு முன்னதாகவே நீங்கள் சொல்லவேண்டியதை எல்லாம் தெளிபட சொல்லியிருத்தல் வேண்டும்.

ஆவிக்குரிய நோக்குடன் திருமணத்தை நடத்திவைப்பீர்களானால், அதற்கு ஓரிரு மணி நேரங்கள் அவசியமாய் இருக்கிறது. இதற்கு அநேக மணி நேரங்கள் ஆலோசனைக்கும், ஒத்திகை பார்ப்பதற்கு அவசியமாய் இருக்கும், சரியான முறையில் திருமணத்தை நடத்தி வைப்பது தேவனைக் கனப்படுத்துவதாய் இருக்கும். திருமணச் செலவினங்கள் திருமணத்திற்கு, திருமணம் வித்தியாசப்படுகிறதாய் இருக்கும், இது அவர்களது குடும்ப அந்தஸ்தை வெளிக்காட்டுகிறதாயும், நண்பர்களின் பெருமையானது வெளிக்காட்டப்படுகிறதாயும் இருக்கும், இதினிமித்தமே, நவீன காலத் திருச்சபைகள், ஆரம்பகால திருச்சபைகளைப் போன்று திருமணவிஷயங்களில் பின்பற்றுவது நலமாயிருக்கும் என விசுவாசிக்கிறோம்.

புறஜாதிய திருமணங்களைப் போன்று அதிக அளவில் திருமணத்திற்காய் செலவு செய்து, வீண்டிப்பதைக் காட்டிலும், எளிமையான முறையில் திருமணச் சடங்குகளை முடித்துக் கொண்டு, அவர்களது எதிர்காலத்திற்கென எஞ்சிய பணத்தை சேர்த்து வைத்தல் எங்களது பணிவான அறிவுரையாய் இருக்கிறது.

அவர்களது கலாச்சார கருத்துக்கள், எது சரி எது தவறு எனச் சுட்டிக்காட்டுகிறதாய் இருக்கிறது. அவர்களது உள்ளூர் பாரம்பரியம் மற்றும் அவர்களது பழக்கவழக்கங்கள் இதனை நிர்ணயிக்கிறதாய் இருக்கிறது. இந்த விஷயங்களில் அவர்கள் எந்தவிதத்திலும், தேவனது வார்த்தையை மீறி செயல்படாதிருக்க கவனமாய் இருத்தல் மிகவும் அவசியம். உங்களது சபை போர்டின் கொள்கைகள் இப்படிப்பட்ட விஷயங்களில் தெளிவாக இருத்தல் மிகவும் அவசியம். திருமண ஆராதனை சரியான நேரத்தில் நிகழ்த்தப்படுவது அவசியமானதாய் இருக்கிறது. திருமண ஒத்திகையை முன்னதாகவே சரிபார்த்து, திருமண வைபவத்தை தேவனுக்குக் கனம்தருகிற வைபவமாய் நடத்துவது அவசியம். திருமணம் என்பது தேவனுக்கும், மற்றும் அவரது மக்களுக்கு முன்னிலையில் அளிக்கப்படும் வாக்குறுதியாய் இருக்கிறது. இதனை ஏதோ கண்துடைப்பிற்காய் செய்வார்கள் எனில், அதற்கு பொருத்தமான வேறு இடத்தை அவர்கள் பார்த்துக் கொள்வது நலமாய் இருக்கும்.

ஒழுக்கநெறியுடனும், ஆவிக்குரிய பாதுகாப்புடனும், உங்களது சமுதாயத்தில் திருமண ஆராதனையானது உங்கள் ஸ்தல சபையில் நிகழும் என்றால், கீழ்க்காணும் காரியங்களை கடைபிடிக்க வேண்டியது அவசியமாய் இருக்கிறது.

திருமண வைபவத்தின் போது இசைக்கப்படும் பாடல் மற்றும் இசையை மிகவும் கவனமாய் தணிக்கை செய்தல் அவசியம், மற்றும் இவ்வைபவம், தேவனுக்கு

கனத்தைக் கொண்டுவருவது குறித்த நிச்சயம் உடையவராய் இருத்தல் அவசியம். இவ்வைபவத்தை நல்லொழுக்கமாயும் கிரமமாயும் ஆயத்தம் செய்து, திருமண நிகழ்ச்சி நிரலை கவனமாய் தயார் செய்வது அவசியம். இதற்குமுன் திருமண ஆலோசனைக்கான நிகழ்ச்சி நிரலை ஒருவாரத்திற்கு ஆயத்தம் செய்து, அதை முன்கூட்டியே ஆலோசனை அளித்திருத்தல் அவசியம். ஆலோசனை முடிந்த பின்னர், அவர்களிடம் இறுதியாக கேட்க வேண்டியது, இன்னும் நீங்கள் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என இருக்கிறீர்களா? என்பதை உறுதி செய்யுங்கள் அவர்களை சட்டங்களை உருவாக்க அனுமதி அளியாதிருங்கள். இது உங்களுக்கு அதிகமான நேரத்தை மிச்சப்படுத்திக் கொடுக்கும். தேவ ஊழியர் தேவனுக்கு ஊழியம் செய்பவர், மனுஷனுக்கு அல்ல.

திருமணம் ஒருமுறை ஒழுங்கு செய்யப்பட்டுவிட்டால், அது தேவனைக் கனப்படுத்தும் நிகழ்வாகிவிடுகிறது, அது மணமகள் மற்றும் மணமகனின் தினமாகிவிடுகிறது, அது சட்டத்தின் நாளாக அல்ல. திருமணம் ஒழுங்கு செய்யப்பட்டுவிட்டால், பெற்றோர் இடையூறாக எதுவும் அதற்குப் பின் சொல்லுதல் கூடாது. ஆதியாகமம் 2:24 ன் படி அவர்கள் எவ்வகையான இடையூறுகளையும் திருமணத்தில் கொண்டு வராதிருக்கக் கடவர்கள். மணமகளின் தாயார் அல்லது மணமகள் தனது தாயார் ஒருவரையொருவர் விட்டு பிரியமனமற்று இருப்பார்கள் எனில், அவர்களை ஒருவரை விட்டு ஒருவர் பிரியுமாறு கேட்டுக்கொள்ளப்படுதல் அவசியம். வேத வசனங்களுக்கு கீழ்ப்படி மறுப்பது பெருங்குழப்பம், மற்றும் பெரிதளவில் துன்பத்தை வருவிப்பதாய் இருக்கும். மத்தேயு 19:5, எபேசியர் 5:31. சில கலாச்சாரங்களில் இது மாற்றப்படலாம், ஆனால் கவனத்தில் கொள்ளுதல் அவசியம், நீங்கள் ஆதியாகமம் 2:24 ஐ மீறுகிறவர்களாய் இருக்கிறீர்கள்.

திருமண ஆராதனையை குறைவான நேரம் எடுத்து நடத்தி முடிப்பது நன்று. இது ஒரு நீண்ட ஆராதனையாய் இருக்கக் கூடாது. ஜனங்களுக்கு அளிக்கும் செய்தியானது சுருக்கமாய் இருத்தல் வேண்டும். அவர்கள் அவிசுவாசிகளாய் இருப்பார்கள் எனில் சுவிஷேச செய்தியை அளியுங்கள். திருமண வைபவத்தில் கவனச்சிதறல்கள் அதிகம் காணப்படும். எல்லோரும் செய்தியை கவனிப்பார்கள் எனக்கூற இயலாது. திருமண வைபவத்தில் தேவ ஊழியர் அவர்களோடு செலவு செய்த நேரத்திற்கு தக்கவாறு அவருக்கு ஊதியம் அளித்தல் அவசியம். லூக்கா 10:7, 1 தீமோத்தேயு 5:18. அநேக மக்கள் தேவ ஊழியரின் ஸ்தானத்தை அசட்டை செய்கிறவர்களாய் இருக்கின்றனர். உங்களை ஒருவரும் அசட்டை பண்ணவிடாதிருங்கள். உங்களை அவர்கள் ஒன்றுமில்லாதவராய் கருதவிடாது இருங்கள். திருமண விருந்தில், அவர்கள் உங்களது நெருங்கிய நண்பர்கள், உங்களுக்கு அறிமுகமானவர்கள், அல்லது கிறிஸ்தவர்களாய் இருந்தால் மட்டுமே பங்கெடுங்கள். அந்த ஸ்தலத்தின் கலாச்சாரம், நன்னடத்தைகள், உங்களது நடத்தையை எடுத்துரைக்கிறதாய் இருக்கும்.

அவிசுவாசிகளுக்கு திருமணம் நடத்துவீர்கள் எனில், அவர்களிடம் கிறிஸ்து இலவசமாய் மரித்தார், இரட்சிப்பு இலவசமானது, ஆகையால் உங்கள் திருமணத்திற்கு எவ்வித கட்டணமும் வசூலிப்பதில்லை, நீங்கள் இரட்சிப்படைவதே முக்கியமான காரியமாய் இருக்கிறது என அவர்கள் அளிக்கும் பணத்தை வாங்க மறுத்துவிடுதல் வேண்டும். அவிசுவாசிகளிடமிருந்து எந்த ஒரு காரியத்திற்கும் பணத்தைப் பெற்றுக்கொள்வது கூடாது.

ஒவ்வொரு வாலிபர் கூட்டத்திலும் திருமணத்தைக் குறித்தும், பாலியல், மற்றும் குடும்பம் குறித்து போதித்தல் வேண்டும். உங்கள் போதனைகள் நீதிமொழிகள், ஆதியாகமம் 3, உன்னதப்பாட்டு, எபேசியர் 5 மற்றும் கொலோசெயர் 3 போன்ற வேத

பகுதிகளில் இருந்து தெரிவு செய்யப்படுதல் வேண்டும். ஒவ்வொரு ஆண்டிலும், வாலிபர் குழுவில் இது குறித்த போதனை அவர்களுக்கு அளிக்கப்படுதல் அவசியம். நீதிமொழிகளில் இருந்து அவர்களுக்கு போதனை அளிப்பது மிகவும் நல்லதாய் இருக்கும். இது பின்னர் அவர்களுக்கு அளிக்கும் ஆலோசனை நேரத்தை மிச்சப்படுத்துகிறதாய் இருக்கும்.

திருமண ஆராதனை ஒழுங்கிற்காய் பரிந்துரை செய்யப்படுபவை:

1. திருமண அணிவகுப்பிற்கான இசையானது இசைக்கப்படும் போது, மணமகள் அணிவகுப்புடன் பவனியாகச் சென்று பிரசங்க பீடத்திற்கு முன்பாக அமர்ந்து காத்திருக்கும் மணமகனை சென்று சந்திப்பது.

2. மணமகள் அவ்வாறு செல்லும் போது, எல்லோரும் எழுந்து நின்று மணமகளை கனப்படுத்துமாறு மரியாதை செய்தல் வேண்டும்.

3. தேவ ஊழியர் திருமண வைபவத்திற்காய் நன்றி கூறி ஏறெடுக்கும் ஜெபத்தினை செய்து திருமண நிகழ்வுகளை தொடர்ந்து நடத்தி வைப்பார்.

4. தேவ ஊழியர் கூடியுள்ள சபையோரை பாடல் ஆராதனைக்குள் வழிநடத்துவார், திருமண சம்பந்தமான பாடல்கள் பாடப்படும் (இப்பாடல்களை திருமண தம்பதியாரால் தெரிவு செய்யப்பட்டதாய் இருக்கும், இப்பாடல்கள் அவர்களது விசுவாசம், தேவன் மீது அவர்களுக்குள்ள பக்தியை வெளிக்காட்டுவதாய் இருக்கும்)

5. திருமணம் மற்றும் குடும்பம் இவற்றைக் குறித்த சிறு வேதபகுதி வாசிக்கப்பட்டு, சுருக்கமான செய்தி தேவ ஊழியரால் அளிக்கப்படும்.

6. திருமண உறுதிமொழியை தேவ ஊழியர் சொல்ல மணமக்கள் திரும்ப சொல்லுதல்.

7. கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தில் தேவ ஊழியர் ஜெபித்து தம்பதியர் மீது ஆசீர்வாதம் கூறுதல்.

8. மகிழ்ச்சியான இசை இசைக்கப்பட, தம்பதியர் சபைவிட்டு வெளியேறி, திருமண வாழ்விற்கு அடியெடுத்து வைத்தல்.

உபதேசம்:

<u>விவாகம் / திருமணம்:</u>

1. மனிதன் மற்றும் தேவதூதர்கள் ஆளத்துவம் உடையவர்கள், ஆனால் மனிதன் மற்றும் மிருகங்கள் "nephesh" ஐப்பெற்று இருக்கின்றனர் மற்றும் அவர்கள் சரீர மரணம் அடைகிறவர்களாய் இருக்கிறார்கள். தேவதூதர்கள் மரிப்பதில்லைகாரணம் அவர்கள் ஆவிகளாய் இருக்கின்றனர்.

2. திருமணத்திற்கு ஆளத்துவம் மற்றும் வாழ்க்கை இவ்விரண்டும் அவசியமாய் இருக்கிறது. இதினிமித்தம் விவாகம் மனிதனுக்கு மட்டுமே பொருந்தக்கூடியதாய் இருக்கிறது. தேவதூதர்களுக்கு விவாக வாழ்க்கை என்பது இல்லை.

3. விவாகம் குறித்த விளக்கம்: - விவாகம் என்பது, மனித வர்க்கத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே உள்ள தனிப்பட்ட உறவை காட்டுகிறது, மற்றும் இது கிறிஸ்துவுக்கும், விசுவாசிக்கும் இடையே உள்ள இரட்சிப்பின் உறவுக்கு ஒப்பணையாய் இருக்கிறது.

4. தேவனின் போதனை:- "ePq;fs; gYfpg; ngUfp> g+kpia epug;gp> mijf; fPo;g;gLj;jp> rKj;jpuj;jpd; kr;rq;fisAk; Mfhaj;Jg; gwitfisAk;> g+kpapd;Nky; elkhLfpw rfy [Pt[e;Jf;fisAk; Mz;Lnfhs;Sq;fs;" என தேவன் மனிதனுக்கு கட்டளை கொடுத்தார். இது மனிதன் மிருக இராஜ்ஜியத்தை கீழ்ப்படுத்தி, அதை ஆண்டுகொள்ள வேண்டும் என்பதைக் காட்டுகிறதாய் இருக்கிறது.

5. தேவன் தனிப்பட்ட ஆளத்துவத்துடன் இருப்பாரேயானால், உறவைக்குறித்த தெய்வீக உதாரணங்கள் இல்லாதிருந்திருக்கும். எப்படியிருப்பினும் தேவனுடைய ஆளத்துவத்தில், மூன்று ஆளத்துவம் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்லது. அவர் நம் சொந்தமாய் இருக்கிறார், இதினிமித்தம் அவருடன் நாம் உறவு கொண்டாடமுடியும்.

6. விவாகம் கிறிஸ்துவுக்கும் சபைக்கும் இடையே உள்ள உறவின் ஒப்பணையாய் இருக்கிறது.

கிருபை மற்றும் விசுவாச அமைப்பில், (எபேசியர்5:22), இவ்வசனத்தில் கீழ்ப்படிதல் என்பதன் பொருளானது, மாம்சீக சிந்தையினால் செய்ய இயலாதவற்றை, தேவனுடைய நியமத்திற்கு அற்பணிப்பதாய் இருக்கிறது. (ரோமர் 8:7; 10:3).

நீங்கள் கீழ்ப்படிதல் என்பது, .சுயசித்தத்தின் செயலாய் இருக்கிறது.

திருமண உறவு, குடும்பத்தில் குழப்பங்களை கொண்டுவருமானால், அது ஒருவருக்கொருவர் கீழ்ப்படியாததன் விளைவாய் இருக்கிறது. (ரோமர்13:1,5).

7. கிருபை ஆணுக்கும் விசுவாசம் பெண்ணுக்கும் ஒப்பிடப்படுகிறது, இவ்வித அமைப்பு செயல்படாததன் விளைவு துன்பங்களும், வேதனைகளுமாய் இருக்கிறது.

8. கிருபையும் - ஆணும்:

ஆண் ஆரம்பித்து வைக்கிறவரவனாய் இருக்கிறான்.

ஆண் தகவல்களை அளிக்கும்போது பெண் அதற்கு பிரதி உத்தரவு அளிக்கலாம் ஆனால், தனது சுயசித்தத்தை அதில் வற்புறுத்துதல் கூடாது.

ஆண் தனது குணாதிசயங்களை பெண்ணுக்குக் காட்டவேண்டும்.

ஆண் கிருபையின் அமைப்பில், தனது பொறுமையைக் கையாளுதல் வேண்டும்.

9. விசுவாசமும் - பெண்ணும்:

பெண் பிரதி விளைவுகளை ஏற்படுத்துகிறவளாய் இருக்கிறாள்.

பெண்ணானவள் தனது சுயசித்தத்தின்படி தெரிவு செய்கிறவளாய் இருக்கிறாள்.

அவள் விசுவாசத்தைப் பயன்படுத்துகிறவளாய் இருக்கிறாள்.

பெண் வளர்ச்சியடைய கால அவகாசம் தேவையாய் இருக்கிறது.

10. மகிமை வெளிப்படுதல்:

மறுபிறப்பின் மூலம் மாறுதல் அடைந்த வாழ்வின் அமைப்பில், தேவனது மகிமையானது, ஒரு ஆணின் வாழ்வில் காணப்படுகிறதாய் இருக்கிறது..
ஆணின் மகிமையானது, பெண்ணில் ஏற்படும் மாற்றங்களினால், காணப்படுகிறது.

11. மனம் ஒன்றுபட்ட வாழ்க்கை:
மனம் ஒருமித்த வாழ்வின் முக்கிய பகுதி, ஆவிக்குரிய இராஜ்ஜியத்தில், மனோரீதியான நிலையில் அநேக மக்களுடன் மனமொருமித்து இருக்கமுடியும் என்பதைக் காட்டுகிறதாய் இருக்கிறது.
ஆவிக்குரிய மனமொத்த நிலையை குறிக்கும் சொற்றொடர் "ஒரே மாமிசமாய் இருப்பார்கள்" எனக் குறிப்பிடப் படுகிறது, இது கிறிஸ்து மற்றும் சபை இணைக்கப்படுவதை சித்தரிக்கிறது.

12. சாத்தான் ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே கருத்து வேறுபாடுகளை கொண்டுவர முயர்ச்சித்து, ஆதன் விளைவாக பிரச்சனைகளை ஏற்படுத்துகிறான். இது சமுதாயத்தில் ஏற்படும்பொழுது, ஒழுக்க சீர்கேட்டை அவை பிரதிபலிக்கிறதாக இருக்கிறது.

13. விவாகத்தின் முடிவிற்கு தகுதியான காரணங்கள்:-
இரு தம்பதிகளில் ஒருவர் மரித்தல்.
திருமணத்திற்குப்பின் தம்பதிகளில் இருவரில் ஒருவர் விசுவாசியானதினிமித்தம் அவிசுவாசியால் கைவிடப்படுதல். (1 கொரி 7:10-16).
தகுதியற்ற முறைகேடான திருமணம் புரிந்த தம்பதிகள் லேவியராகமம் 18 ல் கூறப்பட்டுள்ளபடி நெருங்கிய உறவில் திருமணம் செய்தவர்கள்.
விபச்சாரம் அல்லது வேசித்தனம் போன்ற காரணங்களால், ஒரே மாமிசம் என்கிற அடிப்படையிலிருந்து விலகி மற்ற மாமிசத்துடன் சம்பந்தப்படுவதால் அது அழிவை ஏற்படுத்துகிற காரணத்தால் விவாகத்திற்கு முடிவு உண்டாகிறது. (மத்தேயு5:32; 19:9)

6. தெய்வீகத் தலைமைத்துவத்திற்கு நியமணம் செய்வதற்கு, அபிஷேகித்தல் / பிரதிஷ்டை செய்தல்:

அப்போஸ்தலர் 14:20-23 வரையுள்ள வேதபகுதியை வாசிக்கவும். இங்கு பவுல் ஸ்தாபிக்கப்பட்ட சபைகளில், மூப்பர்களை நியமணம் செய்வதைப் பார்க்கிறோம். அவ்வாறு அவர் நியமணம் செய்யும் போது, ஒன்றுக்கும் மேற்பட்டவர்களை ஒவ்வொரு சபையிலும் நியமணம் செய்வதாய்ப் பார்க்கிறோம். இவ்வாறு நியமணம் செய்யப்படுவோரைக் குறித்து நன்கு ஆய்வு செய்த பின்னர், ஜெபத்துடனும், உபவாசத்துடனும் சபைகளில் நியமணம் செய்யப்பட்டனர். யூதர்கள் உபவாசிக்கும் முறைமையானது, ஆரம்ப கால சபையில் பின்பற்றப்பட்டு வந்தது. காலை உணவருந்துவதற்கு முன் எழுந்து, அதாவது காலை 06:00 மணிக்கு முன்னதாய் எழுந்து, உணவு எதுவும் அருந்தாமல், வெறும் தண்ணீர்மட்டும் குடித்துக் கொண்டு, காலை 06:00 மணி முதல் மாலை 06:00 மணி வரை உபவாசித்து பின்னர் மாலை 06:00 மணிக்கு மேல் உணவருந்தி பெலப்படுவர்.

உபவாசம் என்பது நேரப்பட எழுந்து விட்டால், அது கஷ்டமானதாய் இராது. ஒவ்வொருவரும் உபவாசிக்கும் வண்ணம் இது வடிவமைக்கப்பட்டுள்ளது. மக்கள் நேரப்பட எழுந்து, புசித்துவிட்டு, தங்களது வேலை நேரங்களில் ஜெபித்து, அவர்களது வயிறு பசி எடுக்குமானால், தண்ணீர்குடித்துவிட்டு, ஜெபிப்பர். கர்த்தருடைய வேலையை செய்வதற்கு, இது பெரிதளவில் வழிவகை செய்கிறதாய் இருக்கிறது. பகல் நேரத்தில் ஜெபித்து, வயிறு பசிக்கும் நேரத்தில் தண்ணீர் குடித்து கொண்டு கர்த்தரின் பாதத்தில் விழுந்து கிடப்பது, ஆத்துமாவில் பெலப்பட உகந்ததாய் இருக்கிறது.

தீத்து 1:5 - 9. ஐ வாசியுங்கள். கிரேத்தா தீவில் உள்ள சபையை ஒழுங்கு படுத்துமாறு, பவுல் தீத்துவிற்கு அதிகாரம் அளித்தார். இதில் அவர் குறிப்பிடும் போது, சிலரை சபையில் ஏற்படுத்த வேண்டும் என்று கூறினார். கண்காணி [பிஷப்] மற்றும் மூப்பர் இருவரும் ஒருவரே என இங்கு தெளிவாகிறது, போதகர் என்ற சொல்லானது ஆழுகை செய்பவர் / வழிநடத்துபவர் என்ற அர்த்தத்தைக் குறிப்பதாய் இருக்கிறது. .

ஆங்கில வார்த்தைகளாகிய “appoint or ordain” என்ற வார்த்தைகள் மூல பாஷையாகிய கிரேக்க மொழியில் பல கலாச்சார அர்த்தத்தினை உள்ளடக்கியுள்ளது. ஒரு குறிப்பிட்ட காரியத்தை செய்வதற்கென நியமிக்கப்படுதல், கரங்களை வைத்தல், யூதர்களின் மாதிரிப்படி, ஒரு குறிப்பிட்ட காரியத்தை செய்ய வேறுபடுத்தப்பட்டு, புதிய அதிகாரம் அளிக்கப்பட்டு, நபர்களை அபிஷேகித்தல் / நியமித்தல் என்பதைக் குறிக்கிறது. ஆகையால் இங்கு இரு கருத்துக்களைக் காண்கிறோம், அநேக மக்களது அங்கீகாரம் பெறுதல், மற்றும் அப்போஸ்தலரின் பிரநிதிகளாய் அதிகாரம் பெறுதல். இப்படிப்பட்டவர்கள் அவர்களது குணாதிசயங்கள் மற்றும் தகுதி அடிப்படையில் ஜனங்களால் "அங்கீகாரம்" பெறுகிறவர்களாய் இருக்கின்றனர்.

அப்போஸ்தலர் 6:1-6. ஐ வாசிக்கவும். இங்கு நாம் காண்பது என்னவெனில், சபையில் உள்ள அங்கத்தினரின் குழு, இப்படிப்பட்ட ஆவிக்குரிய வரங்களை உடையவர்களை தெரிவு செய்ய எதிர்பார்த்தனர். அப்போஸ்தலர் இவ்வாறு கூறுகின்றனர், "இப்படிப்பட்டவர்களுக்கு வாக்களித்து, உங்கள் கண்களுக்கு முன்பாக சிபாரிசு செய்து, இவ்வேலையைச் செய்ய நியமனம் செய்யுங்கள் என்றனர். ஆரம்பகால சபையில், அப்போஸ்தல பிரநிதிகள் சபை மீது அதிகாரத்தில் இருந்து வந்தனர், இவர்கள் சபையில் மக்களை ஏற்படுத்தி வந்தனர், மற்றும் சபையில் உள்ள அங்கத்தினரும் இவ்விதமாய் ஏற்படுத்தப்படுகிறவர்களைப் பரீட்சித்துப்பார்த்து உதவுவதில் அப்போஸ்தலருக்கு உதவுபவர்களாய் இருந்து வந்தனர்.

ஆரம்ப காலத்தில் இது சர்வ அதிகாரப்போக்காக இச்சூழலில் இருக்கவில்லை. சபையானது இதில் தலையிடுகிறதாய் இருந்து, முடிவாக பொறுப்பு வகித்து வந்தவர்கள் நியமிக்கப்படுகிறவர்களாய் இருந்தனர். தீத்து அப்போஸ்தல பிரதிநிதியாக இருந்த போதிலும், பவுலின் விஷேச அதிகாரத்தை பெற்றவராய் விளங்குகிறார். ஆகையால், இவர் மூப்பர்களையும், கண்கானிகளையும் நியமித்து ஏற்படுத்துகிறவராய் இருந்தார். இவ்வாறு ஏற்படுத்தப்பட்டவர்கள், சபையின் உதவியுடன், மற்றும் அங்கீகாரத்துடன் தெரிவு செய்யப்பட்டு நியமனம் செய்யப்படுகிறவர்களாய் இருந்தனர்.

இன்றைய அளவில் ஆர்டினேஷன் ஆராதனை எத்தகையதாய் இருக்கிறது? சபையால் ஏற்படுத்தப்படுகிற நபர்கள் இனங்கண்டு கொள்ளப்பட்டு, அவர்கள் வகிக்க இருக்கும் தலைமைத்துவத்திற்குரிய வரங்களையும், ஊழியத்தகுதிகளையும் பெற்றவர்களாய் இருக்கிறார்களா? நியமிக்கப்படுகிறவர்கள், வரங்களைப் பெற்றவர்களாயும், அவர்களது வாழ்வில் ஆவிக்குரிய கனியுள்ளவராயும் இருத்தல் இன்றியமையாததாய் இருக்கிறது.

பிஷப்பிடமிருந்து மக்களுக்கு அதிகாரம் அளித்தல் ஆர்டினேஷன் என அர்த்தம் ஆகாது. சபை மக்களது பரிந்துரையின் பேரில், அவர்களது வரமானது கண்டறியப்பட்டு, அவர்களது வாழ்வில் ஆவிக்குரிய கனியினால் நிரப்பப்பட்ட வாழ்க்கை செய்வது குறித்து சாட்சி அறியப்பட்ட பின்னரே அவர்களுக்கு ஆர்டினேஷன் அளித்தல் அர்த்தமுள்ளதாய் இருக்கும். ஒரு நபர் வரங்களை உடையவராய் இருந்து கனியற்றவராய் இருப்பார் எனில், அந்நபர் ஆர்டினேஷனுக்கு தகுதி இல்லாதவராய் இருக்கிறார்.

கரங்களை வைத்தல்:

அபிஷேகம் பெறும், அல்லது ஏற்படுத்தப்படும் நபர் சபையில், மூப்பர், டீக்கன் அல்லது டீக்கனஸ் ஆக அதிகாரம் பெற்று, சபைப் பொறுப்பில் பங்கேற்கிறவர்களாகிறார்கள். இது ஆரம்ப கால சபையில் தெரிவு செய்யப்பட்டவர்கள் மீது கரங்களை வைத்து ஜெபிப்பதன் மூலம், அவர்கள் சபையில் அதிகாரமுடையவர்களாவது உறுதி செய்யப்பட்டது.

கரங்களை வைக்குதலின் முக்கியத்துவம் நான்கு காரியங்களுக்காக இருந்து வந்தது. இது விஷேசமான யூத பழக்கவழக்கமாய் இருக்கிறது. இது யூத மக்களால் சபைக்குள் கொண்டு வரப்பட்டது. யூதர்கள் ஆரம்பகால சபையில் அதிக அளவில் இருந்தனர். இதைப் போன்ற அபிஷேக ஆராதனை உங்கள் சொந்த கலாச்சாரத்திற்கேதுவாய் இருக்க, இதற்கு விதிவிலக்குண்டு.

[அ] புதிய அதிகாரத்தை ஒருவர் பெற்றுக்கொள்கிறார் என்பதை இனங்காணும்படி செய்கிறதாய் இருக்கிறது. சில வேளைகளில் முழு சபை அங்கத்தினரும் தங்களது கரங்களை குறிப்பிட்ட நபர் மீது வைப்பதால், சபை மீது குறிப்பிட்ட நபர் அதிகாரம் உடையவராய் இருக்கிறார் என்பதைக் காண்பிக்கிறதாக இருக்கிறது.

[ஆ] ஒரு குறிப்பிட்ட பணியை செய்வதற்கு, ஒருவரைப் பிரத்தியேகப்படுத்துவதைக் காட்டுகிறதாய் இருக்கிறது. அந்தியோகியா சபையில் ஞாயிறு காலை ஆராதனையின் போது, மிஷனரி பயணத்திற்காய், வேறுபிரிக்கப்பட்டனர், இந்நிகழ்வானது அவர்கள் மீது கரங்களை வைத்து ஜெபித்து வேறுபிரித்ததன் மூலம், நடைபெற்றதாய்க் காண்கிறோம்.

[இ] இதன் பொருள் உங்கள் அதிகாரத்தை அவர்கள் உடையவர்களாகும்படி செய்கிறீர்கள் என்பதாகும். அல்லது உங்கள் அதிகாரத்தை அவர்களுடன் பகிர்ந்து கொள்கிறீர்கள் எனப்பொருள்படும். நீங்கள் ஒரு மூப்பராயிருந்து, ஒரு புதிய மூப்பரை நியமனம் செய்யும்போது, நீங்கள் அந்நபரிடம் சொல்லுவது என்னவெனில், உங்களைப் போன்றே அவர்களும் இத்திருச்சபையில் அதிகாரம் உடையவர்களாய் இருப்பார்கள்.

[ஈ] இதை இவ்வாறும் கூறுவார்கள், "கர்த்தரின் ஆசீர்வாதம் உங்கள் மேல் இருப்பதாக" ஒரு மூப்பர் அல்லது டீக்கனை ஆர்டினேஷன் செய்யும்போது, கர்த்தர் அவர்களை ஆசீர்வதிக்கும்படி நீங்கள் விரும்புகிறீர்கள். இது அப்போஸ்தல பழக்கமாயிருப்பதால், இன்றைய அளவில் உள்ள சபைகளுக்கும், இது போன்றவை பொருத்தமானதாய் இருக்கிறது.

இதோடுகூட டீக்கன்கள் செய்யவேண்டிய பணிகளும் அவர்களுக்காய் ஒதுக்கப்படும். அவர்கள் மூப்பர்களுக்கு கடமைப்பட்டவர்களாய் இருப்பர். மற்றும் அவர்களுக்கு

இவர்கள் கீழ்ப்படிதலுள்ளவர்களாய் இருப்பர். இங்கு சபையின் மூப்பர் டீக்கன்கள் என்னென்ன செய்ய வேண்டும் அவர்களுக்கு கட்டளை கொடுப்பர். ஆர்டினேஷன் வித்தியாசமான விதங்களில் நிகழும், ஆகையால் ஒவ்வொரு ஆராதனையும் வித்தியாசமானதாய் இருக்க அவசியமாய் இருக்கிறது, அதன் முக்கியத்துவமானது ஒவ்வொரு சமயத்திலும் விவரிக்கப்படுகிறதாய் இருக்கும்.

சபையில் ஒரு குறிப்பிட்ட பணியானது செய்து முடிக்கப்பட, அப்பணிக்காக குறிப்பிட்ட சபை மக்கள் ஏற்படுத்தப்படுவர், இதனால் எல்லோரும் அவர்கள் நியமிக்கப்பட்டவர்கள் என இனங்கண்டு கொள்வர். அவர்கள் பணி என்ன என்பதையும் அவர்கள் அறிந்து கொள்வர், மற்றும் அவர்கள் அதிகாரம் என்ன என்பதும் அவர்கள் அறிந்து இருப்பர். அவர்களுக்கு அவர்கள் ஆதரவு அளித்து, அவர்களுக்காய் அனைவரும் ஜெபிப்பவர்களாய் இருப்பர். ஆர்டினேஷன் ஆராதனை என்பது, அவர்களது அதிகாரம் மற்றும் பொறுப்பு இவைகளை உணரும்படி செய்யும் ஆராதனையாய் இருக்கிறது, அவர்கள் குறிப்பிட்ட பணியை செய்து முடிக்கவும், அவர்களது பணி குறித்து எல்லோரும் அறிந்து, அவர்களுக்கு ஆதரவு அளித்து, அவர்களுக்காய் ஜெபிக்கும் படி, சபையில் ஆர்டினேஷன் நிகழ்வதாய் இருக்கும்.

அதிகாரம் செலுத்தக்கூடிய எல்லா பணிகளையும் செய்வோருக்கு, ஆவிக்குரிய தகுதிகள் எப்பொழுதும் அவசியமானதாய் இருக்கிறது.

ஒவ்வொரு ஆர்டினேஷன் போதும், பொதுமக்கள் முன்னிலையில் அற்பணிப்பானது ஒரு பகுதியாய் விளங்கிவருகிறது. ஆராதனையின் இறுதிக்கட்டத்தில் எல்லா சபையோரும் எழுந்து நின்று தெரிவுசெய்யப்பட்டோருக்காக ஜெபிப்பர். அவர்கள் எழுந்து நிற்கும் போது, தெரிவு செய்யப்பட்டோரைத் தாங்கள் பின்பற்ற தங்களை அற்பணிப்பர். மூப்பர்கள், டிக்கன்கள், மிஷனரிகள், சபை நிறுவுவோர் (நீங்கள் கிளை சபைகளைத் துவங்குவீர்களெனில், விஷேச ஆராதனை அங்கு நடத்துமாறு போதகர்கள் அனுப்பி வைக்கப்படுவர்) அல்லது குறுகிய கால மிஷன் ஊழியங்கள், மற்றும் வெளி ஊழியங்கள் செய்யுமாறு தெரிவு செய்யப்பட்டு பிரதிஷ்டை செய்யப்படுவர். சில சபைகளில் சபை அங்கத்தினர் அனைவரும், தங்கள் கரங்களைக் கோர்த்துக்கொண்டு, கர்த்தர் பணிக்கென ஏற்படுத்தப்பட்டோருக்காக ஒரு மனதுடன் ஜெபிப்பர். கடைப்பிடித்தொழுகும் உபதேச காரியங்களை வகையறுத்து, அதைக் கருத்தாய் பின்பற்றுமாறு போதித்து, சபைக்குக் கொள்கைகளை அமைத்துக் கொள்வது அவசியம்.

ஒருமுறை ஒரு நபர், அபிஷேகிக்கப்பட்டவரவனால், அவர் முன்மாதிரியுள்ள வாழ்க்கை செய்தல் அவசியம். சபை அலுவலர் ஒரு பாவத்தில் விழுந்து விட்டால், அவர் எல்லோர் முன்னிலையில் நிறுத்தப்பட்டு கடிந்து கொள்ளப்படுதல் வேண்டும். அவருக்கென பணிக்கப்பட்டிருந்த அலுவலை அவரிடமிருந்து எடுத்துக்கொள்ளப்படுதல் வேண்டும். ஒரு சாதாரண சபை அங்கத்தினர் பாவத்திற்காக தனிப்பட்ட நிலையில் பாவ அறிக்கை செய்து ஒப்புரவாக வேண்டும், அவர்கள் இவ்வுலகிற்கு முன்பாக முன்மாதிரியுள்ள வாழ்க்கை செய்தல் அவசியம். கர்த்தருடைய பணிசெய்ய எல்லோருக்கும் முன்பாக கலங்கமற்றோராய் இருத்தல் மிகவும் அவசியம்.

மூப்பர்கள், டீக்கன்கள் போன்றோரின் சபை அலுவல்கள் நிரந்தரமானதாய் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. சபையில் பொதுவாக டீக்கன்களை நியமிப்பது, சாதாரணமான ஒன்றாய் இருந்துவருகிறது, பின்னர் அப்பட்டணமுழுமைக்கும் பிஷப்களை நியமிப்பதும் சாதாரணமானதாய் இருந்து வருகிறது. டீக்கன்கள் ஒரு

சுவிஷேசகராய் பணியாற்றுகிறவராய் இருக்கிறார், அப்போஸ்தல நடபடிகளில் ஸ்தேவானையும், பிலிப்புவையும் இவ்வாறு நாம் காண்கிறவர்களாய் இருக்கிறோம்.

ஆர்டினேஷன் ஆராதனை ஒழுங்குமுறையானது, அந்த ஸ்தலத்தின் பழக்கவழக்கங்களை பின்பற்றி செய்யப்படுதல் வேண்டும். அது குறித்து ஸ்தல சர்ச் போர்டில் விவாதித்து பின்னர் செயல்படுத்துதல் வேண்டும். எப்படியிருப்பினும், சில காரியங்கள் எப்பொழுது இடம் பெறுகிறதாய் இருக்கிறது. முதலாவதாக: பரிசீலனை ஆலோசனைக் குழு கூடி, முடிவெடுக்கும், ஊழியம் செய்ய ஒப்புக்கொடுத்தோரின் விசுவாச அறிக்கையை எழுதி சமர்ப்பித்தல் வேண்டும் அதனுடன் அவர்களது விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து கொடுத்தல் வேண்டும். அதனை பரிசீலனை செய்த பின்னர், முழு சபையோரிடம் அவர்களைக் குறித்து கேள்விகளைக் கேட்டு அவர்களை அறிந்து கொள்ளுதல் வேண்டும். ஊழியத்திற்காக அற்பணித்த எல்லா நபர்களையும், முழுவதுமாக பரிசீலனை செய்த பின்னர், அவர்களது வேத அறிவு, சபையைக் குறித்த அவர்களது அறிவு, சபையைக் குறித்த அவர்களது கண்ணோட்டம் போன்றவைகளை அறிந்து கொள்ளுதல் வேண்டும். சபையில் அவர்களது நடத்தை, அவர்களது திருமண வாழ்க்கை, அவர்களது குடும்பவாழ்க்கை, சமுதாயத்தில் அவர்களுக்கிருக்கும் சாட்சிபோன்றவற்றை விசாரித்து அறிந்து கொள்ளுதல் வேண்டும். அவர்கள் தேவனது ஜனங்களுக்கு முன்பாக நிற்கிறவர்களாய் இருக்கின்றனர், மற்றும் புறஜாதிய சமுதாயத்தில், தேவனால அங்கீகாரம் பெற்ற தலைவராய் நிற்கிறவராய் இருக்கிறார். ஜனங்கள் எவ்வகையான பாவத்தைக் குறித்து எவ்விதத்திலும் அவரைக் குறித்து குறை சொல்லுதல் அவர் வாழ்வில் இடம் பெறுதல் கூடாது. அந்நபர் எவ்விதத்திலும் கர்த்தருக்கு அல்லது அவரது ஜனங்களுக்கு அவகீர்த்தியை கொண்டுவருகிறவராய் இருத்தல் கூடாது.

அவர்கள் செய்யும் தொழில் மற்றும் அவர்களது சிந்தனை போன்றவற்றைக் குறித்து கேள்விகள் கேட்கப்பட்டு, அவர்களைப் பரீட்சித்துப் பார்த்தல் வேண்டும். அவர்கள் உள்ளூர் நடவடிக்கைகளைக் குறித்து அறிந்து இருத்தல் அவசியம், தேவனது கொள்கையை அவர்கள் மீது கொண்டுவருவதற்கு ஆயத்தமுள்ளவர்களாய் இருத்தல் வேண்டும். அவர்களது பிரசங்கிக்கும் திறமை, சுவிஷேச ஊழியம், போதிக்கும் திறமை, வீடு சந்திப்பு போன்றவைகளும் பரீட்சித்துப் பார்க்கப்படுதல் அவசியம். அவர்களது செயல்பாடுகளுக்குத் தக்கவாறு அவர்களை ஏற்படுத்தப்படுதல் வேண்டும். மற்றவர்களை அவர் எவ்வாறு தொடர்புபடுத்திக்காட்டுகிறார்கள், குழுவாக செயல்படும்போது, அவர்கள் எவ்வாறு செயல்படுகின்றனர், அவர்களது சுவிஷேச அற்பணிப்பு, மற்றும் மிஷனரி அற்பணிப்பு எத்தகையது, அவர்களது உக்கிராணத்துவம் எத்தகையது, மற்றும் புறஜாதிய சமுதாயத்தைக் குறித்த அவர்களது எண்ணம் எப்படிப்பட்டது என்பது குறித்து அவர்களை பரீட்சித்து அறிதல் வேண்டும். போதகக் கடமையாற்றுவதற்கு, அவிசுவாசிகள் அவரைக் குறித்து எப்படிப்பட்ட எண்ணம் உடையவர்களாய் இருக்கிறார்கள்? என்பதைக் கேட்டறிதல் வேண்டும். அவிசுவாசிகள் அந்த நபர் நல்லவரல்ல என சாட்சிபகருவார்கள் எனில் அத்தகைய நபர் ஊழியத்திற்குரிய தகுதியற்றவராய் இருக்கிறார்.

அவர்களது சேவை: இங்கு பரிசுத்த ஆவியானவர் வழிநடத்துதல் வேண்டும். அவர்களுக்கென ஒதுக்கப்பணியின் தன்மைக்கு தக்கவாறு அவர்கள் வழிநடத்தப்படல் வேண்டும். அவர்களது பணியானது ஜெபத்துடன் துவங்குதல் வேண்டும், பின்னர் பயபக்தியுடன் பாடிக் கர்த்தரை மகிமைப்படுத்துதல், சரியான வேதபகுதியைத் தெரிவு செய்து அதை சத்தமாய் வாசித்தல் வேண்டும். சூழ்நிலைக்கு ஏற்ற பிரசங்கம் செய்தல் வேண்டும் எல்லாவற்றிற்கும் மேலாக கர்த்தருக்குக் கீழ்ப்படிதல் அவர்களுக்கு மிகவும்

அவசியம். கர்த்தரின் நோக்கம் மற்றும் அவரது திட்டம் போன்றவற்றை அறிந்து அவற்றிற்கு அற்பணித்த பின்னர், அவர்கள் மீது மூப்பர்களின் கரங்கள் வைக்கப்படும், அதைத் தொடர்ந்து ஜெபிக்கப்படும், பின்னர் அற்பணிப்பின் ஞானப்பாட்டு பாடப்படும், பின்னர் முடிவு ஆசீர்வாதம், அதைத்தொடர்ந்து, புதிதாய் நியமணம் செய்யப்பட்ட சபை அலுவலர்களுக்கு ஐக்கியத்திற்கு முகாந்திரமாய் வலது கை கொடுத்தல், போன்றவை இடம் பெறும். ஆராதனை முழுமையும், அந்த குறிப்பிட்ட நபர்களுக்காக இருக்கும், இது மிகவும் முக்கியம் வாய்ந்ததாய் இருப்பதால், எல்லா ஆரதனைகளிலும் இது மிகவும் முக்கியம் வாய்ந்ததாய் கருதப்படுகிறது. இவ்வாரதனையை ஒரு சனிக்கிழமையில் நடத்தலாம், எங்களது பரிந்துரையின்படி, இப்படிப்பட்ட ஆராதனையானது ஒரு ஞாயிற்றுக்கிழமையில், கர்த்தருடைய திருவிருந்தைத் தொடர்ந்து இருப்பது சிறப்பானதாய் இருக்கும். இப்படிப்பட்டவர்கள் கர்த்தருடை பந்தியை ஆசரிப்பது மூலம் இவர்களது பணியானது ஆரம்பம் பெறுவது சிறப்பானதாய் இருக்கும்.

அப்போஸ்தலர் 6 ம் அதிகாரத்தில், டீக்கன்கள் [உதவிக்காரர்கள்] ஏழு பேர் நியமிக்கப்படுகிறார்கள். இவர்கள் ஏழாயிரம் புதிய அங்கத்தினரை விசாசிக்கும்படி ஏற்படுத்தப்பட்டனர். உங்களது சபையில் ஐம்பது அங்கத்தினர் இருப்பார்களேயானால் அவர்களை விசாரிக்க பரிசுத்த ஆவியானவரின் வரம் பெற்ற ஏழுபேர் அவசியமற்றது. இருபத்தைந்து அல்லது ஐம்பது சபை அங்கத்தினருக்கு ஒரு டீக்கன் ஏற்படுத்தப்பட்டால் போதுமானது. இப்படிப்பட்ட டீக்கன்கள் சமுதாயப்பணியாளர் மற்றும் ஆலோசகர் பணியை சபை அங்கத்தினருக்குச் செய்ய ஏற்படுத்தப்படுகிறவர்களாய் இருக்கின்றனர். டீக்கன்களின் வேலைகள், அடிக்கடி விரிவாக்கப்படும், தேவனது மக்களின் தேவைகளுக்கேற்ப, இவர்களுக்கு கூடுதல் சமுதாயப் பணியானது அளிக்கப்படுகிறதாய் இருக்கும்.

பெண் டீக்கன்களும் சமுதாயப் பணியாளராய் தொண்டாற்றுவார்கள், இவர்கள் வயதான பெண்களுக்கு சேவை செய்கிறவர்களாய் இருப்பர். டீக்கன்கள் அனைவரும் ஒன்று கூடி, அவர்களது சமுதாய பணிகுறித்து, விவாதித்து அவைகளின் மேம்பாடுகுறித்து திட்டங்களை வகுப்பர். அவசியமான வேலைகளில், ஜெபத்தை ஒருங்கிணைப்பு செய்வர். இவர்கள் தங்களது மூப்பர்களுக்கு எல்லாகாரியங்களையும் தெரிவிக்கிறவர்களாய் இருப்பர். கர்த்தரது மக்களை பாதிக்கக்கூடிய சமுதாய காரியங்களையும் அறிவிப்பர். ஜனங்களின் தேவைக் கேற்ப, குறிப்பிட்டு ஜெபிக்க வகை செய்வர். ஒரு மூப்பர், ஜெப விண்ணப்பங்களை சேகரிக்க நியமிக்கப்படுவார். பின்ன சபை அங்கத்தினருக்கு சங்கிலி ஜெபம் செய்வதற்கு, ஜெப விண்ணப்பங்கள் தயார் செய்யப்பட்டு, செல்போன்கள், அல்லது மின் அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

மூப்பர்கள் கூடுகையில், பிரதாண மூப்பர் இக்கூடுகையை நடத்துவார், அவரது முக்கிய கரிசனையும், கண்ணோட்டமும் சபையின் முன்னேற்றப்பணி குறித்ததாய் இருக்கும். இக்கூடுகையில் டீக்கன்களிடம் இருந்து ரிப்போர்ட் பெற்றுக்கொள்ளப்பட்டு அவைகளுக்காய் ஜெபித்து மறுமொழி அளிக்கப்படும். மூப்பர்களை ஏற்படுத்துதல் பழைய ஏற்பாட்டுச் செயல்பாடாய் இருக்கிறது, டீக்கன்கள் செயல்பாடுகள் புதிய ஏற்பாட்டில் ஏற்படுத்தப்பட்டது, இவைகள் ஜெப ஆலய அமைப்பிலிருந்து, கடந்து வந்ததாய் இருக்கிறது.

உபதேசங்கள்:

சபை ஆழுகை -- சபை அலுவல்களில் ஈடுபடுவோருக்கான தகுதிகள்

போதகர் / மூப்பர் இவர்களுக்கான தகுதிகள்: (1தீமோத்தேயு3 and தீத்து 1 -- ஒவ்வொரு பாடங்களையும் முழுமையாய் விவாதிக்க இந்த அதிகாரங்களின் விளக்கவுரையினை ஒப்பிட்டுப்பார்க்க)

1. குற்றம் சாட்டப்படாதவன் - நீங்கள் ஊழியத்தில் அநேக காரியங்களில் குற்றம் சுமத்தப்படலாம் - தீமையான எவ்விதக் குற்றச்சாட்டும் அல்லது பயமுறுத்துதல்களும் உண்மையானவை அல்ல என்ற நிச்சயத்தை உடையவர்களாய் இருத்தல் வேண்டும். நீங்கள் உங்கள் வாழ்வில் உள்ள பாவத்தைக்குறித்து, கவனமான முடிவெடுத்தல் அவசியம், இல்லையேல் அது உங்களை தகுதியிழக்கச் செய்து விடும்.

2. ஒரே மனைவியையுடைய புருஷனாயிருக்க வேண்டும். ஒரே பெண்ணை மனைவியாய் உடைய மனிதனாய் இருத்தல் வேண்டும், தனது மனைவியின் இடத்தை வேறொரு பெண்ணுக்கு கொடுக்குமாறு, இச்சையுள்ள கண்களுடன் பெண்களை தேடி அலைகிற மனிதனாய் இருத்தல் கூடாது. விபச்சாரக்காரன் என உறுதிசெய்யப்படுகிறவனாய் இருத்தல் கூடாது

3. விழிப்புடன் இருத்தல் - தெளிந்த புத்தியுடனிருத்தல், அமைதியாய் செயல்படுதல்.

4. ஜாக்கிரதையுடனிருத்தல் - இச்சையடக்கத்துடன் இருத்தல்.

5. நன்னடக்கையுள்ளவராக இருத்தல் - ஒழுங்கு மற்றும் நன்கு இணைந்து செயல்படுதல், நேர்மையுடன் இருத்தல்

6. உபசரிப்பவராய் இருத்தல் - எப்பொழுதும் ஜனங்களை தங்களது வீட்டில் ஏற்றுக்கொண்டு உபசரிக்க ஆயத்தத்துடன் இருத்தல்.

7. போதக சமர்த்தனாய் இருத்தல் - கருத்துடன் தேவனது வார்த்தைகளை பகிர்ந்துகொள்ளுகிறவராய் இருத்தல்

8. மதுபான பிரியனாய் இருத்தல் கூடாது - மதுபானத்திற்கு அடிமையாக இருத்தல் கூடாது.

9. அடிக்கிறவனாய் இருக்கக்கூடாது - கோபக்காரனாய் இருத்தல் கூடாது.

10. இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவனாய் இருக்கக்கூடாது - பண ஆசையுள்ளவனாய் இருத்தல் கூடாது.

11. விடாது தொடார்ந்து விவாதம் பண்ணுதல் அல்லது தர்க்கிக்கிறவனாய் இருத்தல் கூடாது.

12. பிறர் பொருளை அபகரித்துக் கொள்கிறவனாய் / இச்சிக்கிறவனாய் இருத்தல்கூடாது. அவமரியாதைக்குரிய, கீழ்த்தரமான காரியங்களின் மீது ஆசை வைத்தல், இந்த விஷயத்தில் பரீட்சித்துப் பார்ப்பதற்கு ஒரு நபரை நெருக்கப்படுகிற சூழலில் வைத்தல் வேண்டும், இச்சூழலில் அவர் எவ்வாறு நடந்து கொள்கிறார் என்பதை அறிந்து கொள்ளுதல் வேண்டும். மக்களை சோதித்தறிய அல்லது பரிசீலனை செய்ய

சபையானது பரிசீலனைக் குழுவைப் பெற்றிருத்தல் அவசியம்.

13. அந்த நபர் மனைவியை உடையவராய் இருப்பாரானால், அவரது குடும்ப வாழ்க்கை எப்படிப்பட்டதாய் இருக்கிறது என்பதை வினவவும். இதற்கு நீங்கள் அவரது மனைவியை அழைத்து விசாரித்தல் கூடாது, சபையில் உள்ள ஒரு மூப்பத்தியை அனுப்பி இது குறித்து விசாரித்து அறிந்துவரச் செய்யலாம், அல்லது சபை கமிட்டியில் உள்ள டீக்கனஸ் ஒருவரை அனுப்பி இத்தகைய தகவல்களை பெறலாம்.

14. அவர் அனுபவமில்லாத புதியவராய் இருத்தல் கூடாது, புதியதாய் நடப்பட்ட விதையாய் இருத்தல் கூடாது. இரட்சிப்படைந்த இரண்டு வருடங்களுக்குள் ஒருவரையும் போதகப்பணியில் அமர்த்துதல் கூடாது. அவர்கள் இரட்சிப்படைந்து குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகள் ஆகியிருக்க வேண்டும். உங்களது சபை மக்களில் நன்கு கற்றறிந்த நபர்கள் இருக்கக்கூடும், ஆனால் அவர்கள் போதப்பணியை ஏற்கும் முன்னர் குறைந்தபட்சம் இரண்டு ஆண்டுகள் இவ்வனுபவத்திற்கூடாய் செல்லுதல் வேண்டும், அவர்கள் துணை ஊழியராய் பணியாற்றி இப்படிப்பட்ட அனுபவத்தைப் பெறலாம். நீங்கள் மக்களுக்கு அதிகமான சபை பொறுப்புகளை விரைவிலேயே கொடுத்து அவர்களை அழிக்கத் தலைப்படுதல் கூடாது.

அவிசுவாசிகளால் பாராட்டப்படும் அளவிற்கு ஒருவரது சாட்சி இருத்தல் வேண்டும் என்பதை வேதாகமம் முக்கியப்படுத்துகிறதாய் இருக்கிறது. அவிசுவாசிகளது நினைவில் ஒரு போதகர் நல்லெண்ணங்களை உருவாக்குகிறவராய் இருத்தல் வேண்டும்.

டீக்கன் [உதவிக்காரர்கள்] -- மூப்பர்களுக்கு இருக்கும் அதே தகுதிகள் இவர்களுக்கும் முக்கியத்துவப்படுத்தப்படுகிறது. (1தீமோத்தேயு 3)

பண பரிமாற்றத்தில் நேர்மையுடன் இருத்தல் வேண்டும்.
விதவைகளுடன் உள்ள தொடர்பில் கலங்கமற்ற ஒழுக்கநெறியை கடைபிடித்தல் அவசியம்.
ஆவிக்குரியவராயிருந்து மற்றும் தேவனுடன் நடக்கிறவராய் இருத்தல் வேண்டும்
ஞானமுள்ளவராயிருந்து உபதேசத்தால் நிறைந்து விளங்குதல் வேண்டும்..
மூப்பர்களால் அதிகாரம் பெற்று இருத்தல் வேண்டும். (அப்போஸ்தலர்கள் தங்களது கரங்களை அவர்கள் மீது வைத்து அவர்களுக்கு அதிகாரம் அளித்தனர்)
கவனமாய் இருத்தல் - அவர்கள் ஜாக்கிரதையுள்ளவர்களாயும், முதிர்ச்சியுள்ளவர்களாயும், மரியாதைக்குரியவர்களாயும் இருத்தல் வேண்டும்.
இருநாவுள்ளவர்களாகவோ, அல்லது இரு முகமுள்ளவுள்ளவர்களாகவோ இருத்தல் கூடாது. அவர்கள் எதை சொல்கிறார்களோ அதன் படி நடக்கிறவர்களாய் இருக்கவேண்டும்.
மதுபான பிரியராய் இருக்கக்கூடாது, குடிகாரனாய் இருக்கக்கூடாது.
பண ஆசையுள்ளவராய் இருக்கக்கூடாது, காரணம் உதவிக்காரர் பணசம்பந்தமான காரியங்களில் ஈடுபடுகிறவர்.
கறைதிறையற்ற நிலையில் உபதேசத்தை பிடித்துக்கொள்ளவேண்டும். உபதேசத்தை பொருத்தமட்டில் பாரம்பரிய கருத்து மாறுபடக்கூடாது.
ஒரு நபர் பாவத்தைக்குறித்து ஆழமாய் உணர்த்தப்படும்பொழுது, அவருடன் இளகிய மனதுடனும், தெளிந்த புத்தியுடனும் ஈடுபடுதல் வேண்டும்.

சோதிக்கப்படுதல். அவர் எல்லா வகையிலும் சோதிக்கப்பட்டு பின்னர் உதவிக்காரராய் ஏற்படுத்தப்படலாம் - 1 தீமோ 3:10.
சபையில் உண்மையுள்ள வேலையாளாய் இருந்தால் மட்டுமே, உதவிக்கரருடைய பணீக்கு அவரை நியமணம் செய்யலாம்.
ஒரே மனைவியையுடைய புருஷனாய் இருத்தல் வேண்டும். (இதன் பொருள் மற்ற பெண்களுடன் இச்சைக்கேற்ற உறவு இருக்கக்கூடாது) - 1 தீமோ 11 அவர் சட்ட ரீதியாக, வேத நியமப்படி விவாகரத்து செய்யலாம்.
திருமணமானவரானால், அவரது மனைவி, மரியாதைக்குரியவளாயும், புறங்கூறாதவளாயும், இருத்தல் அவசியம், காரணம் உதவிக்காரர் தனது மனைவியுடன் பிறரிடம் சொல்லக்கூடாத விஷயங்களை பகிர்ந்து கொள்ள வேண்டி வரலாம்.

7. அடக்க ஆராதனை:

இப்பொழுது அடக்க ஆராதனை என்பது குறித்து பார்ப்போம். அவிசுவாசிகள் கூட, அடக்கம் செய்வதில் சில ஆறுதலான காரியங்களை எதிர்பார்க்கிறவர்களாய் இருக்கின்றனர். மரித்த நபர் மிகவும் மோசமானவராய் இருந்தும், அவர் மிகவும் நல்லவர், அவரைப் போல வேறொருவர் இருந்ததில்லை என்றெல்லாம் அவரைக் குறித்து வருணனை செய்தலை விரும்புகிறவர்களாய் இருக்கிறார்கள். புறஜாதியாரைக் குறித்து பிரசங்கம் செய்யும்போது, தேவனது வார்த்தைகளை விசுவாசிக்கும் நீங்கள், பொய்யைப் பிரசங்கித்தல் கூடாது. அவர்கள் நரகத்தில் இருப்பதை, பரலோகில் இருப்பதாக வருணித்து நடித்தல் தவிர்க்கப்படுதல் வேண்டும். எல்லோருக்கும் தெளிவுபடும் வண்ணம் இதைக் குறித்து மிகவும் கவனமாய் இருத்தல் அவசியம். இப்படிப்பட்ட புறஜாதியரது அடக்க ஆராதானையில் கலந்து கொள்வது, உங்கள் கரத்தில் இருக்கிறது, அவ்வாறு கலந்து கொள்ள நேரிடும் போது, பொய்யைக் கூறாது, உண்மையை யாவரும் அறியக் கூறுதல் வேண்டும்.

அடக்க ஆராதனையில் ஒருகாரியம் நிச்சயமுள்ளதாய் இருக்கிறது, மரித்தவர் இரட்சிப்படையாதவராய் இருப்பாரானால், அவருக்கு இரட்சிப்பு என்பது இனி கிடையாது, ஆனால் அவரைச் சூழ புலம்புவர்களுக்கு இன்னும் தருணங்கள் அதிகமாய் இருக்கின்றன. மரித்தோரை இரட்சிப்பிற்குள் வழிநடத்த உங்களால் இயலாது. ஆனால் ஜீவிப்போரை சிலுவையின் அடிவாரத்திற்கு வழிநடத்த முடியும், மற்றும் காலியாய் இருக்கும் கல்லறையின் வாசலுக்கும் அவர்களை வழிநடத்தலாம். அடக்க ஆராதனை செய்தியில், இன்னும் நமக்கு நம்பிக்கை இருக்கிறது, ஜீவிப்போரை இரட்சிப்பிற்கு ஏதுவாக வழிநடத்த இயலும்.

சில புறஜாதிய மக்களது தவறான எண்ணங்கள் இவ்வாறு இருக்கிறது, மரித்த பின்னர், பரிசுத்த பேதுரு "முத்து வாசலில்" நின்று கொண்டு அவர்களை மன்னிக்கும் தேவனிடத்திற்கு பரலோகிற்குள் அழைக்கிறவராய் இருப்பார். அவர்கள் கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவை இப்பொழுது மறந்து வாழ்ந்தாலும், நித்தியத்தில் அவரை ஏற்றுக்கொண்டு வாழலாம் என எண்ணுகிறவர்களாய் இருக்கின்றனர். இதற்கு மாறான உண்மை என்னவெனில், அவர் நியாயத்தீர்ப்பு செய்யும்படி அவரது நியாயாசனத்தில் அமர்ந்திருந்து அவர்களுக்காய் காத்திருப்பார். வெளிப்படுத்தின விஷேசத்தில் உள்ள, இழந்து போனோரைக் குறித்துள்ள திறவுகோள் வேதபகுதியை ஒருமுறையாவது, அடக்க ஆராதனையில் உபயோகப்படுத்தாது இருக்க மாட்டார்கள். வெளி. 20:11-15.

அவிசுவாசிகள் ஒவ்வொரு காரியமும் சரியானதுதான் என எண்ண விருப்பமுடையவர்களாய் இருக்கின்றனர். அவர்களுக்கு சுவிஷேசத்தைக் குறித்த எவ்வித கரிசனையோ அல்லது அக்கரையோ இருப்பதில்லை. ஆனால் அவர்கள் சத்தியத்தைக் குறித்து அவர்கள் எவ்வித மறுப்பும் சொல்வதற்கில்லை. சாத்தான் ஒரு வஞ்சகன் என்பதை நினைவில் கொள்ள வேண்டியது அவசியம். அவன் வாழ்வில் அநேக மக்களை அழித்துக்கொண்டு வருகிறவனாய்க் காணப்படுகிறான். அடக்க ஆராதனையின் போது, இவற்றை அறிந்துணரும்படியான சிறு தருணங்கள் அளிக்கப்படுகிறதாய் இருக்கிறது. மரிக்கும்போது சத்தியம் என்ன என்பதை உணரும் தருணம் அனைவருக்கும் முன்பாக இருக்கிறதாய் இருக்கிறது. இவ்வாறு மதியீனத்தைப் பற்றிக்கொள்ளுதலை சில அவிசுவாசிகள் பெற்றிருந்தும், அடக்க ஆராதனையில் சுவிஷம் அளிக்கும் தருணத்தினை அவர்கள் விட்டுச் செல்கிறவர்களாயிருக்கிறார்கள். அவிசுவாசியின் மரணத்தைக்குறித்து என்ன சொல்லப்போகிறீர்கள் என்பது, குறித்து அவரது குடும்பத்தினர் முன்னதாய் அறிந்திருத்தல் வேண்டும். துக்கத்தில் உள்ள குடும்பத்தினருக்கு இது பெரும் ஆச்சரியத்தை அளிக்கக்கூடியதாய் இருக்க அவசியமில்லை.

அவிசுவாசிகள் ஒரு மரித்த சரீரத்தைக் காணும்போது, அவர்கள் தேவனைக் குறித்த தவறான எண்ணங்கள் அவர்களது இருதயத்தில் தோன்ற ஆரம்பிக்கிறது, அவர்களது எண்ணமெல்லாம் பரலோகமோ, நரகமோ என்று ஒன்றுமே கிடையாது என்பதாகும். நீங்கள் இப்படிப்பட்டோருக்கு சத்தியத்தை சத்தியமாய் அறிவித்தல் அவசியம். இந்த ஒரு சந்தர்ப்பத்தில் மட்டுமே, அவர்கள் இப்படிப்பட்ட சத்தியத்தை அவர்கள் கேட்கும்படியான வாய்ப்பு அவர்களுக்கு கிடைப்பதாய் இருக்கிறது. அக்குடும்பத்தின் பாதுகாப்பினை, சத்தியத்தின அவர்களுக்கு அளித்து உறுதி செய்தல் வேண்டும். அவ்வாறு செய்யாதபட்சத்தில் அக்குடும்பத்தினை இழக்க நேரிடுகிறதாய் இருக்கும். அடக்க ஆராதனையில் அநேக அவிசுவாசிகள் கலந்து கொள்வார்களெனில், அது தேவதூதர்களின் முறண்பாட்டின் பெரிய யுத்தகலமாய் அமைவதாய் இருக்கும். ஆகையால் மிகவும் வல்லமை பொருந்தின ஜெபம் இங்கு அத்தியாவசியமாய் இருக்கிறது. இழந்து போனோருக்கான ஜெபத்தை ஏறெடுக்க ஜெப வீரர்களை ஜெபிக்கும்படி ஏற்படுத்துங்கள். சபையில் ஆகாரப்பொருட்கள் மற்றும் தேனீர் வழங்கும்படி ஏற்பாடு செய்யாமல், தேவ இராஜ்ஜியத்தை இழந்து தவிக்கவிருக்கும் இழந்து போன ஆத்துமாக்களுக்காய் சபையில் ஊக்கமாய் ஜெபிக்க ஏற்பாடு செய்யுங்கள்.

தேவ ஊழியரின் செயல்பாடுகள்:

சபைக் குடும்பத்தாரில் ஒருவர் மரித்து விட்டால், அக்குடும்பத்தினரைச் சென்று **உடனடியாய் சந்தித்தல்** வேண்டும். கேள்விப்பட்டு பல மணிநேரம் தாமதித்துக் கொண்டு இருத்தல் கூடாது, அக்குடும்பத்தினர் அதிர்ச்சிக்குள்ளும் துக்கத்திற்குள்ளுமாக இருக்கிறார்கள். அவர்கள் வீட்டிற்குச் செல்லும் போது தெரிவு செய்யப்பட்ட ஓரிரு வசனங்களுடன் செல்லுதல் வேண்டும், அவற்றை அவர்களுக்கு கூறி, துக்கத்திலிருக்கும், அக்குடும்பத்தினர், நண்பர்கள், அயலகத்தார் போன்றோருக்காக ஜெபித்து ஆறுதல் கூறிவிட்டு சென்றுவிடுங்கள். (ஒரு வேளை அடக்க ஆராதனையை உடனடியாய் நடத்த வேண்டுமானால், தொடர்ந்து அக்குடும்பத்தினருடன் இருந்து அது குறித்து ஆலோசனை செய்தல் வேண்டும்.)

அக்குடும்பத்தை சந்தித்து ஜெபித்து வந்தவுடன், சபையின் ஜெபவீரர்க் குழுவை அழைத்து, அக்குடும்பத்தில் மற்றும் அடக்க ஆராதனைக்கு வரும் அவிசுவாசிகளின்

இரட்சிப்பிற்காய் போராடி ஜெபிக்கும்படி செய்தல் வேண்டும். அடக்க ஆராதனையின் போது, அவற்றை நடப்பிக்கும் சபை அலுவலரின் பாதுகாப்பிற்காய் மற்றும் அவர்கள் அளிக்கும் சுவிஷேச செய்தியானது, அவிசுவாசிகளின் உள்ளங்களைத் தொடும் வண்ணம் அமைய ஜெபித்தல் வேண்டும். யோவான் 16:8-11 ஐ அடக்க ஆராதனைக்கு வருவோர் அனைவரும் அறிந்து கொள்ளும்படி செய்தல் வேண்டும். ஒவ்வொரு அடக்க ஆராதனையிலும் கர்த்தரது ஒத்தாசையை நாடி, சரியான வேத பகுதியை தெரிவு செய்து அதை வாசித்து, கூறும் ஒவ்வொரு வார்த்தைகளும் மிகவும் பொருத்தமானதாய் இருத்தல் மிகவும் அவசியம். இவ்வாராதனை நடத்தும் போது ஒவ்வொரு அடியையும் பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்படுவதற்கு ஒப்புக்கொடுத்தல் மிகவும் அவசியம்.

முதன்முறையாக மரித்தவரின் வீட்டைச் சந்திக்கும் போது, சுவிஷேசத்திற்கான நம்பிக்கை அளிப்பதற்கான தருணத்தைப் பயன்படுத்திக்கொள்ளுதல் வேண்டும். அங்கு குழுமியிருக்கும் மக்களது நிலை குறித்தும், எவ்விதமான மரணம் சம்பவித்தது என்பது குறித்தும் நீங்கள் மிகவும் கவனமாய் அறிந்திருத்தல் மிகவும் அவசியமான ஒன்றாய் இருக்கிறது. மரித்த நபர் எங்கு இருக்கிறார் என்பதைக் கூறக்கூடாது -- மாறாக வேதாகமம் என்ன கூறுகிறது என்பதை நீங்கள் அறிந்து இருத்தல் வேண்டும். -- லூக்கா 16: 22 - 31.

மரித்தவர் இரட்சிப்படைந்தவராய் இருப்பாரானால், (எண்ணாகமம் 14:29, 2 சாமுவேல் 13:23, மத்தேயு 18:10), கிறிஸ்த நம்பிக்கை குறித்த செய்தியளிக்கலாம். அவர்களது அன்புக்குரியவர்கள் பரலோகில் இருப்பார்கள். குழந்தைகள் மரிப்பார்கள் எனில் அவர்கள் இயேசுவுடன் இருப்பார்கள். இதில் எவ்வித சந்தேகத்திற்கும் இடமேயில்லை. catatonic depression மூலம் நிகழும் தற்கொலைகள், இந்த வகையில் மரித்து பரலோகில் காணப்படுவர். வேதபாடங்களை கற்றுக்கொள்வதன் மூலம் உங்களது சொந்த மன நிலையானது, புலம்புவோருக்கு சத்தியத்தை பகிர்ந்து கொடுக்க பக்குவப்படுகிறது. மற்றும் கிறிஸ்துவில் வாழ்வதற்குரிய சவால்களைப் பகிர்ந்து கொள்ளச் செய்கிறதாய் இருக்கிறது.

அழுது புலம்புவோருக்கு, இயேசுக் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் குறித்து எடுத்துக் கூறி, அவருடன் நமக்குள்ள உறவையும், அவரில் நமக்குள்ள நம்பிக்கையையும் எடுத்துரையுங்கள். இறந்த மனிதரின் விதியானது இப்பொழுது, முத்திரையிடப்பட்டுவிட்டது. ஆனால் ஜீவனுடனிருக்கும் நபர்களின் விதியானது, அது இன்னும் முத்திரையிடப்படாது இருக்கிறது. இதை அவர்களுக்கு நினைவுபடுத்தி, மனிதன் ஒரேதரம் மரிப்பதும், பின்பு அவன் நியாயத்தீர்ப்பு அடைவதும் அவனுக்கு நியமிக்கப்பட்ட ஒன்று என்பதை அவர்களுக்கு எடுத்துக்கூறுங்கள். எபிரெயர் 9:27. அவர்கள் எல்லோரது விசுவாசத்தை மறு உறுதி செய்யுமாறு வரவேற்பு அளியுங்கள், அல்லது இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில், நம்பிக்கை அளிப்பவர் மீது, விசுவாசம் வைப்பதைக் கண்டுகொள்ளச் செய்யுங்கள்.

இரண்டாவது சந்திப்பின்போது, அக்குடும்பத்தினரிடம், அடக்க ஆராதனையில் இடம் பெறவேண்டிய காரியங்கள் குறித்து, அவர்களை கவனமாய் சிந்திக்க வைத்து, அவர்களுடன் தயார் செய்யுங்கள். உண்ஷனமான சீதோஷ்ன நிலைகளில், மரித்த சரீரத்தை பாதுகாப்பு குளிர் சாதனப்பெட்டில் வைக்கவில்லையானால், சரீரத்தை எவ்வளவு சீக்கிரம் அடக்கம் பண்ண இயலுமோ, அவ்வளவு சீக்கிரத்தில் அடக்கம் செய்தல் வேண்டும். ஆகையால் நேரத்தைக் குறித்து மிகவும் கவனமுள்ளவர்களாய்

இருங்கள். மரித்தவரின் குடும்பத்தினரை கூடுமானவரை, மரித்த பிரேதத்துடன் உட்காரும்படி செய்யுங்கள்.

அடக்க ஆராதனை என்பது, ஒரு உண்மையுள்ள கிறிஸ்தவ நபரின் இறுதி சாட்சியாய் இருக்கிறது. நீங்கள் விசுவாசிக்கும் குடும்பத்தினருடன் இருந்து, பொருத்தமான பாடல்கள் மற்றும் இசையை தெரிவு செய்தல், மற்றும் அளிக்க இருக்கும் செய்தியை மிகவும் தயார் செய்தலை மேற்கொள்ளுதல் வேண்டும். ஒவ்வொரு காரியத்தையும், அக்குடும்பத்தினருடன் முதலாவதாக சரிசெய்து கொள்ளுதல் வேண்டும். பரிசுத்த வேதாகமத்திற்கு எல்லாவிதத்திலும் நீங்கள் உண்மையுள்ளவராய் இருத்தல் அவசியம். நீங்கள் சொல்லவிருக்கும் ஆசீர்வாதங்கள், மற்றும் அங்கீகாரம் குறித்து முன்னதாகவே பரிசீலனை செய்து தயாராக இருத்தல் அவசியம். சத்தியமானது ஒருவேளை, எதிர்ப்பை தெரிவிக்கலாம், ஆனால் நீங்கள் எவ்வித எதிர்ப்பையும் தெரிவித்தல் கூடாது. அதிகமான பாடல்கள் இவ்வாரதனையில் இடம்பெறுவதைத் தவிர்த்தல் வேண்டும். மரித்தவர் அவிசுவாசியாய் இருப்பாரானால், இசை மட்டும் இசைக்கச் செய்யுங்கள். அவிசுவாசிகளுக்கு அறியாத பாடல்களைப் பாடி அவர்களை ஊமையாய் அமரச்செய்தல் கூடாது, எப்படியாகிலும் சிலரையாவது இரட்சிப்பிற்குள் வழிநடத்தும்படியான சத்தியத்தை எடுத்துரைத்தல் வேண்டும். அவிசுவாசிகளுக்கு எக்காரணம் கொண்டும், அவர்கள் விசுவாசிகள் என்ற எண்ணத்தை ஏற்படுத்துதல் கூடாது. மக்கள் சத்தியத்தை கேட்டல் அவசியம், -- மக்கள் சாத்தான் மூலம், பணம், இச்சை, அதிகாரம், மற்றும் உலக காரியங்களால் திசை திருப்புவது, அவர்களுக்கு வெகு தொலைவில் சென்றுவிட்டதை அவர்கள் உணர வேண்டும்.

அடக்க ஆராதனை ஒழுங்கு முறை:

1. பாடற்குழுவினரால் அமைதியான இசையுடன், தியானமுள்ள பாடல்களை பாடுதல் வேண்டும். ஒருவேளை மரித்தவர் ஒரு பெரிய விசுவாசியாய் இருந்த போதிலும், நமது அழியும்தன்மையை அங்கு வெளிக்காட்டுதல் வேண்டும். ஒரு நாளில் நாமும் மரித்து தேவனுக்கு முன்பாக நிற்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். மரண வீட்டில், போலியான மகிழ்ச்சியுடன் காணப்படுதல் கூடாது, இந்த சந்தர்ப்பத்தில்தான் நித்தியத்திற்கடுத்த காரியங்கள் குறித்து பிரதிபலித்தல் வேண்டும். இந்த சந்தர்ப்பத்தை நழுவ விட்டுவிடுதல் கூடாது.

2. அடக்க ஆராதனைக்கு அழைப்பது என்பது எல்லோருக்காகவும் கைது செய்யப்படுவதாய் இருக்கிறது. "நாம் இங்கிருக்கையில் நினைவுபடுத்திக் கொள்வது என்னவெனில், பாவத்தையும், மரணத்தையும் வெற்றிகண்ட கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து, நமது ஒரே நம்பிக்கையாய் இருக்கிறார் என்பது ஆகும். நாம் இங்கு கூடியிருப்பதன் அர்த்தம், அவரது நாமத்தில், நமது சகோதர சகோதரிகளை நினைவு கூறுகிறதற்காக ஆகும்.

3. கூடிவந்திருக்கும் சபையோரை ஜெபத்தில் வழிநடத்துங்கள், இந்த ஆராதனையில், எல்லோரும் தேவனுக்கு முன்பாக வரும்படியாக, தனிப்பட்ட நிலையில், அமைதியாய் ஜெபிக்க நேரத்தை உட்படுத்துங்கள்.

4. முதலாவது பாடலை பாட வேண்டும்.

5. மரித்தவரை நித்தியத்தின் வெளிச்சத்தில் நினைவு கூறுதல் வேண்டும். -- பரிசுத்தாவியானவரின் வழிநடத்துதலின்படி, ஒரு வேதபகுதியை தெரிவு செய்து, அந்த நபர், காலம், இடத்திற்கு பொருந்தக்கூடியதாய் வாசித்தல் வேண்டும்.

6. மரித்தவருக்கான புகழுரை -- அவர்களது மரபு வழிவந்த அவரது பண்புகளை, நற்குணங்களை எடுத்துரைத்தல் வேண்டும். இங்கு எவ்வித போலியான மற்றும் பொய்யான புகழுரை செய்தல் கூடாது. மரித்த நபரைக் குறித்து எவ்வித நற்காரியங்களையும் சொல்வதற்கு இல்லையெனில், மக்களை அடக்க ஆராதனையில் எதையாவது கூறும்படி கேட்டுக்கொள்ளுங்கள். தாலந்துகளைக் குறித்த உவமையினைக் கூறி, இந்த நாள் முதற்கொண்டு, அவற்றைக் கவனமாய்ப் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளுங்கள். பரிசுத்த ஆவியானவர் வழிநடத்துவார் எனில், மக்களுக்கு சவால் விட்டு, காரியங்களை எடுத்துரையுங்கள். இங்கு மரித்துப்போயிருக்கும் நமது சகோதரை நினைவு கூருங்கள், கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவுக்கு முன்பாக, உங்களைக்குறித்து நற்காரியங்களை எடுத்துக் கூற, ஒன்றிலும் குறைவுபடாது ஜாக்கிரதையாய் இருக்கப் பிரயாசப்படுங்கள்.

7. அடக்க ஆராதனையை ஜெபத்துடன் நிறைவு செய்யுங்கள், அங்கு கூடியிருக்கும் உயிரோடிருக்கும் அனைவரும், இயேசுவை ஆவியோடும், உண்மையோடும் அறிந்து கொள்ளுமாறு ஜெபித்து நிறைவு செய்யுங்கள்.

8. முடிவு பாடலைப் பாடி, புதைக்குமிடத்திற்கு மரித்த சரீரத்தை எடுத்து செல்லக்கூறுங்கள். சரீரத்தைப் புதைக்காமல் எரிப்பார்கள் எனில், இந்த இடத்தில்தானே, அடக்க ஆராதனை குறித்து வாசித்து, ஆராதனையை நிறைவு செய்யுங்கள். அதை இவ்வாறு வாசித்து ஜெபித்து நிறைவு செய்யலாம். "மரணத்தில் மனிதன், ஆவியாய் பிரிந்து செல்கிறவனாய் இருக்கிறான் என்பதை நாம் நினைவுகூறுகிறோம், நாம் இவ்வுலகில் சில காலம் வாழ்கிறவர்களாய் இருக்கிறோம். நாம் நித்தியத்திற்கென உருவாக்கப்பட்டு வடிவமைக்கப்பெற்றுள்ளோம். மரித்த இந்த நபர் நித்தியத்தில் பங்கடைந்துள்ளார். இவரைபோல் ஒரு நாளில் நாமும் மரித்து நித்தியத்திற்குச் செல்லவிருக்கிறோம். இவரை சாம்பலுக்கு, சாம்பலாகவும், மண்ணுக்கு, மண்ணாகவும் ஒப்புக்கொடுக்கிறோம். நமது கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் கிரியைகள், மற்றும் அவரது உயிர்த்தெழுதலில் நம்பிக்கை வைத்து, மரித்த இந்த நபரின் சரீரத்தைப் புதைக்க / எரிக்க ஒப்புக்கொடுக்கிறோம். இந்நபரை நீதியுள்ள நியாதிபதியாய் இருக்கும் கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்து, முடிவு நாளில் நியாயந்தீர்ப்பளிக்க இவரை ஒப்புக்கொடுக்கிறோம், ஜீவிக்கிற நாமும், ஜீவபலியாய் நமக்காய் தன்னைத் தானே அற்பணித்த கிறிஸ்துவுக்காய் வாழ அற்பணிப்போமாக. ஆமென்!"

புதைக்குமிடத்தில் நிகழும் ஆராதனையும் முக்கியம் வாய்ந்ததாய் இருக்கிறது. புதைக்குமிடத்திற்கு வந்தடைந்தவுடன், உயிர்த்தெழுதல் குறித்த வேதபகுதியை வாசிக்கவும். விசுவாசிக்கும் காரியங்களை அச்சடித்து கூடியிருக்கும் மக்களுக்கு விநியோகிக்கவும், பின்னர் அதில் உள்ளவைகளை வாசித்துப் பயனடைய ஏதுவுண்டாக்கும். சவப்பெட்டியானது, குழிக்குள் இறக்கிய பின்னர், மறுபடியும் வேதவசனத்தை வாசிக்க தருணத்தை எடுத்துக் கொள்ளுங்கள். இவ்வேதபகுதியானது உயிர்த்தெழுதலைக் குறித்ததாய் இருத்தல் வேண்டும். வெளிப்படுத்தல் 1:17-18, யோவான் 14:19, வெளிப்படுத்தல் 14:13, 1 கொரிந்தியர் 15:51-57, யோவான் 14:1-3.

ஒவ்வொரு சமயமும், பயன்படுத்த இருக்கும் வேதபகுதியை எழுதி வையுங்கள், இதினிமித்தம், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நீங்கள் உற்சாகப்படுத்தப்பட்டு, பெலப்படுவதற்கு இது ஏதுவுண்டாக்கும். வாசிப்பதற்காக பயன்படுத்தப்படும் முக்கியமான வேதபகுதிகள்: – சங்கீதம் 23:1ff, 68:20, 90:1-12, 103:6-17, 116:15, லூக்கா 16:19ff, யோவான் 5:25-29, 14:1-27, ரோமர் 8:24-39, 1 கொரிந்தியர் 15:19-22, 1 தெசலோனிக்கேயர் 4:13-18, யாக்கோபு 4:8-10

பின்தொடர் ஊழியம்:

நீங்கள் (அல்லது டீக்கன் / டீக்கனஸ்) அடக்க ஆராதனையைத் தொடர்ந்து, குறைந்தபட்சம் மரணத்திற்குப் பிறகு பனிரெண்டு வாரங்கள், வாரம் ஒருமுறை சென்று, பின் தொடர் ஊழியம் செய்தல் வேண்டும். இப்படிப்பட்ட நாட்களில் அவர்கள் திறந்த மனதுடன் தேவனது வார்த்தையைக் கேட்கிறவர்களாய் இருப்பர். புதைக்குமிடத்தில் செய்த ஆராதனையானது, உயிர்த்தெழுதலை மிகவும் தெளிவுபடுத்தக்கூடியதாய் இருக்கிறது. சமுதாயத்தில், ஒரே தடவையில், கொள்ளை நோய், யுத்தம், அல்லது விபத்து போன்றவற்றால், அநேகர் மரணத்தை தழுவியிருப்பார்களெனில், துக்கத்தில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்திற்கு, குறிப்பிட்ட காலத்திற்கு வேதபாடம் நடத்துவது நலமாயிருக்கும்.

கிறிஸ்தவர்களின் சரீரத்தை புதைப்பதோ அல்லது எரிப்பதோ காரியமல்ல, சரீரத்தைப் புதைத்தல் என்பது, உயிர்த்தெழுதலை சித்தரிப்பதற்கு சிறப்பான முன்மாதிரியாய் இருக்கிறது. எரிப்பது என்பது புறஜாதியாரின் பழக்க வழக்கமாய் இருக்கிறது, சாம்பலாக்கப்பட்ட அவர்களது சரீரத்தை, எடுத்து இறைப்பர், இதன் பொருள், அவர்கள் சரீரமானது திரும்பவும் உயிர்பெற்று வருவதை அவர்கள் விரும்பவில்லை என்பதைக் காட்டுகிறதாய் இருக்கிறது. சரீரத்தை எரிப்பது புறஜாதிய பழக்கமாய் இருந்தபோதிலும், சரீரத்தை எரிக்கும் பழக்கம் சட்டரீதியாக கிறிஸ்தவர்களாலும் கைக்கொள்ளப்பட்டு வந்தது. கலாச்சார ரீதியில் சரீரத்தை எரிப்பதைப் பழக்கமாய் கொண்டு வருகிற சமுதாயத்தில், எரித்து சாம்பலை இறைக்காதவண்ணம் செய்யலாமே! நாம் விசுவாசிப்பது ஒவ்வொரு நபரும் உயிர்த்தெழும் நாளில், அவர்கள் சரீரம் உள்ள இடத்திலிருந்து எழுப்பப்படுவார்கள், அது புதைக்கப்பட்ட இடமாய் இருக்கலாம், அல்லது எரித்து சாம்பலாக்கப்பட்ட இடத்திலிருந்து இருக்கலாம். அல்லது அவர்கள் முழுமையாய் அழிக்கப்படும் போது இறுதியாய் இப்பூமியில் அவர்கள் சரீரத்துடன் நின்ற இடமாய் இருக்கலாம்.

தேவன் அண்டசராசரத்தை சிருஷ்டித்துப் படைத்தவராயிருக்க, இறுதி நியாயத்தீர்ப்புக்காக, மக்களை எந்த நிலையிலிருந்தும் உயிருடன் எழுப்புவது என்பது, அவருக்கு எளிய காரியமாய் இருக்கிறது. ஆகையால் சாம்பலாக்கி ஒன்றுமில்லாமல் செய்தாலும் அல்லது மண்ணில் புதைத்தாலும் எதைக் குறித்தும் அவருக்கு கவலையில்லை. தேவன் கடைசி நாளில் அவர்களை எழுப்புவார். ஜனங்களின் மனதில், உயிர்த்தெழுதலின் முக்கியத்துவத்தை இடம்பெறுமாறு செய்யுங்கள். இதைப்பற்றிய சத்தியத்தை சபையில் அடிக்கடி கற்றுக்கொடுங்கள், இரட்சிப்படைந்தோரும், இரட்சிப்படையாதோரும் உயிர்த்தெழுவர். ஒரு சாரார் நித்தியமான ஆசீர்வாதத்திற்கும், மற்றொரு சாரார் நித்தியகாலமாய் சாத்தானுடன் அக்கினியும், கந்தகமும் எரிகிற கடலில் இருப்பதற்கும் உயிர்த்தெழுந்து, நியாயத்தீர்ப்படைவார்கள். வெளிப்படுத்தல் 21.

போதக தலைமைத்துவம்:

அப்போஸ்தலர் 20:25-38

"இதோ, நான் உங்களுக்குள்ளே சஞ்சரித்து, தேவனுடைய இராஜ்ஜியத்தைக் குறித்துப் பிரசங்கம் பண்ணினதைக் கேட்டவர்களாகிய நீங்கள் எல்லாரும், இனி என் முகத்தைப் பார்க்கமாட்டீர்களென்று அறிந்திருக்கிறேன். தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் நான் மறைத்து வைக்காமல், எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தபடியினாலே, எல்லாருடைய இரத்தப்பழிக்கும் நீங்கி, நான் சுத்தமாயிருக்கிறேன் என்பதற்கு உங்களை இன்றைய தினம் சாட்சிகளாக வைக்கிறேன். ஆகையால், உங்களைக் குறித்தும்ம், தேவன் தம்முடைய சுய இரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை மேய்ப்பதற்கு பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள். நான் போன பின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக் கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன். ஆனபடியால், நான் மூன்று வருஷ காலமாய் இரவும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல் அவனவனுக்கு புத்திசொல்லிக் கொண்டு வந்ததை நினைத்து விழித்து இருங்கள். இப்பொழுதும் சகோதரரே, நீங்கள் பக்திவிருத்தியடையவும், பரிசுத்தமாக்கப்பட்ட அனைவருக்குள்ளும் உங்களுக்குச் சுதந்திரத்தைக் கொடுக்கவும், வல்லவராயிருக்கிற தேவனுக்கும் அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கும் உங்களை ஒப்புக்கொடுக்கிறேன். ஒருவனுடைய வெள்ளியையாகிலும், பொன்னையாகிலும் நான் இச்சிக்கவில்லை. நீங்கள் அறிந்திருக்கிறபடி, எனக்கும் என்னுடனேகூட இருந்தவர்களுக்கும் வேண்டியவைகளுக்காக இந்தக் கைகளே வேலை செய்தது. இப்படிப்பிரயாசப்பட்டு, பலவீனரைத் தாங்கவும், வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை நினைக்கவும் வேண்டுமென்று எல்லா விதத்திலேயும் உங்களுக்குக் காண்பித்தேன் என்றான். இவைகளைச் சொன்ன பின்பு, அவன் முழங்காற்படியிட்டு, இவர்களெல்லாரோடுங்கூட ஜெபம் பண்ணினான். அவர்களெல்லாரும் மிகவும் அழுது, என் முகத்தை நீங்கள் இனிப் பார்க்கமாட்டீர்களென்று அவன் சொன்ன வார்த்தையைக் குறித்து அதிகமாய்த் துக்கப்பட்டு, பவுலின் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவனை முத்தம் செய்து, கப்பல் வரைக்கும் அவனுடனே கூடப்போனார்கள்."

ஒரு தலைவர் என்பவர், மக்கள் பயத்துடன் கீழ்ப்படிய கட்டளை அளிப்பவரல்ல. அது இரும்புக்கரத்தால் அடக்கியாளுவதைக் காட்டுகிறதாய் இருக்கிறது. தலைமைத்துவம் என்பது, மக்கள் உங்களை மதித்து, நீங்கள் சேவிக்கும் கர்த்தருக்குக் கீழ்ப்படிய விருப்பங்கொள்ளுதலை காட்டுகிறதாய் இருக்கிறது, மட்டுமின்றி அவருக்கு சேவை செய்யும் தருணங்களை எதிர்பார்ப்பதையும் காட்டுகிறதாய் இருக்கிறது. இதுவே வேதாகம தலைமைத்துவத்தின் தராதரமாய் இருக்கிறது. இதுவே சேவை செய்வதற்குரிய தலைமைத்துவத்திற்கான முன்மாதிரியாய் திகழ்கிறது. பவுல் இங்கே காணப்படும் மக்களை இறுதியாய் காண்கிறவராய் இருக்கிறார், தலைமைத்துவத்தைக் குறித்த தன்மைகளை பவுல் முழுமையாய் இங்கு வெளிப்படுத்தியுள்ளார், நமது ஊழியத்திலும் இத்தகைய சாட்சிகளை நிலைநாட்டுவது மிகவும் அவசியமானதாய் இருக்கிறது.

போதகத் தலைவர்களாய் இருக்கும் நமது கடமையானது, சபை அங்கத்தினரின் வரங்கள், ஆர்வம், மற்றும் அவர்களது சக்தி போன்றவற்றை ஒருங்கினைப்பு செய்வதாய் இருக்கிறது. இதினிமித்தம் அவர்கள் சிறப்பாய் சேவை செய்ய வகை

செய்வதாய் இருக்கும். தலைமைத்துவம் என்பது, உங்கள் மக்களின் நன்மதிப்பை சம்பாதிப்பதாய் இருக்கிறது, மற்றும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் ஆட்கொள்ளப்பட்ட பணிக்கேதுவாய் வழிநடத்துவதாய் இருக்கிறது. மற்றும் தன்னம்பிக்கை, பக்தி, சுயத் தியாகம் போன்றவற்றை அவர்களது தனிப்பட்ட சேவையில் வெளிப்படச் செய்வதாயும் இருக்கிறது.

போதக நிருபங்களில் பவுல், ஒரு போதக ஊழியரின் தன்மை எத்தகையதாய் இருக்க வேண்டும் என வலியுறுத்துகிறவராய் இருக்கிறார். நீங்கள் பின்பற்றத் தகுதியிழந்து இருப்பீர்களானால், ஜனங்களை வழி நடத்துதல் என்பது இயலாத காரியம். அனுதினமும் உங்களில் ஆவிக்குரிய கனியைப் பெற்றிராத பட்சத்தில், நீங்கள் ஒரு தெய்வீகத் தலைவராய் சபையில் இருப்பதை எதிர்பார்ப்பது அரிதான ஒன்றாய் இருக்கும். பரிசுத்த ஆவியானவரில் நடந்து கொள்ளுங்கள், இதினிமித்தம் நீங்கள் கிறிஸ்துவின் நல்ல ஊழியராய் நடந்து கொள்வீர்கள். உங்கள் வாழ்வில் நிலைத்திருக்கும் ஆவியின் கனியானது, போதக ஊழியத்திற்கும், தலைமைத்துவத்திற்கும் குறைந்தபட்ச தராதரமாய் விளங்குகிறது,

2 தீமோத்தேயு ***4:1-8.***

"நான் தேவனுக்கு முன்பாகவும், உயிரோடிருக்கிறவர்களையும், மரித்தோர்களையும் நியாயந்தீர்க்கப்போகிற கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவுக்கு முன்பாகவும், அவருடைய பிரசன்னமாகுதலையும் அவருடைய இராஜ்ஜியத்தையும் சாட்சியாக வைத்துக் கட்டளையிடுகிறதாவது:
சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு, எல்லா நீடிய சாந்தத்தோடும், உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி, கடிந்து கொண்டு புத்தி சொல்லு. ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்து கொண்டு, சத்தியத்திற்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்து போகுங்காலம் வரும். நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு, தீங்கநுபவி, சுவஷேசகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று. ஏனென்றால், நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுப் போகிறேன். நான் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது. நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன். இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாக கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார். எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்."

எல்லாவற்றிலும் நாம் கர்த்தரின் முன்மாதிரியையும், அவரது சவால்களையும் மனதில் கொள்வோமாக -- அவர் ஒருக்கே நாம் இறுதியாய் கணக்கொப்புவிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

2 கொரிந்தியர் ***5:6-17.***

"நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம். இந்த தேகத்தில் குடியிருக்கையில் கர்த்தரிடத்தில் குடியிராதவர்களாயிருக்கிறோமென்று அறிந்தும்,

எப்பொழுதும் தைரியமாயிருக்கிறோம். நாம் தைரியமாகவேயிருந்து, இந்தத் தேகத்தை விட்டுக் குடிபோகவும் கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம். அதினிமித்தமே நாம் சரீரத்தில் குடியிருந்தாலும், குடியிராமல் போனாலும், அவருக்குப் பிரியமானவர்களாயிருக்க நாடுகிறோம். ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது, தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும். ஆகையால் கர்த்தருக்குப் பயப்படத்தக்கதென்று அறிந்து, மனுஷருக்குப் புத்தி சொல்லுகிறோம். தேவனுக்கு முன்பாக வெளியரங்கமாயிருக்கிறோம், உங்கள் மனசாட்சிக்கும் வெளியரங்கமாய் இருக்கிறோம் என்று நம்புகிறேன். இதனாலே நாங்கள் உங்களுக்கு முன்பாக எங்களை மறுபடியும் மெச்சிக்கொள்ளாமல், இருதயத்திலல்ல, வெளிவேஷத்தில் மேன்மைபாராட்டுகிறவர்களுக்கு ஏதுவுண்டாக்குகிறோம். நாங்கள் பைத்தியங்கொண்டவர்களென்றால், தேவனுக்காக அப்படியிருக்கும், தெளிந்த புத்தியுள்ளவர்களென்றால் உங்களுக்காக அப்படியிருக்கும். கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது, ஏனென்றால், எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள் என்றும், பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்று நிதானிக்கிறோம். ஆகையால், இது முதற்கொண்டு, நாங்கள் ஒருவனையும் மாம்சத்தின்படி அறியோம். நாங்கள் கிறிஸ்துவையும் மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும், இனி ஒரு போதும் அவரை மாம்சத்தின்படி அறியோம். இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாய் இருக்கிறான், பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின."

உபதேசம்:

மேய்ப்பர் -- கிறிஸ்து மேய்ப்பர்.

1. வேதாகமத்தில், செம்மறி ஆடுகள் விசுவாசிகளை பிரதிபலிக்கிறது. மத்தேயு 25:33-34 - அவைகள் வெள்ளாடுகளுடன் (அவிசுவாசிகளுடன்) முறண்படுகிறதாய் இருக்கின்றன.

2. ஆடுகள் உதவியற்றவைகளாய் இருக்கின்றன, அவைகளை வழிநடத்துதல் வேண்டும், மேய்த்து பாதுகாக்க வேண்டும். அவைகள் தங்களுக்காய் போராடி எதிர்கொள்ள திராணியற்றவை.

3. பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலர் தேவனது மந்தைக்குட்பட்ட ஆடுகள் என அழைக்கப்படுகின்றனர். சங்கீதம் 74:1, 79:13, 95:7, 100:3 எரேமியா 23:1.

4. கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து, உண்மையான மேய்ப்பனாய் இஸ்ரவேல் மந்தையினிடத்திற்கு வந்தார், இஸ்ரவேல் மந்தையினர் சிலர் ஏற்றுக்கொண்டனர், பலர் புறக்கணித்தனர் கர்த்தர் புதிய மந்தையை வேறுபிரித்து புதிய குழுவை ஸ்தாபித்தார். யோவான் 10:10-16.

5. ஐக்கியப்படுவதற்கு அவர் ஒருவரே வாசலாய் இருக்கிறார். அப். 4:12 யோவான் 3:36,யோவான் 10:28,29.

6. யூதாயிசம் ஒரு போதும் இராதவண்ணம் அகற்றப்பட்டு கர்த்தர் தமது புதிய மந்தையை விடுதலை என்னும் மலையில் அமைத்து அங்கு அமரப்பண்ணினார், இதினிமித்தம் தொழுவத்திற்கும் மந்தைக்கும் இடையே வேறுபாடு காணப்படுகிறதாய் இருக்கிறது. தொழுவமாகிய யூதர்களும் அவர்களது கிரியைகளும் ஒரு போதும் இல்லாத வண்ணம் அகற்றப்பட்டுவிட்டது, யூதர் என்றோ புறஜாதியார் என்றோ இல்லாதபடி கிறிஸ்து இயேசுவுக்குள் அனைவரும் ஒன்றாக்கப்பட்டு இருக்கின்றனர். இம்மையக்கருத்தானது கலாத்தியர், ரோமர், மற்றும் எபிரேய நிருபங்களில் வலியுறுத்தப்படுகின்றன, விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான். நமது சபையானது பரிசுத்த ஆவியானவரின் கட்டுப்பாட்டில், கர்த்தருடன் நடக்கப்பழகும் இடமாய் இருத்தல் வேண்டும்.

7. தொழுவத்தில் ஆடுகள் நான்கு சுவர்களுக்குள் அதைப் பாதுகாக்கும் மனிதன் வசமாய் கொடுத்துப் பாதுகாக்கப்படும், மேய்ப்பனின் கட்டுப்பாட்டிற்குள் மந்தையானது மேய்ச்சலுக்கு வெளியே செல்லும். இங்குதான் ஆவியில் நடந்துகொள்ளுதல் இடம் பெறுகிறது. கிறிஸ்தவம் என்பது உறவு மற்றும் செயல்படாய் இருக்கிறது. கலாத்தியர் 1:6-9 - இங்கே பவுல், நாம் ஆவியில் நடந்துகொள்ளுமாறுக் கூறுகிறார் யூதாயிசத்தில் உள்ள அநேக சட்டதிட்டங்களின்படியல்ல. மலையில் உள்ள எதிரிகளுடன் நாம் சண்டையிட வேண்டும், நாம் உலகில் இருக்கும் போது, நாம் உலகத்தாராய் இராத வண்ணம் இருத்தல் வேண்டும்.

8.ஒரே மந்தையாய் இருக்கிறோம் என்பதை எல்லா ஆடுகளும் அறிந்து இருக்க வேண்டும். விசுவாசிகள் தாங்கள் ஆடுகளைப் போன்று இருக்கிறோம் என்கிற குணாதிசயத்தை விளங்கப்பண்ண வேண்டும், அவர்கள் மேய்ப்பனுக்கு செவிசாய்க்கிறவர்களாய் இருத்தல் வேண்டும்.

9. கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து ஐந்து வித்தியாசமான விதங்களில், மேய்ப்பானாய் விளங்குகிறார். (1 பேது 2:21-25).
பாடுபடும் மேய்ப்பர் (வச 21)
பாவமில்லாத மேய்ப்பர் (வச 22)
ஒப்புவிக்கும் மேய்ப்பர் (வச 23)
பதிலாகும் மேய்ப்பர் (வச 24)
தேடும் மேய்ப்பர் (வச 25)

10. மேய்ப்பர் கிறிஸ்துவாக தொடர்ந்துள்ள மூன்று சங்கீதங்களில் தோன்றுகிறார்:
சங்கீதம் 22 - நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காய் தன் ஜீவனைக் கொடுக்கிறான் (யோவான் 10:11). அவர் வாசலாய் இருக்கிறார் (யோவான் 10:9).
சங்கீதம் 23 - கர்த்தர் என் மேய்பராய் இருக்கிறார் - ஆடுகளின் பெரிய மேய்ப்பர் (எபிரெயர் 13:20)
சங்கீதம் 24 - பிரதான மேய்ப்பர் மகிமையில் வெளிப்படுவார். (1 பேதுரு 5:4).
இவைகள் மேய்ப்பன் தனது ஆடுகளுக்காய் மரிப்பதையும், உயிர்த்தெழுந்த மேய்ப்பர் தனது ஆடுகளை மேய்த்து, பாதுகாப்பதையும், வரப்போகும் மேய்ப்பரானவர் தனது மந்தையின் மீது ஆளுகை செய்யவிருப்பதையும் காட்டுகிறதாய் இருக்கின்றன.

உங்கள் மந்தையை மேய்த்தல்.

கள்ள உபதேசங்களுக்கு விலக்கி உங்கள் மந்தையைக் காத்துக்கொள்ள, உங்களுக்கு மிகவும் உறுதியான உபதேசக்கருத்துக்கள் அவசியமாய் இருக்கிறது, இதினிமித்தம் துர் உபதேசங்கள் பரவ விடாது தடைசெய்ய ஏது செய்கிறதாய் இருக்கும். பீறிப்போடும் கொடிய ஓநாய்களுக்கு நீங்கலாக உங்களது மந்தையை விலக்கிக் காத்துக்கொள்ளுதல் வேண்டும். மந்தைக்குள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டிருக்கும் ஓநாய்களின் கள்ள உபதேசங்களுக்கு விலக்கி உங்கள் மந்தையைக் காத்துக்கொள்ளுதல் வேண்டும். உங்கள் மந்தையைப் பாதுகாப்பதுடன், உங்கள் மந்தையை போஷித்து காப்பாற்ற வேண்டியதும் அவசியமானதாய் இருக்கிறது. ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய உபதேசக் கருத்துக்களானது, குறைந்த பட்ச தராதரம் உடையதாயும், அது விவாதங்கள் மூலம் ஒப்பிட்டுப்பார்க்கக்கூடியதாயும் இருக்கிறது.

உங்கள் மந்தையை நன்கு போஷித்து காப்பாற்றுவீர்கள் எனில், அது வேறொரு போதகரிடம் சென்று மேய்ச்சலைக் காணவேண்டும் என ஓடாது. நீங்கள் மிகவும் கவனமாய் போஷித்து காப்பாற்றிய போதிலும், குறைந்தபட்சம் வருடத்தில் ஒருமுறையாவது, ஓநாய்களால் மந்தையானது தாக்கப்படுதல் நேரிடும். இதினிமித்தம் மந்தையிலிருந்து சிறு குழுவானது சிறடிக்கப்படுகிறதாய் இருக்கும். இதில் சுயசித்தம் என்பது நமக்கு பெரிய சவாலாய் விளங்குகிறது.

சபைக்குள் துர் உபதேசம் நுழையுமானால், அதை மாலை சூரிய அஸ்தமனத்திற்கு முன்னாக சபையை விட்டு வெளியாகுபடி செய்யுங்கள். நேர்த்தியான ஆரோக்கியமான உபதேசக் கருத்துக்களை உடையவராய் இருங்கள். அப்படிப்பட்ட உபதேசத்தைக் குறித்து முறண்பாடாய் ஒருவர் கூறுவார் எனில், அவர்களைப் பார்த்து நீங்கள் சொல்லவேண்டியது: "உங்கள் மனநிலையை மாற்றிக்கொள்ளுங்கள் அல்லது உங்களது சபையை மாற்றிக்கொள்ளுங்கள்." கள்ளப் போதகர்களுக்கு எதிராக நீங்கள் உடனடியாய் செயல்படாதபட்சத்தில், அவர்கள் பெலவீனமான விசுவாசிகளை தவறாய் வழிநடத்தி, கப்பற் சேதமுண்டாக செய்து விடுவர். தேவன் போதகரை நியாயந்தீர்க்கிறவராய் இருப்பார், அவர்கள் துர் உபதேசத்தைக் கண்ட மாத்திரத்தில் உடனடியாய் செயல்பட்டு, சத்திய உபதேசத்தை நிலைநாட்டுகிறவர்களாயிருத்தல் வேண்டும். இதினிமித்தம் விசுவாசிகளின் குடும்பத்தை தொடர்ச்சியாக, தவறாது சந்தித்தல் அவசியம். ஒரு போதகர் நூற்றுக்கும் அதிகமான சபை அங்கத்தினரை உடையவராய் இருப்பாரானால், வருடத்திற்கு ஒருமுறையாவது அவர்களது வீடுகளில் அவர்களைச் சென்று சந்தித்தல் வேண்டும்.

சபையின் டீக்கன்கள், அவர்களை ஒழுங்காய் சந்தித்து, அவர்கள் போதகருக்கு அவர்கள் சந்திப்பின் போது, அவர்கள் கண்டு கொண்டவற்றை அறிவித்தல் மிகவும் அவசியமான ஒன்றாய் இருக்கிறது. சமுதாயத்தில் யாருக்கு பிரச்சனை இருக்கிறது? யார் பிரச்சனைகளைப் பரவச் செய்து வருகின்றனர்? அங்கு என்ன நிகழ்ந்து கொண்டிருக்கின்றன போன்றவற்றை நீங்கள் அறிந்து கொள்ளுதல் வேண்டும். போதகராகிய உங்களுக்கு நிர்வாகத்திறன் அதிகம் அவசியமாய் இருக்கிறது. ஆடுகள் குழியில் கிடக்கும் போது, பிரசங்க பீடத்திற்கு ஏறாதிருங்கள், அப்படிப்பட்டோருக்கு முதல் இடமளித்து அவர்கள் குழியிலிருந்து வெளிவரும் படி உதவி செய்யுங்கள்.

31 ம் வசனத்தைக் கவனியுங்கள்: பவுல் கண்ணீரோடு எச்சரித்துப் புத்தி சொல்கிறவராய் இருக்கிறார். அவர் ஒரு நிர்வாகியாகவும் அதே சமயம் ஒரு போதகராகவும் உள்ளார்வம் மிக்கவராய் காணப்படுகிறார். தேவனது வார்த்தையானது உங்கள் ஊழியத்தின் மையமாய் விளங்குதல் வேண்டும்.

போதகராகிய உங்களுக்கு பொருளாதார ஆதரவு:

வசனம் 33 ல் குறிப்பிடப் பட்டுள்ள காரியம் முக்கியம் வாய்ந்ததாய் இருக்கிறது. பவுல் ஊழியத்தை பணத்திற்காக செய்யவில்லை என்பது இதன் மூலம் தெளிவாகிறது. பகற்பொழுதில், அவர் கூடார வேலையை செய்தார், இரவு நேரத்தில் போதிக்கும் வேலையைச் செய்தார். ஆரம்ப கால சபைகளில் ஊழியம் செய்த தேவ ஊழியர்கள், தங்களது தேவைகள் சந்திக்கப்படும்படி வேலை செய்து உழைக்கிறவர்களாய் இருந்தனர். பண்டைய உலகில், பவுல் ஊழியமானது, தனது சொந்த உழைப்பினால் பெறும் ஊதியத்தை வைத்து செயல்படுத்தப்பட்டது. பவுல் மிகவும் யதார்த்தவாதியாய் இருக்கிறார். பெற்றுக்கொள்வதைவிட, கொடுப்பது உத்தமம் என்கிற கருத்தை ஆதரிக்கிறவராய் இருந்தார். தேவன் உங்களது உழைப்பிற்கேற்ற ஊதியம் அளிப்பவராய் இருக்கிறார், பணத்தைப் பெற்றுக் கொள்ளும்படியாக ஊழியத்திற்குச் செல்லாதிருங்கள். உங்கள் ஊழியமானது கொடுக்கிற ஊழியமாய் திகழட்டும், எடுத்துக் கொள்கிற ஒன்றாய் இராதவாறு பார்த்துக்கொள்ளுங்கள். ஒரு போதகர் தனக்குரிய தேவைகளைச் சந்திக்கும்படிக்கு தனது திறமைகளைப் பயன்படுத்தாமல் இருப்பார் எனில், அவர் போதகராயிருப்பதற்கு தகுதியிழந்தவராய் இருக்கிறார்.

பவுல் போதகர்களுடன் மிகவும் கடினமான நிலையில் ஈடுபடுகிறவராய் இருக்கிறார். இதற்கு காரணம் என்னவெனில், சபை சமுதாயமானது இளம் வயதுள்ள தேவ உழியர்மீது கடினமான நிலையில் ஈடுபடுகிறதாய் இருந்தது. இந்த இறையியல் பாடங்களைக் கற்றுக் கொள்ளும் நீங்களும் (இணையதளம் மூலம் இரவு வகுப்பு மூலம்) நல்ல பயிற்சியைப் பெற்று, உண்மையான ஊழியம் செய்ய தயாராகி வருகிறீர்கள், பகல் முழுவதும் கடினமாய் உழைத்துவிட்டு, இரவு நேரங்களில் வேதாகமப் பயிற்சி பெறுவது, பவுலைப் போன்று கடினப்பிரயத்தனம் செய்வதைக் காட்டுகிறதாய் இருக்கிறது. பவுல் சிறைச்சாலையில் இருக்கும்போது மட்டுமே, சபைகளில் இருந்து பணசகாயத்தைப் பெற்றுக் கொண்டார், காரணம் சிறைச்சாலையில் தான் எவ்வித வேலையும் செய்ய இயலாது இருந்தது. எல்லா நேரத்திலும் பணத்தைப் பெற்றுக்கொண்டு, அல்லது எந்த நேரத்திலும் சம்பளம் பெற்றுக்கொண்டு, பவுலைவிட மிகவும் "வெற்றியுள்ள" ஊழியம் செய்துவிடலாம் என எதிர்பாராதிருங்கள். பவுல் தனக்கு ஐம்பது வயதாகும் வரைக்கும் அவர் உழைத்து உண்டு, ஊழியம் செய்து வந்தார், அதற்குப் பின்னர்தான் அவர் சபைகளால் பொருளாதார ஆதரவைப் பெற்றார், அதுவும் தற்காலிகமானதாய் இருந்தது.

எபேசியர் 4:11-16.

எபேசியர் 4:11-16 வரையுள்ள வேதபகுதியை வாசியுங்கள், வரங்கள் கொடுக்கப்பட்டதற்கான காரணம் என்ன? இதுவே அதற்கான காரணமாய் இருக்கிறது. நிர்வாகம் செய்யும் நோக்கத்துடன் வரங்கள் அளிக்கப்பட்டுள்ளது. நிர்வாகம் செய்யும் கடமையானது இப்பூமியில் நீங்கள் இருப்பதற்கான மைய நோக்கத்தை அறியவும், மற்றவர்கள் தாங்கள் இப்பூமியில் வாசம் செய்வதற்கான நோக்கத்தை கண்டுகொள்வதற்காக அவர்களுக்கு உதவியாய் இருப்பதற்கு அருளப்பட்டுள்ளது. நீங்கள் இருப்பதற்கான காரணம் என்ன? நீங்கள் ஒரு போதிக்கும் போதனையாளராய் இருப்பீர்களானால், பரிசுத்தவான்களை பூரணராக்குவதற்காக இருக்கிறீர்கள், கிறிஸ்துவின் சரீரத்தை பக்திவிருத்தியடையச் செய்வது, விசுவாசத்தில் எல்லோரும் ஒரு மனமடையச் செய்வதற்கும் ஆகும். பவுல் இங்கு இதை நயம்பட

எடுத்துரைக்கிறவராய் இருக்கிறார். உங்களது பிரதாணக் கடமைகளை எடுத்துரைக்கிறவராய் இருக்கிறார்.

பரிசுத்த ஆவியானவர் அளிக்கும் வரங்கள் யாவும், ஒரு நோக்கத்துடன் அளிக்கப்பட்டுள்ளன. அதன் நோக்கம் நற்கிரியைகளைச் செய்யும்படி, விசுவாசிகளை கட்டி எழுப்பவும், பக்திவிருத்தியடைச் செய்வதற்குமாய் இருக்கிறது. இன்றைய அளவில் அநேக ஊழியர் சோம்பற்காரராய் இருக்கின்றனர். ஊழியம் என்பது ஒரு அரும் பணியாய் இருக்கிறது. அப்பணியை செய்து நிறைவேற்ற தேவன் உங்களை அழைத்துள்ளார். மக்கள் தங்கள் வரங்களுடன் சில வேளைகளில் விளையாட விரும்புகின்றனர், விஷேசமாக சபைக்கு முன்னதாக தேவஊழியராய் இருந்து கொண்டு விளையாடுதல், ஒவ்வொரு நாளும் சோம்பல் உள்ளவர்களாய் தூங்கி எழுதல் இருக்குமானால், அது வேதாகம ஊழியமாகாது.

தொற்காளுக்கு அற்புதமான வரம் அளிக்கப்பட்டிருந்தது, மற்றவர்களுக்கு உதவும்படி, கடினமாய் தனது கையினால் தையற் வேலை செய்கிறவளாய் இருந்தாள். சிலருக்கு ஜெபிக்கும் வரம் அளிக்கப்பட்டிருக்கலாம். இதுவே செயல்படும் சபையாய் திகழ்கிறது, ஒவ்வொருவரும் சுறுசுறுப்புடன் ஆவியானவரின் கட்டுப்பாட்டுக்குள் அமைந்து, கர்த்தருக்காய் வேலை செய்வதாய் இருக்கிறது. போதக உபதேசிக்கும் வரமானது ஒரு நபருக்கு அளிக்கப்பட்டிருக்குமேயானால், ஒரு நாளில் இரண்டிலிருந்து, நான்கு மணி நேரம் வரைக்கும் தேவனது வார்த்தையை படித்து கற்றுக்கொள்ளுதல் வேண்டும். இதுவே ஒரு போதகரின் வேலையாய் இருக்கிறது, இதுவே ஒரு சுவிஷேசகனின் வேலையாய் இருக்கிறது. போதகராய் இருக்கும் நீங்கள் அடிக்கடிப் பிரசங்கிக்க வேண்டி வரும். அனுதினமும் உங்கள் சிலுவையை சுமந்து, கர்த்தரைப் பின்பற்றுகிறவர்களாகுங்கள். சிலுவையை எடுத்துக் கொள்ளுதல் என்பதன் பொருள், சுயத் தியாகப்பணி செய்தல் என்பதாகும். மற்றவர்களுக்காக அதிகம் உழைத்து, உங்களைவிட, மற்றவர்களைக் குறித்த கரிசனை உடையவர்களாய் இருத்தல் ஊழியத்தில் அவசியமான ஒன்றாய் இருக்கிறது.

உபதேசம்:

GIFTS – SPIRITUAL GIFTS [See page 43 above]

தேவனது மந்தையை போஷித்தல்:

வேதாகம போதனையானது மந்தைக்கு நிலையானத் தன்மைய அளிக்கிறதாய் இருக்கிறது. நீங்கள் ஒரு சபைக்குச் சென்று, அங்குள்ள ஊழியர் சோம்பேறியாய் இருப்பார் என்றால், அங்கு நிகழும் காரியங்களில் தவறு இருக்கிறது என்பதை கண்டறியலாம். அங்கு வளர்ச்சியின்றி காணப்படும், பாதுகாப்பின்றி காணப்படும், சிறிதளவே பணியானது மேற்கொள்ளப்பட்டு, தேவனது மகிமைக்காய் அவைகள் ஒருங்கினைப்பு செய்யப்படுவதாய் இருக்கும். சில சபைகளில் நீங்கள் பார்ப்பீர்களானால், பாலுண்ணத்தக்க குழந்தைகளாய் இருப்பார்கள், அதன் காரணம் அவர்களுக்கு போஷாக்கு நிறைந்த வளர்ச்சிக்கேதுவான ஆகாரம் அவர்களுக்கு அளிக்கப்படாதது அதன் காரணமாய் இருக்கிறது. குழந்தைகள் துர் உபதேச காற்றினால், எப்பக்கமும் அசைக்கப்படுகிறவர்களாய் இருக்கின்றனர். அநேக சபைகளில், ஆவிகளை பகுத்தறிவில்லாது இருக்கின்றனர், காரணம் போதகருக்கு வியர்வை, கடின பிரயத்தனமின்றி இருப்பதாகும்.

சிலருக்கு கர்த்தருடைய வசனத்தை போதிக்க இயலாது இருக்கிறது, காரணம் அவர்கள் கர்த்தருடைய வார்த்தை குறித்து அறியாது இருக்கிறார்கள். ஒரு போதக உபதேசியார், தனது வேலையை சரியாய் செய்வார் எனில், அவர் அப்பணியை விட்டு வெளியேறுதல் என்பது இயலாத காரியமாய் இருக்கும். நீங்கள் எப்பொழுதும் ஜனங்கள் வளர வேண்டும் என்னும் வாஞ்சையுடன் இருத்தல் அவசியம்.

1 பேதுரு **5:1-7.**

நீங்கள் சரீரமாகிய சபையை போஷித்துக் காப்பாற்றுதல் வேண்டும். 1 பேதுரு 5: 1-7 வசனங்களை வாசியுங்கள். இவ்வகையான அறிவுரைகளை அளிக்க பேதுரு உரிமைச் சான்றுடையவராய் இருக்கிறார். காரணம் அவர் விசுவாசத்திற்காய் பாடு அனுபவித்தவராய் இருக்கிறார், மற்றும் இறுதியாக, அவ்விசுவாசத்திற்காக இரத்த சாட்சியாய் மரிக்க இருக்கிறார். நீங்கள் உங்களது சிலுவையை எடுத்துக் கொண்டு, பாடுபட ஆயத்தமாகுங்கள், இறுதிவரை பணிசெய்யுங்கள். நம்பிக்கை இழப்பிற்கு இடமே இல்லை ! ! !

உண்மையான போதக தலைமைத்துவம் என்பது, மந்தையை சரிவர போஷிப்பது ஆகும். நீங்கள் அதைச் செய்கிறவர்களாய் இருக்கிறீர்கள், காரணம் நீங்கள் அதை வாஞ்சிக்கிறவர்களாய் இருக்கிறீர்கள், நீங்கள் உங்கள் மந்தையில் அன்புகூறுகிறவர்களாய் இருக்கிறீர்கள், நீங்கள் பணத்திற்காக அப்படி செய்யாதிருக்கிறீர்கள். கூலிக்காக வேலை செய்யாது, கர்த்தருக்காக மனப்பூர்வமாய் செய்கிறவராய் இருக்கிறீர்கள். இப்படிப்பட்டோர் தனது குடும்பத்தையும் போஷித்துக் காப்பாற்றி, தேவனை இவ்வழியில் கனப்படுத்துகிறவர்களாய் இருக்கின்றனர்.

வசனம் 3 ல் நீங்கள் சபையில் மானியம் பெறும் நபரைப் போன்று இருத்தல் கூடாது. நீங்கள் தேவனது ஜனங்கள் மீது, தலைவராய் இருப்பீர்களானால், அவர்களைத் தாழ்மையுடன் நடத்துதல் வேண்டும் அவர்கள் மீது அதிகாரத்தைக் காட்டுதல் கூடாது. உங்கள் சொந்தக் கருத்துக்களைக் கொண்டு சபையை ஆழுகை செய்தல் என்பது கூடாது. நீங்கள் தேவனது வார்த்தையைக் கொண்டு சபை ஆழுகை செய்தல் வேண்டும். உங்கள் வாழ்க்கையை முன்மாதிரியாய்க் கொண்டு, வழிகாட்டுகிறவர்களாய் இருங்கள். பேதுரு பிரதாண மேய்ப்பர் வரவிருப்பதை நினைவுபடுத்துகிறவராய் இருக்கிறார். அவர் வரும் போது தமது ஜனங்களிடம் கணக்கு கேட்கிறவராய் இருப்பார். நீங்கள் தலைவராய் இருக்க விரும்பினால், உங்களைத் தேவன் உயர்த்தட்டும். சபையின் செல்வாக்கினால், அதைச் செய்ய முயலாதிருங்கள்.

வயதானவர்கள் ஒருவருக்கொருவர் அடங்கி செல்லுமாறு நினைவுபடுத்துகிறார். தேவ மனிதர்கள் தாழ்மையுடன் வழிநடத்துகிறவர்களாய் இருத்தல் வேண்டும், மற்றும் பரிசுத்த ஆவியானவரது கட்டுப்பாட்டில் செயல்படுகிறவர்களாய் இருத்தல் வேண்டும்.

ஒரு போதகரின் வாழ்க்கைக் குறிப்பு: (10 அம்சங்கள்)

[1] ஒரு போதகர் தனது ஜனங்களுக்கென அற்பணிப்புள்ளவராய் இருத்தல் வேண்டும். இது தேவனது வார்த்தையை ஒழுங்குபடுத்தி முறையாய் போதிப்பதிலும், முறண்பாடற்ற நிலையில் உண்மையாய் ஜீவித்தலிலும் காட்டப்படுகிறதாய் இருக்கிறது.

[2] ஒரு போதகர் தனது மந்தையை ஓநாய்களுக்கும், கொள்கை மாறாட்டக்காரருக்கும் விலக்கி பாதுகாக்கிறவராய் இருக்கிறார். இதை அவர், தனது மந்தைக்கு ஒழுங்காய்,

முறைப்படுத்தப்பட்ட நிலையில் தேவனது வார்த்தையை போதிப்பதன் மூலமும், ஓநாய்களை வெளியேற்றுவதன் மூலம் நிறைவேற்றுகிறவராய் இருக்கிறார்.

[3] ஒரு போதகர் தனது மக்களுக்காக உள்ளார்வத்துடன் செயல்படுகிறவராய் இருக்கிறார். அப்போஸ்தலர் 24. இவ்விதமாய் பவுல் தனது ஜனங்களுடன் செயல்படுகிறவராய் விளங்கினார்.

[4] ஒரு போதகர் நடை, உடை, பாவனை மூலம் முன்மாதிரியை காண்பித்து வழி நடத்துகிறவராய் இருக்கிறார். நீங்கள் பன்றியைப் போன்று காணப்படுவீர்களானால், உங்களது சபை மக்கள் பன்றிக்குட்டிகளைப் போன்று இருப்பார்கள்.

[5] ஒரு போதகர் தனது நேரம், தன்னை, தனது சக்தியை, தனது பொருட்களை, தனது பணத்தைக் கொடுப்பதில் முன்மாதிரியுள்ளவராய் இருத்தல் வேண்டும். அவர் தனது சொந்த வழியில் வேலை செய்வதற்கு ஆயத்தமுள்ளவராய் இருத்தல் வேண்டும்.

[6] ஒரு போதகர் தனது மந்தையின் தேவைகளை அறிந்து அதைச் சந்திக்கிறவராய் இருத்தல் வேண்டும். அவர்களுக்கு சேவை செய்வதற்கு, அவர்களைக் குறித்து நீங்கள் அறிந்து இருத்தல் அவசியம். அவர்களைக் குறித்த நுகர்வுணர்வுடன் அல்ல, அவர்களைக் குறித்த உண்மையான அக்கரை மற்றும் கரிசனையுள்ள நபராய் இருத்தல் அவசியம்.

[7] ஒரு போதகர் ஆவிக்குரிய முன்னேற்றளிப்பவராகவும், ஆவிக்குரிய வளர்ச்சியடைச் செய்கிறவராயும் இருப்பர். போதகராகிய உங்களைவிட உங்கள் மக்கள் விரைவாக வளர வேண்டும் என எதிர்பார்த்தல் கூடாது. நீங்கள் ஆவிக்குரிய கனியை போதிப்பீர்கள் எனில், அவை உங்கள் வாழ்வில் காணப்படுதல் அவசியம்.

[8] ஒரு போதகர் கிறிஸ்துவின் பாடு துன்பங்களைக் குறித்து பிரசங்கிப்பார் எனில், தனது வாழ்விலும் பாடு துன்பங்களை எதிர்பார்த்தல் வேண்டும். இத்தகைய போதகர்களைக் கொண்டே கர்த்தர் பெரிய காரியங்களை அதிகமாய் செய்யவிருக்கிறார். நாம் பாடுகள், துன்பங்கள், மற்றும் நெருக்கங்களைக் கையாள கற்றுக்கொள்ளுதல் அவசியம்.

[9] ஒரு போதகர் எவ்விதக் கட்டாயத்தின் பேரில் வழிநடத்தப்படுத்துதல் கூடாது. அவர் ஒரு பெரிய லார்டைப் [அதிகாரியைப்] போன்ற வாழ்க்கை செய்தல் கூடாது. இது தேவனுக்கு முறண்பாடானது, வேத வசனங்களுக்கு எதிரானது. மந்தையில் அன்புகூர்ந்து மந்தைக்கு மாதிரியாய் திகழுதல் வேண்டும்.

[10] ஒரு போதகர் பிரதான மேய்ப்பர் மீது தன் கண்களைப் பதித்து தனது மந்தையை வழிநடத்துதல் வேண்டும், இவர் பிராதண மேய்ப்பரின் கீழ், துணை மேய்ப்பராய் பணியாற்றி, மந்தையை தேவனுடையதாய் புரிந்துகொண்டு அதற்கு பணியாற்றுதல் அவசியம்.

எபிரெயர் 13:13-17.

எபிரெயர் 13:13-17 வரையுள்ள வேதபகுதியை வாசியுங்கள். நம் மீது அதிகாரஞ்செலுத்துகிறவர்களுக்கு நம்மை அற்பணிக்குமாறு நாம் கேட்டுக்கொள்ளப்படுகிறவர்களாய் இருக்கிறோம். அவர்கள் நமது ஆத்துமாக்களுக்கு உத்திரவாதிகளாயும், மற்றும் பாதுகாப்பாளராகவும் இருக்கிறார்கள். அவர்கள் உங்களை பொறுப்பெடுத்துக் கொண்டு, கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவுக்கு முன்பாக உங்களைக் குறித்து கணக்கொப்புவிப்பவர்களாய் இருக்கின்றனர். அவர்களை விசனப்படுத்துதல் கூடாது. நீங்கள் அவர்களுக்குக் கீழ்ப்படிய மறுப்பீர்களானால், அது உங்களுக்கு இலாபமாய் அமையாது.

ஒரு போதகர், தன் மனைவி மீது அன்பு கூறுகிற கணவனைப் போன்று, சபையில் அன்பு கூறுகிறவராய் இருத்தல் வேண்டும். ஒரு தேவனது ஊழியர், மணவாட்டியான சபைக்கு, போதனை, ஜெபம், எச்சரிப்பு, புத்தி சொல்லுதல், தலைமைத்துவம் மூலம் முன்மாதிரியை ஸ்தாபித்தல் வேண்டும். சோர்வின்றி வேதாகம நற்பணியை அவர்களுக்கு அளித்து, அவர்கள் முன்பாக முன்மாதிரியுடன் வாழுங்கள். சபையில் உள்ள தலைமைத்துவம் என்பது நெருக்கங்களை உங்களுக்களிப்பதாய் இருக்கும், காரணம் நீங்கள் மரியாதைக்குப் பாத்திரராய் இருக்கிறீர்கள். ஒரு ஊழியருக்கு பிரச்சனைகள் நேரிடுமென்றால், அது அவரது தவறாகக் கருதப்படுகிறது, அவர் இருக்க வேண்டிய பிரகாரம் வேதத்தைக் கற்றறிந்து அல்லது போதிக்க தவறியிருக்கிறார் என்பதை அது காட்டுகிறதாய் இருக்கிறது.

உபதேசம்:

SHEPHERD – CHRIST THE SHEPHERD [See page 79 above]

சபைத்தலைவர்களின் எட்டுவிதமான தனிப்பட்ட இலக்குகள்:

ஒரு போதகர், டீக்கன் அல்லது டீக்கனஸ் எதற்காக திட்டமிடுதல் வேண்டும்? பவுல் எட்டுவிதமான இலக்குகளை அமைத்து தருகிறவராய் இருக்கிறார்.

[1] நீங்கள் ஜெப இலக்குகளைப் பெற்றிருத்தல் வேண்டும் மற்றும் ஒவ்வொரு நாளும் ஜெபிப்பதற்கென நேரம் ஒதுக்குங்கள்.

[2] கற்றுக்கொள்வதற்கான இலக்கைப் பெற்றிருத்தல் வேண்டும், ஜெப நேரத்தைத் தொடர்ந்து கற்றுக்கொள்ளும் நேரம் அமைதல் வேண்டும். நீங்கள் முழுநேர ஊழியராய் இருப்பீர்களானால், ஆது காலைவேலையில் அமைதல் வேண்டும், நீங்கள் வேலை செய்கிறவர்களா யிருப்பீர்களானால், வேலைகளை முடித்துக் கொண்டு, மாலை வேலையில் அமைத்துக்கொள்ளுதல் வேண்டும்.

[3] நீங்கள் வீடு சந்திக்கும் இலக்குகளை அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். உங்களது சபை மக்கள் ஒவ்வொரு குடும்பத்தையும் ஒரு ஆண்டில் ஒரு முறையாவது சந்திக்க வேண்டும் என்ற நோக்கத்தை அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். மாலைப் பொழுது வீடு சந்திப்பதற்கு ஏற்றதாய் இருக்கிறது. .

[4] உங்கள் சுவிஷேச ஊழிய இலக்குகள் - தனிப்பட்ட ஆத்தும ஆதாயத்திற்கான ஜெப பட்டியலை தயார் செய்து ஜெபித்து வருதல் வேண்டும்.

[5] உங்கள் உபதேசங்கள் கைக்கொள்ளப்படுவதற்கான இலக்குகள் -- உங்களது வாழ்வில் உள்ள பெலவீனப் பகுதிகளை ஆய்வு செய்யுங்கள் -- அப்பிரச்சனைகளுக்கு தேவனது வார்த்தைகளை கைக்கொள்ள இலக்கு அமைத்துக் கொள்ளுங்கள்.

[6] குடும்ப இலக்குகள் -- குடும்பத்திற்கும், மனைவிக்கும் நேரம் ஒதுக்குதல் வேண்டும். அவர்களுடன் இணைந்து காரியங்களைச் செய்யத் திட்டமிடுங்கள்.

[7] உடற்பயிற்சிக்கான இலக்குகள், ஒவ்வொரு நாளும் குறைந்தபட்சம் 40 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்ய ஒதுக்குங்கள். இதை நீங்கள் செய்யத்தவறும் போது, நீங்கள் ஆரோக்கியமாய் இருக்கத் தவறுகிறவர்களாவீர்கள், நீங்கள் ஆரோக்கியமற்ற நிலையில் நீங்கள் செய்ய வேண்டிய அனைத்தும் தடைபடுகிறதாய் விளங்கும்.

[8] போதிப்பதற்கான இலக்குகள் -- நீங்கள் கற்றுக்கொள்வதற்கான மற்றும் போதிக்கவிருக்கும் புத்தகங்களைக் குறித்து சிந்தனை செய்யுங்கள், அதை எவ்வாறு செய்யப்போகிறீர்கள் எனத் திட்டமிடுங்கள்.

தேவ ஊழியராய் இருக்கும் நீங்கள் நான்கு மணி நேரம் கற்றுக்கொள்ள நேரம் செலவளியாது இருப்பீர்களானால், நீங்கள் சோம்பல் உள்ளவர்களாய் இருக்கிறீர்கள். நீங்கள் ஒரு தேவ செய்தியை ஒவ்வொரு நான்கிலிருந்து, ஐந்து மணி நேரம் எடுத்து தயார் செய்தல் வேண்டும். இதன் பொருள் நீங்கள் நான்கிலிருந்து ஐந்து செய்தியை தயார் செய்கிறீர்கள் என்பது இதன் பொருளாகும். இதை அந்தந்த வாரத்தில் கொடுத்து தீர்த்துவிடுங்கள். முன்கூட்டியே உங்களது செய்தியினை திட்டமிடுகிறவர்களாகுங்கள்.

ஒரு போதகர், ஒரு வாரத்தில் மூன்றுக்கும் குறைவான செய்தியளிப்பாரானால் அவர் சோம்பல் உள்ள ஊழியராய் இருக்கிறார். உங்கள் சொந்த நேரத்தில் மூன்றுக்கும் அதிகமான செய்தியினை ஒருவாரத்தில் தயார் செய்தல் வேண்டும். கூடார தொழில் ஊழியம் இல்லாத பட்சத்தில் இதை நீங்கள் செய்தாக வேண்டும்.

ஓராண்டில் ஐம்பது செய்திகளானது அவசியப்படுவதால், வார காலத்தில் அதிகமான செய்திகளையும் தயாரித்து வைக்கலாம். அவ்வாறு தயாரிக்கப்பட்ட செய்திகளை, மிகவும் அலுவல் மிகுந்த காலத்தில் அவற்றைப் பயன்படுத்தலாம். ஞாயிறு காலை படிக்க வேண்டியவற்றை சனிக்கிழமை இரவுப்பொழுதில் படிக்க வேண்டாம். கர்த்தர் தனது கடந்தகால நித்தியத்தில் நீங்கள் கொடுக்கவிருக்கும் எல்லா செய்திகளையும் அறிந்து வைத்துள்ளார். உங்கள் செய்தியானது ஜெபத்தால் உரமேற்றப்பட்டவைகளாய் இருத்தல் வேண்டும். அவைகள் மிகுந்த ஆர்வத்துடனும், வல்லமையுடனும் பிரசங்கம் செய்யப்படுதல் வேண்டும். உங்களுக்கு இலக்கு என்பது இல்லையேல், உங்களால் ஒன்றையும் சாதிக்க இயலாது. பவுல் தீமோத்தேயுவுக்கு கூறும் பொழுது, இரு நிருபங்களிலும், தேவ ஊழியர் தீமோத்தேயுவுக்கான இலக்குகள் குறித்து குறிப்பிடுகிறவராய் இருக்கிறார்

சபைக்குரிய எட்டு இலக்குகள்.

[1] மாற்றம் அடையும் காரியங்களுக்கான முதன்மை பட்டியல் இருத்தல் வேண்டும். முந்தைய ஆண்டு அறிக்கையிலிருந்து இதனைக் கண்டு கொள்ளுதல் வேண்டும். கடந்த ஆண்டில் தோல்விகள் எவைகள், மற்றும் வெற்றிகள் எவைகள் என பரிசீலனை செய்தல் வேண்டும். ஒன்று முதல் பத்து ஆண்டுகளில் என்ன மாற்றம் சபையில் நிகழ வேண்டும் என்பது குறித்து கர்த்தரிடம் ஜெபிக்கத் தலைப்படுங்கள். கர்த்தர்தாமே

இம்மாற்றம் நிகழுவதற்கான காலத்தை எடுத்துரைக்கட்டும், நீங்கள் அதைக் குறித்து கால வரையறை செய்தல் வேண்டாம்.

[2] வயதானோர் ஜெபக்குழுக்களை ஸ்தாபித்தல் வேண்டும். 1 தீமோத்தேயு 5:4 ff. அறுபது வயதுக்கு மேற்பட்டோர், ஜெப வரம் பெற்றோரை இதில் உட்படுத்தப்படுதல் வேண்டும்.

[3] ஜெபத்தை ஒவ்வொரு சபை கூடுகையின் போது, நீங்கள் வலியுறுத்துதல் வேண்டும்.

[4] ஒவ்வொரு கூடுகைகளும் கிறிஸ்தவக் கூடுகைகளாய் இருக்கும் நெறிமுறைகளை பழக்கத்தில் ஏற்படுத்திக் கொள்ளுங்கள். அப்போஸ்தலர் 15ம் அதிகாரத்தில், தலைமைத்துவம், ஜெபம், வெளிப்படையான வாக்குவாதங்கள், ஆவிக்குரிய காரியங்கள் மற்றும் அடிப்படைக் கொள்கைகளை கைக்கொள்ளுமாறு இருத்தலை உறுதி செய்து கொள்ளுதல் வேண்டும்.

[5] உங்களது போதனைக் காரியங்கள் குறித்து முன்னதாகவே வெளியிடுதல் வேண்டும், இதனால் சபை மக்கள் முன்கூட்டியே நீங்கள் என்ன பிரசங்கம் செய்யப்போகிறீர்கள் என்பதை அறிந்து ஆயத்தமாய் இருப்பார்கள். உங்களது சபை மக்கள் வேதாகமத்தின் குறிப்பிட்ட புத்தகத்தில் பிரச்சனையுடன் இருப்பார்களெனில், அப்பிரச்சனைகள் தீர்த்து வைக்கப்படும் என்று அவர்கள் அறிதல் வேண்டும், அப்பிரச்சனையை நீங்கள் எப்பொழுது தீர்த்துவைக்கப்போகிறீர்கள் என்பதையும் அவர்கள் அறிந்திருத்தல் வேண்டும்.

[6] நீங்கள் தேவனது வார்த்தையினால், மக்களை போஷித்து அவர்களை வழிநடத்துகிறவராய் இருத்தல் அவசியம்.

[7] பரிசுத்தத்தை அதிகம் வலியுறுத்துதல் அவசியம், பாவத்தை முக முகமாய் எதிர்கொண்டு அவைகளுக்கு பரிகாரம் தேடுதல் அவசியம்.

[8] ஸ்தாபனமானது பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்படுவதை வலியுறுத்துதல் வேண்டும். பரிசுத்த ஆவியானவரின் ஊழியத்தின் மூலம், ஒவ்வொரு காரியமும், தேவனது சித்தத்திற்கும், அவரது திட்டம், தீர்மானங்களுக்கு இசைய செய்யப்படுதல் வேண்டும்.

முற்றிற்று 22 - 06 - 2015 11:27 p.m.